Vol II

T. D. R. C. 37[illegible]

R. R. [illegible] 6.5.4 1909

[illegible]

S 22:38.21, 29
N09

118811

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# கோயிலொழுகு

ஸ்ரீரங்க க்ஷேத்திரத்தின்
நடவடிக்கைகளைக் குறித்தது

இஃது

அநேக ஸ்ரீ கோசங்களைக் கொண்டு

பண்டிதர்களால் பரிசோதிக்கப்பட்டு

சென்னை

ஆனந்த முத்திராக்ஷர சாலையில்

பதிப்பிக்கப்பட்டது.

1909.

Copyright Registered.

Price As. 8.] [விலை அணா 8.

REGISTRAR ... REGISTERED 16 DEC 190... MADRAS

163/1909

# விஷயங்கள்.


| | பக்கம் |
|---|---|
| தர்மவர்மாவின் கைங்கரியம் ... | ௧ |
| கிளிசோழன் கைங்கரியம் ... | ௨ |
| ராஜமஹேந்திர சோழன் கைங்கரியம் ... | ௩ |
| நந்தசோழன் கைங்கரியம் ... | ௩ |
| குலசேகரப்பெருமாள் கைங்கரியம் ... | ௫ |
| ஆரியபட்டாள் வாசல் ... | ௬ |
| திருமங்கையாழ்வார் ப்ரபாவம் ... | ௭ |
| சோளேந்திரசிம்ஹன் கைங்கரியம் ... | ௧௨ |
| கங்கைதேவா சிங்கணன் தண்டநாயகர் கைங்கரியம் ... | ௧௨ |
| விக்ரமசோழனு அகளங்கன் கைங்கரியம் ... | ௧௨ |
| நந்தபாண்டியதேவர் கைங்கரியம் ... | ௧௨ |
| எம்மண்டலங்கொண்டு கோயில்பொன் மேய்ந்த பெருமாள் நந்தபாண்டிய தேவர் கைங்கரியம் ... | ௧௪ |
| குலோத்துங்கசோழன் கைங்கரியம் ... | ௧௫ |
| கம்பயதண்டநாயக்கர் கைங்கரியம் ... | ௧௫ |
| கரியமாணிக்கத் தண்டநாயக்கர் கைங்கரியம் ... | ௧௬ |
| கம்பயர் தண்டநாயக்கர் கைங்கரியம் ... | ௧௬ |
| மலைப்பெருமாள் கைங்கரியம் ... | ௧௭ |
| வீரநரசிங்கதேவர் கைங்கரியம் ... | ௧௮ |
| ஆதுனூர் வரதராயர் கைங்கரியம் ... | ௧௮ |
| தேவப்பெருமாள் கைங்கரியம் ... | ௧௮ |

பக்கம்.


வாலிநாதராயர் கைங்கர்யம் ... ... கஅ
திரிவிக்கிரமசோழன் கைங்கர்யம் ... ... கஅ
பன்றிகொண்டசோழன் கைங்கர்யம் ... கசா
கலியுகராமன் கைங்கர்யம் ... ... ககூ
திருக்குறளப்பன் சன்னிதி ... ... ககூ
வல்லபதேவன் கைங்கர்யம் ... ... உ௦
திருமங்கைமன்னன் கைங்கர்யம் ... உ௦
சோழன் ப்ரதிஷ்டை ... ... உக
டில்லீசுவரன் அழகியமணவாளனைக் கொண்டுபோனது ... உக
ஸ்தலத்தார் அழகியமணவாளனை எழுந்தருளப் பண்ணிக் கொண்டு வந்தது ... உங
கலதாணிபெருமானைத் தேடிக்கொண்டு சரீரம் விட்டது ... உச
கொடவர் அழகியமணவாளனை ரக்ஷித்தது ... உரு
டில்லீசுவரன் ஆச்சரியப்பட்டது ... ... உசா
திருவரங்கமாளிகையாரையும் வேறே நாச்சியாரையும் கோயிலில் ப்ரதிஷ்டிப்பித்தது ... உஎ
அழகியமணவாளனையும் கொடவரையும் இருளர் கண்டது ... உஅ
பெருமானையும் கொடவரையும் சந்திரகிரி ப்ரபுவெளிப்படுத்தினது ... உஅ
கொடவர்பெருமாளுடன் கோயிலில் எழுந்தருளப் பரிஜனங்கள் தழைத்தது ... உஅ
வன்னாற்றிலே அழகியமணவாளனென்று தெளிந்த ராஜேந்த்ரசோழன் கைங்கர்யம் ... உகூ




பக்கம்


திருத்தாழ்வரைதாஸர், சாங்கொல்லி, பஞ்சகொண்டான் இசையறியும் பெருமாள் கூட்டத்தார் என்னும் அருளப்பாடு ... ௩க
ஸ்ரீமந்நாதமுனிகள் கல்பித்தகட்டளை ... ௩உ
உய்யக்கொண்டார், மணக்கால் நம்பி ஆளவந்தார் வைபவம் ... ௩எ
ஆழ்வார் திருவரங்கப்பெருமாளரையர் வைபவம் ... ௩அ
உடையவர் வைபவம் ... ... ௩அ
பட்டர் வைபவம் ... ... க௦எ
ராமப்பிள்ளை வைபவம் ... ... க௦அ
கூரநாராயண ஜீயர் வைபவம் ... ... க௦அ
அண்ணவாண்டப்பருடையார் திருமலைநந்தான் கைங்கர்யம் ... ககசா
அண்ணப்பவுடையார் கைங்கர்யம் ... ககசா
திப்பாராசர் கைங்கர்யம் ... ககஅ
பத்தூர் அழகியமணவாளப்பெருமாள் கைங்கர்யம் ... கஉ௦
உத்தமநம்பி சக்ராயர் நிர்வஹித்தது ... கஉ௦
ருடவாளுகைபண்டிதர் கைங்கர்யம் ... கஉ௦
அண்ணப்பவுடையார் கைங்கர்யம் ... கஉ௦
நாகராஜுவுடையார் கைங்கர்யம் ... கஉ௦
வழிபடுமை திகழவிட்ட உத்தம நம்பி கைங்கர்யம் ... கஉக
பெரியசக்ராயர் கைங்கர்யம் ... கஉக
மூவெங்கிராயர் திராவினை நீத்தார் திருவேங்கடமுடையான் கைங்கர்யம் ... கஉஉ
திருமலைநாதவுத்தமநம்பி கைங்கர்யம் ... கஉங

| | | பக்கம். |
|---|---|---|
| க்ருஷ்ணராயவுத்தமநம்பி கைங்கரியம் | ... | ௧௨௪ |
| குடல்சாரவாளநயினார் கைங்கரியம் | ... | ௧௨௫ |
| கோவிந்தராஜர் கைங்கரியம் | ... | ௧௨௫ |
| கம்பராஜாமல்லர் கைங்கரியம் | ... | ௧௨௫ |
| ஐந்நயநாயக்கர் கைங்கரியம் | ... | ௧௨௫ |
| அப்புள்ளார் ப்ரதிஷ்டை | ... | ௧௨௬ |
| கம்பராஜாவின் கைங்கரியம் | ... | ௧௨௬ |
| ஆழ்வார்ஜீயர் கைங்கரியம் | ... | ௧௨௬ |
| அழகர் கைங்கரியம் | ... | ௧௨௬ |
| வாளுவதிருமலைராஜா கைங்கரியம் | ... | ௧௨௬ |
| கந்தாடை ராமாநுஜதாஸர் கைங்கரியம் | ... | ௧௨௭ |
| தேவதாயம் ஸ்வாதீனமானது | ... | ௧௩௧ |
| உடையவர் கல்பித்த கட்டுக்குலைந்தது | ... | ௧௩௨ |
| மணவாளமாமுனிகள் மங்களாசாஸனத்தாலே நம்பெருமாள் கோயிலிலே எழுந்தருளியிருந்தது | ... | ௧௩௩ |
| விச்வநாதநாயக்கரைக்கொண்டு நரஸிம்ஹாசார்யர் பண்ணின கைங்கரியம் | ... | ௧௩௪ |
| க்ருஷ்ணப்பநாயக்கர் கைங்கரியம் | ... | ௧௩௪ |
| குமாரக்ருஷ்ணநாயக்கர் கைங்கரியம் | ... | ௧௩௫ |
| உத்தமநம்பிக்கும் பட்டர் திருமலாசார்யருக்கும் உண்டான கலஹம் | ... | ௧௩௫ |


ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# கோயிலொழுகு.

"மாடமாளிகைசூழ்திருவீதியும் மன்னுசேர் திருவிக்கிரமன்வீதியும்
ஆடல்மாறன் அகளங்கன் வீதியும் ஆலிநாடன் அமர்ந்துறைவீதியும்
கூடல்வாழ் குலசேகரன்வீதியும் குலவிராசமகேந்திரன்வீதியும்
தேடரியதர்மவர்மாவின்வீதியும் தென்னரங்கர் திருவாவரணமே."

என்று பூர்வர்கள் திருவரங்கத் திருப்பதியை யநுபவித்தபடியே, பூர்வர்கள் பண்ணின திருப்பணி கைங்கர்யத்துக்கு விவரம்:—

ஆதிப்பிரம்ஹா ஸ்ரீரங்க விமாநத்தை லபித்து, ஸத்யலோகத்திலே அநேககாலம் ஆராதித்தவநந்தரம், அந்த திவ்ய விமாநத்தை இக்ஷ்வாகு லபித்து, அயோத்யா பட்டணத்தில் நெடுங்காலம் திருவாராதநங் கண்டருளி, தத்வம்ச்யராய் ஆராதித்து சக்ரவர்த்தித் திருமகன், தம்முடைய க்ருபையினாலே ஸ்ரீரங்க விமாநத்தை ஸ்ரீவிபீஷணாழ்வானுக்குக் கொடுக்க; அவனும், அந்த விமாநத்தை சிரஸாவஹித்துக்கொண்டு, இரண்டு திருக்காவேரி நடுவிலே ஸ்ரீ சந்த்ரபுஷ்கரிணிக் கரையிலே கொண்டுவைத்து அவ்விமாநத்தை தர்மவர்மா லபித்துப்போர;

### தர்மவர்மாவின் கைங்கரியம்.

திருவர்சனும், அமுது மண்டபமும், கோயிலாழ்வாரைச் சூழ்ந்த திருவெண்ணாழியும், திருவணுக்கன் திருவாசல் திருமதிளும், திருநடை மாளிகை, அழகிய மணவாளன் திருமண்டபம் முதலான பல திருமண்டபங்களும், பல

திருமதிள்களும், பல கோபுரங்களும், சேனை முதலியார் கோயிலும், விமானமும், அதுக்கு வடமேல் புறத்திலே இரண்டாந் திருமதிளில் வடக்குவாசலுக்குமேலே திருக்கோபுர நயினாரும், திருக்கோபுரமும், சந்த்ரபுஷ்கரிணிக் கரை ஆஸ்தான மண்டபமும் கட்டிவைக்கையில் தர்மவர்மாவின் கைங்கரியம்.

## கிளிசோழன் கைங்கரியம்.

அதின்பின், அநேக காலத்துக்குப் பிற்பாடு திருக்காவேரி ஸ்தூபிபர்யந்தம் மணல்கொழித்து பஹுகாலமாய்க் காடு மூடிப்போனவனந்தரம், யாத்ருச்சிகமாக தர்மவர்மாவின் வகையில் சோழன் அந்த விடத்திலே ஒரு மரத்தின் நிழலிலே யிருக்க, அந்த மரத்தின்மேலே ஒரு *சுகமிருந்து.

కావేరీవిరజాసేయం వైకుంఠం రఙ్గమన్దిరమ్।
స వాసుదేవో రఙ్గేశః ప్రత్యక్షం పరమం పదమ్॥ (௧)
విమానం ప్రణవాకారం వేదశృఙ్గం మహాద్భుతమ్।
శ్రీరఙ్గశాయీ భగవాన్ ప్రణవార్థప్రకాశకః॥ (௨)

காவேரீ விரஜா ஸேயம் வைகுண்டம் ரங்கமந்திரம்-
ஸவாஸுதேவோ ரங்கேசः ப்ரத்யக்ஷம்பரமம்பதம். (௩)
விமானம்ப்ரணவாகாரம் வேதச்ருங்கம்மஹாத்புதம்-
ஸ்ரீரங்கசாயீ பகவாந் ப்ரணவார்த்தப்ரகாசக:. (௪)

என்று இரண்டு ச்லோகத்தையும் அநேகாவ்ருத்தி சொல்லக்கேட்டு, சோழனும் ஆச்சர்யப்பட்டு, "இந்தக் கிளி புராண வசநம் சொல்லிற்றே! இதென்ன?" என்று விசாரித்து, தெரியாதபடியினாலே ஸ்ரீரங்க விமானத்தை உண்டு பண்ணுகிறதுக்கு அந்த மரத்துக்கு மேற்கே திருமுடிக்கு நடுவிலே அஸ்திவாரம் பறித்து அரையளவு தலைவரையும்

* சுகம் - கிளி.



வறினவளவிலே அவன் ஸ்வப்நத்திலே "நாமிந்த மரத்தின் கீழே இருக்கிறோம்" என்று சொல்ல; அவனும், அந்த மரத்தின் கீழே ஸ்ரீரங்க விமானம் இருக்கக்கண்டு ஸந்தோஷித்து, அந்தக் காடு வெட்டி மணலையும் பறிப்பித்து கோயிலாழ்வார் விமானம் முதலாகத் திருவீதியுட்பட பூர்வப்ராகார மெல்லாவற்றையும் தென்னாறு வடவாறுகளும் கட்டிவைத்து, பல திருநந்தவனங்களையும் உண்டாக்கி, திருப்பணித் திருவாராதனங்களும் கண்டருளப் பண்ணி, திருவரங்கம் திருப்பதி என்று விளங்கினது. தர்மவர்மாவின் வகையில் கிளிசோழன் கைங்கரியம்.

## ராஜமஹேந்திர சோழன் கைங்கரியம்.

அநந்தரம், ராஜமஹேந்த்ரன், ப்ரதி ஸம்வத்ஸரமும் திருக்காவேரி பெருகிவந்தால் திருவநந்தாழ்வான் திருவாசலுக்குள்ளே ஊர்ப்புகுவதாயிருக்கையில், அத்தைத் தடுப்பித்து, திருவனந்தாழ்வான் கண்வளர்ந்தருளுகிற இடமும் முதலாகத் தளவரிசை பண்ணுவித்து, கோயிலாழ்வாரைச் சூழ எழுந்தருளியிருக்கிற நாராயணர், காமிகளிகர், நாகசயநர், நரஸிம்ஹர் இருக்கிற தளவரிசை மட்டத்துக்கு மேலேயும் உயர்த்துக்கட்டி, நாலும் எழுவிசிக்கட்டிவைத்துத் தளவரிசையும் படுப்பித்து, இரண்டாம் ஆவரணத் திருமதிளும், தெற்குத்திருவாசல் கோபுரமும், வடமண்டபத் திருவாசலும், தர்மவர்மாவின்வகை கைங்கர்யமான திருக்கோபுரநயினார் சேனைமுதலியார் கோவில்தவிரத் திருக்கோபுரமும் தளவரிசையும் ராஜமஹேந்த்ரசோழன் கைங்கர்யமாகையாலே, ராஜமஹேந்த்ரன் திருவீதி என்று வ்யவஹாரம் நடந்துவந்தது.

## நந்தசோழன் கைங்கரியம்.

அநந்தரம், நிசுளாபுரியிலே தர்மவர்மாவின் வம்சரான நந்தசோழன் ராஜ்யம் பண்ணுகிறகாலத்தில், பஹுகாலம்

(க) அகபத்யஸ்யிருந்து ஸ்ரீரங்கநாயகியிடத்திலே அதிப்ரவணனாய் தபஸ்ஸைப்பண்ணி, அந்த தபோபலத்தினாலே ஒருநாள் தாமரை ஓடையில் தாமரைப்பூவிலே ஒரு சிசுவாக ஸ்த்ரீப்ரஜை யிருக்கக்கண்டு, அந்தராஜா ஸந்துஷ்டனாய், அந்தக்குழந்தையைத் தம்முடைய க்ருஹத்திலே கொண்டு வந்து கமலவல்லி என்று நாமகரணம்பண்ணி வளர்க்குமிடத்தில், அந்தக்குழந்தையும் வளர்ந்து பெரியவளாய், ஒத்தபெண்களுடனே விளையாடும் காலத்திலே, ஒருநாள் தோழிகளுடனே விளோத்யானத்தில் புஷ்பாபசயம் பண்ணுகிற வேளையத்திலே, ஸ்ரீரங்கராஜர் குதிரை நம்பிரான்மேலே ஏறியருளி பலாசதீர்த்தத்துக்குவேட்டை எழுந்தருளுகிறவர், அந்தக்கமலவல்லிக்கு அதிஸந்நிதராய் விபவாவதாரமாக ஸேவைஸாதிக்க; கமலவல்லியும் கண்டு மோகித்து, மனுஷ்யாந்தரத்தினாலே தோழிமார் தேற்றத்தெளிந்து, தன்வீதியிலேவந்து (உ) உன்மத்தை போலிருக்க, அந்தராஜாவும், கமலவல்லியைக்கண்டு மதவிகாரம் என்று கணிசித்து, “உனக்கு ஆர்மேலே மநஸ்ஸு இருக்கிறது?” என்று கேட்க; கமலவல்லி, தனக்கு ஸ்ரீரங்கநாயகன்றியிலே ஒருத்தரிடத்திலேயும் மநஸ்ஸு இல்லை, தன்னை ஸ்ரீரங்கராஜருக்கு பாணிக்ரஹணம் பண்ணுவியும் என்று சொல்ல; ராஜாவும் ஸந்துஷ்டனாய், தன்மந்திரிகளுடனே ஆலோசித்து, தம்முடைய குமாரத்தி கமலவல்லியை ஸ்ரீரங்கராஜருக்குக் கன்னிகாப்ரதானம் பண்ணி அதிவிஸ்மிதமாகத் திருக்கல்யாண மஹோத்ஸவத்தைப் பண்ணுவித்து, பெண்ணைக்கோயிலுக்கு அனுப்பும்போது, ஸ்த்ரீதனமாக நூற்றுபதின்கலம் தங்க அழுதுபடியும், அதுக்குவேண்டின பருப்புமுதலும், நெய்

(க) அகபத்யன்-மலடன்.

(உ) உந்மத்தை-பைத்தியம் பிடித்தவள்.



பஞ்ச கோடியஞ்ச கறியமுதும், அதுக்கீடு வேண்டின சம்பாரங்களெல்லாம் தங்கத்தாலே பண்ணுவித்து அநு கலேயும், ஸ்த்ரீகளுக்கு அமைந்தவளான நாலுபரிசாரிகைகளேயும் கொடுத்து அனுப்பிவைக்க; அந்த கமலவல்லியும்கோயிலிலேவந்து திருமணத்துக்குள்ளே புகுந்து அந்தர்த்தையாக; அதைக்கண்டு ராஜாவும் அதிஸந்துஷ்டனாய், அநபத்யனுகையாலே தம்முடைய ஸர்வஸ்வத்தையும் பெருமானதினம்பண்ணி, திருமாமணிமண்டபங்களும், திருமதிள்களும், திருக்கோபுரங்களும், திருநந்தவனங்கள் முதலானதுகளேயும் கட்டுவித்து, தம்முடைய பட்டணமான உறையூரிலேயும் தம்முடைய குமாரத்தியும் அதிஸந்நிதராய் விபவாவதாரமாக ஸேவைஸாதிக்க, அழகிய மணவாளப் ரூபத்தினாலே அர்ச்சாரூபமாக அழகிய மணவாளப் பெருமாளேயும் ப்ரதிஷ்டிப்பித்து, விமாந கோபுர மண்டப ப்ராகாராதிகளேயும் விசித்ரமாகக் கட்டுவைத்து, அனைத்து தமுதும் கொண்டருளப்பண்ணுவித்துக்கொண்டிருந்தான். இந்தப்படி உறையூரிலே வெகுகாலம் நடந்தபின்பு, கலியுகத்திலே பதுமாநகரம் சென்றநந்தரம், ஒருகாலவிசேஷத்திலே பராநுமானம் பாபவிசேஷத்தினாலே மண்மாரியிலே ஒரு ராமநுடைய பாபவிசேஷத்தினாலே மண்மாரி பெய்து பட்டணம் முழுகிப்போயித்து. அநந்தரம், அது முதலாக சோழதேசாதிபதிகள் காவேரிகொண்டானிலே வாஸம்பண்ணுகையாலே, காலவிசேஷத்திலே உறையூரிலே கொஞ்சமாகக் கோயில்கட்டி, பெருமாளேயும் நாச்சியாரையும் ஒருசேரப் ப்ரதிஷ்டிப்பித்தான், கமலவல்லியைத் திருமணம்புணர்ந்ததுமுதலாக, “அழகியமணவாளராஜமஹேந்த்ரன்திருவீதி” என்று திருநாமமாய்த்து.

## குலசேகரபெருமாள் கைங்கரியம்.

கலியுகம் ஆயிரத்து அறுநூற்றுக்குமேல் குலசேகரப்பெருமாள், சோழ சேர பாண்டியமண்டலங்களுக்கு ப்ரபுவாய், உறையூர்மதுரை கொல்லிநகர்களிலே திருமாளிகை

கட்டிராஜ்யப்ரசம்பண்ணுகிற காலத்திலே, நீலாம்சையான தம்முடையபுத்ரி சோழவல்லியை அழகியமணவாளப்பெருமாளுக்குத் திருமணம் புணர்ப்பித்து, தம்முடைய தாந்தையும் ஸத்ரீதனமாகப் பெருமாளுக்கு ஸமர்ப்பித்து, மூன்றாம் ஆவரணத்தின் தென்மேற்கிலேசேனைவென்றான் திருமண்டபமுங்கட்டி, அந்தத் திருச்சுற்று ஜீர்ணோத்தாரணம் பண்ணுகையில், அந்தத்திருவீதிக்கு குலசேகரன் திருவீதி என்று திருநாமமாய்த்து.

## ஆரியபட்டாள்வாசல்.

அதின் பின்பு, கல்யப்தம் மூந்நூற்றுபது வருஷத்துக்குமேல், வடக்கேயிருந்து கௌட தேசத்துக்கு ப்ரபுவானவன், அநேகம் சேனையுடனே பஹுத்ரவ்யத்தை துலாபுருஷம் தூக்கிக்கொண்டுவந்து பெருமாளுக்கு ஸமர்ப்பிக்குமிடத்தில், அந்த த்ரவ்யத்தை அங்கீகாரம்பண்ணாமல் பஹுநாள் வெளியிலே கிடக்க; அதுக்குக் காவலாகவும் தன் மநுஷ்யர்களைக் கோவில் வாசலிலே காவலாகவிருக்கவும், ஆரிய தேசத்தில் ப்ராம்ஹணரை வைத்துப் போனபடியினாலே, அந்த ப்ராம்ஹணர் பெருமாள் திருவுள்ளமிரங்கும்படி நடந்துகொண்டபடியினாலே பெருமாளும் அவர்களை கடாக்ஷித்துத் திருப்பவளம் திறந்து வார்த்தையருளிச்செய்து, அவர்களுக்காகப் ப்ரபுவை அநுக்ரஹித்து, கோயிலிலும் புறப்பட்டருளும்போதெல்லாம் மூன்றாம் வாசலிலே தாம் அவர்களுக்கு அர்ச்சாவதாரமர்யாதையை † அழித்து திருப்பவளம் திறந்து வார்த்தையருளிச்செய்தபடி:—"அருளப்பாடு செம்பொன் மாளிகை திருவரங்கேசனார் திருவாய் மலர்ந்தருளித் திருகூறு செய்வார்;" அவர்களுக்காக, அந்த வகுப்பான கௌடதேசாதிபதிக்கும் "அருளப்பாடு செம்பொன் மாளிகை

† குலைத்து என்றும் பா.



யருள்செய்தார்" என்று சாதித்தெழுந்தருளுவர். அது முதலாக அந்தத் திருவாசலுக்கு ஆரியபட்டாள் வாசல் என்று திருநாமமாய்த்து.

## திருமங்கையாழ்வார் ப்ரபாவம்.

கல்யப்தம் நானூற்று நாற்பத்தஞ்சு வருஷத்துக்குமேல் ஆழ்வார் திருமங்கையாழ்வார் நினம் திருவரங்கத் திருப்பதியிலே நித்யவாஸம் பண்ணிக்கொண்டு திருமொழி முதலான ப்ரபந்தங்களையும் அருளிச்செய்துகொண்டு பல திருப்பணிகளையும்பண்ணிக்கொண்டு எழுந்தருளும் காலத்திலே, திருவிளக்குப் பிச்சனைப் பெருமாள் கடாக்ஷித்து, அவனுடனே நித்யமாக வினவியருளும் காலத்திலே, ஒருநாள் திருவிளக்குப் பிச்சனைச் சேதிகேட்டருள: பிச்சனும், திருமங்கை மன்னன் விஷயமாக, "ப்ரபந்த முகத்தாலே தேவரைப்பாட நினைத்துத் தன்னைத் தானே துதித்தான்" என்று விண்ணப்பஞ்செய்யக் கேட்டருளி, "திருமங்கை மன்னன் சேதியை நினைக்கவேண்டாம்" என்று நியமித்து, ஆழ்வாரிடத்திலே மிகவும் க்ருபையுடனே எழுந்தருளியிருக்கும் காலத்திலே; மதுரகவியாழ்வார், திருநகரியிலே சடகோபனை அர்ச்சாவிக்ரஹமாக ப்ரதிஷ்டிப்பித்து, கம்பனையும் ஆழ்வார் ஸந்நிதியாலே † சங்கப்பலகையிலே ப்ரத்யக்ஷமாக ஜயித்து, ஆழ்வாருக்கும் அனைத்தழகும் கொண்டருளப் பண்ணிக்கொண்டு, திருவரங்கத்

† நம்மாழ்வார் பெருமையைக்கண்டு சங்கத்தலைவர் பாடிய செய்யுள்:—

ஈயாடுவதோ கருடற் கெதிரே? இரவிக்கெதிர் மின்மினியாடுவதோ?, நாயோடுவதோ வுறுமிப்புலிமுன்? நரிகேசரிமுன் நடையாடுவதோ?, பேயாடுவதோ வழகுருவசிமுன்? பெருமானடிசேர் வகுளாபரணன், ஓராயிரமாமறையின் தமிழின் ஒருசொற்பொருமோ வுலகிற்கவியே.

திருப்பதியிலே அடிக்கடிவந்து ஸ்ரீ கார்யம் ஆராய்ந்து கொண்டிருக்கிற காலத்திலே; ஒரு திருக்கார்த்திகைதிவ்விய மஹோத்ஸவத்திலே பெருமாளும் நாய்ச்சிமார்களும் திருமஞ்சனம் கண்டருளி, உடுத்துப் பூசி முடித்து ஒப்பித்திருக்க; திருமங்கையாழ்வாரும் "திருநெடுந்தாண்டகம்" என்று முதலான அநுப்ரபந்தத்தை யிட்டருளி, பெருமாள் திருச்செவி சாத்தும்படி தேவகானத்திலே ஏறிட்டு அபிநயித்து அநுஸந்திக்க; பெருமாளும் போரவுகந்தருளி, ஆழ்வாருக்கு ஸகலவரிசைகளும் ஸாதிக்கத் திருவுள்ளம்பற்றி, "ஆழ்வார்! நாமுமக்குச் செய்யவேண்டுவதென்?" என்று சொல்ல; திருமங்கைமன்னனும், "நாயன்தே! ஸம்ஸாரியாய்ப்போந்த அடியேனை இப்படி விஷயீகரித்தபின்பு அடியேனுக்கொரு குறையுமில்லை, ஆகிலும், ‡ மார்கழிமாசத்திலே சுக்லபக்ஷத்தில் ஏகாதசியின்று அத்யயநோத்ஸவம் கொண்டருளும்போது சடகோபன் சொல்லான திருவாய்மொழியை வேதங்களுடனே கேட்டருளி வேதஸாம்யமாக அநுஸந்தித்தருளவேணும்" என்று விண்ணப்பஞ்செய்ய; பெருமாளும் மிகவும் உகந்தருளி, அப்பொழுதே சடகோபன் திருவாய்மொழிக்கு வேதஸாம்யம் அநுக்ரஹித்து, "அத்யயநோத்ஸவத்திலே வேதங்களுடனே திருவாய்மொழியுங் கேட்டருளுகிறதாகத் திருவுள்ளமானோம்" என்று திருமுகப்பட்டையமும் ஸகல வரிசைகளையும் நம் * தழையிடுவான் கையிலே அனுப்பியருள; "இக்கலியன் தேவகானத்திலே மிகவும் பாடுகையாலே அவர் மிடறுநொந்தது, இன்று நாம் சாத்தியிருந்த தயிலக்காப்பை அவர்மிடற்றிலே தடவுங்கோள்" என்று பரிஜநங்களை

‡ இந்த விருத்தாந்தத்தை கலியநந்நாடு என்னும் க்ரந்தத்தின் பக்கத் காணலாம்.

* தழையிடுவான்-திருப்பணிசெய்வான்.



நியமிக்க; பரிகரமும் அப்படிச்செய்ய; திருமங்கை மன்னன் க்ருதார்த்தராய், தம்மிடத்துக்கு எழுந்தருளினார். தழையிடுவாரும் திருமுகப்பட்டையம் முதலான ப்ரஸாதங்களையும் கொண்டுவருகிற சேதியைக்கேட்டு சடகோபனும், மதுரகவிகளுடனே புறப்பட்டருளி, தழையிடுவாரை யெதிர்கொண்டு ப்ரஸாதமும் சூடித் திருமுகப்பட்டையத்தையும் சிரஸாவஹித்துத் தழையிடுவாரை ஆதரித்து, மறுநாள் திருநகரியிலும் புறப்பட்டு மார்க்கசீர்ஷமாஸத்து சுக்லதசமியின்று கோயில்வர எழுந்தருள, அச்சேதியை கேட்டுத் திருமங்கை மன்னனும் எதிர்கொண்டு ஆழ்வாரை சேவித்து, மதுரகவிகளுடனே பெரிய பெருமாள் ஸந்நிதியிலே எழுந்தருளப் பண்ணிக்கொண்டுவர, பெருமாளும் ஆழ்வாரைக் கடாக்ஷித்து "நம்மாழ்வார்" என்று திருநாமம் சாத்தி, ஸகலவரிசையும் ப்ரஸாதித்து, ஸத்யா மட்டமான திருக்குறளப்பன் கோயிலிலே விடுதியாக விடச் சொல்லி நியமிக்க; அந்தப்படியே திருமங்கை மன்னனும் மதுரகவிகளும், பரிஜநங்களுடன் ஆழ்வாரைத் திருக்குறளப்பன் ஸந்நிதியிலே எழுந்தருளப் பண்ணிக்கொண்டு போய், மற்றைநாள் விடிவோறே திருவத்யயந உத்ஸவம் ஆரம்பித்து, வேதாதிகள் தொடங்கி நடந்த வநந்தரம், ராத்ரி அழகியமணவாளன் திருமண்டபத்தில் ஆழ்வார் எழுந்தருள, பெருமாளும் "அருளப்பாடு திருவாய்மொழி விண்ணப்பம் செய்வார்" என்று அருளப்பாடு முதலான ஸகலவரிசைகளும் ஸாதிக்க, மதுரகவிகளும் ஆழ்வாருக்கு காரணபூதராயிருந்து, திருவாய்மொழியைத் தொடங்கி தேவகானத்திலே அபிநயத்துடனே சேவித்து, பத்தாம் திருநாளில் வேதாதிகள் சாற்றினவுடனே, ராத்திரி திருவாய்மொழியும் சாற்றி, ஆழ்வார் முன்பு திருவாய்மொழியைத் தலைக்கட்டினவாறே திருவடிகளைச் சேர்த்த

படியை அநுகரித்து, பெருமாள் திருவடிகளைச் சார்ந்தவுடனே பெருமாளும் ஆழ்வாரை வசாசநத்திலே வைத்துக்கொண்டு, மாலைகள் - ப்ரஸாதம் - கஸ்தூரித் திருமண்காப்பு முதலான அனைத்துகளை ப்ரஸாதித்துத் திருநகரிக்கு விடைசாதித்து, தம்முடைய வரிசைகளெல்லாம் சாதித்து அனுப்பியருள; நம்மாழ்வார் உடனே, கலியன்பின் செல்ல, மதுரகவிகளுடன் புறப்பட்டருளி, திருநகரிக்கு எழுந்தருளி, ப்ரதிஸம்வத்ஸரம் அந்தப்பிரகாரம்நடக்க; திருமங்கைமன்னனுக்குமாக தர்சநப்ரபந்தம் அருளினதிலே, கைங்கர்யமும் செய்தருளுவதாக, ராஜமகேந்திரன் திருவீதியில் வடகிழக்கிலே நூற்றுக்கால்மண்டபமாகத் திருமாமணிமண்டபம்கட்டி, அதிலே ப்ரதிஸம்வத்ஸரமும் அத்யயநோத்ஸவம்நடத்தி, குலசேகரன் திருவீதியைச்சூழ்ந்த திருமதிளும் அதுக்குத் தெற்குவடக்குத் திருவாசல் கோபுரங்களும், அத்திருவீதியில் தென்மேல் மூலைத் திருமண்டபமும் திருநடைமாளிகையும், தென்கிழக்கிலே பெரிய திருமடைப்பள்ளியும், நாலாந்திருச்சுற்றைச் சூழ்ந்த திருமதிளும், அதில் தெற்குவடக்கு கோபுரங்களும் கட்டுவிக்குமிடத்தில்; வடக்குத் திருக்கோபுரத்திலே எதிர்த்தகை அழகிய சிங்கரினுடைய ஸாந்நித்யம் செய்தருளினபடியினாலே அவருக்கு எதிர்த்துக்கட்டியும் ஸ்தாபியும் கட்டுவித்து, அதுக்கு கிழக்கே சந்த்ரபுஷ்கரிணிக் கரையிலே தொண்டரடிப்பொடியாழ்வார் திருமாலைப்பலகைவிருக்கிறபடியினாலே அத்தைவிட்டு மதிள்கட்டுகையாலே ஆழ்வாரும் ஸந்துஷ்டராய், தம்முடைய கையில் திருக்குகிற ஆயுதத்துக்கு [illegible] "அருள்மாரி" என்று ஆழ்வார் திருநாமம் சாத்தினதைக்கண்டு களித்து; பூர்வம் தென்மேல்புறத்திலே கிளாபுரியான



உறையூருக்கு ப்ரபுவானவன் சோழன் ராஜ்யபாரம் வஹித்துச்செய்தே, திருக்காவேரிகரையிலே தாமரை ஓடையில் தாமரைப்பூவிலே ஒருகன்னிகாசிசுவைக்கண்டு எடுத்துக்கொண்டுவந்து ஸ்வஸ்த்ரீயின்கையிலே கொடுத்து "கமலவல்லி" என்று திருநாமம்சாத்தி வளர்த்தவுடனே ஸ்ரீரங்கராஜர் திருக்கல்யாணம் செய்தருளி "அழகியமணவாளர்" என்கிற திருநாமம்பெற்றபின்பு அந்த சோழனும் தன்குமாரத்தியான உறையூர்வல்லியாருக்கு ஸ்த்ரீதநமாக பஹுத்ரவ்யத்தைத் தங்கத்தாலே ஒருநாளையில் படித்தனமாக மூன்றுபதின்கலம் அமுதுபடி முதலான ஸாமக்ரிகளும் தநிகளும்கொடுத்து, நாலாம்சுற்றுத் தென்மேல் மூலையிலே *கருவுகலம்கட்டிவைத்து, அதிலே வந்த பதார்த்தங்களை க்ஷேபித்துவைத்து, அந்தக் கருவுகலத்துக்குவடக்கு வடக்குத் திருக்கொட்டாரமும், மேற்குவடக்காக பெரியதிருநடைமாளிகையும் கட்டிவைக்கும் காலத்திலே; ஒருக்கால் பெருமாள், மஞ்சனக்குளி உத்ஸவத்துக்கெழுந்தருளக் கூடாமல், பரிஜனங்களுக்கு அருளப்பாடிட்டு, "நம்கலியனை மஞ்சனக்குளிஉத்ஸவம் பண்ணிவைத்துக்கொண்டு வாருங்கோள்" என்று திருவுள்ளமாக; அத்தப்படியே நடத்தினபின்பு, அதுமுதலாக ப்ரதிஸம்வத்ஸரம் அந்த உத்ஸவம் திருமங்கைமன்னனுக்கே நடக்குவர, திருமங்கைமன்னனும், சந்த்ரபுஷ்கரிணிக்கரை தொடங்கி வெளியமுகியாளிலும் திருநடைமாளிகைகட்டிவைத்து, தளவரிசையும்பண்ணிவித்திக்கையில், திருவீதி "ஆலிநாடன்திருவீதி" என்று திருநாமமாய்த்து.

* கருவுகலம்-சாக்கறை; நற்சரக்கையிட்டு வைக்கும் அறை; ஸ்ரீபண்டாரமென்றபடி.

## சோளேந்திரஸிம்ஹன் கைங்கரியம்.

அத்திருவீதியில் சந்த்ரபுஷ்கரிணிக்குக்கிழக்கு, சோளேந்த்ரஸிம்ஹன் கைங்கரியமான திருமண்டபம்.

## கங்கைதேவர் சிங்கணன் தண்டயநாயக்கர் கைங்கரியம்.

ஆரோக்யசாலையும், திருநடைமாளிகையும், ப்ரதாபசக்ரவர்த்தி கார்யப்பேரில் கங்கைதேவர் சிங்கணன் தண்டயநாயக்கர் கைங்கரியம்.

## விக்ரமசோழனை அகளங்கன் கைங்கரியம்.

அத்தைச் சூழ்ந்த அஞ்சாம் திருச்சுற்றுத் திருமதிளும், அதில் நாலு கோபுரமும், திருவாசலும், வடகிழக்கிலே கோசாலையும், அதில் குழகர்ஸந்நிதியும், தத்ப்ரதிஷ்டையும், தென்மேற்கிலே விமானத்துடன் கோயிலும், அதிலே சக்ரவர்த்தித் திருமகன் ப்ரதிஷ்டையும், வடமேற்கில் நாய்ச்சியார் கோயிலும், ஆலிநாடன் திருவீதியில் பெரிய திருமண்டபத்தில் பெரிய திருவடியும், அத்திருமண்டபத்தில் அடிப்பாரமும், குறடும் கட்டுவித்தது, விக்ரமசோழனை அகளங்கன் கைங்கரியம்.

## சுந்தரபாண்டியதேவர் கைங்கரியம்.

சுந்தரபாண்டியதேவர், சேரன் சோழன் வல்லாளதேவன் முதலானோரை ஜயித்து "எம்மண்டலங்கொண்ட பெருமாள்" என்று விருது செலுத்தி, அந்த த்ரவ்யங்களாலே ராஜமஹேந்த்ரன் திருவீதி முதலாக இந்நாலு வீதியும் இருபத்துநாலு துலாபுருஷ மண்டபம்கட்டி துலாபாரந்தூக்கி, திருமுகத்துறையிலே ஒருநிரையாக இரண்டு



ஓடங்கட்டி, அதில் ஒரு ஓடத்திலே தச்சுமுழத்திலே ஏழு முழமிருக்கிற பட்டத்தானையின்மேலே தானும் தன்னுடைய ஆயுதங்களுடனே யிருந்து, ஒரு ஓடத்திலே அந்த மட்டத்துக்குச் சரியாக ஸ்வர்ணம் முத்து முதலான நவரத்நங்களும் ஏற்றி ஆனை துலாபுருஷந் தூக்கி, இது நீங்கலாக வேறே தனங்கள் அழைப்பித்து, கல்போக்த ப்ரகாரம் தானதர்மங்களும்பண்ணிவைத்து, அந்த த்ரவ்யத்தை கைங்கர்யம் பண்ண உத்யோகிக்குமளவில்: அந்த த்ரவ்யம், ஸபரிகரரான ஸ்வாமிக்குத் திருவுள்ள மாகாதபடியினாலே இரண்டு வருஷம் மறிபட்டுக் கிடந்தது; அநந்தரம், அவனுடைய ஆர்த்தியாலேயும் அநுஸரணத்தினாலேயும் ஸபரிகரரான பெருமாள் திருவுள்ளமான வநந்தரம், அந்த த்ரவ்யத்தைக் கருவுகலத்திலே முதலிட்டுப் பண்ணின கைங்கர்யத்துக்கு விவரம் :—

திருவணுக்கன் திருவாசல் திருமதிளுக்குமேலேசூழச் சூழ்ச்சியாக எடுத்தூக்கட்டுவித்து, திருவணுக்கன் திருவாசலுக்கும் தர்மவர்மாவின் கைங்கர்யமான அழகிய மணவாளன் திருமண்டபத்துக்கும் நடுவிலே ஒரு பத்தி வெளியாய் திருவணுக்கன் திருவாசலிலே சுருளும்படியும் கட்டியிருக்கையில், அந்த வெளியை அந்தத் திருமண்டபத்துடனே சேர்த்துப் பாவுகல்லும் போட்டு வெளியை யடைத்து, நடுவில் பள்ளமும் தும்பித்து, தளவரிசையும் கட்டுவித்து, மேல்புறமும் கீழ்ப்புறமும் சுருளும்படியும் கட்டுவித்து, அந்தத் திருமண்டபத்துக்குத் தெற்கு பெரிய திருவடி ஸந்நிதிக்குக் கிழக்கும் மேற்கும் கல்லறைகளைக் கட்டுவித்து, மேல்புறம் வெளியை யடைப்பித்து, சேனைமுதலியார் திருச்சுற்றான ராஜமஹேந்த்ரன் திருவீதியில்

தெற்குத் திருவாசல் முதலாக, சுற்றுத் திருநடை மாளிகைகளும், துலாபுருஷ மண்டபங்களும், திருப்பூமண்டபமும், யாகசாலையும், வடக்குத் திருவாசலுக்குக் கிழக்கு முதலாக திருநடை மாளிகைகளும், துலாபுருஷ மண்டபங்களும், அழகிய மணவாளன் திருமண்டபத்துக்கு நேர் கிழக்காக திருவீதிக்குக் கீழ்ப்புறத்திலே கொறட்டின் மேலே திருக்காவணப் பத்தித் திருமண்டபமும், சுந்தர பாண்டிய தேவர் காரியப்பேரில், பாண்டிய மண்டலத்தில் பல்லவன்விழுப்பரையன் காரியமாணிக்கத்தின் கைங்கரியம்.

எம்மண்டலங்கொண்டு கோயில் பொன்மேய்ந்த பெருமாள் சுந்தரபாண்டியதேவர் கைங்கரியம்.

இம்மூன்றாம் திருச்சுற்றான குலசேகரன் திருவீதியில் ஆரியபட்டாள் காவலான தெற்குத்திருவாசலுக்கு மேற்கு சேனை வென்றான் திருமண்டபத்துக்கு மேற்கு துலாபுருஷ மண்டபமும், அந்தத் திருவாசலுக்குக் கிழக்கு துலாபுருஷ மண்டபமும், வடக்குத் திருவாசலுக்குக் கிழக்கு துலாபுருஷ மண்டபமும், முன் கம்பர் தண்டநாயக காதிகாரியாய் ஆயிரக்கால் மண்டபம் கட்டிவைத்த பெருமாள் தேவன் கைங்கர்யமான சுற்றுச்சூழ்ந்த திருக்காவணமுள்ள பெருமாள் தேவன் திருமண்டபத்தை அறைகுறையும் தீர்த்துக்கொண்டு, திருநாளும் சுந்தரபாண்டியன் கட்டளையாக நடந்தது. இதுவும், இத்திருச்சுற்றில் தளவரிசையும், திருநடை மாளிகை திருமண்டபமும் நாலாந் திருச்சுற்றான வெளியழகியானில் திருநடை மாளிகையில் துலாபுருஷ மண்டபங்களும் கட்டிவைத்து, தன்னை விக்ரஹமாகப் பண்ணுவிக்கிறதுக்கு பெருமாள் பரிகரங்கள் சம்மதியாத படியினாலே தன்பேரிலே "பொன் மேய்ந்த பெருமாள்"



என்று பகவத் விக்ரஹமும், அழகிய மணவாளன் திருமண்டபத்தில் பெரிய திருவடிநயினாரையும், நீளாம்மையான சேரகுலவல்லியாரையும் தங்கத்தாலே எழுந்தருளப்பண்ணி வைத்து, சந்தன மண்டபத்தில் பெரிய திருவடி சந்நிதிக்கு அடுத்தாப்போலே கீழ்ப்புறத்தில் கல்லறையில் பொன் மேய்ந்த பெருமாளையும், திருப்பூமண்டபத்தில் தென்புறத்தறையிலே சேரகுலவல்லியாரையும் ப்ரதிஷ்டிப்பித்து, பெரிய பெருமாளுக்கும் அழகிய மணவாளப் பெருமாளுக்கும் ரத்ந திருவபிஷேகங்களும், ரத்நாங்கிகளும், திருவனந்தாழ்வானுக்கு ரத்நாங்கியும், பெரியபெருமாளுக்கு மாணிக்கத் திருவபிஷேகமும், வயிரத் திருவபிஷேகமும், ரத்ந அங்கி, ரத்ந திருப்பாதையும், மாணிக்கமாலை, கமல ப்ரமாணம் கண்டமாலை, ஸ்வர்ணச் செண்பகமாலை, ரத்நக் கழுநீர்மாலைகளும், பலவகைத் திருவாபரணங்களும், பொன்னாலே உத்தரீயமும், கோயிலாழ்வாரும், விமானமும், பொன்னின்மேலே முத்துக்கட்டின ரத்ந ப்ரபை ஸிம்ஹாஸநமும், திருமுத்தின் பந்தலும், செம்பொன் திருவாசலும், அமுது மண்டபமும், திருவண்ணாழி திருமதிள்கள் முதலானதுகளும், பொன் தகடுபோட்ட திருவணுக்கன் திருவாசலும், கல்தோரணமும், ரத்நத்தாலே பண்ணுவித்து; அழகிய மணவாளன் திருமண்டபமும், பெரிய திருவடி விமானமும், திருக்கோபுரநயினார் விமானமும், ராஜமகேந்திரன் திருவீதியும், மதிள் கொடுங்கை தான் முதலானதுகளும், பொன் தகடு போடுவித்து, குலசேகரன் திருவீதியும் அந்தப்படியே பொன் செய்வித்து, அணியரங்கன் திருமுற்றத்திலே கொடிக்கம்பம் பொன்னாலே நாட்டுவித்து, இதுவும் தங்கக்கொப்பரைகளும், தங்கத் தளிகைகளும், வட்டில் வேதிகை திருக்குத்துப் பணிவிளக்கு

தெற்குத் திருவாசல் முதலாக, சுற்றுத் திருநடை மாளிகைகளும், துலாபுருஷ மண்டபங்களும், திருப்பூமண்டபமும், யாகசாலையும், வடக்குத் திருவாசலுக்குக் கிழக்கு முதலாக திருநடை மாளிகைகளும்; துலாபுருஷ மண்டபங்களும், அழகிய மணவாளன் திருமண்டபத்துக்கு நேர் கிழக்காக திருவீதிக்குக் கிழ்ப்புறத்திலே கொறட்டின் மேலே திருக்காவணப் பத்தித் திருமண்டபமும், சுந்தர பாண்டிய தேவர் காரியப்பேரில், பாண்டிய மண்டலத்தில் பல்லவன் விழுப்பரையன் கரியமாணிக்கத்தின் கைங்கரியம்.

எம்மண்டலங்கொண்டு கோயில் பொன்மேய்ந்த பெருமாள் சுந்தரபாண்டியதேவர் கைங்கரியம்.

இம்மூன்றாம் திருச்சுற்றான குலசேகரன் திருவீதியில் ஆரியபட்டாள் வாசலான தெற்குத்திருவாசலுக்கு மேற்கு சேனை வென்றான் திருமண்டபத்துக்கு மேற்கு துலாபுருஷ மண்டபமும், அந்தத் திருவாசலுக்குக் கிழக்கு துலாபுருஷ மண்டபமும், வடக்குத் திருவாசலுக்குக் கிழக்கு துலாபுருஷ மண்டபமும், முன் கம்பர் தண்டநாயக் காதிகாரியாய் ஆயிரக்கால் மண்டபம் கட்டிவைத்த பெருமாள் தேவன் கைங்கர்யமான சுற்றுச்சூழ்ந்த திருக்காவணமுள்ள பெருமாள் தேவன் திருமண்டபத்தை அறைகுறையும் தீர்த்துக்கொண்டு, திருநாளும் சுந்தரபாண்டியன் கட்டளையாக நடந்தது. இதுவும், இத்திருச்சுற்றில் தளவரிசையும், திருநடை மாளிகை திருமண்டபமும் காலாக் திருச்சுற்றான வெளியழகியானில் திருநடை மாளிகையில் துலா புருஷ மண்டபங்களும் கட்டிவைத்து, தன்னை விக்ரஹமாகப் பண்ணுவிக்கிறதுக்கு பெருமாள் பரிகரங்கள் சம்மதியாத படியினாலே தன்பேரிலே "பொன் மேய்ந்த பெருமாள்"



என்று பகவத் விக்ரஹமும், அழகிய மணவாளன் திருமண்டபத்தில் பெரிய திருவடிநயினாரையும், நீளாம்மையான சேரகுலவல்லியாரையும் தங்கத்தாலே எழுந்தருளப்பண்ணி வைத்து, சந்தன மண்டபத்தில் பெரியதிருவடி ஸந்நிதிக்கு அடுத்தாப்போலே கிழ்ப்புறத்தில் கல்லறையில் பொன் மேய்ந்த பெருமாளையும், திருப்பூமண்டபத்தில் தென்புறத் தறையிலே சேரகுலவல்லியாரையும் ப்ரதிஷ்டிப்பித்து, பெரிய பெருமாளுக்கும் அழகிய மணவாளப் பெருமாளுக்கும் ரத்ந திருவபிஷேகங்களும், ரத்நாங்கிகளும், திருவனந்தாழ்வானுக்கு ரத்நாங்கியும், பெரியபெருமாளுக்கு மாணிக்கத் திருவபிஷேகமும், வயிரத் திருவபிஷேகமும், ரத்நாங்கி, ரத்ந திருப்பாதுகையும், மாணிக்கமாலை, கமல ப்ரமாணம் கண்டமாலை, ஸ்வர்ணச் செண்பகமாலை, ரத்நக் கழுத்திமாலைகளும், பலவகைத் திருவாபரணங்களும், பொன்னாலே உத்தரீயமும், கோவிலாழ்வாரும், விமானமும், பொன்னின்மேலே முத்துக்கட்டின ரத்ந ப்ரபை ஸிம்ஹாஸநமும், திருமுத்தின் பந்தலும், செம்பொன் திருவாசலும், அழகு மண்டபமும், திருவண்ணாழி திருமதிள்கள் முதலானதுகளும், பொன் தகடுபோட்ட திருவனுக்கன் திருவாசலும், கல்தோரணமும், ரத்நத்தாலே பண்ணுவித்து; அழகிய மணவாளன் திருமண்டபமும், பெரிய திருவடி விமானமும், திருக்கோபுரநயினார் விமானமும், ராஜமகேந்திரன் திருவீதியும், மகிள் கொடுங்கை ஜாண் முதலானதுகளும், பொன் தகடு போடுவித்து, குலசேகரன் திருவீதியும் அந்தப்படியே பொன் செய்வித்து, அணியரங்கன் திருமுற்றத்திலே கொடிக்கம்பம் பொன்னாலே கட்டுவித்து, இதுவும் தங்கக் கொப்பரைகளும், தங்கத் தளிகைகளும், வட்டில் வேதிகை திருக்குத்துப் பணிவிளக்கு

திருமஞ்சனத்தாழி திருமஞ்சனக் கொடிகளும் பண்ணுவித்து, மேற்படியார் திருநாளான சித்திரைத் திருநாளுக்குத் திருக்காவேரியிலே பெரியதாக ஊறணிவெட்டுவித்து, அதுக்குத் திருக்காவேரி நீர் பாய்ச்சி, முத்தும் பவளமும் கட்டின திருக்காவணமும் கட்டுவித்து, ஊறணியிலே திருப்பள்ளஓடம் பொன்னாலே பண்ணி நிறுத்தி, அதிலே நாய்ச்சிமார்களுடனே பெருமாளெழுந்தருளி சிறப்புக்கட்டளையும் பண்ணி, நாநாள் படித்தனமாக ஸ்ரீநாயன் அமுது பதின்கல அமுது படியும். பொன்னாலே கொம்பஞ்சு கொடியஞ்சு கறியமுது வகைகளும், அதுக்குத் தக்கதாகப் பண்ணுவித்து, வடக்குமாடத் திருவீதியில் திருத்தேர்த் திருநாள் மேற்படியார் கைங்கர்யமாக நடக்கையாலே அந்தத் திருத்தேரிலே ஸிம்ஹாஸநத்தைவார்ந்த முகபத்ரத்துக்கு பொன் தகடும், பொன்னாலே பெரிய திருவடி குதிரை நம்பிரான் ஆனை நம்பிரான் இருந்தபீடம் சேனை வென்றான் திருச்சுற்றிலே எழுந்தருளும்படி செம்பொன் திருத்தேரும் கட்டுவித்தது. ஆக, கடைப்பொன் பதினெட்டுலக்ஷமும், கோயில் பொன் மேய்ந்தது பதினெட்டு லக்ஷமும், எம்மண்டலங்கொண்டு கோயில் பொன் மேய்ந்த பெருமாள் சுந்தர பாண்டியதேவர் கைங்கரியம்.

### குலோத்துங்கசோழன் கைங்கரியம்.

பெருமாள் தேவன் மண்டபத்துக்குக் கிழக்கு நாலு காலிலே ராம லக்ஷ்மண ஸுக்ரீவ ஹநுமாருடன்கூடின நாலுகால் மண்டபம், குலோத்துங்கசோழன் கைங்கரியம்.

### கம்பயதண்டயநாயக்கர் கைங்கரியம்.

ஆலிநாடன் திருவீதி மேல்வடக்குமூலே பரவாசுதேவர் ஸந்நிதியும், அகளங்கன் திருவீதியில் மேல்புறத்தி



சுதர்சனப்பெருமாள் கோவிலும், நாய்ச்சியார் ஸந்நிதிமண்டபமும், இந்தத் திருச்சுற்றிலே ஆயிரக்கால் மண்டபமும் வடபுறத்தில் கோசாலையை யழித்து கௌத்தியாகக் கட்டின கொட்டடின்மேலே பத்திக்கொறடும் கட்டி, லக்ஷ்மீநாராயணப் பெருமாள் கோயிலும், இவர் ஸந்நிதிக்குத் தெற்கு நாயகப்பத்தியும், தேவாஸன கொறடும் பத்தியும், அஞ்சு நாயகர் காணியும் குறைவறுகளை வெளிக்கும் படிக்கு மதி[illegible]டதும், பட்டத்துக்குதிரை பூண்ட புரவியில் குறடும், [illegible]பூண்ட புரவியில் குறடும், கருஞம்படியும், மேல்கொடுங்கையும் கட்டிவைத்தது; வல்லாளதேவன் வகையில் ப்ரதாப சக்ரவர்த்தி ராமநாத தேவருடைய ப்ரதானி கம்பயதண்டய நாயக்கர் கைங்கர்யம்.

### காரியமாணிக்கத்தண்டய நாயக்கர் கைங்கர்யம்.

* அதுவும், இதுக்குக்கீழில் திருக்காவணப்பத்தியும், நாயகப்பத்தியும், கொறட்டில் சித்திரப்பணியும், தேவாஸகமும், படியும், மேலில் கொடுங்கையுட்படக் கட்டுவித்தது, கம்பயதண்டய நாயக்கர் தமையனார் காரியமாணிக்கத் தண்டயநாயக்கர் கைங்கர்யம்.

### கம்பயதண்டய நாயக்கர் கைங்கர்யம்.

திருவாழியாழ்வான் கோயில்வாசல் நாலுகால் மண்டபமும், கம்பயதண்டய நாயக்கர் கைங்கர்யம்.

### மலைப்பெருமாள் கைங்கர்யம்.

எடுத்தகை அழகிய சிங்கர் கோவிலுக்கு விவரம் :—

திருமங்கையாழ்வார், ஆலிநாடன் திருவீதியில் வடக்குத் திருக்கோபுரத்திலே எடுத்தகை அழகியசிங்கரை எழுந்தருளப்பண்ணின இடத்திலே அவர் ஸாந்நித்யம் செய்தரு

ளினபடியினாலே எடுத்துக்கட்டியும் விமானமும் கட்டுவித்தார்; அநந்தரம், முன்னடிப்பாரமுள்ளதும், மலையாளராஜாவான சேரகுமாரன் மலைப்பெருமாள் கைங்கர்யம்.

வீரநரசிங்கதேவர் கைங்கர்யம்.

இதில், திருமண்டபமும், மேலெடுத்துக்கட்டியும், மதிளும், கன்னடியராஜா வீரநரசிங்கதேவர் கைங்கர்யம்.

ஆகுளூர் வரநாதராயர் கைங்கர்யம்.

இந்தக்கோயில் முகப்புக்கோறடு திருமண்டபமும், சுருளும் படியும், ஆகுளூர் வரகாதராயர் கைங்கர்யம். இந்தக்கோயில் திருமடைப்பள்ளியும் அவர் கைங்கர்யம்.

தேவப்பெருமாள் கைங்கர்யம்.

இதுக்கு வடக்கு அகளங்கன்வாசல் நிலைகாலும், வடபுறத்தில் திருமதிலும் பழுதிச் சரிந்துபோகையில், நிலைகாலும் சீர்திருத்தித் திருமதிளும் கட்டிவைத்தது, ஆகுளூர் வரகாதராயர் குமாரர் தேவப்பெருமாள் கைங்கர்யம்.

வாலநாதராயர் கைங்கர்யம்.

பெரிய திருமண்டபத்தில் பெரிய திருவடி கோயிலைச் சூழ்ந்த பரமன் மண்டபம், ஆகுளூர் வரகாதராயர் ராஜ்யம் பண்ணின காலத்தில் தர்சன் பரமனைக் கொண்டு காலுபுறத்திலும் நாலாணி காலோட்டுக்காலும், வட்டு கும்பாரக்காலுட்பட்டதும் சேர்ந்தியாகப் பண்ணுவித்து, பெரிய திருவடி மண்டபமும் கட்டுவித்து, பரமன் மண்டபம் என்று பேரிடுவித்தது, வரகாதராயர் கைங்கர்யம்.

திரிவிக்கிரமசோழன் கைங்கர்யம்.

இந்த அகளங்கன் திருமதிளைச்சூழ்ந்த திங்களும் விமானமுந் திருவீதியைச்சூழ்ந்த திருமதிளும், காலுதி



ருக்கோபுரங்களும் திரிவிக்கிரமசோழன் கைங்கர்யமானபடியாலே, இத்திருவீதிக்குத் திரிவிக்கிரமன் திருவீதி என்று திருநாமமாய்த்து.

பள்ளிகொண்ட சோழன் கைங்கர்யம்.

இதில் கீழ்மாடத்திருவீதியிலே பாவோர் திருமாளிகைவாசலிலேயிருந்து பெருமாள் ஆயிரக்கால் திருமண்டபத்தின் மேலே கொண்டருளும்போது இசைசேவிப்பார்கள். தெற்குமாடத்திருவீதியிலே கீழ்கண்டத்திலே பல்லவராயன் மடமும், வடக்கு மாடத்திருவீதியிலே மேல்கண்டத்திலே இலங்கைவான் மடமும், திருத்தேர் கீழ்கண்டத்திலே சோழன் மடமும், அதுக்குக்கிழக்கே பாண்டியன் மண்டபமும், மடமும், அவர்கள் தநியாராதநமும் நடந்தது. அத்தைச்சூழ்ந்த மாடமாளிகைகளும் திருவீதி திருமதிள் காலு திருக்கோபுரவாசலும், பள்ளிகொண்ட சோழன் கைங்கர்யம்.

கலியுகராமன் கைங்கர்யம்.

அந்தத்திருவீதியில் வடவண்டை மேல்கண்டத்திலே திருமங்கையாழ்வார் மடமும் கட்டிவைத்தார்; மற்றும் அநேக மடங்களுமுண்டு. ஆக, திருவீதிகளெல்லாம் அநுவரையிலே அவரவர்பண்ணின ஜீர்ணோத்தாரணத்தினாலே அவரவர் பேர்வழியிலே வியவஹாரம்நடந்து வருகிறது; அத்தைச்சூழ்ந்த திருவீதி, கலியுகராமன் கைங்கர்யம்.

திருக்குறளப்பன் சந்நிதி.

சுற்றுக் கோயில்களில் திருக்குறளப்பன் கோயில் அநாதியாய், தென்திருக் காவேரிக்கு வடகரையாய், ஸங்

த்யாமடமாயிருந்தது. கல்யப்தம் நானூற்று நாற்பத்தஞ்சுக்குமேல், மதுரகவியாழ்வார் நம்மாழ்வாரைத் திருநகரியிலிருந்து பெருமாள் நியமனத்தினாலே எழுந்தருளப் பண்ணுவித்துக் கொண்டுவர, பெருமாளும் நம்மாழ்வாருக்கு ஸந்த்யா மடத்தை விடுதியாக ஸாதித்தருளின படியினாலே, அது முதலாகத் திருக்குறளப்பன் ஸந்நிதியிலே நம்மாழ்வார் எழுந்தருளியிருக்கிறார். திருக்குறளப்பன் புராணஸித்தம்.

## வல்லபதேவன் கைங்கர்யம்

கல்யப்தம் நூற்றஞ்சுக்குமேல், ஸ்ரீவில்லிபுத்தூரிலே அழகியமணவாளன் ரங்கமன்னாராக எழுந்தருளி, சூடிக்கொடுத்த கோதையைத் திருமணம்புணர்ந்து, நாய்ச்சியாருடன் கோயிலுக்கெழுந்தருளும்போது, பெரியாழ்வார் சிஷ்யனான வல்லபதேவன் கோதைக்கு ஸ்த்ரீதநம் அநேகமாகக் கொடுத்து, திருப்பல்லக்கிலே சூடிக்கொடுத்தவளையும் எழுந்தருளப்பண்ணிக்கொண்டு, தென் திருக்காவேரி வடகரையிலேயிறங்கி நீராட்டம் முதலான அலங்காராதிகளைப் பண்ணிக்கொண்டு, அனைவரு மெதிர்கொள்ளத் திருப்பல்லக்குடனே கோயிலிலேபுகுந்து அத்ருச்யையான படியினாலே; அந்தத்திருத்தோப்பிலே சூடிக்கொடுத்த நாய்ச்சியார் கோயில் கட்டி ப்ரதிஷ்டிப்பித்தது, வல்லபதேவன் கைங்கர்யம்.

## திருமங்கைமன்னன் கைங்கர்யம்.

கல்யப்தம் நானூற்றிரண்டுக்குமேல், திருமங்கையாழ்வார் தசாவதாரக்கோயிலைக்கட்டி ப்ரதிஷ்டிப்பித்து, தம்மையும் விக்ரஹமாக ஏழோத்ஸவ விக்ரஹங்களை ஸதி



யருளப்பண்ணி ப்ரதிஷ்டிப்பித்து, அதற்கு வடபுறமாகத் தாம் வாள்கடைந்தாரம் நிலங்கொண்டு, ஸ்ரீபண்டாரத்திலே த்ரவ்யத்தை முதலிட்டு, பாடியவரான் துறை என்று அதுக்குத் திருநாமம்சாத்தி, அவ்விடத்திலே ஸம்ஸ்க்ருதரான பேருக்குப் பரமபதமுண்டாகத்தக்கதாக அந்த ப்ரதேசத்துக்கு ஸ்ப்ருஷ்டியில்லாதபடி பெருமாள் ஸந்நிதியில் வரம்பெற்றபடியினாலே, இதுகள் திருமங்கைமன்னன் கைங்கர்யம்.

## காட்டழகிய சிங்கர்.

கிழக்கில், காட்டழகியசிங்கர் புராணஸித்தம்.

## சோழன் ப்ரதிஷ்டை.

தெய்வப்புள்ளேறி வருவாரும், பலமண்டபப் பெருமாளும், மேல்புறம் அழகியசிங்கரும். ஆதிகேசவப் பெருமாளும், சேனாதிபதி ப்ரதிஷ்டை. பன்னிராழ்வாரும் சோழன் ப்ரதிஷ்டை.

## டில்லீசுவரன் அழகியமணவாளனைக் கொண்டு போனது.

இப்படி திருவரங்கப் பெருநகரிலே பெருமாள் பரிஜனங்களுடன் வாழ்ந்திருக்கிற காலத்திலே, டில்லீசுவரனான துலுக்கன் ப்ரதாபருத்ரனை ஜயித்து, தொண்டைமண்டலம் சோழமண்டலம் முதலான ப்ரதேசங்களிலே பரவி முற்றிலும் வ்யாபித்து, திவ்யதேசங்களில் பெருமாள்களையுமெடுத்துக்கொண்டு போமளவில்; திருவரங்கத் திருப்பதியிலேயும் வந்துபுகுந்து, கோயிலிலே ப்ரவேசித்து, வடக்கு வாசலிலே புகுந்து; ஆர்யபடாள் காவலான வடக்கு வாசலிலே புகுரா அவ்விடத்திலே பஞ்சுகொண்டான் என்கிற

வரிருந்து படைபண்ணி அவர்களை நிறுத்த, பஹுஜநங்க
ளாகையாலே பத்துபேர்விழுந்து பந்தகொண்டாரை சரிப்
பிடித்து உள்ளேபுகுந்து கருவூலம் முதலானதுகளையும்
கொள்ளையிட்டு, அழகியமணவாளப்பெருமாள், சேரகுல
வல்லியார் முதலான விக்ரஹங்களையும் எடுத்துக்கொண்டு,
ஸர்வஸ்வத்தையும் கொண்டு போகையில், சம்பனூரிலே
ஒரு அம்மையார் "நித்யமாக அழகிய மணவாளப் பெரு
மாளை ஸேவியாமல் சாப்பிடுகிறதில்லை" என் [illegible] த்தை
யுடையளாயிருக்கிறவள், பெருமாளெழுந்தருளினவுடனே
உபவாஸத்துடனே, ஸம்ஸாரத்தைவிட்டு டில்லீசுவரன் பா
ளையத்திலே ப்ரவேசித்து பல்லுபாய் தேஹதாரணமாகப்
பண்ணிக்கொண்டு அந்தத்துலுக்கனுடைய [illegible] புறப்பட்
டு, திருநாராயணபுரத்திலே ராமப்ரியரையும் கொண்டுபோ
கிறதைக்கண்டு, டில்லியிலேயும்போய் வேஷதாரியாய்த்துலு
க்கன் வீட்டிலேபுகுந்து, பெண்டுகளையும் மருவியிருக்க, து
லுக்கன், இந்த விக்ரஹங்களை அரண்மனையிலே உக்ராண
த்திலே வைக்க; அதிலே அழகியமணவாளப்பெருமாளை அ
ந்த டில்லீசுவரன்குமாரத்தி கண்டு, தனக்கு விளையாடவே
ண்டுமென்று எடுத்துக்கொண்டு; தன்னுடைய சயனக்ருஹ
த்திலேவைத்துக்கொண்டிருக்கையில், அழகியமணவாளப்
பெருமாள் திருமேனிக்கு ஸாதகமில்லையென்று அந்தஅம்
மையார் நிஸ்சயித்து, இந்தச்சேதியை ஸ்தலத்திலே அறி
விக்கவேணுமென்று, திருவரங்கத் திருப்பதியேறவந்து அச்
சேதியை விண்ணப்பஞ்செய்ய, பெரியபெருமாளும், ஸம்பி
ராசயக்கொண்டு மிகவும் உகந்தருளி, அந்த அம்மையா
ருக்குப் பின்சென்றவல்லி என்று திருநாமஞ்சாத்தி ஸகல
வரிசைகளும் ப்ரஸாதிக்க,



## ஸ்தலத்தார் அழகியமணவாளனை யெழுந்தருளப் பண்ணிக்கொண்டு வந்தது.

அனந்தரம் ஸ்தலத்தாரனைவரும் அந்த வ்ருத்தாந்
தத்தைக்கேட்டு நன்றாக ஆலோசனைபண்ணி, ஸ்ரீரங்க
நாய்ச்சியாரை வில்வமூலத்திலே [illegible] எழுந்
தருளப்பண்ணி, பெரியபெருமாள் திருவணுக்கன் திருவா
ச [illegible] மாறி, கோயிலைப்பாழ்போட்டு, பரிஜனங்க
ளனைவரும் அறுபது திருநாமம், பின்தொடர்ந்தவல்லியை
முன்னிட்டுக்கொண்டு டில்லியிலே போக; பின்தொடர்ந்த
வல்லியும் முன்புபோலே வேஷத்தைத்தரித்து அரண்மனை
யிலே புகுந்து, பெண்டுகளையும் அநுவர்த்தித்து, அழகிய
மணவாளப்பெருமாள், அந்தத்துலுக்கன் குமாரத்தி ஸு
ரதாணியுடனே பகலில் அர்ச்சாவிக்ரஹமாயும் ராத்ரியில்
விபவாவதாரமாயும் ஸகலஸம்ப்ரமத்துடனே அநுபவித்து
விஹரித்துக்கொண்டிருக்கிறபடியைக்கண்டு, பரிஜனங்களு
க்குச்சொல்ல; அவர்களும், பாடுவாரை முன்னிட்டுக்கொ
ண்டு; டில்லீசுவரனைக்கண்டு இ[illegible]நாட்யத்திலே அத்
த்ப்ரபுவை நன்றாக வசீகரிக்க அந்தத்துலுக்கனும் ஸால
தான் ஸந்தோஷப்பட்டு பஹுத்ரவ்யங்களைக் கொடுக்க;
பாடுவாரும், அந்த த்ரவ்யத்தை வாங்காமல் "நம்முடைய
அழகிய மணவாளப் பெருமாளைத் தரவேணும்" என்று
கேட்க; டில்லீசுவரனும் தன் மநுஷ்யரைக்கூட்டி "உக்
ராணத்திலே இவருக்குவேண்டின விக்ரஹத்தை எடுத்துக்
கொள்ளட்டும்" என்று உத்தரவுயிட; இவர்களும் உக்ராண
த்திலே சோதிக்குமளவில், அங்கே அழகியமணவாளப்
பெருமாளைக் காணமையாலே கேவலம் விஷண்ணராய்,

அந்த அம்மையாரைக் கேட்டுக்கொண்டு, டில்லீசுவர னுடனே, "உம்முடைய குமாரத்தி எங்கள் பெருமானை வைத்துக்கொண்டிருக்கிறாள்" என்று சொல்லுமிடத்தில், அவனும், "உங்கள் தெய்வத்தை நீங்களே அழைத்துக் கொள்ளுங்கோள்" என்று சொல்ல; பாடுவானும், தேவ கானத்தினாலே அழகிய மணவாளப் பெருமானை நன்றாக வத்தி ஆகர்ஷிக்க; [illegible]களுடனே அந்தப் பெண்ணைத் தூங்கப்பண்ணி, தாமெழுந்தருளக்கண்டு, பாடுவாரும் ஸுல்தானுடனே சொல்ல, அவனும் ஆச்சர்யப்பட்டு, "உங்கள் தெய்வத்தைக் கொண்டுபோங்கோள்" என்று உத்தரவுகொடுக்க; அப்பொழுதே டில்லிபாதுஷா வுக்கு சீட்டுவாங்கிக்கொண்டு பரிஜநங்களனைவரும் பெருமா னை எழுந்தருளப்பண்ணிக்கொண்டு அதிசீக்ரமாக அந்த ராத்திரியிலே எண்காதவழி கடந்தார்கள்.

## சுல்தாணி பெருமானைத் தேடிக்காணமல் சரீரம் விட்டது.

மற்றைநாள் விடிவோறே டில்லீசுவரன் பெண் எழுந் திருந்து, பக்கத்திலே பெருமானைக்காணமல் திடுக்கென்று விஸ்மயாக்ராந்தையாய் அந்தப்புரமெல்லாம் தேடிக்காணமல், உக்ராணம் முதலான வெளிகளிலும் காணமல், விரஹத் தாலே ஆக்ராந்தையாய், ப்ராண ஸம்சயம் வந்தளவிலே; தகப்பனான டில்லீசுவரன் இந்தச் சேதியறிந்து, தன் பட்டணத்திலே அந்தத் திருவரங்க திருப்பதியாரை விசா ரிக்குமளவில்; அவர்கள் முதல்நாள் ராத்திரியே புறப்பட்டுப் போனார்கள் என்றசேதியும் கேட்டு, 'அவர்கள் கொண்டு போகிறவிக்ரஹத்தை மனுஷ்யரை யனுப்பி அழைப்பிக்கிற பர்யந்தம் பெண் தரிக்கமாட்டாள்' என்று அறிந்து, பெண்



ணைத்தானே பயணமாக வேலைகளையுங்கூட்டிக்கூட்டி, வழி யிலே கண்டவிடத்திலே விக்ரஹத்தைக்கொண்டுவரச்சொல் லியனுப்ப இவர்கள் புறப்பட்ட மூன்றுநாள் வேலையுடன் டில்லீசுவரன் புத்ரியான ஸுல்தாணியும் புறப்பட்டு; பெரு மானைக்காணுமாசையாலே ப்ராணன் தரித்து, பயணகதி யிலே திருவேங்கடத்தின் ஸமீபத்திலே சந்த்ரகிரிபர்யந்தம் வர; பெருமாள் பரிஜநங்களும் அவர்கள் பிட்டின சேதியைக் கேட்டு, "இனிமோசம் வந்தது, நாம் கூடிப்போனோமாகில் அவர்கள் பெருமானைக் கொண்டுபோவார்கள் ஆனபடியி னாலே அவரவர்கள் தனித்து யதேச்சையாகப்போவோம்" என்று நினைத்து, கொடவர் மூன்று திருநாமம் [illegible] னும், மாப்பிள்ளையும், மருமகனுமாக மூன்றுபேரும் பெரு மானை எழுந்தருளப்பண்ணிக்கொண்டு திருமலையிலே ஏறி னார்கள்; மற்ற ஐம்பத்தேழுபேரும் தனித்து யதேச்சை யாகப்போனார்கள். அந்தத்துலுக்கநம் வழியிலேயிவர்களை க்காணமல், பயணகதியிலே திருவரங்கத் திருப்பதியேறச் சென்று, அங்கே பெருமாள் எழுந்தருளாத சேதியையும் கேட்டு, கோயில் திருவாசல் கல்திரை யிட்டிருக்கிறபடியும் கண்டவுடனே, டில்லீசுவரன் புத்ரியான ஸுல்தாணி, சிந் தயந்தியைப்போலே விரஹாதிசயத்தாலே சரீரத்தைவிட் டாள்.

## கொடவர் அழகிய மணவாளனைக் காத்தது.

அதின்பின்பு, அந்தவேளை திருமலைபர்யந்தம் போம ளவில், அங்கே, பெருமாள் திருமலையேறி யெழுந்தருளின சேதிகேட்டு, அந்தத் துலுக்கர் அடிவாரத்திலேயிருந்து கொண்டு ஆளைவிட்டுத் திருமலையெல்லாம் தேடுவிக்குமள

வில் பெருமாளுக்கு அந்த ப்ரதேசத்திலே ரஹஸ்யமாயும் இருக்கப்போகாமலிருக்கையில், கொடவர் ஆலோசனை பண்ணி மைத்துனனையும் குமாரனையும் உயரவைத்து; தாம் பெருமாள் திருமேனியை அணைத்துக்கொண்டு *ஓஷதிபந்தம் பண்ணிவைத்து, திருமலையில் தலையான †பணைக்குதியாயிருக்கிற சரிவிலே, பெரிய கொடியைக் கட்டி மைத்துனனும் குமாரனும் உயரவிருந்துவிட, கொடவர் திருமேனியோடே பெருமாள் அதின்கீழே எழுந்தருளியிருக்க, அந்தக் கொடவரான அம்மானும் மருமகனும் கொடிகளைப் பிடித்துக்கொண்டு அந்தச் சரிவிலே யிறங்கிப் பெருமாளை ஸேவித்து, அவர் திருமேனியையும் ஸம்ஸ்கரித்து, அஜ்ஞாதமாக அலர்மேல்மங்கைபுரத்துக்கு வடக்குச் சரிவிலே பலகாலமிருக்க; அம்மானும் பரமபதத்துக்குப்போய், மருமகன் மாத்திரம் அநேககாலம் கந்தமூலாசநராய், பெருமாளுடன்கூட அஜ்ஞாதமாக இருந்தார்.

## டில்லீசுவரன் ஆஸ்சர்யப்பட்டது.

அந்தத் துலுக்கன் சேனையும் பெருமாளைத் தேடிக்காணாமல் டில்லிக்குப்போய், டில்லீசுவரனுடனே நடந்த சேதியைச்சொல்ல; டில்லீசுவரனும் சோகஹர்ஷாஸ்சர்யங்களோடேயிருந்தான். பரிஜநங்களும், க்ரமேண திருவரங்கத்திலே வந்து சேர்ந்தார்கள்.

* ஓஷதி-பச்சிலை மூலிகை.

† பணைக்குதியாயிருக்கிற-பாம்பின் படம்போன்ற.



## திருவரங்க மாளிகையாரையும் வேறே நாய்ச்சியாரையும் கோயிலில் ப்ரதிஷ்டிப்பித்தது.

அத்தேசாதிபதியான சோழன் அநுமதியாலே கோயிலைத் திருக்காப்பையும் நீக்கி, அழகிய மணவாளப்பெருமாளை நாநாதேசத்திலேயும் நாநாப்ரகாரத்தாலும் தேடுமளவில், பெருமாளையும் கொடவரையும் காணாமல், ததாகமநநிர்க்கமநாதிகளும் காணாமையாலே, தன்னுடைச் சோதிக்கெழுந்தருளினதாகத் திருவரங்க மாளிகையாரை தத்ஸ்தானத்திலே ப்ரதிஷ்டிப்பித்து, வில்வமூலத்திலே எழுந்தருளப்பண்ணியிருந்த ஸ்ரீரங்கநாய்ச்சியாரையும் ப்ரதிஷ்டை பண்ணுவதாக வில்வமூலத்தைச் சோதிக்குமளவில், நாய்ச்சியார் அத்ருஸ்யையாய், காணப்படாமையாலே, வேறேநாய்ச்சியாரை வரியருளப்பண்ணுவித்து ப்ரதிஷ்டிப்பித்து, பூர்வப்ரகாரம்போலே ஸகல உத்ஸவங்களும் பெருமாளுக்கு நடப்பித்துக்கொண்டு போந்தார்கள்.

## அழகிய மணவாளனையும் கொடவரையும் இருளர் கண்டது.

இப்படி அழகியமணவாளப்பெருமாள் கோயிலிலிருந்து புறப்பட்டருளி, டில்லீசுவரன்வீட்டிலே இரண்டுவருஷம் இருந்து, குறைநாள் காட்டிலேயுமாக அறுபதுவருஷத்துக்கு ஆறுமாசம் குறைவாயிருக்கிற காலத்திலே, இரண்டு இருளர், திருமலையடிவாரத்திலே ஒருபாணிகுடிசையிலே ஒரு திவ்யமங்கள விக்ரஹத்தையும், ததாராதகராய்த்தலையும் வளர்த்துக்கொண்டு ஒரு கொடியை அரையிலே கட்டிக்கொண்டு கமுகம்பட்டையாலே கௌபீநமும் தேக்குமடலாலே ஆச்சாதநமும் தரித்துக்கொண்டு கொத்தான்கொ

டியை யஜ்ஞோபவீதமாகத் தரித்துக்கொண்டு எண்பது வயஸ்ஸு வ்ருத்தராக ஒருப்ராம்ஹணரு மிருக்கக்கண்டு; அந்த இருளரிருவரும், அந்த வ்ருத்தரண்டையிலே வந்து, பூர்வோத்தர வ்ருத்தாந்தங்களைக்கேட்க; அந்த வ்ருத்தரும், திருவரங்கத் திருப்பதியிலிருந்து பெருமாள் புறப்பட்டருளினது முதலாக அற்றை வரைக்கும், நடந்த வ்ருத்தாந்தங்களைச்சொல்லி, "நாமும் வ்ருத்தரானோம், இந்தச் சேதியை நாட்டிலே அறிவித்துப் பெருமானைக் கோயில் சேரும்படி பண்ணவேணும்" என்று அந்த இருளரைச் சரணம்புக,

### பெருமாளையும் கொடவரையும் சந்திரகிரி ப்ரபு வெளிப்படுத்தினது.

அந்த இருளரும், சந்த்ரகிரி பட்டணத்தில்போய் அவ்விடத்தில் ப்ரபுவினுடனே இச்சேதியைச்சொல்லி, அந்த ப்ரபுவை வனாந்தரமாய் துஷ்ப்ரவேசமான ப்ரதேசத்திலே கூட்டிக்கொண்டுவந்து, பெருமானையும் வ்ருத்தரையும் சேவிக்கப்பண்ண, அந்த ப்ரபுவும் ஆஶ்சர்யப்பட்டு, வ்ருத்தரையும்பெருமானையும் வெளிப்படுத்தி நாட்டிலே எழுந்தருளப்பண்ணிக்கொண்டுவர;

### கொடவர் பெருமானுடன் கோயிலில் எழுந்தருள பரிஜநங்கள் தகைந்தது.

அந்த வ்ருத்தரும், தம்முடைய பிதா பாதுலருக்கு மந்த்ர ஸம்ஸ்காராதி கர்மங்களைப்பண்ணி நிறைவேற்றி, அந்தப்ரபு ஸமர்ப்பித்த தநங்களையுங்கொண்டு பெருமானையெழுந்தருளப்பண்ணிக்கொண்டு திருவரங்கத் திருப்பதியிலேவந்து கோயிலிலேயெழுந்தருளுமளவில், கோயில்பரிஜனங்கள் பஹுகாலம் அதிக்ரமித்தபடியினாலேயும் பூர்விகரான வ்ருத்தரெல்லாரும் மரித்துப்போய் இருக்கிறபேர் இக்கப் பெருமானை ஸேவித்தறியாதவர்களானபடியாலே, கோயிலிலே இந்தப்பெருமானை உள்ளே யெழுந்தருளவொட்டாமல் தகைந்தார்கள்.

### வண்ணானாலே அழகிய மணவாளனென்று தெளிந்த ராஜேந்த்ரசோழன் கைங்கர்யம்.

வ்ருத்தரும், ஆர்யபட்டாள் வாசலுள்ளே சேனைவென்றான் திருமண்டபத்தில் திருமங்கைமன்னன் திருமண்டபத்திலே எழுந்தருளப்பண்ணிக்கொண்டிருந்தார்; அந்த வ்ருத்தரானை கொடவரிடத்திலேயும் பெருமாளிடத்திலேயும் போயிருக்கிற பரிஜனங்கள் அநாஸ்தை பண்ணிக்கொண்டிருக்க, மற்றைநாள் உதயகாலத்திலே நாய்ச்சியார்கோயில் விலாழலத்திலே ஸ்ரீரங்க நாய்ச்சியாருடைய கிரீடத்தில் மகுடமாத்திரம் வெளியாகக்காண்பிக்க, அதைக்கண்டவுடனே அதைச்சோதித்து ஸ்ரீரங்க நாய்ச்சியார் மூலவிக்ரஹத்தைதவெளியிலே யெழுந்தருளப்பண்ணி, இந்த அற்புதத்தை ப்ரபுவானசோழனுக்கு எழுதியனுப்பி, அது முதலாக அந்த வ்ருத்தரானகொடவரிடத்திலேசங்கையைவிட்டு இவரை அழகியமணவாளப்பெருமாளென்று ஸம்சயப்பட்டுக்கொண்டிருக்குமளவில்; சோழனும் கோயிலுக்குவந்து பெருமானையும்ஸேவித்து, இந்தவ்ருத்தாந்தங்களையும் கேட்டு, திருவரங்கத்திருப்பதியில் பூர்விகரைத் தேடுமளவில், கோயில் வண்ணானொருவன் தொண்ணூற்று மூன்று வயஸ்ஸில் காலதர்யமும் ப்ரஜ்ஞா பாடவமு மிருக்க,

வயோதிகத்தாலே த்ருஷ்டிஸௌகர்யமில்லாமல் அந்தக
னாயிருக்கக்கண்டு, அவனைப் பூர்வோத்தரங்களைக்கேட்கு
மளவில், அவன் சொல்லுகிற உத்தரமும் இந்த வ்ருத்த
ரான கொடவர் சொல்லுகிற உத்தரமும் ஒத்திருந்தபடி
யினாலே, அந்த வண்ணானை "அப்புறம் இந்த திவ்யமங்கள
விக்ரஹத்தை நிர்த்தாரணம் பண்ணுகிறது எப்படி?"
என்று கேட்க; அந்த வண்ணானும், தனக்கு த்ருஷ்டி
தெரியாதபடியினாலே கண்டறியக் கூடாது, ஆனால்,
தான் பஹுகாலமாக அழகியமணவாளப்பெருமாள் சாத்
தியருளின கைலியில் ஈரவாடை தீர்த்தம் சாப்பிட்டுக்கைங்
கர்யமும் பண்ணிப் பழகி யிருக்கிறபடியாலே இப்போது
இந்தப்பெருமாள் திருமஞ்சனதீர்த்தம் அப்படியிருக்கவி
ல்லை, ஆனபடியினாலே, இருவருக்கும் திருமஞ்சனம்பண்
ணி ஈரவாடை தீர்த்தம் ஸாதிக்க, கைலியைக் கொண்டு
வந்து தனக்குத் தீர்த்தம் ஸாதிக்கச்சொல்ல; அந்தப்படி
யே இருவரையும் திருமஞ்சனம்பண்ணி ஈரவாடை தீர்த்
தம்ஸாதிக்க; அந்த வண்ணானும், அழகிய மணவாளப்
பெருமாளீரவாடை தீர்த்தத்தைச் சாப்பிட்டு, "இவரே
நம்முடைய ஆண்டவன்! அழகிய மணவாளப்பெருமாள்!"
என்று கண்ணும் கண்ணீருமாக மோகித்திருந்து,
அநேகம் போதைக்கப்புறம் மோகம் தெளிந்ததுகண்டு,
சோழன் முதலானபேர்கள் அவனுடைய பக்திக்கு ஆஸ்
சர்யப்பட்டிருக்குமளவில்; அன்று ராத்திரி அந்த ப்ரபு
வான சோழன் ஸ்வப்நத்திலே இந்த வ்ருத்தாந்தங்களை
அழகிய மணவாளப் பெருமாள் ஸ்வப்நம் ஸாதித்தி
னாலே, ஸ்ரீரங்க நாச்சியாரையும் அழகிய மணவாளப்
பெருமானையும் பூர்வப்ரகாரமாக ப்ரதிஷ்டிப்பித்து, பெரு



மாள் நியமநத்தினாலே, ராஜமஹேந்த்ரன் திருவீதியில்
வடகிழ்மூலையிலே திருநடைமாளிகையிலே அறையாகத்
தடுத்து, அந்த டில்லிசுரன் புத்ரியான ஸுல்தா
னியை சித்ரரூபமாக எழுதிவைத்து ப்ரதிஷ்டிப்பித்து,
பெருமாள் நியமநத்தினாலே, நித்யமாக ப்ராத:காலத்
திலே, டில்லியில் நடந்தபடிக்கு கோதுமை ரொட்டியும்
மதுரப்பருப்பும் கிச்சடியான பொங்கலும் பெருமாளமுது
செய்தருளி, சாந்து நாச்சியார் அமுதுசெய்தருளும்படி
பண்ணி, அதற்காகக் கொறநாட்டிலே இரண்டு க்ராமம்
ஸமர்ப்பித்தது, ராஜேந்த்ரசோழன் கைங்கர்யம்.

## திருத்தாழ்வரைதாஸர், சரங்கொல்லி, பஞ்சு கொண்டான், இசையறியும் பெருமாள் கூட்டத்தார் என்னும் அருளப்பாடு.

அழகிய மணவாளப்பெருமாளும், சேரபாண்டியன்
சிங்காசனத்திலே ஏறியருளி, அந்த வ்ருத்தரான கொட
வரை அழைப்பித்து. "திருத்தாழ்வரைதாஸர்" என்று
அருளப்பாடிட்டு, ஸகலவரிசைகளும் ஸாதித்தருளி,
அந்த வ்ருத்தனான வண்ணானையும் "சரங்கொல்லி"
என்று அழைத்து பஹுமானம்ஸாதித்தருளினார். அது
முதலாக, கொடவருக்கு "திருத்தாழ்வரை தாஸர்"
என்று பட்டப்பேரும், "சரங்கொல்லி" என்று கோயில்ஸந்
நிதி வண்ணானுக்குப்பட்டப்பேரும் நடந்துவருகிறது. குல
சேகரன் திருவீதியில் வடக்கு வாசலிலே, பஞ்சுகொண்
டான், துலுக்கருடன் படைபண்ணி சரீரத்தை உபேக்ஷி
த்தபடியினாலே, அந்த வாசலிலே பெருமாள் எழுந்தருளு
கிறபோது அந்தப்பஞ்சுகொண்டானுக்கு வரிசையுடன் அ
ருளப்பாடிஸாதிக்கத்திருவுள்ளமானார். இந்த வ்ருத்தாந்

தங்களெல்லாம், சாத்து நாய்ச்சியார் ஸந்நிதியில் வெளிப்புறத்துச் சுவரிலே சிலாலிகிதம் பண்ணியிருந்தது; சித்ரமண்டபம் ஜீர்ணோத்தாரணத்திலே விகலிதமாய்த்து. அழகிய மணவாளப்பெருமாள், பாடுவாருடைய கானரஸத்திலே ஈடுபட்டு ஸாலகதாணியை விட்டுவருகையாலே, அதுமுதலாக, பாடுவாருக்கு "இசையறியும் பெருமாள் கூட்டத்தார்" என்று அருளப்பாடு நடந்து வருகிறது.

## ஸ்ரீமந்நாதமுனிகள் கல்பித்த கட்டளை.

அநந்தரம், பெருமாள் திருவரங்கத் திருப்பதியிலே ஸுப்ரதிஷ்டராய் பூர்வப்ரகாரமாக நித்யோத்ஸவ மாஸோத்ஸவ ஸம்வத்ஸரோத்ஸவாதிகளும் கண்டருளுமிடத்தில்; மார்கழி மாஸத்திலே பூர்வப்ரகாரம் திருவத்யயநோத்ஸவத்திலே திருமங்கை மன்னனுக்காகத் திருவாய்மொழிக்கு வேதஸாம்யமநுக்ரஹித்து பண்ணின திருவாய்மொழிகேட்குமிடத்தில், காலதோஷத்தினாலே ப்ரபந்தங்களும் நிரோஹிதங்களாய் அத்யயநாத்யாபநங்களும் இல்லாமல், அதினாலே ஆழ்வாரும் கோயிலுக்கு எழுந்தருளாமலிருக்குங் காலத்திலே; கல்யப்தம் மூவாயிரத்துத் தொள்ளாயிரத்திருபத்துநாலுக்குமேல் ஸ்ரீமந்நாதமுனிகள் அவதரித்தருளி, மன்னனார் ஸந்நிதியிலும் திவ்யதேசஸேவாநிமித்தமாக எழுந்தருளி, திருக்குடந்தையிலேயை, அங்கே "ஆராவமுது" பத்துப்பாட்டு மாத்ரம் நம்மாழ்வார் பாடியிருக்கக்கேட்டு, திருநகரியிலே எழுந்தருளி, மதுரகவி ஸம்ப்ரதாயஸ்தரான ஸ்ரீபராங்குசநம்பி ஸந்நிதியிலே ஆழ்வார் விஷயமான "கண்ணிநுண்சிறுத்தாம்பு" என்கிற பத்துப்பாட்டை ஸஹி



த்து, யோகதசையிலே ஆழ்வாரை ஸாக்ஷாத்கரித்து, தந்முகமாக ஆழ்வார்கள் பதின்மரும் ஆண்டாளும் அருளிச்செய்த திவ்யப்ரபந்தங்களைலபித்து க்ருதார்த்தராய், திருவரங்கத் திருப்பதியேற வெழுந்தருளி, ஸ்ரீகார்யம் நிர்வஹிக்குமளவில்; பெருமாள், திருமங்கை மன்னனுக்காகத் திருவாய்மொழிக்குப் பண்ணின அநுக்ரஹாதிசயத்தையும், நம்மாழ்வார்திறத்தில் பண்ணின க்ருபையையும் கேட்டருளி மிகவும் உகந்து, ஸ்வசிஷ்ய ப்ரசிஷ்ய முகத்தாலே அநேகம் ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு ஆழ்வார்கள் ஸ்ரீஸூக்தியான திவ்ய ப்ரபந்தங்களை அத்யயநாத்யாபநங்களைப் பண்ணுவித்துக்கொண்டு பெருமாள் திருவாய்மொழிக்கு வேதஸாம்யம் அநுக்ரஹித்தபடியினாலே வேதத்தைப்போலே திருவாய்மொழிக்கும் உபக்ரமோத்ஸர்ஜந காலத்தை, திருக்கார்த்திகை திவ்யமஹோத்ஸவத்திலே உத்ஸர்ஜந காலமென்றும், மார்கழி மாஸத்தில் சுக்லைகாதசி அத்யயநோத்ஸவத்திலே உபக்ரம காலமென்றும் நிர்ணயம்பண்ணி; திருக்கார்த்திகையிலே உத்ஸர்ஜநம் பண்ணின வநந்தரம், திருவத்யயநோத்ஸவத்திலே உபக்ரமிக்குமளவும் ஸ்ரீ வைஷ்ணவர்கள் அனைவரும் நெஞ்சினால் நினைத்தும் வாயினால் மொழியாமலிருக்கும்படி பண்ணி; முன்புபோலே ப்ரதிஸம்வத்ஸரமும், பெருமாள் ஆழ்வாருக்குத் திருமுகப்பட்டையமும் முதலான வரிசையும் கொடுத்து; திருக்கார்த்திகை மஹோத்ஸவத்திலே திருநெடுந்தாண்டகம் திருமுன்பே பாடின இனிப்புத் திரும்படி தான்சாத்தி மிச்சமான எண்ணெய்க் காப்பைத் திருமங்கை மன்னன் மிடற்றிலே சாத்துவித்த கட்டளையை, ஆழ்வார்களுக்குத் தவ்வ

ரான நம்மாழ்வாருக்குச் சாத்தி, தச்சேஷமான எண்ணெய்க்காப்பை ஸ்ரீவைஷ்ணவர்கள் திருமிடற்றிலே சாத்திக்கொள்ளும்படி பண்ணிவைத்து; நிகாதிபேதேந சதுர்விதமான வேதங்களுக்கு சிக்ஷாதிகளும் இதிஹாஸபுராணங்களும் அங்கோபாங்கங்களாயிருக்குமாபோலே, நம்மாழ்வாரருளிச்செய்த ப்ரபந்தங்கள் நாலும் சதுர்வேதஸ்தானங்களாகவும் இவைகளுக்கு மற்ற ஆழ்வார்களும் ஆண்டாளுமருளிச்செய்த ப்ரபந்தங்களும் அங்கோபாங்கங்களாகவும்; திருவாய்மொழி த்வயார்த்த விவரணமென்றும்; திருப்பல்லாண்டுமுதல் பெரியாழ்வார் திருமொழி திருப்பாவை, நாச்சியார் திருமொழி, பெருமாள் திருமொழி, திருச்சந்த விருத்தம், திருமாலை, திருப்பள்ளியெழுச்சி, அமலனாதிப்பிரான், ஆக இப்ப்ரபந்தங்கள் ப்ரணவார்த்த ப்ரகாசகமாகையாலே முதலாயிரமென்றும்; கண்ணிநுண் சிறுத்தாம்பு நமச்சப்தார்த்த விவரணமென்றும்; திருமொழி, திருக்குறுந்தாண்டகம், திருநெடுந்தாண்டகம், முதலாழ்வார்களருளிச்செய்த ப்ரபந்தங்கள் மூன்றும், நான்முகன் திருவந்தாதி, திருவிருத்தம், திருவாசிரியம், பெரியதிருவந்தாதி, திருவெழுகூற்றிருக்கை, சிறிய திருமடல், பெரிய திருமடல் இவை மந்த்ரசேஷ விவரணமென்றும்; முதல் திருவந்தாதிமுதல் திருமடலீறாக சப்தப்ரதானமாகையாலே இயற்பாவென்றும்; இருபத்துநாலு ப்ரபந்தமும் திருமந்த்ரார்த்த விவரணமாகையாலே; திருப்பல்லாண்டுமுதல் திருநெடுந்தாண்டகமீறாக, அத்யயநோத்ஸவத்துக்கு முன்பு பத்துநாள் பெருமாள் கேட்டருளும்படிக்கும்; திருவத்யயநோத்ஸவமான மற்று



நாள்முதல், திருவந்தாதிமுதல் திருமடலீறாக இயற்பா ஆயிரமும் கேட்டருளும்படிக்கும்; ஆழ்வார்கள் பதின்மரும் ஆண்டாளும் மதுரகவியும் ஆகப் பன்னிரண்டு திருநாமங்களருளிச்செய்த இருபத்துநாலு ப்ரபந்தங்களின் பாட்டு நாலாயிரமென்றும்; ப்ராம்ஹணனுக்கு வேதவேதாந்த இதிஹாஸ புராணாதிகள் அதிகரிக்க வேண்டினாற்போலே, முமுக்ஷுக்களான ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு இப்ப்ரபந்தங்கள் அவஶ்யம் அதிகரிக்க வேணுமென்றும்; இதில், திருப்பாவை, திருப்பள்ளியெழுச்சி, நித்யம் ப்ராத:காலத்திலே அநுஸந்தேயமென்றும்; திருவாய்மொழிக்கு ஆத்யந்தத்திலே, ஆழ்வார் விஷயமான "கண்ணிநுண்சிறுத்தாம்பு" அநுஸந்தேயமென்றும்; இப்படி ஸமயவ்யவஸ்தை செய்தருளி; ப்ரதிஸம்வத்ஸரம், தாம், திருக்கார்த்திகை மஹோத்ஸவத்திலே, திருமங்கை மன்னனைப்போலே திருநெடுந்தாண்டகத்தை தேவகாநத்திலே யேறிட்டு அபிநயத்துடனே ஸேவித்து, தாமுண்டுபண்ணின திருமொழித் திருநாளில் முதலாயிரத்தையும் திருமொழியையும், திருக்குறுந்தாண்டகம் திருநெடுந்தாண்டகம் முதலானவைகளையும் தேவகாநத்திலேயேறிட்டு அபிநயத்துடனே ஸேவித்து, அத்யயநோத்ஸவத்திலே திருவாய்மொழியையும், மதுரகவிகள் ஸேவித்த கட்டளையிலே தேவகாநத்திலே ஏறிட்டு அபிநயத்துடன் ஸேவித்து; அத்யயநோத்ஸவத்தின் சாத்துக்கு மற்றைநாள் சப்தப்ரதாநமான இயற்பாவை இயலாக ஸேவித்துக்கொண்டு, இப்படியே ப்ரதிஸம்வத்ஸரமும் அநேககாலம் ஸேவித்து, தம்முடைய பாகிநேயரான கோயிலகத்தாழ்வான்

மேலையகத்தாழ்வான் இவர்களுக்கு ஆழ்வார்களுடைய திவ்யப்ரபந்தங்களை யிசையுடனே ஸாதித்து, தம்மைப் போலே திருமொழி திருவாய்மொழித் திருநாளிலே ஸேவிக்கச்சொல்லி நியமித்து, தாம் மன்னனார் கோயிலுக்கெழுந்தருளினர்.

கிழையகத் தாழ்வானும் மேலையகத்தாழ்வானும் ஸ்ரீமந் நாதமுனிகள் கல்பித்த கட்டளையிலே திருமொழி திருவாய்மொழித் திருநாளிலே நன்றாக ஸேவித்து அழகிய மணவாளப்பெருமாளை மிகவும் உகப்பிக்க, பெருமாளும் உகந்தருளி, ஒருத்தருக்கு "மதியாத தெய்வங்கள் மணவாளப் பெருமாளரையர்" என்றும், ஒருத்தருக்கு "நாதவினோத அரையர்" என்றும் திருநாமம் சாதித்து, ஆழ்வாருக்கு ஸாதித்த கட்டளையிலே குல்லாவும் தொங்கல் பரியட்டமாகப் பட்டும் பருத்தியும், சாத்திக்களைந்த திருமாலைகள், ப்ரஸாதங்களும் ஸாதித்து; நம்மாழ்வாருக்கு விடை ஸாதித்தவுடனே யாத்ராநுகுணமாகத் தம் வரிசைகளையெல்லாம் ஸாதித்தாற்போலே, அரையர்களுக்குத் தம் வரிசைகளான சத்ர தாலவ்ருந்தாதிகளை ஸாதித்து, "நம்பாடுவானை வீட்டிலே விட்டு வா" என்று தம் ஸேநாதிபதியை நியமிக்க; நியமநப்படியே ஸகலபரிஜநங்களுடன் ஸேநாபதி தூரந்தாரும் அரையரை வீட்டிலே விட்டுவந்தார்கள். அது முதலாகப்பாடுவாருக்கு அந்த இரண்டுபட்டப்பேரும் "அரையர்" என்கிற வ்யவஹாரமும் நடந்துவருகின்றது. காநரஸத்திலே துவக்குண்டு "காயகஸார்வபௌமன்" என்கிற மேன்மைதோன்ற "அரையர்" என்கிற திருநாமமும், அந்த ப்ரபுத்வ ஸூசகமான குல்லாவும், தொங்கல் பரி



யட்டமும் ஸாதித்தருளினது பாடுவாருக்கேயல்லாமல் மற்றபரிஜநங்களுக்கில்லை.

## உய்யக்கொண்டார், மணக்கால் நம்பி, ஆளவந்தார் வைபவம்.

அநந்தரம், உய்யக்கொண்டாரும் மணக்கால் நம்பியும் தர்சநத்தையும் ஸ்ரீகார்யத்தையும் நிர்வஹித்துக் கொண்டு வருங்காலத்திலே; ஒட்டியதேசத்துப்ரபுக்களை புரண்டுவருமளவில், அச்சேதியைக் கேட்டு அழகிய மணவாளப் பெருமாள் வலசை எழுந்தருளி, அழகர் திருமாலிருஞ்சோலையிலே ஒரு ஸம்வத்ஸரம் எழுந்தருளியிருந்து, திரும்பி எழுந்தருளின விடத்திலே, ஸ்தலத்திலே சிலபரிஜநங்கள் ரங்கத்ரோஹிகளாய் அதில் அர்சகரும் அநுப்ரவிஷ்டராய் மெய்தியந்து போகையில், ஸ்ரீவைகாநஸசாஸ்த்ரஜ்ஞரான நம்பிமார் ஆராதநம்பண்ணிக்கொண்டு வந்தார்கள். இதரமதஸ்தரான ஷட்ஸமயத்தாரும் திருவரங்கந் திருப்பதியிலே வீடு கட்டிக்கொண்டு ஸ்வதந்த்ரராயிருந்தார்கள். இப்படியிருக்கும் காலத்திலே, மணக்கால் நம்பியும், யமுனைத்துறைவரான ஆளவந்தாரைத் திருத்தி, பெரியபெருமாளை ஸேவிக்கப் பண்ணுவிக்க; ஆளவந்தாரும் பெருமாளுடைய கடாக்ஷத்தினாலே பரமவிரக்தராய், தம்முடைய ஐச்வர்யாதிகளை பரித்யஜித்து ஆச்ரமஸ்வீகாரம் பண்ணி, பெரிய பெருமாள் ஸாம்ராஜ்யத்தினுள் புகுந்து, ஸ்ரீகார்யம் நிர்வஹிக்கிறகாலத்திலே; ஆகமப்ராமாண்யம் செய்தருளி, இதரஸமயிகளை நிரஸித்து, திருவரங்கந் திருப்பதியிலே அவர்களிருப்பும் உத்வஸித்து, பஞ்சராத்ரமுகத்தாலே தர்சந நிர்வாஹம் செய்தருளியிருக்கும் காலத்திலே;

## ஆழ்வார் திருவரங்கப் பெருமாளரையர் வைபவம்.

ஆழ்வார் திருவரங்கப் பெருமாளரையர் ப்ரபுத்தராய், காநாதி வித்யைகளிலும் பகவத் ப்ராவண்யத்திலும் மிகுந்தவராய், திருமொழி திருவாய்மொழித் திருநாள்களிலே அழகிய மணவாளப் பெருமாள் விபவாவதாரத்தில் செய்தருளின அபதாநங்களை நாடகமாகத் திருக்கோல மிடுக்குச்சாத்தி அபிநயித்து மிகவும் உகப்பிக்க; பெருமாளும், போர வுகந்தருளி, "கோயிலுடைய பெருமாளரையர்" என்று திருநாமம் சாத்தி, ஸகல வரிசைகளையும் ஸாதித்தருளினார். ஒருகால விசேஷத்திலே, திருஊறல் மஹோத்ஸவத்திலே, திருக்காவேரியிலும் நடைக்குப் பரியாயமான தோளுக்கினியான்மேலே புறப்பட்டருளி, அரையரை யழைத்து, "நம் நடையழகுக்கேடாகப் பாடும்" என்று அருளப்பாடு ஸாதிக்க; அவரும், இசையிலே யெடுத்துக்கொண்டு வர, கோயிலிலே எழுந்தருளினார். ஒருகால விசேஷத்திலே, பங்குனி உத்திரத்தில் நாய்ச்சியார் கொலுக்குளிர் சோலையிலே, நாய்ச்சியாரும் தாமுமாய்க் குமிழிநீருண்டு வவ்வவிட்டு, அந்த அரையரைக்கடாக்ஷித்து வஸந்தனுக்கு அருளப்பாடு ஸாதிக்க; கோயிலுடைய பெருமாளரையரும், திருவுள்ளமறிந்து ரஸிக்க; பெருமாளும் போர உகந்தருளினார். அந்த அரையர் தொட்டு "கோயிலுடைய பெருமாளரையர்" என்கிற பட்டப்பேரும், அடிக்குச் சாத்திக்கொண்டு அந்தந்தத் திருக்கோலத்துடனே தசாவதாராதி விபவாவதாராபதாநாபிநயங்களும், திருஊறலுத்ஸவத்திலே திருக்காவேரிக் கெழுந்தருளித் திரும்பி



யெழுந்தருளும்போது இசையுடனே எழுந்தருளுகிறதும், பங்குனி உத்திரத்திலும் நாய்ச்சியார் சேர்த்தியிலே வஸந்தனுக்கு அருளப்பாடிட்டு காநம் கேட்டருளுகிறதும் நடந்துவருகிறது.

## உடையவர் வைபவம்.

இந்தப்படி அநேக காலம் ஆளவந்தார் ஸ்ரீகார்யம் விசாரித்து, தமக்குப் பின்பு உபய கைங்கர்ய நிர்வாஹகரார்? என்று திருவுள்ளத்திலே நினைத்திருக்க; ஸ்ரீபெரும்பூதூரிலே இளையாழ்வாரவதரித்து, பெருமாள் கோயிலிலே யாதவப்ரகாசனண்டையிலே வித்யாப்யாஸம்பண்ணுகிற சேதியைக் கேட்டருளி, ஆளவந்தார் பெருமாள் கோயிலுக் கெழுந்தருளி, இளையாழ்வாரைக் கடாக்ஷித்து, "உபய கைங்கர்ய நிர்வாஹகராகவேணும்" என்று அநுக்ரஹித்து, பேருளாளர் ஸந்நிதியிலேயும் ப்ரார்த்தித்துக்கொண்டு கோயிலேறவெழுந்தருளி இளையாழ்வார் யாதவப்ரகாசனைவிட்டுத் தேவப்பெருமாளுக்கு சாலைக்கிணற்றிலே திருமஞ்சன கைங்கர்யம் பண்ணிக்கொண்டிருக்கிற சேதியைக்கேட்டு ஆளவந்தார் தேவப்பெருமாள் விஷயமாக ஸ்தோத்ரத்தைப் பண்ணியருளி, பெரியநம்பியைப் பெருமாள் கோயிலுக்கு அனுப்பியருள; பெரிய நம்பியும் பெருமாள் கோயிலுக் கெழுந்தருளி, தேவப்பெருமாள் ஸந்நிதியிலே ஆளவந்தார் ஸ்தோத்ரத்தை விண்ணப்பஞ் செய்ய, இளையாழ்வார் கேட்டு கேவலம் அடிபட்டு, ஆளவந்தாரை ஸேவிப்பதாகப் பெரிய நம்பியுடனே திருக்கரம்பனூரிலே யெழுந்தருளியிருக்கையிலே கோலாஹலத்தை விசாரித்து, ஆளவந்தாரைத் திருப்பள்ளிபடுத்துகிறதாகக்கேட்டு மிகவும்

சோதித்து, பெரியநம்பியுடனே ஆளவந்தாருடைய திவ்ய மங்கள விக்ரஹத்தைச் ஸேவித்து, அவருடைய மநோ பாவத்தை யறிந்து ப்ரதிஜ்ஞைபண்ணி, தாம் வந்த வரத்து நிஷ்பல மாகையாலே பெருமாளையும் ஸேவியாமல் பெருமாள் கோயிலுக் கெழுந்தருளி, தேவப்பெருமாளுக்கு முன்போலே திருமஞ்சனகைங்கர்யம் பண்ணிக் கொண்டிருந்து, பேரருளாளப் பெருமாள் திருக்கச்சி நம்பியுடனே ஆறு வார்த்தை யருளிச்செய்தபடியினாலே "பெரியநம்பி திருவடிகளிலே ஆச்ரயிக்கவேணும்" என்று புறப்பட்டருளின ஸமயத்திலே; அழகியமணவாளப்பெருமாளும் பெரியநம்பியை நியமிக்க, பெரியநம்பியும் புறப்பட்டருளி, பயணகதியிலேவர, இவரும் ஸ்ரீ மதுராந்தகத்திலே ஸந்தித்து வந்த கார்யத்தை நிறைவேற்றிக் கொண்டு, இருவரும் பெருமாள் கோயிலுக் கெழுந்தருளி, சில காலமிருந்து, பெரிய நம்பி கோயிலேற எழுந்தருளின அநந்தரம், இளையாழ்வார் ஆச்ரம ஸ்வீகாரம் செய்தருளின சேதியை ஸ்ரீரங்க திவ்ய நகரவாஸிகளும் பெருமாளும் கேட்டருளி, அழகிய மணவாளப்பெருமாள் நியமனத்தினாலே, ஸ்தலத்தார் திருவரங்கப் பெருமாளரையரை பெருமாள் கோயிலுக்குப் பயணம்பண்ணி, இராமாநுஜனை அழைத்துக் கொண்டு வரச்சொல்லியனுப்ப; அரையரும் புறப்பட்டு, பெருமாள் கோயிலுக்கெழுந்தருளி, தேவப்பெருமாளை கானரஸத்தினாலே மயங்கும்படி பண்ணி, இராமாநுஜனை பாரிதோஷிகமாக வாங்கிக்கொண்டு சகாப்தம் விக்ரம ஸம்வத்ஸரம் வைகாசிமாஸம் சுத்த பௌர்ணமியிலே கோயிலுக் கெழுந்தருளுகிற சேதிகேட்டருளின அழகியமணவாளப்



பெருமாள் நியமநத்தினாலே, ஸேனைமுதலியார் ஸபரிகாரராய்ப் புறப்பட்டருளி, பன்றியாழ்வான் கோயிலளவாக எழுந்தருளி இராமாநுஜனை எதிர்கொண்டு கோயிலிலே அழைத்துக்கொண்டுவர; அழகிய மணவாளப் பெருமாளும், திருவனந்தன் திருவாசலளவாகத் திருக்கைத்தலத்திலே எழுந்தருளி எதிர்கொள்ள; இராமாநுஜனும், பெரிய நம்பியை முன்னிட்டுக் கொண்டு ஸந்நிதியிலே புகுந்து ஸேவிக்க; பெரியபெருமாளும் குளிரக் கடாக்ஷித்து, பரிவட்டம் முதலான வரிசைகளையும் செங்கோலையும் ப்ரஸாதித்து, "நம்முடைய உபய விபூதியும் உமக்கு இஷ்ட விநியோகார்ஹமாம்படி தந்தோம், நீர் உபயவிபூதியையும் உடையவராய் நம் காரியத்தை ஆராய்ந்துகொண்டுபோரும்" என்று அருளப்பாடு ஸாதித்து, "த்ரிவிக்ரமன் திருவீதியில் வடக்குமாடத் திருவீதியில் கீழ்கண்டத்தில் முதல்மனையான சேரன் மடத்திலே, உடையவரை விட்டு வாருங்கோள்" என்றுபரிஜநங்களுக்கு நியமிக்க; அந்தப்படியே உடையவரும், மடத்திலே, ஆழ்வான் ஆண்டானுடனேயெழுந்தருளி, பரிஜநங்களையும் பெரிய நம்பியையும் க்ஷாமணம்பண்ணிக் கொண்டெழுந்தருளி யிருந்து, மற்றுநாள் முதலாக ஸ்ரீகார்யம் நிர்வஹித்தருளின விவரம்:—ஆழ்வானை தர்சந நிர்வாஹத்துக்குத் தமக்கு உசாத்துணையாக நியமித்து, முதலியாண்டானை உள்துறை கைங்கர்யத்திலே நியமித்து, தாம் திருக்கொட்டாரவாசலுக்குத் தென்புறத்திலே உமிக்கட்டில் குறட்டிலேயிருந்து திருவிடையாட்டப்பரிவும் மேல்முகம் கீழ்முகங்களான திருத்தோப்புக்களில் விசேஷங்களும் திருக்கொட்டாரத்தில் மர்யாதைகளும்

அறிவறிவாக விசாரித்து, படித்தனம் முதலானதுகளும்
திட்டம்பண்ணி நாள்தோறும்படித்தனமுதலானகணக்கு
களைப்பெருமாள் பெரிய அவஸரமமுதுசெய்தருளினபின்பு
ஏகாந்தமாக ஸந்நிதியிலேவிண்ணப்பஞ்செய்துகொண்டு,
இந்தப்படி ஸ்ரீகார்யம் விசாரித்து, கருவுகலம் முதலான
வைகளையும் விசாரித்து, பத்து அவந்தரையாயிருந்தபடி
யினாலே, அந்தந்தத் துறைகளைத் திட்டம்பண்ணவேணுமெ
ன்று திருவுள்ளத்திலே நினைத்திருக்க; இப்படி அறிவறி
வாய் விசாரிக்கிறது பரிஜநங்களுக்கு நிர்ப்பந்தமாய், கால
தோஷத்தாலே பரிஜநங்கள் விஷப்ரயோகாதி அபசா
ரங்களைப் பண்ணினபடியினாலே, உடையவரும் திருவரங்
கந்திருப்பதியைவிட்டு இரண்டு வருஷம் திருவெள்ளறை
யிலே எழுந்தருளியிருந்து, அவ்விடத்திலே அழகியமணா
ளப்பெருமாளை எழுந்தருளப்பண்ணி, ஏரியுங்கட்டி,
பங்கயச்செல்வி ஸ்ரீகார்யத்தையும் தர்சநநிர்வாஹத்தை
யும் செய்துகொண்டு எழுந்தருளியிருக்க; பெருமாள்
நியமநத்தினாலே பரிஜநங்கள் அநுதப்தராய், உடைய
வரை எழுந்தருளப்பண்ணுவித்துக்கொண்டுவரச்சொல்
லித் திருவரங்கப் பெருமாளரையரை அனுப்ப; அரைய
ரும் உடையவரை அழைத்துக்கொண்டுவர; உடையவ
ரும் ஸ்ரீகார்யம் விசாரிக்குமளவில், அகளங்கநாட்டாழ்
வான், உடையவர் திருவடிகளை ஆச்ரயிக்க; அவர்ஸமர்த்
தராகையாலே திருவிடையாட்டம் விசாரிக்கிற கைங்கர்
யத்தை அவருக்கு நியமித்தருளி; பூர்வம் த்ரிவிக்ரம
சோழன்கைங்கர்யமான ஆலிநாடன் திருவீதியில் பெரிய
திருமண்டபத்தில் குறட்டின்மேலே மாக்கோபாகத்திரு
மண்டபங்கட்டிவைத்து, ஒருநாள் ஆண்டாள், தத்யோத



நத்துடனே நல்ல நாவல்பழத்தை பெருமாள் அமுது
செய்யப்பண்ணுவிக்க; பின்பு, உடையவர், அழகிய மணா
ளப்பெருமாள் ஸந்நிதியிலே வர, திருமுக மண்டலம்
வாடியிருக்கக் கண்டு, அமுதுசெய்த பதார்த்தத்தை
விசாரித்து, "தத்யோதநத்துடனே நாவல் பழமமுது
செய்தபடியினாலே இப்படியாய்த்து" என்று ஆண்டாளை
நிக்ரஹித்து, தம்சிஷ்யரான கருடவாஹநபண்டிதரைக்
கொண்டு பெருமாளுக்குச் சிகித்ஸிப்பித்து, பூர்வம்புராண
ஸித்தமாய் ஜீர்ணமாயிருந்த தந்வந்த்ரியை ப்ரதிஷ்டிப்
பித்து, அந்தக்கோயிலே கருடவாஹந பண்டிதருக்குக்
கட்டளையிட்டு, அவரிடத்திலும் நித்யமாக ராத்ரி திருக்
காப்புச்சேர்க்கிறதற்கு முன்பாகக் குடிநீர்பால்அலங்கார
மாகவந்து அமுது செய்தருளும்படி திட்டம்பண்ணி,
"திருவரங்கந் திருப்பதி ஸ்ரீ பாஞ்சராத்ரம் என்று சாஸ
த்ரஸித்தமா யிருக்க, ஸ்ரீவைகாநஸமாயிருக்கலாகாது"
என்றுவைகாநஸ நம்பியாரை நிக்ரஹித்து, ஏகாயநர்
அஞ்சுபேருக்கு தீக்ஷை ஸாதித்து மண்டலநாமமென்று
இவர்க்குப் பட்டப்பெயராக அஞ்சுதிருநாமமும்ஸாதித்து
"பாகவத நம்பிமார்" என்று சாஸ்த்ர ஸித்த வ்யவஹார
மும் நடத்திவைத்து, ஸ்ரீபாஞ்சராத்ரத்தில் பாரமேச்வர
ஸம்ஹிதாக்ரமத்திலே திருவாராதநம் நடத்திவைத்து,
கருவுகலம் முதலானதுகளுக்குத் தோதவத்தித் தூய
மறையோரான கொடுவாளெடுப்பார் கையிலே பூட்டும்
திறவுகோலும், தளியிடுவாருடைய முத்ரை = தாங்கள்
பக்ஷிராஜ பரிகரமாகையாலே தங்கள் கைங்கர்யத்து
க்கு யஜமாநரான கருட முத்ரையும், ஆர்யபட்டாள் கா
வலும், பல்லவன் விழுப்பரையன்கணக்குமாக நடந்துவர;

அதில் பஹு அவந்தரையாகவிருந்தபடியினாலே, திருவாழியிலச்சினை தம்மதாகவும், ஸ்ரீபாஞ்சஜந்ய முத்ரை நம்பிமாரதாகவும், நடத்துவிக்க; அந்தக் கணக்கனை ரங்கத்ரோஹத்தினாலே தள்ளி யிருந்தபடியினாலே ஒரு ஸ்ரீவைஷ்ணவ ப்ராம்ஹணனுக்குக் கணக்குக் கட்டளையிட நினைக்க, ஸ்தலத்தார் பூர்வ மர்யாதையை விண்ணப்பஞ் செய்ய, அந்தப்படியே வேளாளனை விழுப்பரையனுக்குக் கோயில் கணக்கன் என்று கீரனூர் கிழவனுக்கு ஆஸ்ரயண பூர்வகமாக "சடகோபதாசன்" என்று தாஸ்யநாமத்தை ஸாதித்து, அவனுக்கு "ஸ்தலஸம்ப்ரதி" என்னும் பேரையும் நாட்டி, அவர்களுக்குச் சிலவ்யவஸ்த்தையும் பண்ணிவைத்து, இளநீர் திருத்தி ஸமர்ப்பிக்கிறது கைக்கோள முதலியாயிருக்க, ப்ராம்ஹணனை நியமிக்கவேணுமென்று முதலிகள் விண்ணப்பம் செய்ய, முதலியை யழைத்து எந்த மரத்திலுள்ள இளநீர் பெருமாள் திருவுள்ளத்துக்கு உகப்பாயிருக்குமென்று கேட்க, அந்த முதலியும் அழகியமணவாளன் திருவுள்ளத்துக்குத் தெரியுமென்று சொல்ல, அவனுக்கு பாவசுத்தியுண்டாயிருந்தபடியினாலே திருவுள்ளமுகந்து அவனையே அந்தக் கைங்கர்யத்திலே நியமித்து; பூர்வம் திருமங்கை மன்னன் காலத்துக்கு முன்னும் கொவணவர், நாடவர், கொடுவாளெடுப்பார், பாடுவார், தழையிடுவார் என்று அஞ்சு கொத்திலே பரிஜநங்கள் அடங்கி நடந்துவந்ததைப் பத்துக்கொத்தாகப் பெருக்கி நடப்பிக்கவேணுமென்று திருவுள்ளம்பற்றி யிருக்குமளவில்;

வாக்மியாய் ராஜவல்லபராய் நம் கோயில் புரோஹிதரான நம் பெரியகோயில் நம்பி, உடையவரை மதியாதே



கில்பிஷம் பண்ணிக்கொண்டிருக்க; உடையவரும் அவரைத் திருவரங்கந் திருப்பதியில் உத்வஸிப்பிப்பதாகத் திருவுள்ளம்பற்றி, ஒருகால விசேஷத்திலே புறப்பாட்டுக்குக் காத்திருக்கிற ஸமயத்திலே, உடையவர் ஸ்வப்நத்திலே, பெருமாள் வ்ருத்த ஸ்ரீவைஷ்ணவராய் வந்து, "பெரிய கோயில் நம்பி பஹுகாலமாய் நம்மை நம்பியிருக்கிறார், திருவுள்ளமானபடி செய்யவேணும்" என்று அருளிச்செய்ய; உடையவரும் கண்விழித்து, ஆழ்வானை அழைத்து, "பெருமாளுக்கு நம் சத்ருவான பெரிய கோயில் நம்பி யிருக்கிறதே திருவுள்ளமா யிருக்கிறது, நாம் பெருமாள் கோயிலுக்குப் போவோம்" என்று அருளிச்செய்ய; ஆழ்வானும், "பெருமாள் அந்தப்படி அருளிச்செய்தபோதே அவரை அநுகூலராய்த் திருவடிகளிலே ஆஸ்ரயிக்கும்படி பண்ணியருளுவர்" என்று விண்ணப்பஞ்செய்ய; "ஆகில் அவரைத் திருத்தும்" என்று அருளிச்செய்ய; ஆழ்வானும், வித்வானான பெரியகோயில் நம்பியை க்ரமேண திருத்தி, உடையவர் திருவடிகளைச் சேரவிட; உடையவரும் அவரைக் கடாக்ஷித்து க்ருபை பண்ணி, அவருடைய வாங் மாதுர்யத்தினாலே "அமுதன்" என்று திருநாமம் சாத்தி, ஹ்ருஷ்டராயிருக்க; உடனே ஐப்பசி மாஸத்திலே அமுதனாருக்கு மாத்ருவியோகமாய், பத்து நாளையில் கர்மங்களை நிறைவேற்றி, ஏகாஹத்துக்கு, முன்புபோலே ப்ராக்ருதரா யிருக்கிற தேஹாநுபந்திகளை புஜிப்பிக்க வொண்ணாமையாலே எம்பெருமானார் ஸந்நிதியிலே சென்று விண்ணப்பஞ்செய்ய; உடையவரும், தம் முதலிகளைக் கடாக்ஷிக்க, முதலிகளும் இசையாம லிருக்கக்கண்டு, ஆழ்வானை அழைத்து, "நீர்

போய் ஏகாஹத்தை புஜித்து நிறைவேற்றும்" என்று அனுப்ப; ஆழ்வானும், நியமகப்படியே புஜித்து, உத்தராபோசன ஸமயத்திலே பெரிய கோயில் நம்பி கையிலே அவரதான கோயில் பௌரோஹித்யமும் புராணபடநமுமான கோயில் காணியாக்ஷியை தாரை பண்ணுவித்துக் கொண்டு, தாநசாஸநமும் வாங்கிக்கொண்டு மடத்திலே ஸமர்ப்பிக்க;

உடையவரும் ஸந்துஷ்டராய், திருவுள்ளத்திலே நினைத்தபடியே ஸந்நிதி பரிகரங்களைப் பத்துக்கொத்தாகப் பெருக்கி; (௧) திவ்யதேசவாஸிகளாய்ப் பூர்வம்கோயிலொட்டப்புறத் தம் திருவடிகளை ஆஸ்ரயித்தவர்களை "திருப்பதியார்" என்று ஒருகொத்தாகச்சாற்றி, அவர்கள் கைங்கர்யங்களை விபஜித்து, திருப்பாற்கடல் தாஸர் திருக்குருகைப்பிரான்முதலாக உள்ளூர் காணியாளரான செல்வநம்பிமுதலானோர்க்கும் கைங்கர்யங்களை நியமித்து; (௨) இரண்டாம் கொத்தான, கொடவரிச் சிறுந்தாழ்வரை தாஸர் திருவம்ஸரான அந்த திருநாமத்துக்கு ஆஸ்ரயணபூர்வகமாக, "திருக்குருகூர் தாஸர், நாலுகவிப் பெருமாள் தாஸர், சடகோப தாஸர், திருக்கலிகன்றி தாஸர், ராமாநுஜ தாஸர்" என்று திருநாமமும் ஸாதித்து, விசேஷ கடாக்ஷம் செய்தருளி, அவர்களுக்குக் கோயில் கைங்கர்யங்களையும் வ்யவஸ்திதமாக்கி, "திருப்பணி செய்வார்" என்று நிருபகமாக்கி; (௩) மூன்றாம் கொத்தாக, பாகவத நம்பிமாரை ப்ரதிஷ்டிப்பித்து, அவர்களுக்குக் கைங்கர்யமர்யாதைகளைப் பண்ணுவித்து, (௪) நாலாங்கொத்தாக, கொதவந்தித் தாஸ்மையோரான கொடுவாளெடுப்பாரில், பெரிய பெருமாள் திருவ



ரங்க மாளிகையார் முதலானபேருக்கு ஆஸ்ரயணாதிகளைப் பண்ணிவைத்து; "உள்ளூரார்" என்று வ்யவஹரிப்பித்து, (௫) அஞ்சாங்கொத்தாக, பாடுவாரான நாதமுனி யரையர்களுக்கும் ஆஸ்ரயணாதிகளை ஸாதித்து, கைங்கர்ய வ்யவஸ்தையையும் "விண்ணப்பஞ்செய்வார்" என்கிற வ்யவஹாரமும் கல்பித்து; (௬) ஆறாங்கொத்தாக, திருவரங்கவள்ளலார் என்றும் தாயமுனிவேழம் என்று மிருக்கிற தம்சிஷ்யருக்குத் திருமஞ்சநம் முதலான சில கைங்கர்யங்களை உண்டுபண்ணி ஒரு கொத்தாக்கி, அவர்களுக்கு "திருக்கரகக்கையார்" என்று பேருண்டாக்கி; (௭) ஏழாங்கொத்தாக தலைமுடிவாரான ஸேனை நாதப்ரம்ஹராயர் வீரஸுந்தர ப்ரம்ஹராயர் ஜகந்நாத ப்ரம்ஹராயர் முதலானருக்கு ஆஸ்ரயணாதிகளை ஸாதித்து, அவர்களுக்கு, பூர்வம் அந்தந்த ப்ரபுக்கள் பேர்கொடுத்ததுகளை விளங்கும்படி பண்ணி, அவர்களுக்கு "ஸ்தாநத்தார்" என்று, வ்யவஹாரமுண்டாக்கி; (௮) எட்டாங்கொத்தாக, பெரிய நம்பிக்கு ருக்வேதமும், பெரிய நம்பிகளுக்கு யஜுர்வேதமும், திருப்பணி செய்வாருக்கு ஸாமவேதமும், நம்பிமாருக்கு அதர்வண வேதமும், ஆழ்வானுக்குப் புராணமும், கோவிந்தப் பெருமாளுக்கு இதிஹாஸமும், ஆச்சானுக்கு ஸ்ரீரங்கமாஹாத்ம்யமும், திருவரங்கத்தமுதனாருக்கு இயலும், பிள்ளானுக்கு பூர்வோத்தரமீமாம்ஸா ஸூத்ரமும், கிடியாழ்வானுக்கு ஆஸ்வலாயன ஸூத்ரமும், நடாதூராம்மாளுக்கு ஸ்ரீபாஷ்யமும், மற்றுமுள்ள முதலிகளுக்குக் கைங்கர்யங்களை ஸந்நிதி விண்ணப்பம் செய்யும்படி நியமித்து, அவர்களை ஒருகொத்தாக்கி, "பட்டாள்கொத்து" என்று பேரிட்டு; (௯) ஒன்ப

தாங்கொத்தாக ஆரியபட்டாளை ஒருகொத்தாக்கி, அவர்கள் கைங்கர்யத்தையும் திட்டம்பண்ணி; (௰) பத்தாங்கொத்தாக, புண்டரீக தாஸர் கைங்கர்யத்தையும் திட்டம்பண்ணி "தாஸநம்பி கொத்து" என்று வ்யவஹரிப்பித்து;— இந்தப்படி பத்துக்கொத்தாக்கி, நியதபரிஜநங்களை வ்யவஸ்த்திதமாக்கி, ஸ்ரீஸேநாபதி துரந்தரராய்க்கொவணவரான தாம் திருவரங்கந் திருப்பதி ஸ்ரீவைஷ்ணவர்களுக்குத் தலைவராகையாலே, முதல்கொத்திலே அநுப்ரவிஷ்டராய், தாம் நித்யமாகக் கல்பித்த கருடவாஹந பண்டிதருக்குக் குடிநீர் கைங்கர்யத்தையும், திருப்பதியார் கொத்தோடே சேர்த்து, இக்கொத்து முதல் பேரும், பாரம்பர்யமாகக் கொடவருக்கு இரண்டாம்பேரும், தாம் கட்டளையிட்ட பாகவத நம்பிமார்களுக்குத் தோதவத்தித்தாய் மறையோருடைய கைங்கர்யமெடுத்துக் கைநீட்டுகிற தாகையாலே கொடுவா ளெடுப்பாரென்று நம்பிமாருக்கு மூன்றும்பேருமாக இப்படி கைங்கர்யத்தைப் பத்துப்பேருக்கும் திட்டம் செய்தருளினார்.

இப்படி பத்துக்கொத்துக்கும் கைங்கர்ய விபாகம் பண்ணி, பரம விரக்தராய் தேசாந்தரிகளான ஏகாங்கிகள் நாலுபேருக்கும் வ்யவஸ்த்திதமாகச் சில கைங்கர்யங்களை நியமித்து; தங்கப்பிரம்பு நான்கு, வெள்ளிப்பிரம்பு இரண்டு, தலைவளைச்சல் பிரம்பு இரண்டு, ஆக எட்டுப்பிரம்புக்கும் விரக்தரான திருநாமதாரிகளை நியமித்து, அவர்கள் கைங்கர்யங்களையும் விபஜித்து; தேசாந்தரிகளான சாத்தாத முதலிகளுக்கும் சில கைங்கர்யங்களையும் நியதமாக நியமித்து; சூத்ரர்களுக்கும் பத்துக்கொத்தாகத் திட்டம்பண்ணி; அந்தந்தவகையில் பத்துக்கொத்



துக்கும் கைங்கர்ய விபாகம் செய்தருளி, திருவரங்கச் செல்வம் சிந்தாமே மங்காமே பொங்கும்படி ஆராய்ந்து கொண்டு வருங் காலத்திலே;

ஒரு திருவத்யயநோத்ஸவத்துக்கு திருநகரியிலிருந்து ஆழ்வாரெழுந்தருளக்கூடாமல் சிலஉபாதிகளுண்டாயிருக்க, எம்பெருமானார் தாமே கோயிலிலே ஆழ்வாரை திருப்ரதிஷ்டை பண்ணிவைத்து, திருமங்கை மன்னனைத் தவிர மற்ற ஆழ்வார்களையும் நாதமுனிகளையும் திருப்ரதிஷ்டை பண்ணிவைத்து, திருமொழி திருவாய்மொழித்திருநாளுக்கு ஆழ்வார்கள் எழுந்தருளப், பெருமாள் அருளப்பாடு முதலான வரிசைகளை ஆழ்வார்களுக்கு ஸாதித்து, அவர்களுக்குக் காரணபூதரான அரையருக்கு அருளப்பாடு ஸாதிக்கும்படி பண்ணி இயற்பாவுக்குள் முதலாழ்வார்கள் முதலான இயற்பா அருளிச்செய்தவர் மாத்ரம் அழகியமணவாளன் திருமண்டபத்திலே ஸந்நிதிக்கு நேராக எழுந்தருளியிருக்கும்படி பண்ணிவைத்தும், பெருமாளுடைய திருமுளைத் திருநாள்களிலே திருவீதிகளிலே தேசாந்தரி ஸ்ரீவைஷ்ணவர்கள் திருக்கோலங்கோத்து இயற்பாவை நித்யம் ஒருதிருவந்தாதியாக அநுஸந்தித்துவர; அந்தத்திருக்கோலை ஆழ்வார் திருவோலக்கமாகையாலே, திருப்பணி செய்வாருக்குத் தம் உகப்பினாலே ஆழ்வார்களுடைய ஸந்நிதிப்பேராகச் சிலகைங்கர்யங்களை நியமித்து; தம்முடைய தர்சனத்துக்கு வெற்றிதோற்ற ஸமயசத்ரத்தை திருக்கோலைக்கு முன்னேபிடிக்கும்படி திருப்பணிசெய்வாரை நியமித்து; இவ்வாழ்வார்களுக்கும், ஆண்டாள் தவிர மற்ற ஆழ்வார்கள் தங்கள்திருநக்ஷத்ரத்தின்று திருமஞ்ச

னத்துடனே ஸந்நிதியிலேயெழுந்தருளி, ப்ரதமகடாக்ஷத்திலே மங்களாசாஸநம் செய்தருளி, திருவாராதநமாய், அமுதுசெய்தருளி, ஸேனைமுதலியாரும் அமுதுசெய்தருளின அநந்தரம், ஒருதளிகை ப்ரஸாதமும் ஆழ்வார் அமுதுசெய்தருளி, ஸ்ரீபண்டாரத்துக்குப்போனபின்பு, தாம் உடுத்துக்களைந்த பீதகவாடையும் சூடிக்களைந்த திருமாலையும் பூசிக்களைந்த களபமும் சடகோபனும் ப்ரஸாதித்து ப்ரஸாதப்படி விடைஸாதித்து, தம் வரிசைகளாக சத்ரதாலவ்ருந்தாதிகளைப்ரஸாதிக்க, புறப்பட்டு, நாய்ச்சியார் ஸந்நிதியிலேயும் அந்தப்படியே ஸத்க்ருதராய், திருவீதியிலே யெழுந்தருள; அத்யாபக ஸ்ரீவைஷ்ணவர்கள் இயல்ஸேவிக்க, திருப்பணிசெய்வார் அந்தத்திருவோலக்கத்துக்கு ஸந்நிதிப்போராய் இவனுக்கு ஸமர்ப்பிக்கிற அடைக்காயமுதுவாங்கியும், சந்தடிவிலக்கியும், ஸமயசத்ரத்தையும் பிடித்துக்கொண்டு, ஆழ்வார் தம்கோயிலிலே எழுந்தருளினபின்பு அரையருக்கும் ஸ்ரீபாதம் தாங்கின சாத்தாதமுதலிகளுக்கும், அத்யாபக ஸ்ரீவைஷ்ணவர்களுக்கும்பஹுமாநம் திருப்பணிசெய்வார் ஸாதித்து; தீர்த்தமும், சாத்துப்படியும், அடைக்காயமுதும், திருவோலக்கத்திலே விநியோகம்பண்ணி; கோயில் பரிகரங்களான பத்துக்கொத்துக்கும் அத்யாபகர்கள் பஹுமதியுடன் விநியோகம்பண்ணி, ஸேவாகாலமாய்த் திருவோலக்கம் கலைந்தபின்பு ததீயாராதநம் நடக்கும்படிபண்ணி, ஆண்டாள் திருநக்ஷத்ரத்துக்குத் தம் ஸந்நிதியிலே தானே சாத்துமுறை ஸமயத்திலே பெருமாள் தோதவத்தித் தூய்மறையோர் கையிலே அருவானை மனுப்பியருள, ஆண்டாளும் அவர்களை ஆதரித்து ஆழ்வார் ஸந்நிதியைப் போலே நடக்கும்படி திட்டம் செய்தருளினார்.



இந்தப்படி எம்பெருமானார் திட்டம் செய்தருளினபடியினாலே, பெருமாள் ஸந்நிதியிலே ஆழ்வாருக்குக் கரஸூத்ரரான அரையர், ஆழ்வார்கள் அருளிச்செய்த திவ்ய ப்ரபந்தங்களை இசையுடனே விண்ணப்பஞ் செய்வார்கள். நாய்ச்சியார் ஸந்நிதி முதலான திருவிருப்புக்களிலே ஒருபாட்டு அரையர் இசையுடனே ஸேவிக்க, மற்றப் பாட்டுக்களை இயலாக ஸ்ரீவைஷ்ணவர்கள் ஸேவிக்க, இசையுடனே அரையர் சாற்றுவர். இயற்பாவோடே கூடினதும் நாதமுனிகள் தொட்டு உடையவர் காலத்திலேயும் அநேகநாள் அரையர் ஸேவித்துக்கொண்டு வருமளவில்; ஒரு காலவிசேஷத்திலே, பெரிய கோயில் நம்பி, தம்முடைய கோயில் பௌரோஹித்யத்தையும், புராணபடநத்தையும், ப்ரம்ஹரதத்தையும் ஆழ்வானுக்கு தாநம் பண்ணி, தாம் கோயிலிலே ஒட்டற்றிருந்தபடியாலே, அது முதலாக ஆழ்வான் பட்டர் கொத்திலே சேர்ந்து ஸந்நிதி பௌரோஹித்யமும் நிர்வஹித்துக்கொண்டு, பூர்வம் திருக்குறுங்குடியிலே நடந்த கைசிகவ்ருத்தாந்தத்தைப் பெருமாள் தம்முடைய ஸந்நிதியிலே உத்தாநத்வாதசியில் காலோத்ஸவகாலத்திலே விண்ணப்பஞ்செய்யச் சொல்லி நியமித்து; ஸ்ரீபாஞ்சராத்ரோக்த ப்ரகாரமாகத் தாம் அந்த உத்ஸவாந்தத்திலே திருவீதியெழுந்தருளுகிற ப்ரம்ஹரதத்தை பௌராணிகரான பெரிய கோயில் நம்பிக்குப் பாரிதோஷிகமாக ப்ரஸாதித்து, தாமுன்னே எழுந்தருளினது முதலாகக் கைசிக புராணம் படித்து, ப்ரம்ஹரதமேறி வீதிவலம் செய்கிறதும்; ஆழ்வானுக்கே நடந்துவருகையில்; இத்தை உடையவர் கடாக்ஷித்து. "வித்வானான திருவரங்கத்தமுதனார் இப்படி

ஒழிக்கிருக்கலாகாது" என்று திருவுள்ளம்பற்றி; பின்னை திருவரங்கப் பெருமாளரையர் திருமாளிகைக்கு எழுந்தருளி, இயற்பா ஸ்ரீகோசத்தை பிக்ஷையாகக் கேட்டுக் கொண்டு, "ஸந்நிதியிலே இன்று முதலாக இயற்பாவை நீங்கள் ஸேவிக்கவேண்டா" என்று நியமித்து, அமுதனாரை அழைத்து, ஒருரு இயற்பாவை ஸாதித்து, ஸ்ரீகோசத்தை ஸந்நிதியிலேவைத்து, ஸ்ரீகோசத்தின்மேலே "இயற்பாவை ஆயிரமுர் ஸேவியும்" என்று நியமித்தருளும்படிபண்ணி, அன்றைக்கு அரையருக்கு ஸாதிக்கிற வரிசையெல்லாம் அவருக்கு ஸாதிக்கும்படி பண்ண; அமுதனாரும், ஆழ்வாருக்குக் கரணபூதராய் இயற்பாவை ஸேவித்துச் சாத்தின பின்பு, அரையரைப்போலே வரிசைகளை ஸாதித்து, வீட்டிலே விடைவித்தருளினார். நாச்சியார் கோயில் முதலானதுகளிலேயும் அமுதனார் இயற்பாவைத் தொடங்க, ஸ்ரீ வைஷ்ணவர்கள் அநுஸந்திப்பர்கள். இசையெல்லாம் அரையர் அநுஸந்திக்கிறது. இயலெல்லாம் ஸ்ரீவைஷ்ணவர்கள் அநுஸந்திக்கிறது. பெரிய ஸந்நிதியிலே இயற்பாவை அமுதனார் அநுஸந்திக்கிறது. மற்ற விடமெல்லாம் அவர் தொடங்கி ஸ்ரீ வைஷ்ணவர்கள் அநுஸந்திப்பார்கள். திருவீதியில் இயல் திருக்கோவை ஆழ்வார் திருவோலக்கமாகையாலே, அவ்விடத்திலே, ஆழ்வாருக்குக் கரணபூதர் ஸ்ரீவைஷ்ணவர்கள். மற்ற விடங்களிலே அவதாரத்துக்கு ஆழ்வார்களுக்குக் கரணபூதர் அரையர். அரையர்களுக்கு ஸ்ரீ வைஷ்ணவர்கள் ஸஹகாரிகள். பெரிய கோயிலிலே இயற்பாவில் ஆழ்வார்களுக்குக் கரணபூதர் அமுதனார். நாச்சியார் கோயிலிலே ஸ்ரீ வைஷ்ணவர்கள் அமுதனாருக்கு அரையர்போ



லே ஸஹகாரிகள். திருக்கோவையில் ஆழ்வாருக்குக் கரணபூதரான ஸ்ரீ வைஷ்ணவர்கள் திருவோலக்கத்தருகே திருப்பணி செய்வாரை ஸந்நிதிப்போராக நியமிக்கையாலே, அந்தத் திருவோலக்கத்தில் விநியோகாதி கைங்கர்யம் திருப்பணி செய்வார். ஆகையாலே, ஆழ்வார்கள் ஸந்நிதியிலே ப்ராஸாத திருப்பணியாராதி விநியோகமில்லை; ததீயாராதநமே உள்ளது.

இப்படி உடையவர் திட்டம்செய்தருளின வநந்தரம், சில நாளைக்குப் பின்பு, திருவரங்கத்தமுதனார், எம்பெருமானார் விஷயமாக, காயத்ரீ ஜபஸங்க்யையாலே கலித்துறை நூற்றந்தாதியை விண்ணப்பஞ்செய்ய; பெருமாள், ஒரு ஸப்தாவரணத் திருநாளிலே, உடையவரை; தம்முடனேகூட வரவேண்டும் என்று நியமித்தருளி, திருவீதியிலே ஸகல வாத்யங்களையும் நிறுத்தி, ஸ்ரீ வைஷ்ணவர்கள் அத்தை அநுஸந்திக்கக் கேட்டருளி, போரவுகந்தருளினார். எம்பெருமானாரும் மடத்து வாசலிலே ஸ்வாமிகளைப் பார்த்து, திருக்கண்களாலே அமைக்க, அது முதல் மடத்தண்டை நிறுத்தி ஸேவிக்கிறது வழக்கம். அது முதலாக, பெருமாள் நியமநத்தினாலே, பெரியஸந்நிதியிலே இயற்பா அநுஸந்தித்தவுடனே நூற்றந்தாதியை வரிசையுடன் கேட்டருளுகிறார். நாச்சியார் கோயிலிலேயும், அப்படியே ஆண்டாள் ஆழ்வார் ஸந்நிதிலேயும் இயற்பாவை அமுதனார் யஜமானராய்த்தொடங்க, ஸ்ரீவைஷ்ணவர்கள் அநுஸந்தித்துத் தலைக்கட்ட, நூற்றந்தாதி தொடக்கத்திலே அரையரைப்போலே வரிசைகளை உடையவர் நியமநத்தினாலே சாற்றுகிறது. உடைய

வர் நூற்றந்தாதியை இயற்பாவோடே, முதலாயிரத்திலே கண்ணிநுண் சிறுத்தாம்பைப்போலே சேர்த்து ஸகல ஸ்ரீ வைஷ்ணவர்களுக்கும் ப்ரபந்நகாயத்ரியாக நித்யாநுஸந்தேயமென்றும்; இந்த அமுதனாருக்கும் திருப்பணி செய்வாருக்கும் மடமும், திருமாளிகைகளிலே ப்ரத்யர்பக ஸ்ரீ வைஷ்ணவர்களுக்கு முன்னே பஹுமானமாகவும் திட்டம் செய்தருளினார்.

இப்படி கோயில் கைங்கர்யபரரையும் அவரவர்க்கு வ்யவஸ்திதமான கைங்கர்யங்களையும் திட்டம் செய்தருளி, ஆழ்வார்களையும் ப்ரதிஷ்டிப்பித்து, அவர்களுக்கு திருநக்ஷத்ரம் முதலான உத்ஸவாதிகளையும் உபலாளநங்களையும் ஸ்ரீ பாஞ்சராத்ர ப்ரகாரமாக வ்யவஸ்தையை பண்ணி; பெருமாளுக்குத் திருவாராதநம் நித்யோத்ஸவ பக்ஷோத்ஸவ மாஸோத்ஸவ ஸம்வத்ஸரோத்ஸவ மஹோத்ஸவாதிகளையும் விஸ்தாரமாக நடத்தியருளி; திருப்பணி ஜீர்ணோத்தாரணங்களையும் பண்ணுவிக்க, பிடத்தில்; நித்ய திருவாராதநவர்க்க வகை முதலானதுகளுக்கு உதவும்படி, மடமாளிகைசூழ் திருவீதியில் சாரங்க பாகத்திலே கோசாலையும் கட்டுவைத்து, சில பசுக்களையும் அவ்விடத்திலே வைத்து, மற்றைப் பசுக்களெல்லாம் வடகரையிலே சோழங்கநல்லூர் வனித்திலே யிருக்கும்படி அநுக்ரஹத்தை அறிந்து வைத்து அதிலே ஆநிரைகாத்த பெருமாளை ப்ரதிஷ்டிப்பித்து, ப்ருந்தாவனத்தைப்போலே பசுக்களிருக்கும்படி பண்ணி, அகளங்க நாட்டாழ்வான் திருவிடையாட்டம் சீர்மை விசாரிக்குமளவில், கேவலபகவத்பரரும் நால்வேஷபரருமானவர்களை

யும், தாமும் அடிக்கடி பசுக்களைக் கடாக்ஷிக்க எழுந்தருளுகிறபடியினாலேயும், திருவரங்கத் திருப்பதியைப்போல பெரிய பெருமாளை ப்ரதிஷ்டிப்பித்தருளி, கோயிலிலேயிருந்த வைகாநஸ நம்பிமாரைத் திருவாராதநம் பண்ணச்சொல்லி நியமித்தருளினார்.

இந்தப்படி திருவரங்கேசனுருடைய ஸ்ரீகார்யத்தைக் குறைவற ஆராய்ந்துகொண்டிருக்கச்செய்தே தாமும், திருக்கோட்டியூர் நம்பி முதலான அஞ்சு ஆசார்யர்கள் ஸந்நிதியிலும் ஸகலார்த்தங்களையும் அறிந்து, அநேகம் சிஷ்யரையும் லபித்து, உபயகைங்கர்யத்துக்கும் ஆழ்வானையும் ஆண்டானையும் கடவராக்கி, தாம் "திக்விஜயம் செய்தருளவேணும்" என்று திருவுள்ளம்பற்றி, ஆழ்வானை யாத்ராஸஹாயராக்கி, ஆண்டானை ஸ்ரீகார்ய நிர்வாஹகராக்கி, ஆண்டானுக்குச் செங்கோல் ப்ரஸாதிக்கும்படி ஸந்நிதியிலே விண்ணப்பஞ்செய்ய; பெருமாளும், போரவுகந்தருளி "உமக்குப் பாதுகையான தாசரதி நம் வீட்டை ஆராயக்கடவர், நீர் நம்முடைய ஆரமங்களையும் ஒருவருக்கிட்டு, நம் தர்சநத்தில் களையறுத்து, "எம்பெருமானார் தர்சநமே ஸர்வோத்க்ருஷ்டம்" என்று நாலு திசையிலும் ஜயஸ்தம்பம் நாட்டிவாரும்" என்று விடை ஸாதித்து, ஸகல வரிசைகளையும் ப்ரஸாதித்து, முதலியாண்டானுக்குச் செங்கோல் வரிசையும் ஸாதித்தருளினார். உடையவரும் பெருமாள் நியமநத்தினாலே ஆழ்வானுடனே திக்விஜய யாத்ரை செய்தருளினார். முதலியாண்டானும் கொறட்டிலேயிருந்து கோயில் திருவிளையாட்டத்தையும், திருக்கொட்டாரக் கோயில் கைங்கர்யங்களையும், உள்ளேபுகுந்து கருவுகலவாசலிலேயிருந்து திருமேனி உபசாரத்தையும் ஸந்நிதியிலேயிருந்து திருப்

பவன உபசாரத்தையும் உடையவர் நியமநப்படி ஆராய்ந்துகொண்டு அனைத்தையும் கண்டருளப் பண்ணிக்கொண்டிருந்தார்.

உடையவர் நியமித்தருளின அனந்த கொத்துக்குத் தலைவரான திருப்பதியார் கொத்தில் கோவனவராண ஸேனாதி துரந்தரரான செங்கோல் பார்பத்திய கைங்கர்யங்களுக்கு விவரம்:— உதய காலத்திலே கோயிலிலே வந்து பெரிய திருமண்டபத்திலே கொறட்டிலே யிருந்து திருக்கொட்டாரத்திலே அதிகாரி வந்து ஸேவித்து நிற்க, அவனைத் தமது கைங்கர்யத்திலே நியமித்து, துறைகளுக்குக் கைங்கர்யபரர் வந்து ஸேவிக்க, திருமஞ்சனத்துடனே உள்ளே புகுந்து அணியரங்கன் திருமுற்றத்திலே த்வஜஸ்தம்பத்தடியிலே தண்டன் ஸமர்ப்பித்து குலசேகரன் திருவீதியிலே வலமாக வருமளவில், திருமடைப்பள்ளியிலே இருக்கிற கூடை முதலான சாமக்ரிகள் யதாபூர்வமாக வந்திருந்தவர்க்கள்களையும் காலோசிதமான திருப்பணியாரங்களையும், கறியமுது முதலானதுகளையும், உள் துறை அதிகாரியையும் ஏகாங்கிகளையும் தமது கைங்கர்யங்களிலே நன்றாக நியமித்து, ஆராய்ந்துகொண்டு வ்யஞ்சன [illegible] யமுது முதலான ரஸ வர்க்கங்களில் நிறைவையும் விசாரித்து, அந்தந்த கைங்கர்யத்திலே நியமமான ஏகாங்கிகளைத் தனித்தனமாக நியமித்து, [illegible] வாசலிலே கோயில்காத்த பெருமாள் ஸேவிக்க ராஜமகேந்த்ரன் திருவீதியிலே ஸேனாக்ரமத்திலே கருவுகலம் கைவழி அறைவாசலிலே தோதவத்தித் தூய்மறையோருடன் கூடியிருந்து, ஸுகந்தப் பெட்டி வைத்திட்ட தம்முடைய மனுஷ்யனை ஏகாங்கி ஸுகந்த பெட்டியைத் திறந்து மலயஜ



கர்ப்பூரகாச்மீர கஸ்தூரியாதிகளை யதாபூர்வம், அந்யூநாதிரிக்தமாக தோதவத்தித் தூய்மறையோர் கையிலே ஸமர்ப்பிக்க, சாத்துப்படி, அஞ்சனக்காப்பு, கஸ்தூரித் திருமண் காப்பு, கநஸார குளிகை முதலானதுகளையும் யதாபூர்வகமாக ஸமர்ப்பிக்கும்படி நியமித்து, முத்ராஸிதமாக நாய்ச்சியார் ஸந்நிதிக்குத் திருப்பரியட்டம் திருவாபரணம் ஸுகந்தாதிகள் காலோசிதமாக ஸமர்ப்பிக்கும்படி நியமித்து அனுப்புவித்து, திருப்பூ மண்டபத்திலே சென்று திருமேனிக்குப் பாங்கான சிவந்த செங்கழுநீர், செண்பகம், மல்லிகை, புண்டரீகம் முதலான கதம்பங்களையும், திருக்காகம் கையாரையும், உசித கைங்கர்யங்களிலே நியமித்துக்கொண்டு, சேனை முதலியாரைத் திருவடிதொழுது, தகுமதியுடனே அழகிய மணவாளன் திருமண்டபத்திலே ஜயவிஜயர்களைச் சேவித்து, பத்துக் கொத்துப் பரிகரமான ஸ்ரீ வைஷ்ணவர்களையும், ஏகாங்கிகளையும், சாத்தாத முதலிகளையும் திருநாம தாரியான வேத்திரபாணிகளையும், பத்துக் கொத்து ஆந்த்ர பரிஜனங்களையும் யதாதிகாரமான தங்கள் தங்கள் கைங்கர்யத்திலே ஜாகரூகராயிருந்து நடப்பிக்கச் சொல்லி நியமித்து உள்ளேபுகுந்து, திருவாராதனம் தொடங்கிவைத்து [illegible] முதலாகப் பெரிய அவஸரம் உத்ஸவாந்தமான பின்பு விரிசையுடன் ஸேவித்து ஸ்வக்ருஹத்தில் ப்ரஸாதம். திரும்பக்கொறட்டிலே யிருந்து ஸ்ரீரான்னம் குடிநீர்ப்பாலனவும் நித்யோத்ஸவத்தை நன்றாக நடப்பித்து, சேனைமுதலியார் பக்கலிலும் வரிசைபெற்று புறப்பட்டு கொறட்டிலே யிருந்து இரண்டு துறைகளில் தர்மபாதிகள் அனைவரையும் அழைப்பித்து, நித்யக்ருத்யம் விசாரித்து கோயில் ஒமைபருவமும் நன்றாய் ஆராய்ந்து ஆர்யபட்டாள் வாசலிலே அபசார க்ஷாமணம் பண்ணிக்

கொண்டு பரியுடன் புறப்பட்டு விடு சேருகை கைங்கர்யம்.

விசேஷப்படித் திருநாள் புறப்பாட்டுக்கு திருவணுக்கன் திருவாசல் பெருமாள் புறப்பட்டருளினது முதல் சேரபாண்டியத்திலே எழுந்தருளுகிறவரைக்கும் விடாமல் ஸகல கைங்கர்யங்களையும் அந்தந்த அதிகாரிகளைக் கொண்டு பண்ணுவிக்கிறதும், நம்பி ஆர்யபட்டாள் நீங்கலாக ஸகல பரிஜனங்களுக்கும் ஆஜ்ஞையும் ப்ரஸாதிக்கிறதும் ஸகல பரிஜனங்களிலே நிக்ரஹாநுக்ரஹங்கள் செய்தருளுகிறதும் இவர் கைங்கர்யம். திருவாபரணப் பெட்டி கருவூலம் முதலானவைகளுக்கு சக்ர முத்ரையிடுகிற கைங்கர்யம் திருக்கொட்டாரத் ததிகாரியும், உள் துறை அதிகாரியும், பல பட்டடை அதிகாரியும், பல திருப்பணி அதிகாரியும், ஏகாங்கிகளும் திருவிடையாட்டத்து மணியக்காரரும், தர்மாதிகாரிகளும், ஸ்ரீஸேநாபதி தூரந்தாரான செங்கோல் பார்பத்தியக்காரருக்குக் காரணபூதர்கள் கொவணவர். இந்த ஸேநாபதி தூரந்தாரான செங்கோல் அதிகாரிக்குப் பெருமாள் ஸாதிக்கிற விவரம்: அலங்காராஸநத்திலே அமுதுசெய்தருளின பின்பு ஸந்நிதியிலே திருப்பதியார் ப்ரஸாத ஸ்வீகாரம்பண்ணிவைக்க ஆமலகமாத்ரம் ஸ்வீகரிக்கிறதும் வளையம் ஸாதிக்கிறதும் நித்யப்படியும் விசேஷப்படியும் திருமண்டபங்களிலும் ப்ரத்யவஸரமும் ஸேனை முதலியார் அமுதுசெய்து பெருமாள் அமுது செய்தருளினவுடனே யதாவாகத் திருவாராதனம்பண்ணின நம்பியாருக்கு பதக்ரஹமான ஸுந்தரபாண்டியத்திலே அன்று தீர்த்தம் ஸ்வீகாரமாய், கையைக் கழுவினபின்பு பரிசாரக பற்றுள தோதவத்துத் தூய்மறையோரான உள்ளூராருக்கு பத



க்ரஹணத்திலே உத்தரணியிலே யெடுத்து நம்பியார் ஒருக்கால் ஸாதிக்க ஸ்வீகரித்து கையலம்பி மங்களாலத்தியானவுடனே வட்டிலிலே திருப்படிக்கத்தை மூக்ந்து உத்தரணியிலே திருப்படிக்கத்தை யெடுத்து ஸ்ரீகார்யதுரந்தரருக்கு அருளப்பாடு ஸாதிக்க அவரும் நாயன்தே நாயன்தே யென்று கூப்பிட்டுவர, அவருக்குத் தோதவத்தித் தூய்மறையோர் தீர்த்தம் மூக்கால் ப்ரஸாதித்தவுடனே பரியட்டமும் ப்ரஸாதிக்க கல்வப்ரஸாதமும் உத்தர கிண்ணியிலே கரத்து ஸாதித்து திருமாலை வகச்சல் வளையம் ப்ரஸாதமும் ஸ்ரீசடகோபனும் ப்ரஸாதித்து பரியட்டம் அவிழ்க்கிறது. பெரிய அவஸரம், சேனை முதலியார் அமுதுசெய்தருளினவுடனே அந்தப்பரிஜனத் தளிகையைத் திருப்பணியாரங்களுடன் நாய்ச்சி பரிகாரம் செங்கோல் தூரந்தார் திருமாளிகையிலே கொண்டுபோய் அவருக்கு ஜீவிதமாகக்கொடுக்கிறது. உத்ஸவாந்தத்திலே ஸேனைமுதலியார் ஸந்நிதியிலே ஸகல வரிசையுடன் ஸேவிக்கிறதும் புறப்பாட்டிலே பெருமாள் எக்காளச்சின்னங்களுடனே மேற்படி வழியாகச் சேனைமுதலியார் கோயில் வாசலிலே யெழுந்தருளி சேனைசருக்கு அபிமுகமாக எழுந்தருளினவுடனே சேனாபதி தூரந்தார் பெருமாளுக்கு வலது பக்கத்திலே தண்டு தூணிலே மேற்கு முகமாகநின்று ஸேவிக்க; திருவோலக்க நாயகம் பண்ணுகிற ஸ்தானத்தார் திருவடிவிளக்கி, திருப்படிக்கத்தை பதக்ரஹமாக ஸுந்தர பாண்டியனும் உத்தரணி கிண்ணியில் வாங்கி ஸாதித்து திருப்பரியட்டமும் ப்ரஸாதித்தவுடனே தோதவத்தித் தூய்மறையோர் சாத்திக் களைந்த புஷ்ப ப்ரஸாதமும் ஸாதித்தபின்பு நம்பிமார் வெள்ளைவகச்சல் திருமாலைகளை சாத்தாத முதலிகள் கை

யில் வாங்கி ப்ரோக்ஷித்து பெருமாள் திருவடிகளிலே ஸமர்ப்பித்து வாங்கி ஸேனைமுதலியாருக்குச் சாத்தி அவர் சாத்திக்கொண்டிருந்த திருமாலைகளைக் கொண்டுவந்து ஸேனாபதி தூரந்தராருக்குமுன் அமுதுசெய்தருளி காளாஞ்சியிலே மாற்றின வினய ப்ரஸாதமும் ப்ரஸாதித்தவுடனே உத்தர கிண்ணியிலே திருக்கரகக்கையார் கலசப்பானையிலும் சுத்தஜலம்வாங்கி செங்கோலதிகாரிக்குத் தோதவத்தித் தூய்மறையோர் கையலம்ப சுத்தஜலம் ஸாதித்தவுடனே நம்பிமார் செங்கோலைக் களைந்து அவர் கையிலே ப்ரஸாதிக்க, தோதவத்தித் தூய்மறையோர் ஸ்ரீசடகோபனை சிரோ புஜங்களில் ஸாதித்தவுடனே நம்பிமார் செங்கோலை வாங்கி யதாபூர்வம் வைத்தபின்பு தலைமுடிவாரும் பரியட்டத்தை யவிழ்த்தபின்பு பெருமாளும் தெற்கே திருமுகமண்டலமாகத் திரும்பியருளினபின்னெக்காளம் முதலானதுகளை நிறுத்தி ஸகலவாத்யங்களும் அலங்கரிக்க, தோதவத்தித் தூய்மறையோர் அருளப்பாடு ராமாநுசனடியார் என்று அருளப்பாடிட்டு ஜீயர் ஸ்ரீவைஷ்ணவர் ஏகாங்கிகள் சாத்தாத முதலிகள் முதலானவருக்குத் தீர்த்தம் சடகோபன் ப்ரஸாதிக்கிறது. உடையவருக்கு முன் ஸ்ரீவைஷ்ணவரென்று அருளப்பாடு ஸாதிக்கிறது. திருவாய்மொழித் திருநாளிலே ராஜமகேந்த்ரன் திருவாசலுக்கு வெளியிலே ராமாநுசனுடையாரான பட்டர் சாத்தாத முதலிகளும் இருக்கிறபடியால் சேனை முதலியார் வாசலிலே சேனாபதி தூரந்தராருக்கு மாத்ரம் வரிசை ஸாதித்து குலசேகரன் திருவீதியிலே வேத பாராயணம் சாத்தினவுடனே நல்ல ப்ரஸாதமும் ஸ்ரீசடகோபனும் கைங்கர்யத்துக்குப் போராக ப்ரஸாதித்தார். கைங்



கர்யம் கட்டித்தீர்த்ததற்குப் போராக ஸேனாபதி தூரந்தராருக்கு அருளப்பாடிட்டு வரிசை சாதித்தபின்பு ராமாநுசமுடையாருக்கு அருளப்பாடிட்டு பட்டாருக்கு சாத்தாத முதலிகளுக்குத் தீர்த்தம் ஸாதிக்கிறது. பட்டாருக்கு கைங்கர்ய பாத்வாகாரமும் ராமாநுசமுடையாராகாரமுமாக இரண்டாகாரமுமுண்டு. குடைகண்டருளுங் காலத்திலும் திருமொழித் திருநாளில் உலாவியருளுங் காலத்திலும் ரதாரோஹண காலத்திலும் மற்றும் ஸ்தாநவிசேஷங்களும் இந்தப்படி நடக்கும் ப்ரஸாத விநியோகத்துக்கும் யதாசாஸ்த்ரமாகக் கார்யம் ப்ரஸாதமும் அமுது செய்யப் பண்ணின நம்பியாருக்கும் அன்னும் கைங்கர்ய பராய் பரிசாரக பாரான திருப்பதி ஸ்ரீவைஷ்ணவர்களுக்கும் ஆண்டு ... ஸ்ரீ ஸேனாபதி தூரந்தராருக்கு அருளப்பாடிட்டு ப்ரஸாத விநியோகம் ஸாதிக்கிற க்ரமத்தை அதிக்ரமித்து முன் வழக்கமென்று ஏகாங்கிகளுக்கு அரையர் கையிலே விநியோகம் ஸாதிக்கும்படி உடையவர் கல்பித்த கட்டளைப்படியே யானபின்பு, செங்கோல் தரித்தவனுக்கு அருளிப்பாடிட்டு நடக்கிறது. திருவரங்கச் செல்வனார் நித்யோத்ஸவங் கண்டருளும்போது ஸ்ரீசடகோபனும் செங்கோலும் இல்லாமையாலே திருவோலக்கமும் விநியோகமும் இல்லை. கோவணவர் பெரும் உள்துறை அதிகாரி கைங்கர்யங்களுக்கு விவரம்: ஆர்ய பட்டாள் வாசலுக்குள்ளே யிருந்துகொண்டு திருப்பவளவுபசாரமும் திருமேனி யுபசாரமும் ஆராய்ந்து திருமடைப்பள்ளியிலே உதயகாலத்திலே யதாபூர்வம் அமுதுபடி பருப்பமுது கறியமுது முதலானதுகள் வைத்து திருமடைப்பள்ளியிலேயிருக்கிறதை நாய்ச்சியார் பரிகரத்தைக்கொ

ண்டு ராஜோபசாரமாகத் தளிகைக்குப் பண்ணிவைத்து பால்காரரைக்கொண்டு பாங்காகப்பாலமுது திருத்தி, தொட்டிப்பால் தயிரமுதுமுதலானதுகளைத் திருப்பவளத்துக்கு இப்பாகப் பண்ணிவைக்கிறதும் ஊறுகாய் பச்சடி வடிதயிர் நெழுகறியமுதுகளை தத்தத் கைங்கர்ய பரரைக்கொண்டு நன்றாகப் பண்ணிவைக்கிறதும் திருப்பணியாரக்காரரைக் கொண்டு திருப்பவளத்துக்கு ம்ருதுவாய் ரஸமாய் ஹ்ருத்யமாய்ப் பண்ணிவைத்து அந்தந்தத் திருப்பணியாரங்களுக்கு வகாங்கியைக்கொண்டு நெய்யமுதுமுதலான ரஸவர்க்கங்களைத் தத்தத் காலங்களிலே விடவைத்து ஸந்நிதிக்கு ஏலம் சாம்ப்ராணி கற்பூரம் கஸ்தூரி முதலான த்ரவ்யங்களை விடவைத்து காலம்தப்பாமல் நாழிகைவட்டில் வாசலிலே அடிக்கடி நாழிகை கேட்டுக்கொண்டு அந்தந்தக் காலங்களிலே சுருளமுது முதலானதும் அமுது செய்யப் பண்ணிவைத்து காலோசிதமாக ஸுகந்தாதிகளையும் சலவை திருவாபரணங்களையும் சாத்திவைக்கிறதும் விசேஷோத்ஸவங்களிலே தம்மநுஷ்யராகக்கொண்டு திருமண்டபத்திலும் உபசாரமும் ஆராய்ந்து கொண்டு கோயிலிலே தானே வ்யாபிக்கிறது கைங்கர்யம். திருக்கொட்டாரத் ததிகாரி கைங்கர்ய விவரம்: உதயத்திலே திருக்கொட்டாரத்திலே யிருந்து கொண்டு ஒரு நாளையிலே படித்தனத்துக்கு அமுதுபடியிலே கல்லு நெல்லு இடிசல் கொழியலில்லாமல் ராஜ யோக்யமாக மூன்று வகைச் சோதனம் பண்ணிவைத்து, திருமடைப்பள்ளிக்கு அனுப்பிவைக்கிறதும் பருப்பமுது உளுத்தம் பருப்பமுது கடலை கோதுமை முதலான தவசங்களை அந்தந்தப்படி சோதிப்பித்து அந்தந்தப் பருப்புக்களை திருமடைப்பள்ளிக்கு அனு



ப்பிவைக்கிறதும் கொம்பஞ்சு கொடியஞ்சு கறியமுதுகளையும் தேங்காய் பழம் முதலானதுகளையும் அக்காரமும் திருவளக்காரரைக் கொண்டு திருக்கொட்டாரத்திலே சேர்ப்பித்து திருமடைப்பள்ளிக்கு அனுப்பிவைக்கிறதும் திருவிளையாட்டத்திலும் அக்காரமும் வன்மை குரகெல்லு முதலான தான்யங்களும் புளி முதலான ரஸவர்க்கங்களையும் கறியமுது முதலான பதார்த்தங்களையும் வந்தத்தை எறையாயிரங் கொண்டான் எண்ணெய் அறை முதலான ப்ரதேசங்களிலே அழைப்பித்துக்கொண்டு பதனம் பண்ணுகிறதும் திருப்பணியாரம் முதலானதுக்கு வேண்டின சாமான் திருமடைப்பள்ளிக்கு அனுப்பிவைக்கிறதும் பெருமாள் புறப்பட்டருளினால் ஆயிரம் ஆள் விடவைத்து கூலி கொடுத்து குடைகள் எடுக்கவும் கொடியாடை முதலானதுகளை திருவளக் காரரைக்கொண்டு விடவைக்கிறதும் ராத்ரி அந்த ஆள்களைக் கொண்டு பந்தங்கள் பாணை வித்தைகள் முதலானதுகளுக்கு ஆயிரம் ஆளுக்கும் படி கூலி கொடுக்கிறதும் நெல்லு குத்தி வைக்கிறதும் ஆனை குதிரை பசுக்கள் மாட்டுப்புறா மான்கள் கடம்பை மயில் கிளிகள் இதுகளுக்குத் தீனிபோடவைத்துப் போஷிக்கிறதும் பசுக்கடை யதிகாரிக்கும் பசுக்களைக் கறப்பித்துத் தலையிடுவார் கையிலே ஒப்புக் கொடுக்கிறதும் இதுகள் திருக்கொட்டார அதிகாரிக்குக் கைங்கர்யம். பல திருப்பணி அதிகாரி கைங்கர்யங்களுக்கு விவரம்: நித்யப்படி திருமதிள் கோபுரங்களிலே செத்தை குத்திவைக்கிறதும் ஜீர்ணோத்தாரணாதி திருப்பணிகளைப் பண்ணிவைக்கிறதும் நித்யோத்ஸவ விசேஷோத்ஸவங்களிலே வெளியாடை பிடிப்பிக்கிறதும் திருமண்டபங்களுக்கு முன்னே திருக்

காவணம் திருஆறல் திருக்காவணம் முதலானதுகளையும் பரிமாற வைத்து அலங்கரிக்கிறதும் பல திருப்பணி யதிகாரியினுடைய கைங்கர்யம். பல பட்டடை யதிகாரியும் சோழங்க நெல்லூர் பசுக்கடை அதிகாரியும் திருவிளையாட்டத் ததிகாரியும் உடன் சேதிபலபட்டரை அதிகாரி கைங்கர்யத்துக்கு விவரம்: திருவரங்கன் திருப்பதியில் கீழ்முகம் மேல்முகமான திருநந்த வனங்களை விசாரித்து திருமேனிக்குப் பாங்காக சிவந்த செங்கழுநீர் கஸ்தூரி அரளி மல்லிகை முல்லை செண்பகம் புண்டரீகம் மற்றுமுள்ள புஷ்பம் முதலான ஸுகந்தங்கள் ஸர்வ காலமும் உதவும்படி பருவம் பாவித்து மகாம்புஷ்ப கொடியஞ்சு கறியமுதுகளையும் கரும்பு முதலான ரஸ வர்க்கங்களும் உதவும்படிசேர்த்து அனுப்புகிறதும் ஸந்நிதியிலே அந்யாயம் அக்ரமங்கள் நடவாமல் விசாரிக்கிறதும் நிக்ரஹாநுக்ரஹமும் பண்ணிக்கொண்டு இருக்கை கைங்கர்யம். திருவிளையாட்டத் ததிகாரி கைங்கர்யங்களுக்கு விவரம்: திருவிளையாட்டச் சீர்மையில் பயிர் பருவம்பார்த்துப் பயிரிட வைத்துத்திருக்கொட்டாரத்துக்கு தான்ய தவசங்களும் ரஸ வர்க்கங்களும் மாவடை மரவடைகளில் பணங்களும் விசேஷ கார்யமாய் பழம் தேங்காய் இஞ்சி மஞ்சள் முதலான ஊறுகாய்க்கு உள்ள ஸாமக்ரிகளும் அனுப்பிவைக்கிறதும் பெருமாள் திருநாள்களிலே திருமண்டபங்களிலே திருப்பாவாடை முதலானதுகள் அமுது செய்தருளுகிறதற்கு அமுதுபடி பருப்பமுது முதலான ஸாமக்ரிகள் சேர்த்து அனுப்பி வைக்கிறதும். மற்றை விசேஷோத்ஸவங்களுக்குக் கோயிலுக்கு உப்பை ஊழியங்களும் வாழைகழுகு இளநீர் கரும்பு முதலான ரஸவர்க்க ஸாமக்ரிகள் அனுப்புகிறது கைங்கர்யம். பசுமந்தை யதிகா



ரிக்கு நடக்கிற விவரம். பசுக்களை நித்யமாக உசிதமானபடி போஷித்துக்கொண்டு அதிலே விடிவோரை பால்கறப்பித்து அந்த இடையன் கையில் கொடுத்து, பாலறையில் பால்காரர் கையில் ஒப்புக் கொடுக்கிறது கைங்கர்யம். ஏகாங்கிகளில் இருவர் கொட்டாரத்து அதிகாரியோடே கூட அந்தர்ப்பூதர். ஒருத்தர் ஸந்நிதி வாசலிலே ஏகாங்கி உள்துறை அதிகாரிக்கு அந்தர்ப்பூதர். ஒருத்தர் அத்யயநபாராகையாலே திருவிளையாட்டத்து மணியக்காரரிலே அந்தர்ப்பூதர். இவர்கள் தொழிலிருக்கும்படியாய் நாலு பேர் விரக்த ராகையாலே ஸ்வதந்த்ரரா யிருப்பார்கள். ஆக இப்படி அதிகாரிகளுக்கு எஜமானராய் ஸேநாபதி துரந்தரரா யிருக்கிற முதன் கொத்திலே செங்கோ லதிகாரியான முதலியாண்டான் ஸ்ரீ ஸேநாபதிக்கு அவயவ பூதரா யிருப்பர். இத்தப்படி நடந்துவந்தது. அத்தப்படி ராமாநுசனுக்குப் பெருமாளும் உகப்புடனே உபயவிபூதியும் ஸாதித்து தன் ஸூசகமான செங்கோலையும் ஸாதித்து உபய விபூதியுமுடையவர் என்று திருநாமம்ஸாதித்ததுமுதலாக உடையவரும் நிரங்குச ஸ்வதந்த்ரராய் உபய விபூதியிலும் சிறுமுறிசெலுத்திக்கொண்டு ஸந்நிதிபரிஜனங்களை இந்தகொத்தாயிருந்து பண்ணின கைங்கர்யங்களைப் பத்துக்கொத்திலேபெருக்கி, பத்துபரிஜனங்களுக்கும் நியாமகராகமுதலியாண்டானை செங்கோலதிகாரத்திலே நியமித்து தத்த்ரவ்ய காரணார்த்தமாகச் சோழனையும் ஆச்ரயிப்பித்து தான சாஸனமும் பண்ணிவைத்தார். முதலியாண்டான் காலந்தொடங்கி அந்த மர்யாதை இருநூறு ஸம்வத்ஸரம் ஸ்வதந்த்ரமாய்நடந்துவந்தது. துலுக்கவாணத்துக்குபின்பு கோவணவர் வரிசையிலே ஸ்ரீரங்க நாராயணஜீயரென்,

றும் பட்டர் உத்தமநம்பி சக்கராயர் என்றும் கந்தாடை
ராமாநுஜய்யங்கா ரென்றும் கொறட்டுமணிய மென்றும்
எளம் கேழ்வை என்றும் *இப்படி பலவிதமாய் நடந்துவரு
கிறது. செங்கோல் நீங்கலாக மற்றபேர்களுக்கு மர்யாதை
நடக்கிறது. திருப்பதியார் கொத்துக்கு விவரம்—கைங்
கர்ய வகை= திருமஞ்சனத்துடனே உள்ளே வந்து திரு
வணுக்கன் திருவாசல் குலசேகரன் படிக்குப் பிரம்பு
திருக்காப்பை உள்ளுநாள் நீக்கின உடனே திருவாசலை
யும் செப்புத் திருவாசலையும் தோதவத்தித் தூய்மறை
யோரான தர்மவர்மாவின் திருவீதியான திருநடைமா
ளிகை திருவலகு சேர்த்து அமுது மண்டபமும் திருவல
குசேர்த்து நாலுதிக்கும் ஸ்வாமிகள் ஸந்நிதியிலும் திரு
விளக்கு சோதித்து திருவாராதனத்துக்கு தட்டுதரி ஸந்
நிதி முன் திருக்குத்துவிளக்கு, அழகிய மணவாளன்
திருமண்டபத்து விளக்குக்கும் திரிபரிமாறி இதுகளுக்கு
நெய்யமுது ஏகாங்கியான சொன்பண்டாரிகையிலே அறை
யிலேபோய்வாங்கிக்கொண்டுவருகிறதும்கும்பாலத்திக்குத்
திரிபரிமாறி, கொளுத்திக் கொடுக்கிறதும் பொங்கல் பெரி
யவஸரம் க்ஷீரான்னம் ராத்தளிகை முதலான மங்களா
லத்தியோடேகூடினதற்குத் திருக்கொட்டாரத்திலே மா
வாங்கிக்கொண்டுவந்து உண்டை பிடித்துத் திரிவைத்து,
கொளுத்திக் கொடுக்கிறதும் தளிகைவந்தவுடனே திருத்
திரை பரிமாறி பாவாடை விரித்து அமுது செய்தருளு
கிறபோது பந்தம்பிடிக்கிறதும் ஓமத்துக்கு அரசன்போகி
றபோது பந்தம் பிடிக்கிறதும் செங்கோல் தரிக்க ஸ்ரீகார்
யம் ஆராய்கிறதும் அமுது விண்ணப்பம் திருமஞ்சனக்
கவி கொக்கவி விண்ணப்பம் தட்டிகவி விண்ணப்பம் செய்
கிறதும் பெருமாள் திருவணுக்கன் திருவாசலுக்குவெளி
யிலே திருமண்டபத்திலே எழுந்தருளினால்திருவாராதனத்



துக்குத் திருப்புகை நீட்டுகிறதும் திருப்பவித்திரத் திரு
நாளிலே முன்னேரத்தாவது திருவாரதனத்துக்கும் திரி
திரிக்கிறதும் திருக்கார்த்திகைக்கு ஆயிரம் பெரும் திரி
திரிக்கிறதும் நித்யநைமித்திக திருவாராதனங்களில்
இராமாநுஜனுக்குத்திரிபரிமாறிகொளுத்தி நீட்டுகிறதும்
திருக்கார்த்திகை சாயங்காலத்திலே திருமடைப்பள்ளி
யிலிருந்து நீபாராதநத்துக்குத் திருவிளக்குகளையெடுத்
துவருகிறதும் தளிகைக்குப் பண்ணுகிறதும் ஸந்நிதிக்
கு தளிகைஸமர்ப்பிக்கிறதும் அமுதுசெய்தபின்பு தளிகை
மாற்றி செலவழிக்கிறதும் அமுது மண்டபம் சோதிக்கிற
தும் பாவாடையாலே துடைக்கிறதும் சாயங்காலத்தி
லே நெய்யமுது பிடித்து வந்து ஆர்யபட்டாள் வாசலுள்
பட்ட மூன்று சுற்றிலும் திருவாசல்களிலேயும் ஸந்நிதியி
லேயும் திருவிளக்கு ஏற்றுகிறதும் பெருமாள் வெளியிலே
யெழுந்தருளினால் திருமண்டபங்களிலே திருவிளக்கு எத்
துகிறதும் திரும்ப உள்ளே எழுந்தருளுகிறபோது திருவ
ணுக்கன் திருவாசலுக்குள்ளே இரண்டு பந்தம் சுத்திரி
யாக எதிரே பிடிக்கிறதும் திருக்கார்த்திகை ஸ்ரீஜயந்தி
பொரி விநியோகம் பண்ணுகிறதும் நித்யநைமித்திகங்க
ளுக்கு ஸமித்து புல்லுகொண்டு வருகிறதும் திருப்பவித்
திரம் கட்டுகிறதும் உத்ஸவ பலிப்ரதானங்களுக்கு ஊழி
யம் பண்ணுகிறதும் கருடவாஹன பண்டிதருக்கு குடிநீர்
யால் ஆரோக்ய சாலைகளும் அலங்காரத்துடன் கொண்டு
வந்து நீட்டுகிறதும் திருப்பதி ஸ்ரீ வைஷ்ணவர் கைங்கர்
யம், நித்யோத்ஸவங்கள் பலிப்ரதானத்துக்குத்திருவரங்க
ச்செல்வனார் புறப்பட்டருளி அழகியமணவாளன் திருமண்
டபத்தில் எறியருளுகிறதற்கு கைவிளக்கு பிடித்துக்கொ
ண்டுவந்து திருமஞ்சுத்துவிளக்கு ஸமர்ப்பிக்கிறதும்இந்த

திருப்பதி ஸ்ரீ வைஷ்ணவர்கள் கைங்கர்யங்களிலே அக்ஷ
ய வருஷத்திலே துலுக்காணத்துக்குப் பின்பு தளிகை
க்குப் பண்ணுகிறதும் தளிகைமாற்றி செலவழிக்கிறதும்
பாவாடை விநியோகம் பண்ணுகிறதும் ஸ்ரீ பண்டாரத்
திலே சேர்ந்து இத்தனையும் திருப்பதியார் கொத்திலே
இணங்குகிறதுக்கு ஸ்தாபகமாக நித்யப்படியமுதுசெய்
கிறதுக்குத் திருக்காப்பு சேர்க்கிறதும் சேனைபதி துரந்த
ரான கோவணவருக்கு ப்ரஸாத ஸ்வீகாரம் பண்ணிவைக்
கிறதும் திருக்கார்த்திகை ஸ்ரீஜயந்தி பெரிய விநியோகம்
பண்ணுகிறதும் திருப்பாவாடையிலே அன்ன வாங்குகிற
தும் திருப்பாவாடை விநியோகத்துக்கு அருளிப்பாடிடுகி
றதும் வைத்துக்கொண்டார்கள். பிறகு திருமஞ்சனக்
கவி, திருவந்திக்காப்பு, தட்டிக்கு விண்ணப்பம், திருமண்
டபப் படியில் திருவாராதன காலங்களிலே திருப்புகை
நீட்டுகிறதும் தத்தத் கைங்கர்யங்களிலும் கால் கணக்
கிலேவைத்து அமுதுபடியை சோதித்த நீரை இறைக்கிற
தும் திருக்கார்த்திகைக்குத் திருமடைப்பள்ளியிலும் ஏ
ழு தீபம் கொண்டு, வரத்திலே ஒரு தீபம் உத்தமநம்பிக்கு
தான சாஸனம்பண்ணிக் கொடுத்து மற்றை ஆறு தீபங்
களும் சிலதுகளை தனித்தனியே செலவழித்தார்கள். விக்
ரயித்து தானசாஸனம்பண்ணியும் போருபடியாலே அதில்
பேர் இவர்களுக்குவந்ததில்லை. இதில்சிலபேர் உத்தமநம்
பி முதலான கோயிலுடையார் காலத்துக்குப்பின்பு பலத்
தினாலே சிறிது ஸ்வதந்த்ரங்களும் சிறிதுமரியாதைகளும்
நூதனமாகக் கல்பித்துக்கொண்டார்கள். இவர்கள்பேரு
க்கு விவரம்—மங்களாலத்தி உண்டையும் விசேஷவகை
திருமஞ்சனக்கவி ப்ரஸாதம் விண்ணப்பம் செய்தவுடனே
கள்வப்ரஸாதம்ஸாதிக்கிறது. திருப்பாவாடையில் அன்ன



ஸாதிக்கிறதும் திருக்கார்த்திகை தீபாராதனத்துக்கு
ஏற்றிக் கொண்டுவந்து கையிலேயும் தளிகை பண்ணின ப
தார்த்தங்களுக்குப் பணிப்போரும் இந்தப்பணிபெருக்கும்
உடையவர் கட்டளைக்குப் பின்பு ஒரு காலவிசேஷத்திலே
ஸ்தலத்தார் திட்டம் பண்ணி விகிதமும் திருமுகப் பட்
டயமாகப் பண்ணிவைத்துப்பற்றினார்கள். அதிலே ப்ரஸா
தித்ததும் பதர் போக்குநெல்லு நிலங்களுக்கு பதிலாக
நித்யம் ஏழு உருப்படி பணியாரம் பற்றினார்கள்: கால
விசேஷத்துக்குப் பின்பு ஸ்தலத்தார் சிலபேர் ப்ராபல்யத்
தாலே சேனைபதி துரந்தாருக்கு முந்தின அதிகஸ்வாதந்த்
ர்யங்களைக் கல்பித்து தாங்களும் ப்ரஸாதம் பணியாரங்க
ளும் நடக்கையிலே நெல்லும் பணமும் அதிகமாகப்பற்றி
சாத்துப்படி வளையம் ஸ்வதந்த்ரங்களும் கல்பித்துக்கொ
ண்டார்கள். தானதுவரையிலே, காணியாயிருக்கை தி
விர்ந்து கொத்து கைங்கர்யங்களைப் பிரித்து விக்ரயித்து
ஒவ்வொரு கொத்துக்கு அநேகம் நெல்லும் பணமும்
ப்ரஸாதம் பணியாராதிகளும் பற்றினார்கள். காலவிசே
ஷத்திலே திருக்கார்த்திகை என விளக்குக் கொளுத்தி
க்கொண்டு வந்தவருக்கு தீர்த்தம் சந்தனம் வரிசை அதி
கப்படி கல்பிதம். திருவாய்மொழி திருநாளிலே திருவ
ரங்கன் பாட்டுக்கு அருளப்பாடு திருப்பதியாருக்குப்பின்பு
நிற்கிறது. திருப்பணிசெய்வார் கொத்து கைங்கர்யத்துக்
கு விவரம்—ராஜமஹேந்த்ரன் திருவீதி சந்தனமண்டபம்
முதலான திருவீதிகளெல்லாம் திருவலகு சேர்த்து, திரு
நீர் பரிமாறுகிறதும் பெருமாள் புறப்பட்டருளினால் திரு
வீதிசோதனையும் உத்ஸவாந்தத்திலே திருப்பணிப்பூமாலை
விண்ணப்பஞ்செய்கிறதும் பெருமாள் கொடை கண்டரு
ளும் நாளைக்கும் விசேஷித்து மத்யாஹ்னத்திலேயும்

புறப்பாட்டிலேயும் திருநீர் பரிமாறுகிறதும் பெருமாள் எழுந்தருளி கொடவர் என்று அருளப்பாடு ஸாதித்தவுடனே திருமுன் இருபுறமும் இரண்டு கொப்பரையிலே கற்பூரம் முதலான பரிமளம் கூட்டி திருமஞ்சனம் பூரித்து அந்தப் பரிமளத்துவாசனை திருமேனியிலே காற்றுவீசும்படியாகச் சுருளமுது அமுதுசெய்தருளுகிற பர்யந்தம் உயர இறைக்கிறதும் எம்பெருமானார் ஸந்நிதி கைங்கர்யம் விசேஷித்து எம்பெருமானார் திருவீதியிலே ஸ்ரீவைஷ்ணவர்கள் திருக்கோவை கோத்து ஆழ்வார் திருவோலக்கமாய் இயற்பாவை அநுஸந்திக்க நியமித்தபின்பு தம்மை ஆஸ்ரயித்து இட்டு தாஸ்யநாமமும் ஆழ்வார்கள் திருநாமம்பெற்ற திருப்பணிசெய்வாரை அந்தத் திருவோலக்கத்துக்கு ஸந்நிதிப்போராக நியமிக்கையில் அந்தத் திருவோலக்கத்துக்குமுன்னே ஸமயசத்ரம் பிடித்து வருகிறதும் சந்தடி விலக்குகிறதும் ஆராவது அடைக்காய் பழம் தேங்காய் பணம்ஸமர்ப்பித்தால் ஸந்நிதிப்போராகவாங்கி, திருவோலக்கம் ஆனபின்பு பணத்தை ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு ஸமர்ப்பிக்கிறதும் பழம் தேங்காய் திரளாக ஸமர்ப்பித்தால் வாங்கி திருவோலக்கம் எழுந்தருளும்போது அந்தப்படியே பழம் தேங்காய் முதலானது சேர்த்து தாந்தாம்ஸந்நிதியிலேயெழுந்தருளி ஸேவாகாலம் ஸேவிக்கிற திருவோலக்கத்துக்கு தீர்த்தம் சாத்துப்படியும் சுருளமுதும் பழம் தேங்காய்விநியோகம்பண்ணுகிறதும் ஒருகால விசேஷங்களிலே தர்சன விஷயமாதல் கோயில் விஷயமாதல் ஸங்கேதம் கூட வேண்டினால் ஸமயசத்ரத்தை ஒரு ப்ரதேசத்திலே காட்டி அவ்விடத்திலே அனைவரையும் கூட்டுகிற கைங்கர்யங்களை இவர்களுக்கு உடையவர்மடம் திருமாளிகைகளிலே அந்த ஸ்ரீவைஷ்ணவர்க்கு முன்னே



ஜீயர்களுக்கும்பின்னே விநியோகாதிகள் கட்டளையிட்டருளினார். அநந்தரம் சகாப்தம் ஆயிரத்து இருநூற்றுத் தொண்ணூற்று மூன்றுக்குமேல் பிரமாதி ஸம்வத்ஸரத்திலே ஆழ்வார்களையும் ஆண்டாளையும் உத்ஸவர்களையும் த்ரிவிக்ரமன் திருவீதிக்குள்ளே அகளங்கன் திருவீதியிலும் ஆலிநாடன் திருவீதியிலும் எழுந்தருளப் பண்ணிவைத்தவநந்தரம் ஸுந்தரபாண்டியன் துலாபுருஷமண்டபத்திலே நம்மாழ்வாரும் திருமங்கைமன்னனும் மதுரகவிகளும் எழுந்தருளியிருக்கையில் பெருமாள் உத்ஸவங்களில் இயல் ஸேவித்து சாத்தினவுடனே ஆழ்வார்களுக்குத் தலைவரான நம்மாழ்வார் ஸந்நிதியிலே இயல்சாத்தின ஸ்ரீவைஷ்ணவர்களுக்குத் தீர்த்தமும் மதுரகவியான ஆழ்வார் திருவடி நிலையும் திருப்பணிப்புசெய்வார் ஸாதிப்பார். ஆழ்வார் திருவடி நிலைக்கு இராமாநுசனென்று திருநாமமானதும் இப்பதியிலே முன் ஆழ்வாரை எழுந்தருளப்பண்ணிக் கொண்டுவந்து திருவந்திக்குரவினது மதுரகவிகளாகையாலே ஆழ்வாரையும் திருவடி நிலையையும் எழுந்தருளப் பண்ணிவைத்து எம்பெருமானார் திருவடிநிலைக்கு மதுரகவிகளென்று திருநாமம் சாத்தியருளினார். அதுமுதலிந்தப்படியே நடக்கிறது. சகாப்தம் ஆயிரத்து இருநூற்றுத்தொண்ணூற்றேழுக்குமேல் நள வருஷம் பெரிய திருநாளிலே எல்லைக்கரையிலே திருப்பணிப்பு செய்வார் நிர்வஹித்தது முதலாக எல்லைக்கரையிலே திருப்பணிப்பு செய்வார்க்கு வேலேந்தியபெருமாள் தாஸரென்று அருளப்பாடு ஸாதித்து, ஸகல வரிசையும் ஸாதித்து நடந்து ஆனையேற்றம் நடந்துவருகிறது. காலவிசேஷத்திலே இயல் ஸ்ரீ வைஷ்ணவர்கள் காலதோஷத்தினால் திருப்பணிப்பு செய்வாரிடத்திலே அதிசங்கை பண்ணி இயலிலே யாராகிலும் ஸமர்ப்பித்தபணங்களைத் தாங்களே வாங்குகையில் தேங்காய் பழம் முதலானது திரளாக ஸமர்ப்பிக்கிறதை வாங்கி அவர்களுக்கு விநியோகம் பண்ணுகிறதையும் விட்டுவிட்டார்கள். இதன்பின்பு ப்ரஸாதம் பண்ணியாராதிகள் ஆழ்வார் திருவோலக்கத்திலே விநியோகம் பண்ணுகி

றது நூதனமாகையாலே திருப்பணிப்பு செய்வார்
அந்த விநியோகம் பண்ணுகிறதில்லை. இவர்கள் பேரு
க்கு விவரம்:—திருவாய்மொழித் திருநாளிலே மாத்ர
மாகத் திருப்பணி விண்ணப்பமானவுடனே தீர்த்தம் பரி
யட்டம் திருமாலை சந்தனம் சடகோபன் ஸாதிக்கிறதும்,
உடையவர் கல்பித்த திருப்பணிப்பு மாலை விண்ணப்பம்
செய்கிறதுக்கு அருளப்பாடு முதலானதும் உடையவர்
கல்பித்தார். சில காலத்துக்குப் பின்பு எல்லைக் கரை
யிலே அருளப்பாடிட்டுத் தீர்த்தம் சந்தனம் பரியட்டம்
திருமாலை ஆனை யேற்றம் முதலான வரிசை ஸாதிக்
கிறதும் இந்தத் திருப்பணிப்பு செய்வாருக்கு அக்ஷய வரு
ஷத்து துலுக்கவாணத்துக்குப்பின்புகாலவிசேஷத்திலே
ராயர் திருவரங்கன் திருப்பதிக்கு வந்து ஒரு உத்ஸவ
காலத்திலே பெருமாளைத் திருவீதியிலே ஸேவிக்க அந்த
விடத்திலே, ராயர், வாய் தம்பலத்தை உமிய திருப்ப
ணிப்பு செய்வார் பரிஹரித்து எடுத்து எறியக்கண்டு
கொட்டவரை நீரிப்படி செய்யலாமாவென்று கேட்க
அடியோங்களுடைய கைங்கர்யமென்று சொல்ல அப்பொழு
தே ராயர் கொட்டவரை நல்ல வார்த்தை சொல்லி கொஞ்
சம் த்ரவ்யம் கொடுத்து, திருவீதி சோதனைகைங்கர்யத்
தைத்தாம் வாங்கி தம் மனுஷ்யரைக்கட்டளையிட்ட படியி
னாலே அது முதலாகத் தாம்முடைய கைங்கர்யத்தில் பாதி
யான திருவீதி சோதனத்தை விட்டு சோதனத்துக்குப்
பேரான எட்டாந் திருநாளில் எல்லைக்கரையிலே ஆனை
யேற்றம் முதலான வரிசைகளைப்பற்றிக்கொண்டு அந்தத்
தொழில் தங்களுக்கென்கிறதற்கு ஸ்வெகமாக ராஜமஹேந்
த்ரன் வீதியிலேயும், குலசேகரன் வீதியிலேயும் திருநீர்
பரிமாறுகிறதும், துலுக்க வாணத்துக்குப்பின்பு கைங்கர்
யங்களை நிர்வஹிக்கமாட்டாமல் ஆழ்வார், ஆசார்யர் ஸந்
நிதி அதிகப்படி பரிகாரங்களை வைத்துக்கொண்டு ஆழ்
வாருக்குக் காணாபுதரான சாத்துமுறை வைஷ்ணவர்கள்
நித்யப்படி பரிகாரம் பண்ணும்படி தானமாகவும், க்ர
யமாகவும் ஆசார்ய ஸமர்ப்பணையாகவும் விட்டுவிட்டார்
கள். இக்கொத்துக் கைங்கர்யத்திலே ப்ரதானமான



திருமண் விண்ணப்பம் செய்கிற கைங்கர்யத்தையும் மற்ற
பாதிக் கொத்து கைங்கர்யங்களையும் வைத்துக்கொண்டு
அநுபவித்துவருகிறார்கள். இக்கைங்கர்யத்துக்கு ப்ரதா
னமானது திருப்பணிப்புமாலை விண்ணப்பமும் செய்கிறபடியி
னாலே திருப்பணிப்பு செய்வாரென்று வ்யவஹாரம் நடந்து
வருகிறது. உடையவர் ஸந்நிதி நம்பிமார் திருவாராத
னம் மாத்ரம் பண்ணுகிறது. கால விசேஷத்திலே அது
வும்விட்டு மார்கழி மாஸம் மாத்ரம் நடந்துவருகிறது.
பாகவத நம்பிமார் கொத்துக்குக்கைங்கர்ய விவரம்:—
கர்ப்பக்ருஹத்திலே திருவாராதன காலங்களிலே திருப்பு
கை நீட்டுகிறதும், திருமணி பரிமாறுகிறதும், ப்ரதமகடா
க்ஷத்திலேயும்; திருமுத்து விளக்குகிற ஸமயத்திலேயும்,
கஸ்தூரி திருமண்காப்பு ஸமயத்திலேயும் திருக்கண்ணாடி
ஸமர்ப்பிக்கிறதும் மதுவர்க்கம் வாங்கி நீட்டுகிறதும் நித்ய
ஸமாதிக ஸ்தபனங்களுக்குப் பாக்கு, வெற்றிலை, பழம்,
தேங்காய், வெல்லம் இது முதலான ஸவர்க்கங்களை
வாங்கி நீட்டுகிறதும், சேனைக்கால் மேலே யிருக்கிற கும்
பாரத்தியை எடுத்துநீட்டுகிறதும், பெருமாள்புறப்பட்டரு
ளிறுல் அடப்பங்கட்டுகிறதும், தோதவத்தித் தூய்மறை
யோர் கையிலே வாங்கி உடையவர் நம்பிமாருக்குக் கட்ட
ளையிட்டார். நிஜகைங்கர்யங்களுக்கு விவரம்:—எழியரு
ளப் பண்ணுகிறதும் திருக்கொடி கம்பத்திலே திருக்
கொடி யாழ்வாரை எழியருளப் பண்ணுகிறதும், திருக்
கொடி கம்பத்தடியிலே ஸ்ரீ கார்யஸ்தருக்குச் செங்கோல்
ஸாதிக்கிறதும், விசேஷ காலங்களிலே பெருமாள் ஸந்
நிதியிலே ஆழ்வார்களுக்கு அழுதுசெய்யப் பண்ணுகிற
தும், திருக்கார்த்திகைக்கு தீபஸ்தம்பத்திலேயேறி தீபா
ராதனம் கண்டருளப் பண்ணுகிறதும், நம்மாழ்வாருக்குத்
திருமுகப் பட்டயம் வாசகம் செய்தருளுகிறதும், உள்ளூ
ராருக்கும், ஸ்தானத்தாருக்கும் அருளப்பாடு ஸாதிக்கிற
தற்குத் திருவுள்ள மருளிச்செய்கிறது, கைங்கர்யமான
வுடனே காரிப்ரஸாதம் வாங்கிக்கொள்கிறதும் இது
பாஞ்சராத்ரஸித்தம். உடையவர் நியமநத்தாலே சங்க
முத்திரையிலச்சினை யெடுக்கிறதும், பேரிதாடனத்துக்கு

தேவதாவாஹநாதிஸ்லோகங்களைத் திருமுன்பே விண்ணப்பம் செய்கிறதும், புறப்பாட்டிலே ஸேனைமுதலியாருக்குப் பெருமாள் ஸாதிக்கிற திருமாலையைச்சாத்தி முன்சாத்தியிருந்த மாலைகளைக் களைந்து செங்கோலதிகாரிக்குச் சாத்துகிறதும், ஆர்யபட்டாள் வாசலுக்குள்பட்ட பெருமாள் நித்யஸந்நிதிகளுக்குத் திருவாராதனம் முதலாக அமுதுசெய்யப்பண்ணுகிறதும்; ஏகாயன சாகைக்கு அருளப்பாடு ஸாதித்தவுடனே ஒரு பஞ்சாதி விண்ணப்பம் செய்கிறதும், தங்களிலே வயோவ்ருத்தராயும், ஜ்ஞாநவ்ருத்தராயுமிருக்கிறவர் ஸ்ரீ பரமேச்வர ஸம்ஹிதாக்ரமத்திலே தீக்ஷை ஸாதிக்கிறதும் இது முதலானதுகள் கைங்கர்யம். இவர்கள் கைங்கர்யங்களுக்கு பேர் விவரம்.—திருவாராதநத்திலே ஒருவனையும் ஸ்தயன ஸாமக்ரியும் சாத்துப்படி தீர்த்த ஒகனார் சாத்தியருளினதும் திருக்கோமணியங்களும், கார்யம், ப்ரஸாதம், அன்னும், பெருமாள் புறப்பட்டருளும்போது திருவணுக்கன் திருவசலிலே அருளப்பாடு. இதுவும் கால விசேஷத்திலே திருவாய்மொழித் திருநாளிலே மாத்திரமாக ... [illegible]

பேரீதாடனத்துக்கு விண்ணப்பம் செய்தாருக்கு விண்ணப்பஞ்செய்தபின்பு சடகோபனை ஒருக்கால்ஸாதிக்கிறதும், முந்திப் பரியட்டம் முதலானதுகள் ஸாதிக்கிறதும் கல்பிதம். திருக்கார்த்திகை தீபஸ்தம்பாரோஹணத்துக்கு அநுதிக்கவிலி பரியட்டம் திருமாலை தீர்த்தம் சடகோபன் ஸாதிக்கிறதும், மஹோத்ஸவத்திலே ம்ருத்ஸங்க்ரஹணத்துக்கு [illegible]யமிக்கிற காலத்திலே ஒற்றைத் திருமாலையும், சந்தனமும், ஒருக்கால் தீர்த்தமும், ஒருக்கால் சடகோபனும் ஸாதிக்கிறது அநுதி. முக்கால் தீர்த்தம் ஸாதிக்கிறதும், வெள்ளைவகைச்சல் திருமாலை ஸாதிக்கிறதும், ஒருபிடி சந்தனம் கரைத்து சாத்து ஸாதிக்கிறதும், சிரோபூஷணத்தையுடைய சிரஸ்ஸுக்களிலே ஸ்ரீசடகோபனை ஸாதிக்கிறதும், கைங்கர்யபரில் ஸேநாபதி ஆச தாரான கந்தாடையாருக்கே உள்ளது. மற்றைப்பேருக்கில்லை. கால விசேஷத்திலே அவரவர்கள் கல்பித்துக்



கொண்டார்கள். நம்பிமாருக்கு உள்ளது, கார்யம் ப்ரஸாதம் அன்னும் பூஜாத்ரவ்யங்களும் விநா மற்றொன்றும் தேவையில்லாமலிருந்தது. கால விசேஷத்திலே இலங்கையைத் திருமுகப் பட்டயமாகச் சிலாலிகிதம் பண்ணின பின்பு அதிகப்படியாக இக் கைங்கர்யத்துக்கு நெல்லும், நிலங்களுக்குப் பதிலாகப் பண்ணியாரம் ஏழு உருப்படியும் அநுபவித்து கால விசேஷத்திலே இலங்கைப்படியின் கீழெழுபது வட்டமும் விழுந்தபின்பு ஸ்ரீ பண்டாரமாய் ... நான் ஆள் எண்ணி ப்ரஸாதம் நடந்து, க்ரமேண பூர்வஸ்வாதந்த்ரங்களெல்லாம் கல்பித்துக்கொண்டு அநுபவித்தார்கள். இதுவல்லாமல் முப்பது வட்டமும் நாளும் க்ரய விக்ரயமும்பண்ணி, தழுயீடுவார் கைங்கர்யத்தையும் கொண்டு அநுபவித்து விக்ரயித்து உள்ளூரார் கைங்கர்யங்களிலே சிலதுகளையும்; ஆஜ்ஞையேற்றமும், தானம் வாங்கி அநுபவித்தும் நடந்துவருகிறது அதுகளில் உள்ளூரார் கைங்கர்யம் லபித்த பின்பு செம்பொன் திருவாசல் பிரகாரத்துக்குள்ளே கோயிலாழ்வார் காவலும்புறப்பட்டருளில் உள்ளூராருடன்கூடியிருந்து திருமேனிக் காவலும் பண்டாரிகையிலே திருவாபரணப்பெட்டிகளை ஒப்பவைத்துக்கொண்டு திரும்ப ஒப்பக் கொடுக்கிறதும், திருவிருப்பிலே பழம் தேங்காய் முதலான காணிக்கையை உள்ளூராருடனே பாதி பற்றுகிறதும், தழுயீடுவார் கையிலே ஆஜ்ஞையேறி குடைபிடிக்கிற கைங்கர்யத்தை வையயனங்காதானம் வாங்கி சில நாளைக்குப் பின்பு முறைக்கார பட்டாசார்யர் திருநான் காரருக்குப் பின்னேயிருந்து குடை பிடிக்கிறதும் நடந்து வருகிறது. தோதவத்தித் தூய்மறையோரான உள்ளூரார் கைங்கர்யம்—ப்ராதக்காலத்திலே அலங்காரத் திருமஞ்சனத்துக்குத் திருவெண் சாமரம் பரிமாறுகிறதும், திருவணுக்கன் திருவாசல் முதலான இரண்டு வாசல் திருக்காப்பு நீக்கி, பஞ்சபாத்ராதிகளைச் சோதித்து வைக்கிறதும் சலவைகளை நீட்டி ஒப்பவைத்துக் கொள்கிறதும் சேர்த்தியில் அருளப்பாடு எடுக்கிறதும், திருவாராதன ஸமயத்திலே சாத்துப்படி பாரப்பெட்டி

திருவாபரணங்களை நீட்டுகிறதும், கஸ்தூரி திருமண் காப்பு நீட்டுகிறதும், திருவெண்சாமரம், திருமுத்துக் குடை பிடிக்கிறதும், தளிகை முதலான அலங்காரங்களுக்கெல்லாம் திருவெண் சாமரம் பரிமாறுகிறதும், அமுது செய்கிறபோது தளிகை யண்டையிலே நின்று குஞ்சம் பரிமாறுகிறதும், சாத்துப்படி சேர்த்துப் பரிமளங்கூட்டி ஸ்வாமிக்கு சாத்திவைத்து ஒப்பனைத்துக் கொண்டு செலவழிக்கிறதும், திருவாபரணங்கள் பட்டு பருத்திகள் சாத்திவந்து திரும்ப கருவூலத்திலே புகுலம் பண்ணுகிறதும், பெருமாள் தினம் உத்ஸவாதிகளுக்குப் புறப்பட்டருளி யேறியருளுகிறதுக்கு சொட்டை மொத்தை பீதாம்பரங்கள், கஸ்தூரி, திருமண்காப்பு நீட்டுகிறதும், சேர்த்தியில் திருமேனிக்காவலும், சேர்த்தியிலே செங்கோலதிகாரிக்கு பரியட்டங் கட்டி சந்தனம் கரைத்து ஸாதிக்கிறதும், சேர்த்தியில் உத்ஸவங்களுக்கு சந்தனம், அருவாணம், திருப்பணியாரம், விநியோகம் பண்ணுகிறதும் பெருமாள் சேர்த்தியில் புறப்பட்டருளினால் திருவணுக்கன், திருவாசல், திருக்காப்பு நீக்குகிறதும், நீக்கின வுடனே இரண்டு பக்கத்திலும் உபய சாமரம், குஞ்சம், திருவாலவட்டம், காளாஞ்சி, சொட்டைக் கத்தி, திருமுத்துக்குடை ஸேவிக்கிறதும், வெளியிலே எழுந்தருளி திருமண்டபங்களிலேயும், திருவந்திக் காப்புக்குத்திருவடி விளக்குவாருவியன் நீட்டி குடம்மாற்றுகிறதும், சேர்த்தியிலே விட்டு புறப்பட்டருளினது முதல் திருமண்டபத்திலே ஏறியருளுகிறவளவும் ஸ்ரீ சடகோபனை மாரிலே யெழுந்தருளப் பண்ணிக்கொண்டு ஸாதிக்கிற பேருக்குச்சாதிக்கிறதும், பெருமாள் திருமண்டபத்திலே யேறியருளி திருத்திரை நீக்கின வுடனே பெருமாளுக்கு வலது பக்கத்திலே நின்றுகொண்டு திருவாலவட்டம் பரிமாறிக்கொண்டு திருமேனிக்காவலா யிருந்து ஸேவிக்கவந்த பேர்களுக்கு, தீர்த்தாதிகள் ப்ரஸாதிக்கிறதும், அவ்விடத்திலே திருவாராதன காலத்துக்கு திருமடைப்பள்ளியிலும்; மது வர்க்கத்தை வாங்கி நீட்டுகிறதும், திருவாராதனம் முடிந்த வுடனே சத்ர சாம



ராதிகளும் நீட்டி கஸ்தூரி திருமண் காப்பு ஸமயத்திலே வளயம் நீட்டி மாற்றுகிறதும், பெருமாள் அமுது செய்தருளினவுடனே மங்களாலத்தி தட்டு மாற்றி, உடனே, செங்கோலதிகாரிக்கு செங்கோல்தவிர குடை வரிசைகள் ஸாதித்து ஸேவிக்கப்பண்ணி, திருவோலக்கத்திலே தீர்த்தாதிகள் ஸாதிக்கிறதும். ஸ்ரீ வைஷ்ணவர்களுக்கு அருளப்பாடு ஸாதித்து வர்ணாஸ்ரமானுகுணமாகவும், பெரிய நம்பி ராமானுஜமுடையாரென்று அருளப்பாடு ஸாதிக்கிறது. இரண்டாகாரமுண்டு.

இளநீர் அமுது செய்தருளுகிற காலத்திலே அமுது செய்தருளின இளநீரை யெத்திமாற்றி திருவோலக்கத்திலே வைக்கிறதும், அருவாணம் சாத்துப்படி கொண்டு வந்து செங்கோலதிகாரிக்கு முன்னே வைக்கிறதும், திருமண்டபத்திலும், உள்ளே யெழுந்தருளி ஏகாந்தமாகத் திருமஞ்சனம் கண்டருளுகிற காலங்களெல்லாம் சலவை சாத்துப்படி நீட்டுகிறதும், திருமஞ்சனங்களுக்கும் கொப்பரை திருமஞ்சனத்துக்கும், ஸுகந்தம் சேர்க்கிறதும் திருமேனிக்குபும்பும், வளையம், சலவை, திருக்குழல் மண்டலம், சங்கநிதி, பத்மநிதி, ஸஹஸ்ரதாரைத் தட்டும் கொடுக்கிறதும், இது முதலான ஸந்நிதியில் அந்தரங்க கைங்கர்யங்கள். இவர்களுக்கு அனுக்கவாணத்துக்குப் பின்பு இக்கைங்கர்யங்களைத் தாங்கள் பண்ணி ஒத்திருக்கமாட்டாதே சாத்துப்படி சேர்க்கிறதும்; திருமண்டபங்களுக்குப்பெருமாள் எழுந்தருளுகிறபோது கொப்பரைகள் உபகரணப்பெட்டி, திருவாபரணப்பெட்டி முதலானதுகளைக் கொண்டுபோகிறதும், ஸ்ரீ பண்டாரத்திலே சேர்க்கும் அந்தக்கைங்கர்யம், தங்களதென்கிறதற்கு ஸூசகமாக அதுகளைத் தாங்கள் கூடவிருந்து எடுப்பித்துக் கொண்டு சாத்துப்படி முதலானவை ஒப்புவைத்து அனுபவித்துக்கொண்டு வந்தார்கள். பின்பு கால விசேஷத்திலே ஸ்ரீ சடகோபனை யெழுந்தருளப்பண்ணி எல்லாருக்கும் ஸாதிக்கிறதும், பெரிய ஸந்நிதியிலே செம்பொன் திருவாசல், பிரமுத்திரைகளும் நம்பிமாருக்குக் கொடுத்து

விட்டார்கள். அது முதலாக செம்பொன் திருவாசலுக்
குள்ளே கோவிலாழ்வார் காவலும், விசேஷப்படிக்கு
திருவாபரணம் முதலானதுகளை உள்ளூரார் கையிலே
நம்பிமாரில், முறைக்காரர் வாங்கி பெருமாளுக்கு ஸமர்ப்
பித்து, திருமண்டபத்திலே திருமேனிக்காவலாயிருந்து
திரும்பி எழுந்தருளினபின்பு உள்ளூரார் கையிலே ஒப்
பக்கொடுக்கிறதாக நடந்து வருகிறது. பின்னையும் சில
நாளைக்குப் பின்பு உள்ளூரார் கைங்கர்யத்தைப் பண்ணி
பாதியைப்பிரித்து கருவுகலத் திருவாபரணம் கைங்கர்ய
மும் ஜயவிஜயான் திருவணுக்கன் திருவாசல் மிக
முத்திரையும் ஸந்நிதிபஞ்சபாத்ர வைதிகளைச் சுத்தி
பண்ணி நம்பிமார் கையில்ஸமர்ப்பிக்கிறதும், சாத்துப்படி
பரிமளம் கூட்டுகிறதும், புழுகுகாப்பு வடியிட்டு நீட்டுகிற
தும், திருப்பரியட்டம் சலவை நீட்டி வாங்கி ஒப்புக்கொள்
ளுகிறதும், மண்டபப்படி அருவாணத்துக்கு அடைக்கா
யிலை சோதித்து, ஸந்நிதியிலே ஸமர்ப்பித்து அமுது
செய்தருளப் பண்ணினபின்பு வாங்கி, திருவோலக்கத்
திலே விநியோகத்துக்கு செங்கோலதிகாரிக்கு முன்னே
வைக்கிறதும், விநியோகாநந்தரம் அருவாணங்கொண்டு
போகிறதும், அஞ்சனக்காப்பு வடியிட்டு ஸந்நிதியிலே
நம்பிமார் கையிலே ஸேநாபதி தூபந்தார் முகாந்தரமாக
ஸமர்ப்பிக்கிறதும், தத்தத்காலங்களிலே மங்களாலத்தி
தட்டு திருப்பதியார் கையிலே கொடுத்து திரும்ப வாங்
கிக்கொள்கிறதும், அமுது செய்தருளும் வேளையிலே நெய்
யமுது ஸமர்ப்பிக்கிற கிண்ணியை தழையிடுவோர் கையில்
கொடுத்து திரும்பிவாங்கிக்கொள்ளுகிறதும், ராத்ரி மிக
முத்திரையான பின்பு கருவுகலவாசலிலே காவலாகப்
படுத்துக்கொள்ளுகிறதும், பெருமாள் புறப்பாட்டுக்கு
ஏகாந்தத்திலே சொட்டைமொத்தை நீட்டுகிறதும், புறப்
பட்டருளினால், இடதுபக்கத்திலேயிருந்து சொட்டைபி
டித்து வருகிறதும், திருமண்டபங்களுக்குத் திருக்குத்து
விளக்கும், கொப்பரைகள், ஸந்நிதி உபகரணப்பெட்டி
திருவாபரணப் பெட்டிகளை ஸ்ரீ பண்டார மநுஷ்யாளைக்
கொண்டு எடுப்பித்துக்கொண்டு திருமண்டபத்திலே



பெருமாள் எறியருளினவுடனே ஸந்நிதியிலே அமர்த்தி
அவரவர்க்கு எந்த வேளையிலே பெருமாளுக்கு வே
ண்டுமான உபகரணங்களைக் கொடுத்து திரும்ப வாங்கி
ஒப்புக்கொள்ளுகிறதும் இதுமுதலான ஊழியங்களையும் த
ங்களுக்கு ப்ராதானமான ஊழியங்களையும் வைத்துக்கொ
ண்டு இதுக்குப்பெருமாள் ஸந்நிதியிலே ஏகாந்தத்திலே தீ
ர்த்தம், சடகோபன் அரைக்கொத்துக்குண்டான இக்கை
ங்கர்யம் பற்றிக்கொண்டு மற்றை ஊழியங்களை நாளிலே
சேர்த்து நாளைப்பிரித்தும், விக்ரயித்தும் கால விசேஷத்
திலே நிர்வாஹம் பண்ணமாட்டாமலும், சிலஊழியங்களை
யும் தானம் பண்ணினார்கள். இந்தக் கைங்கர்யம் பிரித்
தபடியினாலே, பண்டாரியென்று இக் கைங்கர்யத்துக்
கும் வ்யவஹாரம் நடந்துவருகிறது. ஆகத் தோதவத்
தித் தூய்மறையோரான உள்ளூரார் கைங்கர்யம்
அது அக்கவாணத்துக்குப்பின்பு இந்தக்கைங்கர்யம் நாநா
விதமாய் நடந்துவருகிறது. விண்ணப்பம் செய்வார்
கொத்துக்குக் கைங்கர்ய விவரம்—ப்ராதக் காலத்திலே
திருமஞ்சனத்துடனே அழகிய மணவாளன் திருமண்ட
பத்திலேயிருந்து வீணை ஸேவிக்கிறதும், திருவாராத
னந் தொடங்கி விண்ணப்பஞ்செய்வாருக்கு அருளப்பாடு
ஸாதித்தவுடனே திருநாமங்கள் ஸேவித்து, திருவாராத
னம் முடிந்தவுடனே அருளப்பாடு முன்னாகத் திருமுன்பே
நின்றுகொண்டு மூவாயிரத்தில் ஒரு பாட்டு ஸேவிக்
கிறதும் பெரிய அவஸரம் திருவாராதனத்திலேயும் ராத்ரி
திருவாராதனத்திலேயும் இந்தப்படி ஸேவிக்கிறதும், செ
ல்வர் சித்யோத்ஸவத்துக்கு அணியரங்கன் திருமுற்ற
த்திலே இசையும் ராஜமஹேந்த்ரன் திருவாசலிலே படி
யேற்றம் ஸேவிக்கிறதும், ராஜமஹேந்த்ரன் திருவீதியி
லே தென்மேற்கிலே வீணைஸேவிக்கிறதும், மற்றைப்படி
திருமஞ்சன காலங்களிலும், உலாவியருளும் காலங்களி
லும், உத்ஸவகாலங்களிலும் இசையுடன்பாடி படியேற்ற
ங்களிலே ஸேவிக்கிறதும், திருமொழித்திருநாள் திருவா
ய்மொழித்திருநாள்களிலே பட்டப்பேர் அருளப்பாடிட்டு
பட்டும் பருத்தித்தொங்கல்பரியட்டம் முதலான ஆழ்வார்

கள் வரிசைகளைப்பெற்று இசையுடனே மூவாயிரமும் அபி
நயத்துடன் அபிநயங்களை நாடகமாக ஸேவிக்கிறதும்,
மார்கழி மாஸம் முப்பது நாளும் பின்மாலை திருவாராத
னம் ஆரம்பித்தவுடனே திருப்பள்ளியெழுச்சி, திருப்
பாவை இசையுடனே ஸேவித்து, திருவாராதனம் முடிந்த
வுடனே, பட்டப்போராலே அருளப்பாடிட்டு, பட்டுப்பரு
த்தி முதலான பரியட்ட வரிசைகளைப்பெற்று திருப்
பாவை சாத்தின நாள்பாட்டையும் ஸேவிக்கிறதும், திருவஞ்
சலியும், ஸ்ரீ ராமநவமி ஸ்ரீ ஜயந்திகளிலும், பட்
டப்போராலே அருளப்பாடி முதலான வரிசைகளைப்பெற்று
நின்றுகொண்டு தாலேலோ பாட்டு ஸேவிக்கிறதும், பங்
குனி உத்திரத்திலே, ப்ரணயகலஹத்துக்கு ஆழ்வாருக்கு
க்கரணபூதராயிருந்து ஸமாதானத்துக்கு அருளப்பாடி
ஸாதிக்க, உத்தர ப்ரத்யுத்தரங்களாலே இருவரையும்
சேர்த்துவிடுகிறதும், த்வாதசாராதனை காலத்திலே
பெருமாள் கோயிலுடைய ஸிம்ஹாஸனத்திலிருந்து பட்
டப்போராலே அருளப்பாடுடன் வரிசைகளை ஸாதிக்க,
பண்டாரமும், கொள்ளிவிளக்கையும் இசையுடன் ஸேவி
த்துப் பரோபதேசம் பண்ணுகிறதும், திருப்பள்ளியோ
டத்திலும், திருத்தேரிலும், எம்பெருமானடியார்
மலப்பு ஸேவிக்க இசை ஸேவிக்கிறதும், இது முதலான
கைங்கர்யம். திருக்கல்யாணத்துக்குப்பின்பு ஒரு கால
விசேஷத்திலே அமுது செய்தருளுகிற ஸமயத்திலே தாங்
களே முன்னே புகுந்து ஸேவிக்கிறதும் தாங்கள் உண்டு
பண்ணிக்கொண்டார்கள். இவர்களுக்கு அஸாதாரண
மான வரிசை ஆழ்வார்களைப்போலே பட்டினிருத்தித்
தொங்கல் பரியட்டம் திருமுன் வழக்கென்று நாத
முனிகளுக்கு ஸாதிக்கிற விதிபோக வரிசையும் பட்டப்
போராலே அருளப்பாடிடுகிறதும், தொங்கல் பரியட்டம்
இவர்களுக்கே யல்லாமல் மற்றொருவருக்கும் இல்லை.
இவர்கள் கைங்கர்யத்தைப் பண்ணுகையாலே அமுத
னுக்கு நடக்கிறது குறை பேருக்கு நடக்கிறது நாத
னம். அரையரை பலவந்தமும் ஸ்ரீமந் நாதமுனிகள்
மருமக்கள் கிழையகத்தாழ்வான், மேலையகத்தாழ்



வான் இருவருக்கும் உள்ளதேயல்லாமல் அரையர் வெகு
மதி மற்றையொருவருக்குமில்லை. திருக்கரகக்கையார்
கைங்கர்யத்துக்கு விவரம். — அருணோதய காலத்திலே
கைவழி யறையிலும் குடம் வாங்கிக்கொண்டு ஆனை
மேலே அலங்கார திருமஞ்சனமும் கொண்டுவந்து பின்
னையும் ஒரு காலுக்கு எவ்வளவு தீர்த்தம் வேணுமோ
அவ்வளவு தீர்த்தமும் கொண்டுவந்து அறையிலே சேர்த்
துக்கொண்டு ப்ராதக்காலத்திலே திருவாராதனம் தொ
டுத்து திருவாராதன காலங்களெல்லாம் பஞ்சபாத்ரத்
திலே திருமஞ்சனம் பூரிக்கிறதும், திருமுத்து விளக்குகிற
காலத்திலே கலசப்பானை யெடுத்து திருமஞ்சனம் ஸமர்ப்
பிக்கிறதும் மதுவர்க்கம் வளையம் அமுது செய்தருளுகிற
தற்கும் எந்த எந்த வேளையில் அமுது செய்தருளினாலும்
அந்தந்த ஸமயத்திலே திருப்பவளம் மாற்றி திருமஞ்ச
னம் ஸமர்ப்பிக்கிறதும் நித்யப்படிக்கும் விசேஷமண்ட
பப்படிக்கும் பானகம் சேர்க்கிறதும் புறப்பட்டருளினால்
கலசப்பானைகொண்டு வெளியில் எமாறுமல் திருப்பவளம்
திருவடிகள் விளக்க ஸமர்ப்பிக்கிறதும் புறப்பாட்டுக்கு
வகச்சல் திருமாலையும் மற்றைக்காலங்களிலே திருமாலை
சேர்த்துஸமர்ப்பிக்கிறதும் திருமஞ்சன காலத்திலே திருக்
குழல் மண்டைத்துக்கு ஸாரம் சேர்த்து ஸமர்ப்பிக்கிறதும்
செங்கழுநீர் சிவந்த திருப்படுத்தாம வாஹனங்கள் சாத்
தும்படி சேர்த்துஸமர்ப்பிக்கிறதும் புறப்பாட்டிலே ஸேனை
பதியாருக்குத்திருமாலை ஸாதிக்கிறதற்கும் ஸந்நிதியில்
வெள்ளை வகச்சல் நீட்டுகிறதும் இந்தப்படி எம்பெருமா
னார் நியமனத்தினாலே இக்கைங்கர்யங்களைப் பண்ணிக்
கொண்டு வருமளவில் முதலியாண்டான் ஸேநாபதி துரந்
தராய் ஸ்ரீகார்யம் விசாரிக்கிறகாலத்திலே திருக்கார்த்
திகைத் திருநாளில் அழகிய மணவாளப்பெருமாள் திரு
மேனி அனல் உறையாமலும் சித்ரா பர்வத்துக்கு
சாயங்காலத்திலே திருஆறுக்கு எழுந்தருளும்போதும்
பர்வ சாந்தியாகவும் தம்முடைய கைங்கர்யமாகச் செங்
கழுநீர் புஷ்பத்தை யமைப்பித்துத் தாமும் ஸ்ரீ வைஷ்ண
வர்களுமிருந்துகொண்டு திருக்கரகக்கையார் திருக்கை

தம்சாகாத்யாபகர்களையும் க்ரமமாக இதிஹாஸம் ஸ்ரீரங்க மாஹாத்ம்யம் ஆச்வலாயந ஸூத்ரம ஆபஸ்தம்பஸூத்ரம் போதாயந ஸூத்ரம் மீமாம்ஸா ஸூத்ரம் சாரீரகமீமாம்ஸை ஸூத்ரம் வ்யாகரணம். இயல் ஆளவந்தார் ஸ்தோத்ரம் ஸ்ரீ பாஷ்யம் கீதாபாஷ்யம் கத்யத்ரயம் பஞ்சாங்கம் இதுகளை வேதத்தோடே கூட சுக்லயஜுஸ்ஸாம சந்தோஸாமம் க்ரமமாக முன்னே வேதங்கள் புராணம் இதிஹாஸம் ஸ்தலமாஹாத்ம்யம் ஸ்தோத்ரங்கள் இதுகளை அவரவர்கள் விண்ணப்பம் செய்கிறதும், திருமண்டபங்களிலே ஸ்தானத்தார் அருளப்பாடிட இவர்கள் க்ரமமாக விண்ணப்பஞ்செய்து பரிசாரகர் வட்டிலிலே சமர்ப்பிக்கிறதும் அலங்காரத் திருமஞ்சன காலத்திலே பட்டாளுக்கு அருளப்பாடு ஸாதித்தவுடனே புருஷஸூக்தம் ஸேவிக்கிறதும், திருவத்யயனத் திருநாளிலே இந்த க்ரமத்திலே இயல் நீங்கலாக நித்யம் சேர்த்தியிலே பெரிய அவஸரம் திருவாராதனமண்டபத்திலே தொடங்கி, பெருமாள் புறப்பட்டருளி புராணத்தை விண்ணப்பஞ்செய்த வுடனே ஸந்நிதியிலே தீர்த்தமும் பட்டும் பருத்தியும் கன்யாஸாதமும் ஆர்ஜைத் திருமாலையும் வினயம் ப்ரஸாதமும் ஸ்ரீ சடகோபனும் ஸாதித்து தம் ப்ரஸாதத்தையும் ஸாதித்து ஸகல பரிஜனங்களுடனே வீட்டிலே விட்டுவிட்டு வொர்சொல்லி கொவணரை நியமித்தருள ஸகல பரிஜனங்களுடனே வீட்டிலே விடுகிறது வெகுகாலமாக நடந்துவருகிறது. உடையவர் காலம் முதலாக கொத்து நிர்ணயம்பண்ண முன்பு இதுகளெல்லாம் பெரிய கோயில் நம்பி புரோஹிதராய் பண்ணின கைங்கர்யங்கள். பிரித்து தத்தச்சாகாத்யாயிகளாய் தம் திருவடிகளை யாச்ரயித்த முதலிகளுக்கு ருக்வேதம், யஜுர்வேதம், ஸாமவேதம், சந்தோஸாமம், அதர்வணவேதம், சுக்லயஜுஸ்ஸாமம், ஏகாயந சாகை, மீமாம்ஸா ஸூத்ரம் சாரீரகமீமாம்ஸா ஸூத்ரம் ருஷிபுராணம், போதாயநஸூத்ரம், ஆச்வலாயநஸூத்ரம், ஆபஸ்தம்பஸூத்ரம், வ்யாகரணஸூத்ரம், ஸ்ரீரங்கமஹாத்மியம், இதிஹாஸம், ஆளவந்தார் ஸ்தோத்ரம்,



இதுகள் சிலகாலம் நடந்ததற்குமேல் ஸ்ரீபாஷ்யம் புறப்பட்டருளின பின்பு ஸ்ரீபாஷ்யம் ஸ்ரீகீதாபாஷ்யம் கத்யத்ரயம் இம்மூன்றும் நடப்பித்துக்கொண்டு வந்தவிடத்திலே பெரியகோயில் நம்பி ஆழ்வானுக்கு தானசாஸனம் பண்ணிக்கொடுத்த பௌரோஹித்யத்துக்கு அநுமானம் பஞ்சாங்கமும் தத்பலமான புராணகைசிக ப்ரஹ்மரதவரிசைகளும் ஆழ்வானுக்கே நடத்தி மற்றைக் கைங்கர்யங்களை ஒவ்வொருத்தருக்கு ஒவ்வொரு கைங்கர்யமாக நடத்தி யருளினார். ஆகையால் கொத்திலே சேராமல் திவ்ய தேசவாஸியாயிருந்து பௌரோஹித்யத்தை நிர்வஹித்துக்கொண்டிருந்த பெரிய கோயில் நம்பி கைங்கர்யத்தை அனேகம்பேருக்கு ஸாதித்து கொத்திலே சேராமையாலே பட்டாள் கொத்தென்று வ்யவஹாரம் நடந்துவருகிறது. உடையவருக்குப் பின்பு பட்டர் தர்சனம் நிர்வஹித்தபடியினாலே அவர் அருளிச்செய்த ஸ்ரீ குலசேகரன் திருவீதியில் குலோத்துங்கச்சோழன் திருமண்டபத்திலே எழுந்தருளின உடனே சாத்துகிறதும், பள்ளியாழ்வான் கோயில் கலஹத்துக்குப்பின்பு எல்லைக்கரையிலே தண்டாகாரமாக உபநிஷத் பாராயணம் பண்ணுகிறதும் இது முதலானதுகள் கைங்கர்யம். இதுக்கு வரிசை வெகுமானங்கள். திருவாய்மொழித் திருநாளிலே அத்யயனாரம்பத்திலே சேர்த்தியிலே குலோத்துங்கச் சோழன் மண்டபத்திலே ருக்வேதாதிகள் சாத்தின உடனேயும் அந்தக்கைங்கரியபரருக்கு தீர்த்தம், கன்வ ப்ரஸாதமும், கரையாமல் சந்தனமும், தீர்த்தமும் ஸ்தானத்தார் கையாலே ஸாதிக்கிறதும். அருளப்பாடு கைசிகபுராணம் என்று அருளப்பாடு ஸாதித்தஉடனே கையிலே ஸஞ்சிகையைப் பிடித்துக்கொண்டு வர ஆர்ய பட்டாள் கொத்துக் கைங்கர்ய விவரம்.— திருவரங்கேசனார் திருவாய் மலர்ந்து, செய்யும் தொழிலைக் கூறு செய்தருளின வைசந்தரம் மூன்றாந் திருச்சுற்றிலே தெற்கு வாசலுக்குள்ளே காவல் காக்கிறதும், அதுக்குள்ளே கஜைபரிமாறியிருக்கிற திருவணுக்கன் திருவாசலுக்கு வெளியிலே கருவுகலந் தவிர இரண்டு திருச்சுற்றிலும்

இரவும்பகலும் பந்தம்பிடித்து போக்குவரத்தைச் செய்து
ஒப்பனைக்கிறதும் பெருமாள் தோளுக்கினியானிலே
எழுந்தருளி திருமண்டபத்திலே எழுந்தருளினால் தோளுக்
கினியான் காவலும் திருவத்யயனோத்ஸவ காலங்களி
லும் மற்றும் உலாவியருளி உள்ளே யெழுந்தருளுகிற
பர்யந்தம் பின் தண்டு பிடித்துக்கொண்டு உள்ளே தண்டு
ஏறுகிற பர்யந்தம் ராத்ரி ஆர்யபட்டாள் வாசல்க
ளும் ராஜமஹேந்த்ரன் வாசல்களும் ஆக நாலு வாசல்க
ளும் பெருமாள் குடிநீர் பாலமுது செய்தபின்பு பீக முத்
ரை பண்ணிக்கொண்டு ஆர்யபட்டாள் வாசல் கொட
ளியிலே படுத்து இருக்கிறதும் மற்றை நாள் திருக்கா
க்கையார் கைங்கர்யத்துக்கு வருகிறபோது திருக்
காப்பு நீக்கி ஒரு திருக்காப்பு நீக்கி யிருக்கிறதும். இப்
படி யிருக்குங் காலத்திலே இந்த ஆர்யபட்டாளுக்கு
அதிசங்கையுண்டாய் தங்கள் காவலுக்கு ஒரு இலச்சினை
யும் இடாமலிருக்கக் கூடாதென்று இருக்கிற காலத்
திலே சில நாளைக்கு பின்பு உடையவர் மேல் நாட்டுக்கு
எழுந்தருளின உடனே க்ரிமி கண்ட சோழன் பட்டுப்
போய் கோயிலும் அராஜகமாயிருக்கிற சேதியைக்கேட்டு
க்ரிமிகண்டன் புத்ரனான குலோத்துங்கச் சோழனும்,
சேரனும், பாண்டியனும் கோயிலுக்கு அந்த விடத்திலே
ஆர்யபட்டாள் திருக்காப்பைச் சேர்த்துக்கொண்டு
அவர்கள் மூன்று பேரையும் உங்கள் மூன்று பேர் முத்
ரையும் எங்களுக்குக் கட்டளையிட வேணுமென்று
கேட்க, சேர சோழ பாண்டியனும் ஸம்மதித்து பெரு
மாளை ஸேவித்து ஸ்தலத்தாரையும் கூட்டி ஆர்ய பட்
டாளை யழைத்து தங்கள் மூன்றுபேர் முத்ரையும் ராஜ
முத்ரையாக ஆர்யபட்டாள் வசத்திலே கொடுத்து
'மின்னிட்டோம் வில்லுமிட்டு வேங்கை புடையாளம்
தானிட்டோம் இம்மூவருக்குமே' என்கிறபடியே சென்
டும் கையிலும் வில்லும் வேங்கைப்புலியும் அங்கிதம்
பண்ணி முத்ரை மோதிரத்தைக் கொடுத்து எம்பெரு
மானையும் அழைப்பித்தார்கள். அது முதலாக ஆர்ய
பட்டாள் முத்ரையை தங்கள் காவலுக்கு ரக்ஷையாக



யிட்டுக்கொண்டுவருகிறார்கள். உடையவரும் திரும்பி யெ
ழுந்தருளி க்ரிமிகண்ட புத்ரனை முதலியாண்டான் திரு
வடிகளில் ஆச்ரயிப்பித்து கோயிலையும் தானமாக சிலா
லிகிதம் பண்ணி தாரைவார்ப்பித்து முன்போலே ஸ்ரீகார்
யம் பண்ணி நிர்வஹிக்கும்போது இந்த முத்ரை ப்ரஸங்
கத்தை உடையவரும் ஆண்டானும் கேட்டருளி கோயி
லிலே ராஜ முத்ரைக்கு ப்ரஸக்தி யில்லாவிட்டாலும்,
மூன்று பேர் முத்ரை அங்கிதமா யிருக்கையாலும்;
கோயிலுக்கு ரக்ஷை யென்று அங்கீகரித்து அதுமுத
லாக நாலு முத்ரையும் செலுத்திவைத்தார்கள். அவர்
கள் பேருக்கு தாஸநம்பி கொத்து கைங்கர்ய விவரம்—
பூர்வம் புண்டரீகர் பாகவத ப்ரவணராய் திருவெள்ளறை
முதலான அனேக திவ்ய தேசங்களிலே புஷ்பகைங்கர்
யம் பண்ணிக்கொண்டிருந்து திருவரங்கன் திருப்பதிக்கு
வந்து அனேக திருநந்தவனங்களை ஸமர்ப்பித்து புஷ்ப
கைங்கர்யம் பண்ணி வருகையில் திருநந்தவனம் ஸமர்ப்
பிக்கிறதும்,பெருமாளுக்குத்திருவணுக்கன் திருவாசலுக்
குள்ளே வெளியிலே திருமுன் பந்தம் பிடிக்கிறதும் உத்
ஸவாதிகளுக்கு சேனை முதலியாரையும் தச மூர்த்தி
களையும் ஸ்ரீபாதம் தாங்குகிறதும், தாஸரிப் பந்தம் பிடிக்
கிறதும், யதாக்ருதியாகவும், பெரிய திருவாய் கட்டுகிற
தும், ஸத்தாபரண சப்ரம் கட்டுகிறதும் அழகிய மணவா
ளப் பெருமாளுக்கு ஸத்தாபரண வகைச்சல், கிளிமாலை,
கிளிச்செண்டு, தண்டை மாலை, கொத்து மாலை, குட
மாலை இக்கைங்கர்யங்கள் செய்யுமளவில் தீர்த்தம் சாத்
துப்படி பரியட்டம், உத்தமமாலை ஸாதிக்கிறதும், நாய்ச்சி
யார் ஆழ்வார் உடையவர் இவர்களுக்கும் கைங்கர்யம்
நடந்துவருகிறது. இப்படி நடக்குமளவில் சில காலத்
துக்குப் பின்பு அதிகப்படியாயும் மர்யாதை நடந்துவரு
கிறது. ஏகாங்கிகளுக்குக் கைங்கர்ய விவரம்—ஒருத்தர்
திருவணுக்கன் திருவாசல் திறந்து திருமஞ்சனம் வந்து
கடாக்ஷித்த பிற்பாடு, யானை,குதிரை, கபிலை, கன்னிகை
முதலானபெருக்கு அழகிய மணவாளன் திருமண்டபத்
திலே காத்திருக்க அமுது மண்டபத்து முன் திருத்

திரை நீக்கி கடாக்ஷித்தவுடனே திருப்பணிமாறுகிறதும், திருவாராதனம் ஆரம்பித்த காலத்திலே ஒற்றைத்திருக்காப்பைச் சேர்த்து காத்து இருக்கிறதும், அமுது செய்தருளினபின்பு திருவணுக்கன் திருவாசலிலே கணையைப் பறிமாறி யதாயோக்யமாக ஸேவா ஜனங்கள் அண்டையிலிருந்து ஸேவா ஜனங்கள் காணிக்கையேற்று ஸேவிக்கப்பண்ணுகிறதும், திருவாராதனம் முதலானதுகளிலே கைங்கர்யபரரை ஒழிய மற்றைப்பேரை உள்ளே விடாமல் காத்திருக்கையும் அழகிய மணவாளன் திருமண்டபத்திலே எழுந்தருளும்போது ஸ்தானத்தார் இரண்டுபேரும் வைஷ்ணவனுக்கு என்று ஸம்போதித்தால் அடியேனுக்கு என்று கேட்டு எச்சரிக்கையை இட்டித்துச் சொன்னவுடனே ஸாவதானமாக ஒருத்தரையும் திருத்திரைக்குள்ளே போகவொட்டாமல் காத்திருக்கிறதும், ராத்ரி திருமேனிக் காவலாக திருமண்டபத்திலே படுத்திருக்கிறதும் கைங்கர்யம். மற்றையொருவருக்கு வ்யஞ்சன அறையில் திருமஞ்சனத்துடன் வந்து வலம், சாம்பிராணி, நெய், வெல்லம் முதலான சாமக்ரிகளையும் சந்தனம், கற்பூரம், குங்குமம் கஸ்தூரி முதலான ஸுகந்தங்களையும் நித்யப்படி விசேஷப்படி முதலானதுகளுக்கு விடுகிறதும் இந்த சாமக்ரிகளையும் சேர்ப்பித்துக்கொண்டு பதனம் பண்ணுகிறதும் கைங்கர்யம். சாத்தாத முதலிகளுக்குக் கைங்கர்ய விவரம்.—உத்ஸவங்களிலே திருமண்டபங்களுக்கு நித்யப்படி அழகிய மணவாளன் திருமண்டபத்துக்குப் புஷ்பாலங்காரம் பண்ணுகிறதும் புறப்பாட்டுக்குத் திருமாலைசேர்த்து ஸமர்ப்பிக்கிறதும் புஷ்ப விருஷ்டி பண்ணுகிறதும், தூப கலசம் இரண்டு, வரிசை இரண்டு, அடுக்கு உபியன் இரண்டு, எரிபாவாடையிரண்டு தங்கப்பந்தம் எட்டு, வெள்ளிப்பந்தம் இருபது இவைகளை ஸேவிக்கிறதும், ஆழ்வார்களை யெழுந்தருளப்பண்ணுகிறதும், இயல் திருக்கோவைக்குப் பின்னே கைகட்டிக்கொண்டு பின்னடி ஸேவிக்கிறதும், ஸமய ஸங்கேதங்களிலே இராமானுச அருவாளையறிந்து சீயாள் ஸ்ரீ வைஷ்ணவர்களுக்குத் திருமேனிக்காவலாயிருக்கிறதும் கைங்



கர்யம். வேத்ரபாணிகளான திருநாமதாரிகளுக்குக் கைங்கர்யம்—இரண்டுஇரண்டுபொன்னுத்தடியும் இரண்டு வெள்ளித்தடியும், இரண்டு தலைவளைச்சல் பிரம்பும் பிடித்துக்கொண்டு பெருமாள் புறப்பட்டருளினால் ஸந்நிதியிலேயும் ஸ்ரீ சடகோபன் எழுந்தருளப்பண்ணுகிறதற்கு முன்னேயும் சந்தடி விலக்குகிறதும், அழகிய மணவாளன் திருமண்டபந்தவிர மற்றைத் திருமண்டபங்களிலேயும் பெருமாள் எழுந்தருளினவுடனே திருத்திரையண்டையிலே இருபுறமும் காத்திருக்கிறதும், தளிகை வந்தவுடனே முதல் திருத்திரை பரிமாறின வளவிலே உள்ளேயிருக்கிற சந்தடியைப்போக்கி உள்ளேசோதித்து வெளியிலே திருத்திரைத் தலையிலே இருந்து தளிகையை உள்ளேவிட்டு காத்திருக்கிறதும், அமுது செய்தருளின திருவோலக்கத்துக்கு எழுந்தருளுகிற ஸ்ரீ சடகோபனுக்கு முன்னே சந்தடி விலக்குகிறதும், எச்சரிக்கை சொல்லிக்கொண்டு முன்னே வருகிறதும் திருப்பாவாடை விநியோகத்துக்கு அருளப்பாடு ஸாதிக்கப் பெற்றவர் போக மற்றைப்பேர்களை யதாயோக்யமாக விநியோகத்துக்கு விடுகிறதும் பெருமாள் ஏறியருளும்போது ஸ்தானத்தார் வேத்ரபாணியென்று ஸம்போதித்தவுடனே அய்யாவென்று ப்ரத்யுத்தரம் சொல்லி எச்சரிக்கையென்று இருக்கால் சொன்னவுடனே மஹாப்ரஸாதமென்று ஸாவதானமாகத் திருமலைக்கு அருளப்பாடு ஸாதிக்கிறபர்யந்தம் அர்ச்சகர் முதலுள்ளேபோகவொட்டாமல்காத்திருக்கிறதும் புறப்பட்டருளினவுடனே ஜய சப்தங்களாலே கைவாரம் பண்ணுகிறதும் திருவந்திக்காப்பு இசை தொடக்கம் முதலான விசேஷங்களிலே சந்து அழுந்துகிறதும் திருமொழித் திருநாளிலே கட்டியம் விண்ணப்பம் செய்கிறதும் பெருமாள் திருவோலக்கத்துக்கு சந்தடி விலக்குகிறதும் கைங்கர்யம். ப்ராஹ்மணன் கொத்து விவரம்.—முதல்கொத்து கோவணவர். இரண்டாங்கொத்து திருப்பதியார். மூன்றாங்கொத்து கொடவர். நாலாவது பாகவத நம்பிமார். ஐந்தாவது உள்ளூரார். ஆறாவது தழையிடுவார். ஏழாவது திருக்கர

ழுறியும் வாங்கி திரும்ப நடக்கையில் வண் சடகோப
தாஸனை பாண்டியப்பிள்ளை அவனுக்குப்பிறகு அருளப்
பாடு பிடிக்கிறதில்லையென்றுசொல்ல அப்படியே அருளப்
பாடு சடகோபதாஸனுக்கே ழுந்தி ஸாதிக்கையில் சிலா
லிகிதங்களிலும் ஸ்தல ஸம்ப்ரதி வண்சடகோப தாஸன்
பேர் முன்னேயும் வடகரைகிராமத்தில் உள்நாட்டுக்கணக்
கனுக்கு அழகிய மணவாள ப்ரியன்பேர் பிந்தியுமாக லிகி
தம் பண்ணினதுமுண்டு. சிலாலிகித மெழுதுமிடத்தில்
வண்சடகோபதாஸன் தான் மறித்து தடைபண்ணுகை
யில் பல துர்ப்பலமாக சிலாலிகிதங்களிலே முன் வெள்
ளாழனை பல்லவன் விழுப்பரையன் மகனை அழகியமண
வாள ப்ரியனென்று லிகிதம் பண்ணினதும் ஸ்தலத்திலே
ஆசார்ய புருஷர்களில் பட்டர் ஜீயர் உத்தமநம்பி இவர்
கள் பலத்து நடந்தகாலத்திலே கணக்கனுக்கு ஸ்ரீவைஷ்
ணவ ப்ரியனென்று பேர் நடந்ததும். அனந்தரம் கால
விசேஷத்திலே ராசகா பலவந்தத்திலே துறைவழி
யெல்லாம் கணக்கு எழுதவும் குல்லாவிட்டு கோலம் காட்
டவும் முன் வெள்ளாழனை கணக்கன் போல முதலிலே
அருளப்பாடு சாதிக்கவும் பண்ணிக்கொண்டு கூர நாரா
யண ஜீயர்பேராலே பரம்பரையாய் அருளப்பாடு பட்ட
மிட்டுக்கொண்டு நடந்துவருகையில் ஸ்ரீ ரங்கநாராயண
ஜீயரென்று சிலநாளைக்குப்பின்பு ஸ்ரீரங்கநாராயண ஜீயர்
பேராகையில் ஸ்ரீரங்கநாராயண பிரானென்றுமுன்னிருந்த
வெள்ளாழன்பல்லவன்விழுப்பரையனை வகையில் இருந்த
முன்னோனையும் கூட ஒக்க லிகிதம்பண்ணி அன்றுமுதல்
ஸ்ரீ ரங்கநாராயண பிரானென்று நடந்துவருகிறது. கரு
வூலம் கணக்கு இருவர் வகைப்பேர் மனுஷ்யனாக ஸ்தல
ஸம்மதியிலே ஒரு ப்ராம்மணன் எழுதிவருவன். அனந்
தரம் அறிய நயனென்று ஒரு வெள்ளாழன் எழுதிவந்
தான். அவன் வர்க்கத்திலே தோஷ த்ரோஹம்
நடந்து அவனுடைய சம்மதமில்லாமல் ஸ்ரீ பண்டாரத்
திலேவிழுந்த வனந்தரம் இருவர் கைப்பேரையும்தேசாந்
தரத்திலும் கொண்டுவந்து அந்தந்த ஸ்தானத்திலே
சேர்ப்பிக்கிறதும் பெருமாள் வெளியிலே புறப்பட்டருளி



னால் பரிகரங்களுடன் காத்துக்கொண்டிருக்கிறதும் திரு
விடையாட்டத்திலே பலாதிகள் சேதமாகாமே காத்
திருக்கிறதும் விரோதி நிரஸநம் பண்ணுகிறதும் திருக்
கொட்டாரத்துக்கு தான்யாதிகள் கொண்டுவந்து சேர்க்
கிறதும் இப்படி யிருக்கையில் திருவெள்ளக்காரரே யல்
லாமல் மற்றைத் தலையாருக்குமில்லை. பன்றியாழ்வான்
கோயில்கலகத்துக்குப்பின்பு அகளங்கள் திருவீதிமுதல்
கொண்டு தலையாரிக்கும் பின்னையும் சில காலத்துக்குப்
பின்பு கொல்லைச் செவுக்கமும் கண்டாயிற்று. அஞ்சாங்
கொத்தான கம்மாளருக்குள்ளே சில்ப்பாசாரிக்கு கைங்
கர்யம்.—த்வஜபடம் எழுதுகிறதும் திருமண்டபம் சித்தி
ரங்களை எழுதுகிறதும் ஜீர்ண கோபுராதிகளை ஜீர்ணோத்
தாரணம் பண்ணுகிறதும் விக்ரஹாதிகளையெறி யருளப்
பண்ண வேண்டிய காலத்திலே எறியருளப்பண்ணுகிற
தும் கூட விமானம் செங்கல் பணிதி சாத்திப்பணிதியும்
சித்திரம் பண்ணுகிறதும் ரதாதியான சில்ப சாஸ்த்
ரோக்தமாக ஸ்ரீரங்கநாதன் நியமனப்ரகாரமே அர்ச்சகர்
களுக்கு அநுகுணமாக நடந்துகொண்டு கைங்கர்யம்
பண்ணி நடந்துவருகிறதே கைங்கரியம். பெரியகோயி
லாசாரி தட்டானுக்கு கைங்கர்யம்— திருவாபரணங்கள்
ஒடிந்தது ஒக்கடிக்கிறதும் புதியது பண்ணுகிறதும்
அடிக்கடி திருவாபரணங்கள் மெருகு பண்ணுகிறதும்
ஜ்யேஷ்டாபிஷேகத்தில் அங்கில முதலானது கைங்கர்
யம் பண்ணி மெருகிட்டு கட்டாணி முதலானதுகள்
சிரோரத்னம் திருவடி அலங்காராஸனம் பர்யந்தம்
ஒக்கடிக்கிறதும் ஸப்தவிராரங்கள் திருவாபரணமும்ஸ்வர்
ணவாஹநாதிகள் ரஜதவாஹநாதிகள் சேதாதி அலிசர
சாமரத்வஜ த்வஜடக்கயாதி நவரத்நாபரண பூஷணாதி
ஸ்வர்ணமுலாதிவாஹநாதி பாத்ராதிகள்பண்ணி மெருகு
எடுக்கிறதும் கோபுரவிமானாதிகள் செய்கிறதும் கைங்கர்
யம். அர்ச்சகருக்கு அநுகுணமாக சில்பர் அஞ்சுவேலை
கம்மாளரையும் கூட்டிக்கொண்டு ரங்கத்ரோஹம் பண்ணா
மல் பண்ணுகிறதும் கைங்கர்யம். கம்மாளர் கொத்தில்
அழகிய மணவாள தட்டாரசாரியான செம்புக் கன்

ளுக்கு கைங்கர்யம்—ஸ்வர்ண ரஜததாம்ராதி ஸந்நிதி உபகரணங்கள் பண்ணுகிறதும் ஜீர்ணங்களை ஒக்கடிக்கிறதும் கைங்கர்யம். வெண்கன்னானுக்கு கைங்கர்யம்—வார்ப்பு மணி கெடியாரம் தளிகை திவெட்டி வாசல்படி ஸோபானம் தீபஸ்தம்பம்முதலான தளிகைக் கட்டுவேலைகள் எல்லாம் வார்ப்பித்து புதியதாகப் பண்ணுகிறது கைங்கர்யம். ஆறுங்கொத்து கையில் தொழிலாகையாலே சிப்பியர் மொச்சியர் பட்டுநூல்காரர் இவர்களில் சிப்பியர் கைங்கர்யம் — மேல் கட்டி அங்குராயித்து திருத்திரைப் பச்சவடம் துப்பட்டி சுசினி கபாயி சட்டப் பாளம் கொடியாடை முதலானதுகளை தைக்கிறதும் இதுகளிலே முத்துக்கட்டுகிறதும் இவை முதலானதுகள் கைங்கர்யம். மொச்சியருக்கு குடைகள் ஆலவட்டங்கள் பரிசை திருப்பல்லக்கு பைகாசம் முதலானதுகள் பண்ணுகிறதும் இரக்குகிறதும் திருக்கார்த்திகை தீபஸ்தம்பம் ஏறுகிறதும் பெருமாள் வெளியிலே திருமஞ்சனங் கண்டருளினால் அவ்விடத்திலே திருவாபரணப்பெட்டியை அர்ச்சகர் பின்னோடே எடுத்துக்கொண்டுவந்து கருவுகலத்திலே ஒப்பவைக்கிறதும், அர்ச்சகர் கொடுக்க கைக்களவு முதலிக்கு உண்டாயிற்று. அது முதலாக திருக்கார்த்திகை தீபாராதனத்துக்கு ஸாதிக்கிற அறுதிப்பரியட்டம் கையாலியைத் தலையிலே கட்டுகிறதும், அர்ச்சகர் த்வஜபடாதிகளையும் தீபஸ்தம்பத்தையும் பற்றிக்கொள்கிறதும், திருவாபரணப்பெட்டியின் பின்னே காவலாக வருகிறதும் நியமநம். மூன்றுங்கொத்துக்கு எம்பெருமானடியாருக்கு விவரம்.—பூர்வம் கோயிலடியாருமிருக்க உறையூர் வல்லியாருக்கு ஸ்ரீதனமாக வந்தவர்களாய் அதனாலே உறையூர் வல்லியார் கூட்டத்தாரென்று பேருபெற்றவர்களாய் இருக்கிற எம்பெருமானடியாருக்கு அதன்மேலே காலவிசேஷத்திலே துலுக்கனை வசீகரித்துக் கோயிலை ரக்ஷித்து சரமதசையிலே திருமணப்பள்ளியிலும் கொள்ளி பெற்றவர்களாயிருக்கிற எம்பெருமானடியாளுக்கு கைங்கர்ய விவரம்.—உதய காலத்திலே ஒருத்தி தீர்த்தமாடி கோயிலிலே அலங்க்ருதையாய்



கோயிலுக்குவந்து ஸ்வாமிகடாக்ஷத்துக்கிலக்காயிருந்து திருவாராதனங்களிலேயும், நித்யோத்ஸவ விசேஷோத்ஸவங்களிலேயும் திருவந்திக்காப்புக்கு தட்டு கொண்டுவந்து திருவந்திக்காப்புக் குடம்மாற்றிக்கொண்டு போகிறவள். மற்றைப்பேர்களும் உதயத்திலே அலங்க்ருதைகளாய் அலங்காரத்துடனே வருகிற திருமஞ்சன யானை முன்னே நடைகேளிக்கை யாடுகிறதும், திருவந்திக்காப்பு ஸமயத்திலே தட்டிகளைக்கொளுத்தி கையிலே தரிக்கிறதும், திருவரங்கச் செல்வனார் நித்யோத்ஸவத்திலே புறப்பாடு முதலாக மலைப்பு கேளிக்கை உலாமடல் அம்மானைகள் தட்டிக்கேளிக்கை முதலானதுகள் ஸேவிக்கிறதும், விசேஷோத்ஸவங்களிலேயும் திருவீதிகளில் நடைகேளிக்கையும், திருமண்டபத்திலே கேளிக்கையும், அரையர் வீணை ஸேவிக்கச்செய்தேயும், இசைஸேவிக்கச்செய்தேயும் உறையூர் வல்லியார் கூட்டத்தார் என்று அருளப்பாடு ஸாதித்த உடனேயும் அரையர் பின்னே மலப்பு ஸேவிக்கிறதும், கால விசேஷங்களிலே உறையூர் வல்லியார் கூட்டத்தாரென்று அருளப்பாடு ஸாதித்தவுடனே உலா ஸேவிக்கிறதும், பதினெட்டாம் பெருக்கிலே ராஸக்ரீடை ஆடுகிறதும், வஸந்தோத்ஸவத்திலே கோலாட்டமாடுகிறதும், உத்ஸவ விசேஷங்களிலே காலப்பரிகைநாடகமாடுகிறதும், த்வஜாரோஹணத்திலே நாட்டியாரம்பமாக விநாயகத்தாளத்தை அனுஸரித்தாடுகிறதும், பேரீதாடனத்திலே தேவதா வாஹனத்திலே அந்தந்த தேவதா நாட்டியத்தினாலே ஆடுகிறதும், நாலாங்கொத்தான திருவிளக்காரருக்குக் கைங்கர்யம்.—கருவுலத்து சத்ர தாள வ்ருந்தாதியரை முதலாக ஆர்யபட்டாள் வாசலுக்குள்பட்ட வாஹன சாலை மேல்கட்டியறை முதலானதுகளுக்கு திருக்கொட்டாரத்துக்கும் மெய் காவலும், அகளங்கன் திருவீதிக்காவலும், தவசம் ரஸவர்க்கம் முதலானதும் தன்னையே ஆள்வந்து எழுதச்சொன்னபடியினாலே அந்தப்படியே நடந்து வருகிறது. நாழிகை வட்டில் வாசல் வெள்ளாழனை கோயில் காத்தபெருமாள் காத்து இருக்கையில் அவன் மெய் தீய்

ந்து போகையில் வெள்ளாழர் தொழில் காலளவு பெரிய பிள்ளை பாண்டியப்பிள்ளை நாழிகை வட்டில் வாசல்காவலான நாலு தொழிலுக்கும் ஞாதியான பாண்டியனாலே ஸ்தலத்துக்கணக்கு வண் சடகோபதாஸன் வகைப்பேரை நாழிகை வட்டில் வாசல் காவலுக்கு கோயில் காத்த பெருமாளுக்கிடாகக் கட்டளையிட்டு பதிலாக காக்கையில் உத்தம நம்பி விகாதம்பண்ணி நியாயம்போலே மெய் தீய்ந்து பொன்வகைக்காவல் ஸ்ரீ பண்டாரத்தில் சேர்க்கிறது ஸம்ப்ரதாயமென்று ஒரு நியாயங் கல்பித்து ஸ்ரீ பண்டாரத்திலேசேர்த்து விழுக்துபோயிற்று. இரண்டாங்கொத்துக்கு சாலுவனை கைக்கள முதலியான செருவட்டவனுக்கு கைங்கர்யம்.—பெருமாளுக்கு இளநீர் கண்திறக்க திருத்தி நீட்டுகிறதும், ஆலிநாடன் திருவாசல் அகளங்கன் திருவீதிவாசல் காவல் காக்கிறதும், பெருமாள் சேர்த்திநிலையைவிட்டுப் புறப்பட்டருளினால் திருத்திரை பரிமாறுகிறதும் மசிய நிறிகட்டுகிறதும், திருமஞ்சனத்துக்கு வேதியைப்பிடிக்கிறதும், வட்டமணைவேதியை சூதானுபார்த்து செவ்விக்கட்டுகிறதும், குதிரை நம்பிராளைப்பரிஷ்கரித்தது அங்குபடியும் வைத்திருக்து பெருமாளெழுந்தருளினவுடனே அங்குபடிஸமர்ப்பித்து நம்பிராணிலே புறப்பட்டருளினால் திருவெண்சாமரம் இருபுறமும் ஸேவிக்கிறதும், திருச்சங்கும் உபய காகளம் ஸேவிக்கிறதும், உப்பு சம்பாரம் ஆராய்ந்து பொடிபண்ணிக்கொடுக்கிறதும், அந்த ஆலிநாடன் திருவீதிவாசல் அகளங்கன் திருவீதிவாசல்களைத் திருவுக்கு சேர்க்கிறதும், திருக்கொட்டாரத்திலே எண்ணெய்வாங்கிவந்து திருவிளக்கு ஏற்றுகிறதும் குலசேகரன் திருவீதியிலே திருமடைப்பள்ளிக்குப் போய் எருவு வாங்கிக்கொண்டு வெளியிலே கொண்டுபோய் போடுகிறதும், தோப்பிலே வாழையிலை வாங்கிக்கொண்டு வர்க்க வகை முதலான கட்டுத்தளிகையடிக்கு இலை கொடுக்கிறதும், பீகமுத்ரை பண்ணுகிறதற்கு களிமண் போடுகிறதும் எம்பெருமானாரடியாருக்கு கோவணவாண்டை ஆச்ரயணம் சாதித்தவுடனே புத்ர ஸ்வீகாரம் பண்ணிக்கொண்டு தட்டிக்கொடுக்கிறதும்,



சேவகத்துக்கு அழைக்கிறதும், உடையவருக்கு திருவுள்ளமில்லாமல் ஸ்ரீ வைஷ்ணவனைக் கட்டளையிடவேணுமென்று நினைத்து அவனையழைத்து எந்தத்தோப்பு இளநீர் நன்றாயிருக்குமென்று கேட்குமிடத்தில் பெருமான் திருப்பவளத்துக்கும், அருளவாயமுக்குக்கும் தெரியுமென்று விண்ணப்பஞ்செய்ய உடையவருந் திருவுள்ளமுகந்து அவனைத்தானே அந்தக்கைங்கர்யத்தில் நியமித்தருளினார். இதுவுமொருகாலத்திலே அர்ச்சகர் த்வஜாரோஹணத்துக்கு திருக்கொடிக்கம்பத்திலே ஒரு திருக்கொடியாழ்வாரை யேறியருளப் பண்ணுமிடத்தில் கைமோசம் வந்தது. அப்பொழுது திருத்திரை பரிமாறுகிற முதலியெடுத்துக்கொண்டபடியினாலே அதுமுதலாக திருக்கொடித்தண்டு திருமண்டபத்துக்கு அலங்காரங்கள் பண்ணுகிறதற்கு குருநாகப்பட்டை வேலை முதலானதுகள் கைங்கர்யம்.—பட்டுநூல்காரருக்குகைங்கர்யம்.—பட்டுநூல் திருமாலை முசினல்படி கொசுக்கள் முதலானதுகளை வாஹனத் யலங்காரோசிதமாகப் பண்ணி ஸமர்ப்பிக்கிறதும் கைங்கர்யம்.—தட்டுப்ப மங்குசெட்டியும் ஜோலி பூதானமும் ஸ்ரீ பண்டாரத்திலே பண்ணுகிறது. ஏழாங்கொத்து சாங்கொல்லி வண்ணானும், அதில் சாங்கொல்லியாவான் பூர்வம் பெருமாள் டில்லீச்வரன்வீட்டிலே எழுந்தருளியிருந்து திரும்பி யெழுந்தருளினபின்பு வெகுகாலமானபடியினாலே ஸ்தலத்தார் ஸந்தேஹித்தவிடத்திலே இவன் கையில் பெருமாளிருவருடைய தீர்த்தத்தை உள்கொண்டு இவரேநம்பெருமாளென்று நணிசித்தவன். அந்தவர்க்கத்துக்கு அன்றுமுதலாக சாங்கொல்லி யென்று பேர் நடந்துவருகிறது.— இவருக்கு கைங்கர்யம்—சாத்தியருளுகிறவையில் உள்சாத்து திருப்பரியட்டங்களைத் திருத்தி வாட்டி ஸமர்ப்பிக்கிறதும், திருப்பாவாடைக்கு பாவாடை ஸமர்ப்பிக்கிறதும், தளிகை மூடிகளை வெளுப்பித்து அன்றாடம் கொடுக்கிறதும் வண்ணான் கைங்கர்யம். திருமண்டபம் முதலானதுகளுக்கு மேல்கட்டுக்கு சாயம் போடுகிறதும் கைங்கர்யம். எட்டாங்கொத்து கொசவர்கள் கைங்கர்யம்.—நித்யப்படி தளிகை பண்ணுகிறதற்கு

அன்றுடம் புதுகூன் முதலானதுகளை ஸமர்ப்பிக்கிறதும், திருமண்டபங்களுக்கு வேண்டிய உருப்படிகளைக்கொண்டு போய்க் கொடுக்கிறதும், யாகசாலைக்குப் பாலிகை முதலான வேண்டின உருப்படிகளைக்கொண்டுபோய் கொடுக்கிறதும், திருக்கார்த்திகை தீபோத்ஸவம் முதலானதுகளுக்கு வேண்டின உருப்படிகளைக்கொண்டுவந்து சமர்ப்பிக்கிறதும் கைங்கர்யம். ஒன்பதாம்கொத்து ஓடக்காரர்களுக்கு கைங்கர்ய விவரம்.—ஓடக்காரருக்கு தென் திருக்காவேரி வட காவேரி ப்ரவாஹ காலங்களிலே கோயிலுக்கு வேண்டின பால் முதலான சாமக்ரிகளைக் கொண்டுவந்து இக்கரைசேர்க்கிறதும் பெருமாள் திருப்பள்ளியோடம் ஸேவிக்கிறதும்கைங்கர்யம். தவணைக்காரருக்குதிருமடைப்பள்ளி முதலானதுகளுக்கு பிரப்பங்கூடை, 'தட்டு, மூங்கில் தெப்பம், மூங்கில் பாய், அருக்கொட்டை, நார்த்தம்பழம், எலுமிச்சம்பழம் முதலானதுகளும் தென்னமரம் கித்துக்கட்டுப்பாளைகள் தெப்பத்திலே போட்டுக் கொண்டுவந்து சேர்க்கிற கைங்கர்யம். பத்தாங்கொத்து அழகிய மணவாள கூடஸ்தரான மூட்டுக்காரரும் மண்டபங்கொத்து வித்வான்களான நட்டுவரும், பஞ்சமஹாவாத்யம் முதலான மேளக்காரரும் இவர்களில் அழகிய மணவாளக்கூட்டத்தார் கைங்கர்யம்.—அரையரிசைப் படியேற்றம்முதலான ஸேவைகளிலும் ஸேவிக்கிறதும், அதில் படியேற்றத்திலும் நடனம் செயலிலும், மத்தளம் செல்வி மத்தளம் சுத்தளம்வகை ஆவிஜம் என்கிற ஐந்துவகையும் அடைவே ஓரொன்றாக ஸேவிக்கிறதும், வித்வான்களான நட்டுவர் பக்கத்திலே நின்று ஸேவிக்கிறதும் கைங்கர்யம். குறைப்பேர் கைங்கர்யம்—திருவனந்தல் முதலாக பரியனவாக நித்ய விதியிலும், புறப்பாடு முதலாக சேரபாண்டியனிலே யேறியருளுமளவாக உண்டான கைங்கர்யம். ஆக சூத்திரக்கொத்துப் பத்தும் உடையவர் கல்பித்த கட்டளை. இந்தப்படி பத்துக்கொத்து ஸ்ரீ வைஷ்ணவர்களையும், ஏகாங்கிகளையும் சாத்தாத முதலிகளையும் குலசேகரத் திரைவாணிகர்களையும், திருநாமதாரிகளையும் சூத்திரர்களில் பத்துக்கொ



த்து கைங்கர்ய பரர்களையும் கல்பித்து இவர்களுக்கு கைங்கர்யங்களையும் வ்யவஸ்திதமாக்கி திட்டஞ்செய்தருளி ஸ்ரீ பாஞ்சராத்ரோக்தத்தில் பரமேச்வர ஸம்ஹிதா க்ரமத்தினாலே திருப்பணி, திருவாராதனம், நித்யோத்ஸவம், பக்ஷோத்ஸவம், மாஸோத்ஸவம், ஸம்வத்ஸரோத்ஸவம் மஹோத்ஸவங்களான அனைத்தழகும் கண்டருளப்பண்ணிக்கொண்டு வந்தார். அதில் நித்ய திருவாராதன நித்யோத்ஸவங்களுக்கு விவரம்.

உடையவரும், ஆழ்வான்கூட பஹுகாலம் ப்ரதக்ஷிணமாக திவ்ய தேசங்களையும் மங்களாசாஸனம்பண்ணி, அவ்விடத்திலேயிருக்கிற எல்லாரையும் ஸ்ரீவைஷ்ணவர்களாகத் திருத்தி, பஞ்சஸம்ஸ்காராதிகளையும் ஸாதித்து, அந்தந்த ஸ்தலங்களிலே தம்முடைய மடமும் முத்திரையும் நடத்துவித்து, திக்விஜயமும்பண்ணி, ஜயஸ்தம்பமும் நாட்டி, ஸகலதேச ராஜாக்களையும், மற்றத்தேச வித்வான்களையும் திருவடிகளிலே சேவிட்டுக்கொண்டு, ஸாரதா பீடத்திலே சரஸ்வதியாலே ஸத்க்ருதராய் ஸ்ரீ பாஷ்யகாரர் என்கிற திருநாமத்தை லபித்து, தெற்கே ஆண்டான், திருமாலிருஞ்சோலைமலை அழகர் விஷயமாக மநோரதித்த அர்த்தத்தைத் தலைக்கட்டின படியாலே ''கோயிலண்ணன்'' என்கிற திருநாமத்தையும் அடைந்து, கோயிலேற வெழுந்தருள; கோயிலனைத்துக்கொத்தும் ஆண்டானும் எதிர்கொண்டு ஸேவிக்க; உடையவரும், அவர்களை யதாயோக்யமாக ப்ரணிபாத ஆலிங்கந குசல ப்ரச்நாதிகளாலே ஸந்துஷ்டராக்கி, கோவிலிலே ஸேவாக்ரமத்திலே ஸேனைமுதலியாருமதிகொண்டு ஜயவிஜயானுமதியுடன் உள்ளேபுகுந்து, பெருமானை ஆபாதசூட மனுபவிக்க; பெருமாளும் உடையவரைக் கடாக்ஷித்து, ''நம்முடைய ஆராமங்களை யாராய்ந்து, நம் தர்சநத்தையுங் களையறுத்து, நாலு திக்கிலும் ஜயஸ்தம்பமும் நாட்டிவந்தீரோ''? என்று அர்ச்சமுகமாக விருது விட்டருளி, தீர்த்தமுதலான ஸகல வரிசைகளையும் ப்ரஸாதித்து, ''நம்வீட்டுக்கார்யத்தையும் ஆராய்ந்துகொ

ண்டு கோயிலேதானே யிரும்" என்று அருளிச்செய்ய; உடையவரும் "தந்யோஸ்மி" என்றுகொண்டு மடத்திலே எழுந்தருளி, முதலியாண்டானை அநுக்ரஹித்து, இன்றைவரைக்கும் சிந்தாமே மங்காமே திருவரங்கச்செல்வத்தை த்விகுணமாக வர்த்திப்பித்து அனைத்தழகும்நடத்திவைத்தபடியைக்கண்டு உகந்தருளி, ஸ்ரீகார்யவிசாரத்திலே அவரையே நியமித்து, பெரியநம்பிமுதலான முதலிகளுடனே தாம்புறப்பட்டதுமுதலாகப் பண்ணின உபயகைங்கர்யங்களையும் யதாவ்ருத்தமருளிச்செய்து; ஸ்ரீபாஷ்யத்தை ஆழ்வானைக்கொண்டு பட்டோலை யிடுவித்து நிறைவேறினவுடனே ஸந்நிதியிலே விண்ணப்பஞ்செய்து, தம் மருமகனான நடாதூரம்மாள் கையிலே ஸ்ரீபாஷ்ய ஸ்ரீகோசத்தைக் கொடுத்து ஸாரதாபீடத்துக்கு அனுப்பியருள, ஸரஸ்வதியும் அந்த ஸ்ரீகோசத்தை சிரஸாவஹித்து ஸ்லாகித்த வநந்தரம், அந்த நடாதூரம்மாளை நித்யமாக வேத விண்ணப்பத்திலே கீதாபாஷ்யானவுடனே சாரீரகபாஷ்யத்தையும் விண்ணப்பஞ்செய்யச் சொல்லி நியமித்தருள; அது முதலாக, வேத விண்ணப்பத்திலே, ஸ்ரீ பாஷ்ய விண்ணப்பமும் நடந்து வருகிறது.

இப்படி நடக்கிற காலத்திலே, ஒருகல்தச்சன், முன்பு கோசாலை கட்டுகிறபோது ஒருகல்லின் நடுவிலே தேரையும் தண்ணீரு மிருக்கக்கண்டு, "கல்லின் நடுவே யிருந்த தேரைக்கு ஜீவநம் கல்பித்த ஈச்வரன் நமக்கும் நடத்துவர்" என்று, தொழிலைவிட்டு, ப்ரந்யாஸம்பண்ணி, திருமுடிக்குறையிலே நிர்வ்யாபாரனாயிருக்க, அது அறிந்து, அழகிய மணவாளப் பெருமாள் ப்ரதிதிநமும் இராமாநு திருவொத்த ஸாதத்தைக் கொண்டுபோய் அவனை புஜிப்பித்துக்கொண்டிருக்க; காலாவதியாலே சிலகாலத்துக்குப் பின்பு அவன் மரித்த சேதியைக்கேட்டு, உடையவர், "இன்றைக்கானாலும் அழகிய மணவாளப் பெருமாள் வெறுந்தலையுமாய் சோறுசுமவாமல் ஸுகமாயிருப்பர்" என்று அருளிச்செய்தார்.

அப்படியே, ஆழ்வான் முதலானவர்கள் பஞ்சகால பாராயணராயிருக்குங்காலத்திலே; ஒருநாள் வர்ஷோபா



தியாலே ஆழ்வான் உபாதாநத்துக்கு எழுந்தருளக்கூடாமல் உபவாஸமாயிருக்க; ராத்ரி, ஆழ்வானுடைய தேவிகளான ஆண்டாள், பெரிய பெருமாள் திருவொத்தஸாதமமுது செய்தருளுகிற பெரிய திருமணி ஓலியைக்கேட்டு, பெருமாளைக் குறித்து, "ஆழ்வான்பட்டினியே யிருக்க தேவரீர் குலாவிக் குலாவி அமுது செய்தருளுவதே!" என்று நினைத்தவுடனே, ஒரு ஸ்ரீவைஷ்ணவர், தளிகையிலே திருவொத்த ஸாதத்தைக்கொண்டு, ஆழ்வானை அழைத்து, "அடியேன், அழகியமணவாளதாஸன், பெருமாள் நியமநத்தினாலே ப்ரஸாதம்கொண்டுவந்தேன், அங்கீகரிக்கவேணும்" என்றுசொல்ல; ஆழ்வானும் திகைத்து, ஆண்டாளை அழைத்து, "என்னநினைத்தாய்!" என்றுகேட்க; ஆண்டாளும் தான்நினைத்தபடியைச்சொல்ல; ஆச்சர்யத்துடனே "இது ஸ்ரீபண்டாரத்திலே க்ரயத்தளிகையாயிருக்குமே!" என்றுகொஞ்சமாக எடுத்துக்கொண்டு, குறையை அனுப்பிவிட்டு; அதிலே ஆண்டாளுக்கு இரண்டுபாகமும் தமக்கொரு பாகமும் ப்ரஸாதப்பட்ட வநந்தரம், ஆண்டாள் திருவயிறுவாய்த்து, பத்துமாஸமும் சென்றவுடனே இரண்டு குமாரர்கள் திருவவதரிக்க; இச்சேதியை உடையவர் கேட்டு, ஸந்தோஷத்துடனே ஆழ்வானைக்கொண்டு புத்ரோத்ஸவாத்யுபலாளநங்களைப்பண்ணுவித்து, பன்னிரண்டாநாள் உடையவர், தாம் ஆளவந்தார் மநோரதத்தை நிறைவேற்றவேணும் என்று, எம்பாருடன் ஆழ்வான் திருமாளிகைக்கு எழுந்தருளி எம்பாரை, குழந்தைகளை எடுத்துக்கொண்டுவரச்சொல்லி நியமிக்க; எம்பாரும் குழந்தைகளை எடுத்துக்கொண்டு, த்வயாநுஸந்தாநத்துடனே வரக்கண்டு, உடையவரும் "த்வயம்பரிமளிக்கிறது" என்று சொல்லி, ஒரு குழந்தைக்கு தர்சநோபகாரகரான ஸ்ரீ பராசர பகவானுடைய திருநாமம் சாத்தி; ஆளவந்தாருடைய மூன்று மநோரதமும் நிறைவேற்றி; மற்றக்குழந்தைக்கு ஆழ்வானைக்கொண்டு அவர் திருத்தமப்பனாராகிற சீராமப்பிள்ளை திருநாமம் சாத்துவித்தார்.

இந்தப்படி உடையவர் உபயகைங்கர்ய நிர்வாஹகராய், செங்கோல்செலுத்தி, உபயவிபூதியிலும் தம்முடைய சிறுமுறி செலுத்தி; எழுநூறு ஜீயர்களும் பன்னீராயிரம் ஏகாங்கிகளும், எழுபத்துநாலு ஆசார்யபுருஷர்களும், அஸங்க்யேய வைஷ்ணவர்களும்ஸேவிக்க; அறுபது சாதுர்மாஸ்யம் திருவரங்கந்திருப்பதியிலேவாழ்ந்து கொண்டிருக்கும் காலத்திலே;

இம்மண்டலாதிபதியான சோழன் பாபிஷ்டனாய் பகவத்த்வேஷியாய் திவ்யதேசங்களில் கோயில்களை யிடிக்கத் தொடங்க; தத்புத்ரன், "திருவாய்மொழியும் ஸ்ரீராமாயணமுமாகிய இரண்டு மதிள் அவிசால்யமாயிருக்க, உன்னாலே திவ்ய தேசங்களை அழிக்கப்போமோ?" என்று சொன்னாலும், துர்ப்புத்தியாகையாலே கேளாமல் அபசாரப்பட்டு, ததநுகுணமாக குலபாம்ஸனன புரோஹிதப்ரேரிதனாய், தர்சநஸ்தாபகாசார்யரான ஸ்ரீ பாஷ்யகாரர் கையிலே "𑌶𑌿𑌵𑌾𑌤𑍍𑌪𑌰𑌤𑌰𑌂 𑌨𑌾𑌸𑍍𑌤𑌿 சிவாத்பரதரம்நாஸ்தி" என்று எழுத்து வாங்க உத்யோகித்து, கோயிலுக்கு ராஜபடனையனுப்பிவைக்க, அந்தச்சேதியைக்கேட்டு, உடையவர் நியமனத்தினாலே, பெரியநம்பி, கோயிலுக்குத் தீங்குவாராதபடி எல்லை சுற்றிக் காப்பிட்டிருக்கிற ஸமயத்திலே, ராஜபடன் எம்பெருமானார் மடத்துவாசலிலேவந்து, ப்ரபுவண்டைக்குவரச்சொல்லி அழைக்க, உடையவர் நியமனத்தாலே ஆழ்வான் த்ரிதண்டகாஷாயங்களை தரித்து, பெரியநம்பியுடனே கூட கங்கைகொண்டானுக்கு ராஜபடனின் பின்னே போனார்.

உடையவரும், வெள்ளைசாத்திக்கொண்டு, முதலியாண்டானையும் கூட்டிக்கொண்டு, பெருமாளை ஸ்வசக்தியாலே ரக்ஷித்துக்கொள்ளச்சொல்லி, மேற்கேபுறப்பட்டு பின்தொடர்ந்த ராஜபடனை மணலைமந்த்ரித்து வழியிலே யிறைத்துத்தடுத்துப்போகட்டு, மேற்கே மேல்நாட்டிலே. எழுந்தருளி, முதலியாண்டான் ஸ்ரீபாததீர்த்தத்தினாலே சில மதாந்தரஸ்தரைத் திருத்தி, தாம் திருவனந்தாழ்வானாய் ஸஹஸ்ரசிரஸ்ஸுக்களுடனேயிருந்து ப்ரஸங்கம் பண்ணி அநேகமதாந்தரஸ்தரையும் ஜயித்து, அத்தே



சத்தில்ப்ரபுக்களைபஞ்சஸம்ஸ்காரபராக்கியாதவாத்ரியை ஜீர்ணோத்தாரணம் செய்தருளி, அந்ததிவ்யதேசத்துக்கு "திருநாராயணபுரம்" என்று திருநாமம்சாத்தி, டில்லிக்கெழுந்தருளி ராமப்ரியரை எழுந்தருளப் பண்ணுவித்துக்கொண்டுவந்து, அவருக்கு "செல்வப்பிள்ளை" என்று திருநாமம்சாத்தி, ப்ரதிஷ்டிப்பித்து, தத்ரத்ய பாஷண்ட பௌத்தாதிகளைக் கற்காணமாட்டுவித்து, ஸ்வாமிக்கு ஐம்பத்திருவரைக் கொண்டு அனைத்தழகும் நடத்திக்கொண்டு, உபயகைங்கர்ய நிர்வாஹகராய் எழுந்தருளியிருந்தார்.

இவ்விடத்திலே பெரியநம்பியும் கூரத்தாழ்வானும் சோழன் ஸமக்ஷத்திலே போய், வேதசாஸ்த்ரங்களினாலே பகவத்பாரம்யத்தை ஸாதித்தவிடத்திலே, துராபிமானத்தாலே "𑌶𑌿𑌵𑌾𑌤𑍍𑌪𑌰𑌤𑌰𑌂 𑌨𑌾𑌸𑍍𑌤𑌿=சிவாத்பரதரம்நாஸ்தி" என்றெழுதச்சொல்லி நிர்ப்பந்திக்க; ஆழ்வானும் அதை எழுதி அதன்மேலே "𑌦𑍍𑌰𑍋𑌣𑌮𑌸𑍍𑌤𑌿 𑌤𑌤𑌃 𑌪𑌰𑌮𑍍=த்ரோணமஸ்தி தத: பரம்" என்றெழுதக்கண்ட சோழன் குபிதனாய்; இருவரையும் ஆஜ்ஞைபண்ணச்சொல்ல; நேத்ரோத்பாடநவேதனை ஸஹிக்கமாட்டாமல் பெரியநம்பி திருநாட்டுக்கெழுந்தருளினார்; ஆழ்வானும் "அந்தப்பாபிஷ்டனைக்கண்ட கண்களிருக்க வொண்ணாது" என்று பச்சைக் கற்பூரத்தைச் சாத்திக்கொண்டு கண்ணையிழந்து, "ப்ராக்ருத ஸ்பர்சம் கூடாது" என்று இருக்குமளவில்; மதுராந்தக ஸ்ரீவைஷ்ணவரொருத்தரிருக்க, அவரை ஸஹாயமாக்கி, பெரியநம்பியையும் ஸம்ஸ்கரித்து கோயிலுக்கெழுந்தருளி, ஒருநாள் பெருமாளை ஸேவிக்கப்போனவிடத்திலே, ஆர்யபட்டாள் வாசலிலே ஒருத்தர் "எம்பெருமானாருக்கு அந்தரங்கர்; உள்ளே போகப்போகாது" என்று நிஷேதிக்க, அத்தையொருவர்கேட்டு "ஆழ்வான் மஹா ஸாத்விகர், உள்ளே போகட்டும்" என்றுசொல்ல; இவ்வார்த்தைகளை ஆழ்வான்கேட்டு, செவியைப்புதைத்து "நம்முடைய ஆத்மகுணம் ஆசார்ய ஸம்பந்தாபாவத்துக் குறுப்பாவதே!" என்று சடக்கெனத் திரும்பி, திருமாளிகைக்குப்போய், விடிவோறே ஷாண்மாஸசிசுக்களையும் கூட்டிக்கொண்டு,

ஆண்டானுடன் திருமாலிருஞ்சோலைமலைக்கெழுந்தருளி, அங்கே ஆசார்ய விரஹிதராய் எழுந்தருளியிருந்தார்.

அநந்தரம், இந்த வ்ருத்தாந்தத்தை அர்க்யப்ரதாந காலத்திலே எம்பெருமானார் கேட்டருளி அபிசாரார்க்ய ப்ரதாநத்தைப்பண்ண; திருவேங்கடமுடையான் தம்முடைய திருவாழியாலே அந்தச்சோழன்கழுத்திலேதைக்க, தத்க்ஷணத்திலே வ்ரணம் ஜநித்து, துஷ்பரிஹரமாய் பஹுமாஸாய் க்ருமித்து மரித்துப்போனான். அதுமுதலாக அந்தச்சோழனுக்கு க்ருமிகண்டசோழன் என்று பேராய்த்து.

தநந்தரம், தத்புத்ரன் பஹுவாக அநுதப்தனாய், சேரபாண்டியரையும் அழைப்பித்து, மூன்றுபேரும் கோயிலுக்குவர, கோயிலிலே உடையவர் எழுந்தருளினது முதலாக, கோயில் அரண்மனையாரதீநமாய் கருவுகலம் திருவாபரணப்பெட்டி முதலானதுகளுக்கு உடையவரிலச்சினையில்லாமல் ஆர்யபட்டாள்காவலும் கருடமுத்ரையும் சங்கமுத்ரையும் மாத்ரம் நடந்துகொண்டு வருகையில், ஆர்யபட்டாள் அந்தஸமயத்திலே சேர சோழ பாண்டியராநுமதியில் தங்கள் காவலுக்குப்பலமாய் ஒரு முத்ரை பெற்றுக்கொண்டார்கள்.

அந்தச்சோழனும், "பூர்விகர், 'தேவதாயம் முதலானதுகளை ப்ரபுக்கள் விசாரிக்கலாகாது' என்று ஒரு ப்ராம்ஹணாதீநமாக நடத்திக்கொண்டு வந்தார்களே! இப்போதும் நம் தகப்பன் துர்வ்ருத்தனாய்ப் பட்டபாடு கண்டோமே! இப்போது உங்கள் முன்னாக உடையவரை அழைப்பித்து, தேவஸ்தாநம் என் பணியில்லாதபடி அவருக்குத் தாரை வார்த்துக் கொடுக்கிறேன்" என்று சேர பாண்டியருடனே ஆலோசனை பண்ணி, பெருமாளை ஸேவித்து, மாறொன்றில்லா மாருதியாண்டானை எம்பெருமானார் ஸந்நிதிக்கு அனுப்பி, தாங்கள் பட்டணங்களுக்குப் போனார்கள்.

எம்பெருமானாரும், திருவரங்கந்திருப்பதியைவிட்டு, பன்னிரண்டு வர்ஷம் திருநாராயணபுரம் ஜீர்ணோத்தாரணம் முதலான கைங்கர்யங்களையும் நிர்வஹித்துக் கொ



ண்டிருந்து, மாறொன்றில்லா மாருதியாண்டான் முகவசக
த்தாலே கோயில் வ்ருத்தாந்தத்தை அறிந்து, தம் திரு
வடிகளில் ப்ரவணரான ஐம்பத்திருவர் தரிக்கும்படி அர்ச்
சாவதாரமாக தம் சக்தியை ப்ரதிஷ்டிப்பித்து, அங்கிரு
ந்து புறப்பட்டு, திருமலைவழியாக எழுந்தருளி, திருமலை
யடிவாரத்திலே தில்லைகோவிந்தராஜனை ப்ரதிஷ்டிப்பித்
து, தில்லைமூவாயிரவரிலே அநுகூலருக்கு ஆஸ்ரயணாதிக
ளை ஸாதித்து, கைங்கர்யபராக்கி, திருமாலிருஞ்சோலை
மலையிலெழுந்தருளி ஆழ்வானையுங்கூட்டிக்கொண்டு கோ
யிலிலே எழுந்தருளின சேதியைக்கேட்டு, பெருமாள் பரிக
ரம் அனைத்துக்கொத்தும் ப்ரஸாதத்துடனே எதிர்கொ
ண்டுபெருமாள் ஸந்நிதியிலே அழைத்துவர; பெருமாளும்,
முன்போலே செங்கோல் முதலான வரிசைகளை ப்ரஸா
தித்து மடத்தேற அனுப்பியருள; உடையவரும், தமக்கு
ப்ரஸாதித்த வெள்ளைவகச்சல் குஞ்சமாலைகளிலே, வெள்
ளையை ஆண்டானுக்கும், வகச்சலை ஆழ்வானுக்கும் ஸா
தித்து, ஸந்துஷ்டராய், மடத்திலேயெழுந்தருளினசேதி
யைக்கேட்டுக்கொண்டு, குலோத்துங்கச்சோழனும் கோ
யிலுக்குவந்து, எம்பெருமானாரை ஸேவித்து, கோயிலதி
காரம் தனக்குப்பணியில்லாதபடி தாராபூர்வகமாக தாந
சாஸநம்பண்ணிக்கொடுத்து, "திருவடிகளிலே ஆஸ்ரயிக்
கவேணும்" என்று விண்ணப்பஞ்செய்ய; உடையவரும்,
உகந்தருளி, அந்தச்சோழனை ஆண்டான் திருவடிகளிலே
ஆஸ்ரயிப்பித்து, திருவரங்கந்திருப்பதியை ஆண்டானு
க்கு தாராபூர்வகமாக தாநசாஸநம்பண்ணுவித்து, இந்த
வ்ருத்தாந்தத்தை ஆர்யபட்டாள்வாசலிலே சிலாலிகிதம்
பண்ணுவித்தார்.

உடையவர் கோயிலுக்கு எழுந்தருளின யோகக்ஷே
மம்கேட்டு, கந்தாடையாண்டான் முதலான முதலிகளும்
பெருமாள் கோயிலிலிருந்து கோயிலுக்கெழுந்தருளி,
எம்பெருமானாரை திருவடிதொழுது ஹ்ருஷ்டரானார்கள்.

உடையவரும், யதாபூர்வமாக ஆண்டானைக் கொ
ண்டு ஸ்ரீகார்யத்தை நடத்துவித்துக்கொண்டு வருமள
வில்; ஒருமஹோத்ஸவத்தில் தாநப்ரகரணத்திலே உப

காரஸ்ம்ருதியாலே, பெரியநம்பி குமாரருக்கு மாடமாளிகைசூழ் திருவீதியில் கீழ்மாடத்திருவீதியில் தென்கண்டத்தில் மேற்புறத்தில் ப்ரதமநிவேசநமான ஆளவந்தார் திருமாளிகையையும் ஆழ்வானுக்கு அதுக்கு எதிர்மனையையும், ஆண்டானுக்கு அதற்குத் தென்மனையையும் தானம்பண்ணுவித்து, தாநசாஸநமாக ஸ்ரீ ஸேநாபதி பட்டயமும் ஸாதித்தருளினார்.

இப்படி எம்பெருமானார் முதலிகளுடன் வாழ்ந்தருளி நூறுசாதுர்மாஸ்யாநந்தரம் சதாபிஷேகமும் கண்டருளி, "எதிராஜன்" என்று பேர் லபித்து; தம்முடைய சிஷ்யரான ராமாநுஜதாஸன் என்கிற சில்பிக்கு ஏகாந்த ஸேவைஸாதித்து; யதாபாவமாக ஸ்வவிக்ரஹத்தை எறியருளப் பண்ணுவித்து; ஸ்வாம்ஸ திவ்யசக்தியை ஆதாநம்பண்ணி, கந்தாடை ஆண்டானைக் கொண்டு ஸ்ரீபெரும்பூதூரிலே ப்ரதிஷ்டிப்பித்து, பெருமாள் ஸந்நிதியிலே தன்னுடைச்சோதிக்கு விடைபெற்று, கந்தாடையாண்டானையும் பட்டரையும் அழைத்து "நம்பெருமாள் கைங்கர்யத்தையும் நம் தர்சநத்தையும் நன்றாகப் பண்ணுங்கோள்" என்று நியமித்து, பரிஜனங்களை க்ஷாமணம்பண்ணிக்கொண்டு திருநாட்டுக்கெழுந்தருளினார்.

ஸ்ரீ ஸேநாபதி துரந்தரரான கந்தாடையாண்டானும், பெருமாள் நியமநத்தினாலே அகளங்கன் திருவீதியில் தென்கீழ்ப்புறத்தில் சுந்தரபாண்டியன் துலாபுருஷமண்டபத்திலே எதிராஜனையும் உத்ஸவரையும் ப்ரதிஷ்டிப்பித்து, மார்கழிமாஸம் முப்பதுநாளும்பெரியஸந்நிதி நம்பிமார் எதிராஜனுக்குத் தளிகை அமுதுசெய்யப்பண்ணவும், திருமொழி திருவாய்மொழித் திருநாளிலேயும் இயற்பாவன்றைக்கும் ஆழ்வார்களுடனே ஸந்நிதிக்கு எழுந்தருளும்படிக்கும்; திருநக்ஷத்ர உபலாளநமும் ஏழுநாளாகப்பண்ணி, திருநக்ஷத்ரத்தினன்று ஆழ்வார்களைப்போலே ஸந்நிதிக்கெழுந்தருளும்படிக்கும், மஹோத்ஸவத்தில் ஸப்தாவரணத்தினன்று தன் திருவாசலிலே திருக்கைத்தலத்திலே பெருமாளை மங்களாசாஸநம்பண்ணும்



படிக்கும் பண்ணுவித்து, பெருமாளுக்கு அனைத்தழகும் கண்டருளப்பண்ணுவித்தார்.

(௧) உடையவர் திருவவதரித்த பன்னிரண்டாநாள் பெரியதிருமலைநம்பி நாமகரணம்பண்ணினபெயர், இளையாழ்வார்; (௨) ஆஸ்ரமஸ்வீகாராநந்தரம் தேவப்பெருமாள் ஸாதித்தபெயர், ராமாநுஜன்; (௩) கோயிலுக்கெழுந்தருளினபின்பு பெரிய பெருமாள் ஸாதித்தது, உடையவர்; (௪) ஆத்மகுணத்தாலே திருக்கோட்டியூர் நம்பி பக்கல் பெற்றபேர், எம்பெருமானார்; (௫) உபய கைங்கர்யத்தினாலேயும் கோதைசூடிக்கொடுத்த நாய்ச்சியார் ஸாதித்தபேர் கோயிலண்ணன்; (௬) சாரதாபீடத்தில் ஸரஸ்வதி சாத்தின திருநாமம், ஸ்ரீபாஷ்யகாரர்; (௭) ஸ்வமாஹாத்ம்யத்தினாலே சதாபிஷேகம் கண்டருளி லபித்தபேர், எதிராஜன்; ஆக ஏழு திருநாமங்களிலேயும், தேவப்பெருமாளும் பெரியபெருமாளும் ஸாதித்த திருநாமங்கள் இரண்டுமே பட்டப்பேராய் அருளப்பாடு ஸாதிக்கிறது.

## பட்டர் வைபவம்.

அநந்தரம், பாஷ்யகாரர் நியமநத்தினாலே பட்டர் தர்சநம் நிர்வஹிக்கிற காலத்திலே, உடையவர் நியமநத்தை அடியொத்திக்கொண்டிருக்கிற பெருமாள், பட்டருக்குத் தம் வரிசைகளை ஸாதித்து "வேதாந்திகளை ஜயித்து நம் தர்சநத்துக்கு ஆட்படுத்தும்" என்று நியமித்து, விடைஸாதிக்க; வரிசையுடன் புறப்பட்டு, வேதாந்திகளை ஜயித்துவர; வேதாந்திகளும் ஸம்ஸாரத்தில் அருசியாலே ஸந்யஸித்து, குருகுல வாஸம்பண்ணும் காலத்திலே, த்ரிவிக்ரமன் திருவீதித் திருமதிள், கேவலம் ஜீர்ணமாய் சரிந்துவிழ, வீரஸுந்தர ப்ரம்ஹராயர் அந்த மதிளைக் கட்டிவைத்தார்.

அதன் பின்பு, வேதாந்திகளான நஞ்சீயரும் பட்டரும் அரையரும் தர்சநம் நிர்வஹித்துக்கொண்டிருக்கும் காலத்திலே; திருவரங்கவள்ளலார் திருப்பதியார் கைங்கர்யமான திருமஞ்சந ஶ்லோகம் விண்ணப்பம் செய்கிறதுக்கு நாநாவிதமாக உத்ப்ரேக்ஷித்து, ஶ்லோகங்களும், அதுக்கு ஈடுகளும் அருளிச்செய்து, கைசிக புராணத்

துக்கு ஈடு அருளிச்செய்து, ஒரு கார்த்திகைமாஸத்தில் கைசிக த்வாதசியன்று புராணத்துக்கு அருளப்பாடு ஸாதித்து, பட்டும் பருத்தியும் முதலானவரிசைகளை ஸாதித்தவுடனே, தாமருளிச்செய்த ஈட்டுடனே புராணத்தை விண்ணப்பஞ்செய்ய; பெருமாளும் போர உகந்தருளி ஸகல வரிசைகளுடனே "நம் பட்டனை மேல்வீட்டில் விட்டுவா" என்று கோவணவனை நியமித்தருள; பட்டரும் உகப்புடனே முன்போலே ப்ரம்ஹரதத்திலேறி திருமாளிகையிலே ஸகல வரிசைகளுடனே எழுந்தருளி ப்ரம்ஹரதத்தை பேறித்துக்கொண்டு திருநாட்டுக்கெழுந்தருளினார்.

சீராமப்பிள்ளை வைபவம்.

அந்தரம், அவருடைய திருத்தம்பியார் சீராமப்பிள்ளை பௌரோஹித்யமும் புராண படந கைங்கர்யமும் பண்ணிக்கொண்டிருந்தார்.

கூரநாராயணஜீயர் வைபவம்.

நஞ்சீயர் தர்சநம் நிர்வஹித்துக் கொண்டிருக்கிற காலத்திலே; விண்ணப்பஞ்செய்வாரிலே ஒருத்தர், பெருமாள் ஸந்நிதிக்கு போக்யமாகாமலிருக்க; ஆழ்வானுடைய தேவிகள் ஆண்டாள், அவரிடத்தில் க்ருபையாலே ஆழ்வான் திருமாலிருஞ்சோலையிலே எழுந்தருளியிருக்கச்செய்தே ஆழ்வான் திருவடிகளிலே ஆச்ரயித்து ஸந்யஸித்து, வயோவ்ருத்தராய் ஆசார்யன் முடியே நிரூபகமாக "கூரநாராயணஜீயர்" என்று திருநாமத்தையுடையவராய் மஹாமாந்த்ரிகராய், கோயில் வாஸம்பண்ணிக் கொண்டிருக்கிறவரை அழைத்து, "உம்முடைய மந்த்ரங்களும் ஒரு கைங்கர்யத்திலே உபயோகிக்கும் என்று சொல்லியிருந்தீரே! நீரிப்போது இந்த விண்ணப்பஞ்செய்வாரைப் பெருமாள் கைங்கர்யத்துக்கு யோக்யராம்படி பண்ணும்" என்று நியமிக்க; அந்த கூரநாராயணஜீயரும், ஸுதர்சநசதகத்தைப்பண்ணி, விண்ணப்பஞ்செய்வார் நோயற்று பெருமாள் ஸேவாகாலத்துக்கு யோக்யராம்படிபண்ணினார். தத்காலத்திலேயிருந்த அரையரிலே ஒருத்தர், கேவலம் ஆர்த்தராய், சிற்றின்பத்திலே



மண்டி, கீழ்ப்பறைச்சேரியிலே ஒரு விஷயத்தைப் பரிக்ரஹித்து நாநாவிதமாகத்திரிய, ஸ்வஜனங்களும் அந்த விஷயமும் ஸாமபேத தண்டங்களாலே தெரியச்சொன்னாலும் கேளாமல், ஸ்வஜநங்களாலே நிரஸ்தராய், பறைச்சேரியிலேதானே நியதமாக வாஸம்பண்ணிக் கொண்டிருக்குங்காலத்திலே; பெருமாள் ஒருமஹோத்ஸவத்திலே எட்டாந்திருநாள் கீழையூருக்கு எழுந்தருளுகிறதாக, எல்லைக்கரை நாலுகால் மண்டபத்திலே எழுந்தருளியிருக்க; இவர் பறைச்சேரியிலேயிருந்து பள்ளும்பறையும் இசையுடனேபாடக்கேட்டருளி; பெருமாள் ஸ்ரீபாதம்தாங்குவாருக்கு குருவாயிருந்துகொண்டு பறைச்சேரியிலேயிருக்கிற அரையரை ஸந்நிதிக்கு அழைத்துவரச்சொல்லி நியமித்தருள; அவரும்வருகிறதுக்கு ஸங்கோசித்திருக்க; அழைத்துக்கொத்துப் பரிகரங்களும் ஜீயர்களும் ஸ்ரீவைஷ்ணவர்களும் ஸங்கதராயிருக்க; பெருமாளும் தம் விஷயீகாரம் ப்ரஸித்தமாம்படி அவருக்கு "வரந்தரும் பெருமாளரையர்" என்று பட்டப்பேர் ஸாதித்து, அவர் ஸகலருக்கும் ஸர்வாபீஷ்டங்களும் அப்போது வரங்கொடுக்கும்படி அநுக்ரஹித்தருளி; அவருக்கு விஷயவைராக்யத்தை யுண்டாக்கி, பரிசுத்தராக்கி, திருஊறல் மஹோத்ஸவத்தினன்று நடந்து திரும்பி எழுந்தருளுகிறபோதும் ஏழாந்திருநாள் நாய்ச்சியார் கோயிலுக்கு எழுந்தருளுகிறபோதும் அவர் பாடின பள்ளும் பறையும் இசையிலே கேட்டருளும்படி திருவுள்ளம்பற்றி; அந்தப்படியே செய்யச்சொல்லி நியமித்தருளினார். அதுமுதலாக அரையருக்கு "வரந்தரும் பெருமாளரையர்" என்கிற பட்டப்பேரும் சென்றுவருகிறது. ஆக நாலு பட்டப்பேர் அரையருக்குண்டு.

இந்தப்படி பெருமாள் அரையரை அநுக்ரஹித்தருளி வாழ்ந்தருளுங் காலத்திலே, மேற்கே ஸ்ரீரங்கபட்டண ப்ரபுப்ரேரிதனாய் ஒரு க்ஷுத்ரமுண்டான ஸந்யாஸி, பெரிய பெருமாளை ஸ்ரீரங்கபட்டணத்துக்குக் கொண்டு போகிறதாக அக்ருத்யாஞ்ஜநத்தைப் போட்டுக்கொண்டு ஒருத்தருக்கும் தெரியாமல் பலிபீடத்தில் ப்ரஸாதத்தை

யெடுத்துக்கொண்டு தேஹதாரணம்பண்ணி, மந்த்ரசக்தியாலே பெரியபெருமாளை திருவனந்தாழ்வான் திருப்படிக்கையிலிருந்து நாலங்குலம் சலிப்பிக்க; மூலப்ருத்யரான நம்பிமாரும் உள்ளாருமீக்கண்டு அனைவருடன் உரைக்க; கூரநாராயணஜீயரும், சேதியைக்கேட்டு, உபாயமாகச் சோதிக்குமளவில்; பலிபீடத்தில் ப்ரஸாதம் அத்ருச்யமாய்ப் போகிறபடியினாலே; ஒருநாள் கடுகும் மிளகும் கலந்து சேர்த்து பலிப்ரஸாதம்பண்ணிவைக்க; அதையறியாமல் அந்தக்ஷுத்ரஸந்யாஸி எப்போதையும்போலே அந்தப்ரஸாதத்தை பக்ஷிக்க, அழல்வேகத்தாலே கண்ணிலேநீர்சொரிந்து அஞ்சனம்கரைந்து வெளிப்பட்டான். அநந்தரம், கூரநாராயணஜீயரும் அந்த ஸந்யாஸியை பஹுப்ரலோபநம்பண்ணி, கருவுகலத்தில் பதார்த்தங்களைக் காண்பித்து ஸமாதாநங்களாலேவசீகரித்து, பெருமாளை யதாஸ்திதமாக மந்த்ரசக்தியாலே எப்போதும்போல எழுந்தருளப் பண்ணுவித்து; கருவுகலத்திலே அவனுக்குவேண்டின வஸ்த்ராபரணாதிகளை யெடுத்துக் கட்டி அந்த ஸந்யாஸியின் பின்னே ஆள்கள் கையிலே அனுப்பி, கூட வழித்துணையாக நாலு ஜட்டிகளை அனுப்பி, கர்த்தவ்யாம்சத்தை அவர்களுடன் சொல்லியனுப்பிவைக்க; ஸந்யாஸியும், அவர்களுடன் புறப்பட்டு, கணவாய்மட்டுக்கும் ஜாக்ரதையாய்ப்போய், அப்புறம் நிர்ப்பயனாயிருக்க; இந்தஜட்டிகள் நாலுபேரும், அவன் அசுசியாயிருக்கிற ஸமயத்திலே சடக்கென அவனை வதித்து, வஸ்த்ராபரணாதிகளை யதாபூர்வமாக கருவுகலத்தில் முதவிடுவித்தார்கள்.

கிழையூரிலே சைவம்விஞ்சி, பெருமாள் எட்டாந்திருநாளுக்கு அகிலாண்டேச்வரிக்கு ஸேவைஸாதித்து ஜம்புதீர்த்தத்தில் திருவடிவிளக்கி, கிழக்கே உத்தமசிவிக்குவடக்கே திருமங்கைமன்னன் திருத்தோப்புக்கெழுந்தருளுகிறதுக்கு க்ரிமிகண்டசோழன் நாள்முதலாக சேஷ்டைபண்ணுகையில்; "அவர்களை நிரஸிக்கவேணும்" என்று இந்தக்கூரநாராயணஜீயர் அவர்களுடனே மருவி ஸ்நேஹம்பண்ணி, புரையறக்கலந்து, அந்தச்சைவர் விஸ்



வஸித்தபின்பு, அவர்களுக்கு "ஜங்கமாராதனை, மஹேச்வரபூஜை பண்ணுகிறோம்" என்று கிழக்கே காட்டழகியசிங்கர் கோயிலுக்குப்பின் வெளியிலே பெரியதாகச்சாலையும் நிரைச்சலும் கட்டிவைத்து; அதிலே பாகயத்நத்தைப்பண்ணுவித்து, பெரியதாக ஒரு கொப்பரையிலே நெய்யையும் காய்ச்சிவைத்து, அந்தச்சைவர்களனைவரையும் அழைப்பித்து, அவர்களனைவரும் சாப்பிட இருந்தவுடனே, தாமும் அந்தக்காய்கிற நெய்க்கொப்பரையிலே நரஸிம்ஹயந்த்ரத்தை மார்பிலே கட்டிக்கொண்டு குதிக்கிறபோது, அந்தச் சைவரனைவரும் தீய்ந்து பஸ்மமாய்ப் போனார்கள்.

ஒரு காலவிசேஷத்திலே பதினெட்டாம்பெருக்குக்குப் பெருமாள் எழுந்தருளி, முன்நடந்தபடி திருப்பள்ளியோடத்திலே ஏறியருளி, திருப்பள்ளிஓடத்திருநாள் கண்டருளுகையில்; பெருமாள் க்ஷுத்ர மந்த்ர க்ருத்ரிமத்தினாலே, நடுத் திருக்காவேரியிலே ப்ரவாஹத்துடனே யெழுந்தருள; அச்சேதியைக்கேட்டு, கூரநாராயணஜீயரும் தம்முடையகையில் வலயபவித்ரத்தை வலமாகத்திருப்ப, பெருமாள் திருப்பள்ளிஓடமும் ப்ரவாஹத்துக்கெதிரேறி நிலையிலே யெழுந்தருளி, நாய்ச்சியாரும் பெருமாளும் ஸுகமாகக்கோயிலிலே எழுந்தருளினார்கள்.

ப்ரதிஸம்வத்ஸரமும் திருக்காவேரிபெருக்குவந்தால், திருக்குடலப்பன் ஸந்நிதியும் முழுகிப்போய், கோயிலிலேயும் ஜலம்வருகையில் இச்சேதியை இந்த தேசாதிபதியான ப்ரபுவுக்கும் அறிக்கைபண்ணி, ஸ்ரீஸேநாபதி துரந்தரான கந்தாடைத் தோழப்பருடனே ஆலோசனைபண்ணி, மேற்கே புந்நாகதீர்த்தத்தின்தெருவுக்கு முதலாகத் தந்திருக்கடைய திருக்காவேரியைத்தெற்கே வெட்டிவிடுமளவில் சிந்தாமணி ப்ராம்ஹணர் தங்களுரெல்லையிலே வெட்டவொட்டோமென்று குறுக்கே படுத்துக்கொண்டு, ப்ரதிபந்தகம்பண்ணுகையில், அவர்களுக்கு "பெருமாள் கைங்கர்யம்" என்று எத்தனையாகத் தெரியச்சொன்னாலும் கேளாதபடியினாலே அந்த பகவத்கைங்கர்ய விரோதிகளை யறப்பார்த்து திருக்காவேரியையும் தெற்கே திரு

ப்பி திருமுடிக்கொறையிலே விப்ரநாராயணன்தோப்புக்கு
கிழக்கு முதலாகத் திருவரங்கன் திருப்பதிக்கு இருபுறமும்
கரையும் போடுவித்து அதிலே அணியரங்கன் வாசலையும்
கட்டிவைத்து அந்தக் கரையிலே புன்னாக தீர்த்தத்துக்கு
ஆக்நேயபாகத்தில் ஒருஉடைப்புஎடுக்கிற ஸமயமாயிருக்
கையில் தம்முடையரான கருணாகர தாஸனை அங்கே கா
வலாகவைத்து அவனை பலியாக அறப்பார்த்து அதுக்கு
வடக்காலே ரக்ஷையாக க்ஷேத்ர தேவதையையும் ப்ரதி
ஷ்டிப்பித்து கோயிலுக்கு ரக்ஷையாக க்ராமதேவதை
யான திருவரங்கச் செல்வியையும் ப்ரதிஷ்டிப்பித்து
கீழ்ப்புறமும் பத்ரம்பண்ணி இந்தப்படி க்ஷேத்ரருடைய
க்ருத்ரிமங்களுக்கு நாலுபக்கமும் அவகாசமில்லாதபடி
ரக்ஷைபண்ணி கோயிலுக்கு மேற்கே கந்நாடைத்தோழ
ப்பரிடத்தில் அனுமதி பெற்றுக்கொண்டு வைருணியும்
வெட்டிவைத்து அதிலே திருப்பள்ளியோடத்திரு
நாளை நடத்தும்படி பண்ணிவைத்து கிழையூர் ஜம்புலிங்
கத்துக்கு நேராக கரையமுது சிங்கரை ப்ரதிஷ்டிப்
பித்து, தத்சக்தி அபிபூதமாம்படி பண்ணி; கோயிலிலே
ஒருத்தரும் குடியிராதபடி யந்த்ரஸ்தாபகம் பண்ணி;
ஜலாதந்தையுண்டாக்கி; கோயிலிலே ராஜமஹேந்த்ரன் திரு
வீதியிலே கிழண்டையிலே திருமண்டபம் ஜீர்ணோத்தார
ணம்பண்ணி, சித்ரங்களை எழுதுவிக்குமளவில்; அவிலே
ஸ்ரீராமாயணம் யுத்தகாண்டம் எழுதியிருக்கையில், அந்த
ப்ரதிமைகள் யதாசாஸ்த்ரமாக இருந்தபடியாலே ராத்ரி
நித்யமாக யுத்தங்கள் ப்ரவ்ருத்தங்களாய் விடிந்தாலே
ரக்தமாம்ஸாதிகள் விழுந்திருக்கக்கண்டு, அந்த விக்ரஹ
ங்களுக்கு அங்கபங்காதிகளைப் பண்ணிவைத்தும்; அந்
தத் திருவீதியிலே, உறையூர் கமலவல்லி நாய்ச்சியாரை
யும், சாந்து நாய்ச்சியாரையும், சோழகுலவல்லி நாய்ச்சி
யாரையும், பாகசாலையிலே கோபிநாதரையும், சங்கநிதி
பத்மநிதியையும், அந்தத் திருவாசல் வெளிப்புறத்திலே
பத்ரஸுபத்ரரையும்: ஜீர்ணோத்தாரணம்பண்ணுவித்தார்
குலசேகரன் திருவீதியிலே சேனைவென்றான் திருமண்ட
பத்துக்கு மேற்கு துலாபுருஷ மண்டபத்திலே ஸ்ரீவராஹ



நயினாரையும் அதுக்கு வடக்கே திருமங்கையாழ்வார்
திருநடை மாளிகையிலே வஸந்த கோபாலனையும், பெரு
மாள் தேவன் மண்டபத்திலே லக்ஷ்மி நாராயணப் பெரு
மானையும் வடக்கு வாசலுக்குக்கிழக்கே ஸரஸ்வதியையும்
ஹயக்ரீவனையும்; தெற்கில் ஆர்யபட்டாள் வாசலுக்குக்
கிழக்கே ஸுந்தரபாண்டியதேவர் துலாபுருஷ மண்டபத்
திலே, குழலூதும் பிள்ளையையும், அநாதி எம்பெருமா
னையும்; ஆலிநாடன் திருவீதியில், சந்த்ரபுஷ்கரிணிக்
கரையிலே கோவிந்தனையும், வேதவ்யாஸரையும், ஞானப்
பிரானையும்; அகளங்கன் திருவீதி வடக்குத் திருவாச
லுக்குக் கிழக்கே, எடுத்தகை அழகிய நயினாருக்கு நாய்ச்
சியாரையும், எதிராஜன் கோயிலுக்கு வடக்கே திருவாழி
யாழ்வானுக்கு எதிராக பார்த்தஸாரதியையும், சக்ரவர்
த்தித் திருமகனுக் கெதிராக விட்டலேச்வரனையும், ப்ர
திஷ்டிப்பித்தார்.

இப்படி இந்த கூரநாராயணஜீயர், தேசாந்தரி ஜீய
ராயிருந்து அநேக ப்ரகாரம் கோயிலை நிர்வஹித்து
அபிமாநியா யிருக்கிறபடியினாலே, ஸ்தலத்திலே அனைத்
தும்கொத்துப் பரிஜநங்களிலே சிலபேரும் அபிமாநியான
ஜீயர் பரிஜனங்களும், "இப்படி அபிமாநியான ஜீயர் நமக்
குத் தலைவராய் ஆதீனத்தோடேகூடி யிருக்கவேணும்"
என்று ஆலோசனை பண்ணி, எம்பெருமானார் நியமநத்
தையும் அதிக்ரமிக்கமாட்டாதே ஸ்ரீ ஸேநாபதி துரந்தர
ரான கந்தாடை தோழப்பரிடத்தில் சொல்ல அவ ரிசை
யாமல் தள்ளிவிட, அவர் குமாரர் சின்ன வரதாசார்யர்
பெரிய வரதாசார்யர் ஸ்ரீகார்யம் விசாரித்துக்கொண்டு
வருகையில் ஒருநாள் ராத்ரி அமுது செய்தருளின
பாலிலே த்ருணமிருக்கக்கண்டு அது பெருமாள் திரு
மிடற்றிலே எப்படிகுத்தியதோ அப்போது அழகிய மண
வாளன் திருமனதிலே எப்படி நொந்துதோவென்றுமூர்ச்
சாக்ராந்தராய் ஸ்மாரகம் தப்பி வெகுவாய் கண்ணும்
கண்ணீருமாகத் துக்கிக்க அப்போது அழகிய மணவா
ளன் ஆவேசமுகேந அவர்களை துக்கப்பட வேண்டா
மென்று சொல்லி, அவர்கள் தமக்கு ஆயியென்று திரு

நாமம் சாதித்தருளினர். அது முதல் சின்னாயி பெரியாயியென்று திருநாமம் நடந்து வருகிறது. அந்த ஆயி ஸ்ரீகார்யம் விசாரிக்குங்காலத்திலே ஆயியும் யாகம் பண்ணிக்கொண்டிருக்க, அப்போது உத்ஸவம் ப்ராப்தமாயிருக்க பரிஜநங்கள் இதுஸமயம் என்று வர்ஷ ப்ராப்தமானவ்யாஜத்தை வைத்து வஞ்சனையாக யாகசாலைக்குப் பெருமாளை யெழுந்தருளப்பண்ண, ஆயியும் ஹ்ருஷ்டராய் தம்முடைய ஸர்வஸொத்தையும் பெருமானுக்கு ஸமர்ப்பிக்க, அனந்தரம் இந்தப் பரிஜனங்கள் பண்ணின வஞ்சனையை பெருமாள், கந்தாடையாண்டானுடைய சிஷ்யனான சோழனுக்கு ஸ்வப்னம் ஸாதிக்க, சோழனும் திருநகரியிலிருந்து பரிஜனங்களைப் பார்த்து நீங்கள் எனக்கு வஞ்சனைபண்ணினாலும் முதலியாண்டான் வம்சத்தில் அழகிய மணவாளனுக்கு கடாக்ஷம் விசேஷமாக உண்டாகையாலே இந்தவிசை ஸ்ரீரங்க வாஸிகளானபடியால் இந்தப் பிழையைப் பொறுத்தோமென்று கோபித்துக்கொண்டான். அப்போது பரிஜனங்கள் பெருமானுக்கு ஸமர்ப்பித்த ஸர்வ ஸொத்தையும் எடுத்துக்கொண்டு சோழனிடம் வந்து ஸ்வப்ன வ்ருத்தாந்தத்தையும் தனக்கு பெருமாள் ஸாதித்ததையும் சொல்லி எப்போதும்போலே கந்தாடை ஆயியை ஸர்வஸொத்தையும் அங்கீகரிக்கவேணுமென்று சொல்ல, ஆயியும் அது அறிந்துகொண்டு முதலியாண்டானுக்குப் பெருமாள் ஸாதித்த ஸேனாபதி பட்டயமும் சோழன் ஸமர்ப்பித்த தானசாஸனமும் ஆகிய இரண்டையும் கந்தாடை ஆயியைக்கொண்டு குறை ஸர்வ ஸொத்தையும் கருவு கலத்திலே முதலிட்டு; பரிஜனங்களைப் பார்த்து இந்த வஞ்சனை பண்ணவேண்டியதென்ன? அப்படி ஜீயரை வைக்கவேணுமானால் நம்மோடு சொல்லலாகாதாவென்று சொல்லி அந்த ஜீயருக்கு கந்தாடை ஆயிக்கு ஸ்வாதீனமான உடையவர் மடத்தையும் உடையவர் இலச்சினையையும் திருவாழி மோதிரத்தையும் கோவணவர் வரிசையாலே பிரித்து, பெரிய பெருமாள் திருமேனி திருப்பவள உபசாரத்துக்கு கஸ்தூரி, திருமண் காப்பு, அஞ்சனக்காப்பு, புழுகுக் காப்பு, இந்தக்



கைங்கர்யங்களை ஜீயருக்கு நியமித்து அவருக்கு தேஹதாரணத்துக்கு ஸேனைமுதலியார் ஸந்நிதியிலே மாதுகரமும் கல்பித்து ஆயிஸம்மதியுடனே அனந்தகொத்துப் பரிஜனங்களும் கூரநாராயண ஜீயரை மடத்திலே விட்டு வந்தார்கள். சிலகாலத்துக்குப்பின்பு ராஜகோபத்தாலே பெரியாயி ஆதீநம்விட்டு திருமழிசைக்கு எழுந்தருள கந்தாடைத்தோழப்பரும் பெருமாள் கோயிலுக்கு எழுந்தருளினர்.

அதுமுதலாக, கூரநாராயண ஜீயர், பக்த்யதிசயத்தாலே, நலந்திகழ் நாராயணஜீயரா யிருந்தவருக்கு "ஸ்ரீரங்கநாராயண ஜீயர்" என்று திருநாமமாய்த்து. இந்த ஸ்ரீரங்கநாராயண ஜீயர் கைங்கர்ய விவரம்—செங்கோல்தரித்து ஸ்ரீகார்யம் நிர்வஹிக்கிற கோவணவர்கைங்கர்யத்திலே பிரித்துக் கட்டுகிறதுக்கு விவரம்;—திருமஞ்சநத்துடனே கருவுகலவாசலிலே வந்து, அஞ்சநக்காப்புமுதலான ஸுகந்தாதிகளைத் திருத்திவைத்து, நாய்ச்சியார் கோயிலுக்கு அனுப்புகிற அஞ்சனக்காப்பு முதலான ஸுகந்தங்களுக்குத் திருவாழியிலச்சினையிட்டு, ஸந்நிதியிலே புகுந்து திருவாராதனம் நடப்பித்து, அலங்காராஸநாநந்தரம் ஸந்நிதியிலேயிருந்து, கஸ்தூரித்திருமண்காப்பு அஞ்சநக்காப்பு சாத்தியருளின பின்பு நாய்ச்சியார் கோயிலுக்குபோய், அங்கேயும் திருவாராதந காலத்திலே இலச்சினைப்படியே யிருக்கிற அஞ்சநக்காப்பு கஸ்தூரித்திருமண்காப்பு ஆனவுடனே, வெளியிலே புறப்பட்டு எழுந்தருளுகிறதும், புழுகுகாப்பு சாத்துவிக்கிறதும், இந்தக் கைங்கர்யம். இவர் பேருக்கு கைங்கர்ய விவரம். ஸேனை முதலியார் ஸந்நிதியிலே மாதுகரம் ஸ்வீகாரம் பண்ணுவிக்கிறது. ஜீயர் பரமபதத்துக்குப் போனால் மடத்து உபகரணங்களும் இலச்சினையும் கருவுகலத்திலே முதலிட்டு பரிஜனங்கள் அனைவரும்கூடி ஒரு ஜீயரை நிச்சயம்பண்ணி ஸேனாபதி துரந்தரான கந்தாடையாண்டானுமதியுடனேபெரிய பெருமாள் ஸந்நிதியிலே திருவாழி யிலச்சினையும் ஸாதித்து ஸ்ரீரங்க நாராயண

ஜீயரென்று சொல்லி ஸேவிக்கப் பண்ணி மடத்திலே கொண்டுபோய் விட்டு அரவாணரும் செலவழிக்கிறது.

சகாப்தம் ஆயிரத்து இருநூற்று நாற்பத்தொன்பதுக்குமேல் செல்லாநின்ற அக்ஷய வருஷம் பன்றியாழ்வான் திருமேட்டுக் கலகத்துக்குமேல் சகாப்தம் ஆயிரத்து இருநூற்றுத் தொண்ணூற்று மூன்றில் செல்லாநின்ற பரீதாபி வருஷம் வைகாசிமீ ௨௨ கலகந்தீர்ந்து, துலுக்கர் நிஸ்ஸேஷமாய் அற்று திரும்பவுந் திருப்பதியிலே பெருமாள் நாய்ச்சிமாருடன் ப்ரதிஷ்டையாய் எழுந்தருளின பின்பு, வடக்கே வித்யாரண்யனாலே விஜயநகரம் ஆனந்தியந்தி பட்டணம் ப்ரபலமாய் ராஜ ஸம்ஸ்தான முண்டாய் அரியரிராயர் காலத்திலே இந்த ஸ்ரீரங்க நாராயண ஜீயர் பட்டத்தில் உத்தமர் கோயில் காணியாளர் ஸ்ரீரங்க ராயர் அஞ்சாவதுபட்டத்தில் வந்தவர், வாய்ச்சாலநாராய் கோவணவரில் ப்ரதானரான மடத்திலேயிருந்து நிறைவு குறைவு விசாரிக்கிறதும், இவருக்குப் பேறு விவரம். பெருமாள் புறப்பட்டருளி திருவணுக்கன் திருவாசலுக்கு மேற்கே திரும்பினவுடனே தீர்த்தமும் பரியட்டமும் ஒரு மாலையும் ஸ்ரீ சடகோபனும் ஸாதித்த பின்பு, செங்கோல நிகாரிக்கு சேனைமுதலியார் வாசலிலே கந்தாடையாருக்கு நடக்கிறதைத் தள்ளி, தமக்கு முன்னே ஸாதிக்கும்படி பண்ணியும் நித்யமாக செங்கோலுக்கு முன்னே ஸேனைமுதலியார் ஸந்நிதியிலே ப்ரஸாதஸ்வீகாரம் பண்ணிவைக்கிறதும் தீர்த்த விநியோகத்திலும் ப்ரஸாத விநியோகத்திலும் செங்கோலுக்கு முன்னே ஸ்ரீரங்க நாராயணஜீயரென்று அருளப்பாடு ஸாதித்து விநியோகம் ஸாதிக்கிறதும் விட்டிருக்கிறது. கோயில் ஸ்ரீகார்யங்களிலே ஸேனாபதிதுரந்தரரான ஸ்ரீரங்க நாராயணஜீயரென்று ஸ்ரீமுகம் எழுதுகிறது நூதனமாகையாலே அறுதியாய் திருமொழித் திருநாளிலே திருமாலையபிநயத்திலே 'அரங்கனார்க்காட் செய்யாதே' என்கிற ப்ரகரணத்திலே ப்ரதமம் ஸ்ரீஸேனாபதி ஆரந்தார் கோவணவர் கைங்கர்யத்தை அபிநயிக்கிறதிலே செங்கோல் தரித்து ஸ்ரீகார்யம் விசாரிக்கிற ப்ரகாரத்தை அறுதியாய் நடந்து



வருகிற கந்தாடையாரே அனுகரிக்கிறதே யல்லாமல் நூதனமாய் வந்த ஜீயர் அனுகரிக்கிறதில்லை. காலவிசேஷத்திலே ஜீயர் மடத்துக்கு ஸ்ரீரங்கராஜர் திருவாராதனமுண்டுபண்ணி ஆதீனம் ஸ்ரீ பண்டாரமாகையாலே ஸ்ரீரங்கராஜர் திருவாராதனத்துக்குத் திருக்கொட்டாரத்திலே அமுதுபடி சோறாய் நெய்யமுது திருவிளக்கெண்ணெய் பாலமுதுக்குப் பசு அதுக்குத் தவிடு முதலானதுகளு முண்டாக்கிக்கொண்டு பற்றினார். கோயில் பரிஜனங்களில் சூத்திரக்கொத்துக்கு ஆச்ரயணமும் காலவிசேஷத்திலே சாதித்துக்கொண்டுவந்தார். உடையவர் நியமனப்படிக்கு குலோத்துங்கச் சோழன் முதலியாண்டான் திருவடிகளிலே ஆச்ரயித்து ஸ்ரீரங்கதேவதாயத்தைச் சேர்ந்த கோவணவர் வரிசை முதலியாண்டான் கலந்தொடங்கி பன்றியாழ்வான் திருமேட்டுக்கலக பர்யந்தம் ஸ்ரீரங்கஸ்ரீ அஸாதாரணமாய் நூற்றுத் தொண்ணூறு வருஷம் கந்தாடையாருக்கு நடந்தது. கால விசேஷத்திலே கந்தாடையாருக்கு சமயவட்டிலும் ஜீயருக்கு அரைமனை தீர்த்தமாக உத்தரகிண்ணி தீர்த்தமும் ஸமமாக சில நாள் நடந்தது. பின்பு சிலநாள் ஈச்வர வருஷம் முதல் விக்ரம வருஷம் வரையில் கந்தாடையாரைத் தள்ளி ஜீயரைச் சேர்த்துக்கொண்டு வேதவ்யாஸ பட்டர் குமாரர் வேதாசார்ய பட்டர் துர்க்காதிபதிகளைக்கட்டிக்கொண்டு ஸ்ரீகார்யம் நாலுவருஷம் நிர்வஹித்தார். சிலநாளைக்குப்பின்பு முதல் அண்ணன் பட்டர் ஜீயர்பட்டத்திலே அழகிய மணவாள ஜீயரிருக்கச்செய்தே ஸமமாக மூன்று பேருக்கும் நடந்தது. அதற்குப்பின் வடக்கே சீமைகளாண்டு வெகு வருத்தம் ஸம்பவித்து, தப்பிக்கொண்டு இந்த தேசத்திலே வந்து ஸ்ரீரங்க நாராயண ஜீயர்பட்டத்திலிருந்து பட்டரையும் பரிஜனங்களையும் துர்க்காதிபதிகளையும்கட்டிக்கொண்டு முன்பரிஜனங்களனைவரும் கல்பித்த கட்டளைப்படிக்கு கதம் உடையவர் நடப்பித்த ஸம்ப்ரதாயாநுகுணமாக கொத்துநிர்ணயமும்ஜீயர் ஏகாங்கி இவர்களுக்குக் கைங்கர்ய விவரம் திருமுகப்பட்டயமாக தர்மவர்மாவின் திருமதிளிலே திருவணுக்கன் திருவாசலுக்கு மேற்கே சிலாலிகிதம்பண்ணி

வைத்தார்கள். சில காலத்துக்குப்பின்பு சின்னாயி பெரியாயி காலத்திலே கரிகால் சோழன் பெரியாயி திருவடிகளிலே அபசாரப்பட்டு பெரியாயி ஆதீனம்விட்டு வடக்கே திருமழிசைக்கு எழுந்தருளினார். கந்தாடைத் தோழப்பரும் பெருமாள் கோவிலுக் கெழுந்தருளினார். சிலகாலத்துக்குப்பின்பு தேவப்பெருமாள் கந்தாடைத் தோழப்பர் ஸ்வப்னத்திலே ம்லேச்ச காலத்தாலே உம்முடைய மூன்றாங் குமாரராலே ஸ்ரீரங்கஸ்தலம் சேரப்போகிறீரென்று நியமிக்க பின்பு பெரியாயி திருவடிகளிலே அபசாரப்பட்ட கரிகால் சோழன் மாண்டு சோழபட்டங் குலைந்து பஞ்சத்திருவடி முத்துக்ருஷ்ணராஜா ராஜ்யம் பண்ணுகையில் அழகிய மணவாளப் பெருமாள் அவன் ஸ்வப்னத்திலே தன் கார்யம் பார்க்கைக்கு தேவப் பெருமாள் ஸந்நிதியிலேபோயிருக்கிற தோழப்பர் குமாரர் சயானை அழைப்பித்து அவர் முதலியாண்டானதினத்தை ததீனமாகச் சேர்க்கச்சொல்லி நியமித்தபடியினாலே அவனும் அவரை அழைப்பித்து அவர் சிஷ்யனாய் பூர்வப்ரகாரம் எல்லாவற்றையும் அவராதீனம் பண்ணினார். அந்த சயாரும் வாதூல தேசிகராய் அனேக கோபுரப்ராகாரமண்டபங்களை ஜீர்ணோத்தாரணம்பண்ணி ஸ்வாமிக்கு நித்யோத்ஸவம் பக்ஷோத்ஸவங்களையும் திருமணி திருப்பவள உபசாரங்களையும் பயபக்தி யதிசயத்துடனே நடத்திக்கொண்டு கார்யம்நிர்வஹித்தார். அவர் குமாரர் திருக்கோபுரத்து நயினார் நரஸிம்ஹராஜன் துரைத்தனத்தில் வெகுகாலம் ஸ்ரீகார்யம்நிர்வஹித்தார்; அவரிரண்டாங் குமாரரான சித்தண்ணர் வாதூலதேசிகபதநிர்வாஹகராய் ஸ்ரீரங்கஸ்ரீ துரந்தரராய் பஞ்சதிருவடி கேசவராஜரவைத் தொட்டு ஸ்வாமிக்கு அனைத்தழகுங் கண்டருளப்பண்ணி அனேக கைங்கர்யங்களைப் பண்ணிக் கொண்டிருந்தார். அவர் குமாரர் ஸ்ரீரங்கராஜநாயன் வாதூலதேசிகனென்று பஞ்சதிருவடி வீரப்ப ராஜாவாலே அழகிய மணவாளப் பெருமாளுக்கு அனேககைங்கர்யம் நடத்திவைத்துக்கொண்டு ஜ்ஞானபக்தி வைராக்யாதிகாரியாய் ஸ்ரீகார்யஸ்ரீயைசிந்தாமல் பொங்காமல் மங்காமல்ஸகலோபசாரவரிவஸ்யா



ம் நடப்பிக்க, ஸ்ரீரங்கஸ்ரீயும் தினந்தினம் வ்ருத்தியடைந்துவர, ஸ்ரீரங்கராஜ நாயனும் வெகுகாலம் அனபத்யராய் ஸ்ரீகார்யநிர்வாஹகத்துக்குப் பின்னொருத்தருமில்லையேயென்று விஷண்ணராயிருக்க பகவதனுக்ரஹத்தாலே குமாரர் அவதரித்த பன்னிரண்டாநாள் தேசிகரென்று திருநாமம் ஸாதித்து ஸ்வாமி ஸந்நிதிக்கு ஸேவைக்கு எழுந்தருளின காலம் ஆயிரத்து இருநூற்று நாற்பத்தொன்பதுக்குமேல் செல்லாநின்ற அக்ஷய ஸம்வத்ஸரத்தில் துலுக்கர் தொண்டைமண்டலம் வ்யாபித்தாரென்று கேட்டு ஸ்வாமி ஸந்நிதியிலே இங்கே யெழுந்தருளியிருக்கிறதும் வெளியிலே யெழுந்தருளுகிறதும் திருவுள்ளமாவென்று திருவுள்ளச்சீட்டுப்போடுகையில் அழகிய மணவாளப் பெருமாள் எழுந்தருளியிருக்கிறதே திருவுள்ளமென்று நியமித்தபடியினாலே திருநாளாரம்பித்து நடக்கையில் பன்றியாழ்வான் கோவிலிலே பலிவெட்டு மண்டபத்திலே அழகிய மணவாளப்பெருமா ளெழுந்தருளியிருக்கிற ஸமயத்திலே துலுக்கர் ஸமயபுரங் கடந்து வருகிறதைக்கேட்டு ஸ்ரீரங்கராஜநாயன் திருவோலக்கத்திலே யெழுந்தருளியிருக்கிற பன்னீராயிரம்ஸ்வாமிகளையும் திருவோலக்கங்குலையாமலிருக்கும்படி நியமித்து திருவாராதனம்நடக்கிறதாகத் திருத்திரை பரிமாறி, சிறுபல்லக்கிலே பெருமாளையேறியருளப்பண்ணி ஒரு அர்ச்சகரையும் ஒரு உள்ளூராரையும் ஸ்ரீபாதந்தாங்குவாரையும் சில பரிகரங்களையும் தமக்கு அந்தரங்க சிஷ்யரோடேகூட பிள்ளைலோகாசார்யரையும் கூட்டி தெற்கே அனுப்பி, தாம் கோயிலிலே புகுந்து சில திருவாபரணப் பெட்டிகளையும் திருப்பல்லக்கிலே ஸ்ரீரங்கநாயச்சியாரையும் சில பரிகரங்களையும்கூட்டி பெரிய பெருமாள் குலசேகரன்படி கல்திரை பரிமாறி, திருமணத்தூணுக்குள்ளே ஒரு விக்ரஹத்தை வைத்து திருக்காப்புகளைச் சேர்த்துவிட்டார்கள்.

நாய்ச்சியார் ஸந்நிதியிலேயும் அந்தப்படி பண்ணி மற்றைஸ்தானங்களெல்லாம் திரோதானம்பண்ணி யெப்போதையும்போலே தாம் திருவோலக்கத்திலேவர, துலுக்கரும் திரையில் புகுந்து விக்ரஹத்தைக்காணாமல் பன்

ரியாழ்வானையும் அபசாரப்பட்ட ஸ்வாமிகளைவரையும் திருமுடி திருத்தி கோயிலிலே ப்ரவேசித்து, செம[illegible]ரின் வாசலிலிருந்து விக்ரஹத்தை யழித்து, தென்கரை வடகரையெல்லாங் குடிபடைகளுக்குச் சேதமில்லாதபடி ஆண்டுகொண்டு எஜமானன் அழகியமணவாளன் திருமண்டபத்திலே குடியிருக்குமளவில் எம்பெருமானாரடியாரிலே ஒருத்தி அவனைச்சந்தித்து அவனுடன்கூடியிருந்து நன்றாக வசீகரிக்குமளவில் அவனும் முன்னேநினைத்தபடி கோயிலைபாதியாமலிருக்குமளவில் பூர்வம் ஜீயர் யந்த்ரஸ்தாபனம்பண்ணினதினால் அவனுக்குச் சரீரத்திலே வ்யாதிவருமளவில் அவன் இது தைவக்குற்றமென்று நினைத்து கோயிலையழியப்பார்க்குமளவில் அந்த எம்பெருமானாரடியாள் உபாயமாக அவனுக்குத்தெரியச்சொல்லி அவன் நினைத்தபடிசெய்யாமலே கோபுரமண்டபம் கொடுங்கைகளை அங்கபங்கம்பண்ணிவைத்து த்வாரபாலகர் முதலான சுற்றில் விக்ரஹங்களையும் அங்கபங்கம் பண்ணிவைத்தார்கள். அவ்வளவிலே அவன் ஸந்துஷ்டனாயிருந்தான். அப்படியும் அவனுக்கு நாளதுவரைக்கும் தேசவு விஞ்சினபடியினாலே இவ்விடத்திலே யிருப்பதை விட்டு கண்ணனூரிலே மதிளைப்பிடுங்கி கோட்டைகட்டி வைத்து பொன்வளையிலே திருவிளையாட்டத்தில் அழகியமணவாளத்தில் காணியாளரில் சிங்கப்பிரானென்கிற ப்ராஹ்மணர் எம்பெருமானாரடியாள்முகமாகத் துலுக்கனைக்கண்டு அவன் ராஜாவுக்குக் கார்யகாரராயிருந்துகொண்டு கோயிலுக்குத் தீங்கில்லாதபடி ரக்ஷித்துக்கொண்டிருந்தார்.

பெருமாளும் நாய்ச்சிமாருடனும் அந்தரங்க பரிஜனங்களோடுங்கூடி சிறந்த காட்டிலே எழுந்தருள, கள்ளருந் தொடர்ந்து ஸர்வஸ்வாபஹாரம்பண்ண, அவ்விடத்தினின்று அப்புறத்திலே போகையில் அங்கே சிறுவஞ்சகள்வர் எதிர்கொண்டு சிறப்புக்கட்டளையமைத்த அவர்கள்பாவமறிந்து அத்தைப்பரிக்ரஹியாமல் கடாக்ஷித்து ஜோதிஷ்குடியிலே ஒருமாஸம் எழுந்தருளியிருக்க, அங்கே பிள்ளைலோகாசார்யர் திருநாட்டுக்கெழுந்தருளி திருவத்யயனார்த்தமாக சரமகைங்கர்யம்நிறைவேற்றினபின்



திருமாலிருஞ்சோலைமலையேற வெழுந்தருளி ஒருஸம்வத்ஸரம் எழுந்தருளியிருந்து திருநாமத்தாலே ஒருகிணறு [illegible]பண்ணி, அவ்விடத்தினின்று புறப்பட்டருளி மலையாளத்திலேயெழுந்தருளி அங்கங்கே அவரவர்களாலே ஸத்க்ருதராய் கோழிக்கூட்டேற வெழுந்தருளி அவ்விடத்தில் சிலநாளெழுந்தருளியிருக்க, அவ்விடத்திலே மற்றைதிவ்யதேசங்களிலே எம்பெருமான்களும் நம்மாழ்வாரும் எழுந்தருள, அந்தவெம்பெருமான்களையும் ஆதரித்தருளி நம்மாழ்வாரைத் தம் திவ்ய ஸிம்ஹாஸனத்திலே வைத்துக்கொண்டு ஒருஸம்வத்ஸரம் அங்கே யெழுந்தருளியிருந்து அவ்விடத்திலும் ஆழ்வாருடன் புறப்பட்டருளி ஸமுத்ரத்திலே ஓடத்தின்மேலேயெழுந்தருள, மத்யே ஆழ்வார் ப்ராமாதிகமாக ஸமுத்ரஜலத்திலே யெழுந்தருளி பெருமாள் தனித்தெழுந்தருளத் திருவுள்ளமில்லாதபடியினாலே ஓடத்தைத்திருப்பி பெருமாள் நியமனத்தாலே கருடன் வட்டமிட்டவிடத்திலேமுழுகி ஆழ்வாரையெடுத்து பெருமாளுடன்சேர்க்க, பெருமாளு மாழ்வாருடன் திருக்கணாம்பிலே அனேகநாள் எழுந்தருளியிருந்து ஆழ்வாருக்குத் தம் வட்டமணை முத்துச்சட்டை முதலான பிருதுகளும் ஸாதித்தருளி, ஆழ்வாரை அங்கே நிறுத்தி தாம்ஸபரிகரராய் புங்கனூர்வழியாகத்திருநாராயணபுரமேற எழுந்தருளினார். ஆழ்வாருடனே ஏகாஸனத்திலேயிருந்து ஏகபாத்ரத்திலே திருவாராதனங் கண்டருளுகையில் ஆழ்வார் திருப்படிக்கமும் பெருமாள் ஸ்ரீ சடகோபமும் ஸாதிக்கிறது. அதுமுதலாகப் பெருமாள் திருவாராதனமானவுடனே திருப்படிகத்தீர்த்தம் ஸேனைமுதலியார்கோயிலிலே ஸேனாபதி தூரந்தார்முதலான பாரபத்தியக்காரருக்கு ஸாதிக்கிறது. பெருமாள் புறப்பட்டருளினால் அதுமுதலாக நடையிலே ஸுந்தரபாண்டியன் கொண்டுபோகிறதில்லை.

இந்தப்படி திருநாராயணபுரத்திலும் அனேகநாள் எழுந்தருளியிருந்து ப்ரதக்ஷிணமாக திருவேங்கடத்துக்கெழுந்தருளி திருமலையிலே திவ்யோத்ஸவங்களுடனே வெகுகாலமெழுந்தருளியிருந்தார். இந்தப்படி அங்கே

யெழுந்தருளியிருக்குங் காலத்திலே துலுக்கன் பாண்டிய மண்டல பர்யந்தம் வ்யாபித்திருக்க வித்யாரண்யனாலே சகாப்தம் ஆனைகொந்திபட்டணம் ப்ரபலமாய் அங்கே ராஜஸம்ஸ்தானமுண்டாய் ஹரிஹரராயர் ராஜ்யம்பண்ணி தொண்டைமண்டலமளவாகக்கட்டி அவர் கார்யகாரர் கோப்பணஉடையார் செஞ்சியிலேயிருந்து திருவேங்கடமுடையானை ஸேவிக்கிறதற்குத் திருமலைக்குவந்து திருவேங்கடமுடையானைத் திருவடிதொழுது அழகிய மணவாளப்பெருமாள் எழுந்தருளியிருக்கிற பூர்வோத்தரம்விசாரித்துப்பெருமாளை யெழுந்தருளப்பண்ணுவித்துக்கொண்டுவந்து சிங்கராயபுரத்திலே யெழுந்தருளப்பண்ணி, அங்கே அனைத்தழகுங் கொண்டருளப்பண்ணிக்கொண்டிருக்க இந்தச்சேதியை அழகியமணவாளக்காணியாளனான சப்பிரான புத்ரன் திருமணத்தூண்நம்பி அறிந்து உத்தமநம்பியை செஞ்சிக்கு அனுப்பிவைத்து ஒருகால விசேஷத்திலே இவ்விடத்திலே துலுக்கன் மர்யாதை உளவாக அனுப்பிவைக்கையில் கோப்பணஉடையாரும் அதிக பலத்துடனேவந்து துலுக்கரை நிச்சேஷமாக அழித்து சிங்கபுரத்திலும் சகாப்தம் ஆயிரத்து இருநூற்றுத தொண்ணூற்று மூன்றும் வருஷத்திலே செல்லாநின்ற பரிதாபிஞ வைகாசிமீ பதினேழாந்தேதி திருவரங்கன் திருப்பதியிலே பெருமாளை நாய்ச்சிமாருடன் எழுந்தருளப்பண்ணி, கோயில் திருக்காப்புநீக்கி பெருமாளுடன்சேர்த்து ப்ரதிஷ்டிப்பித்து திருவாராதனமும் பண்ணிவைத்து தர்மவர்மாவின் திருமதிளிலே கிழக்கண்டை வெளிப்புறத்திலே இந்தவ்ருத்தாந்தத்தை

ஆநீயாநீலச்ருங்கத்யுதிரசிதஜகத்ரஞ்சநாதஞ்ஜநாத்ரே:
செஞ்ச்யாமாராத்ய கஞ்சித்ஸமயமதநிஹத்யோத்
தநுஷ்காந்துருஷ்காந் லக்ஷ்மீக்ஷ்மாப்யாமுபாப்யாம்
ஸஹநிஜநிலயே ஸ்தாபயந் ரங்கநாதம் ஸம்யக்வர்யாம்
ஸபர்யாமக்ருத நிஜயசோதர்ப்பணோ கோப்பணார்ய:॥



என்று சிலாலிகிதம் பண்ணி வைத்தான். பெருமாளும் நாய்ச்சியாருடன் சேர பாண்டியனில் இனிதுடனிருந்து எம்பெருமானடியானை யழைத்து, யோர உகந்தருளி உனக்குவேண்டினதைக் கேட்டுக்கொள்ளென்று திருவுள்ளமாகையில் அவன் தன்னுடையவர்க்கத்துக்கு திருமடைப்பள்ளியில் கொள்ளியும் திருக்கொட்டாரத்தி லேவாய்க்கரிசியும் அந்திமகாலத்திலே ஸாதிக்கவேணுமென்றுகேட்டுக்கொண்டான். அதுமுதலாக இந்தப்படி நடந்துவருகிறது. கோப்பணஉடையார் ஆனிமீ பதினேழாந்தேதி உத்தமநம்பிகையில் தாராபூர்வகமாகப்பதினேழாயிரம்பொன்னுக்குத் திருவிடையாட்டமாக ஐம்பத்திரண்டு க்ராமம் ஸமர்ப்பித்தார். அவருடன் வந்த குண்டுஸால்வயர் பூர்வம் ஸ்ரீரங்கன் திருமுற்றத்தில் பாண்டியன் கைங்கர்யமான பொன்னின் திருக்கொடித்தண்டு துலுக்கனழிக்கையில் வெண்கலவார்ப்பாகத்திருக்கொடித்தண்டு பண்ணிநட்டிவைத்தார். இப்படியிருக்கையில் ஸ்தலத்துப் பரிஜனங்கள் விஜயநகரத்துக்குப் போய் கோயில் கணக்கு ஆதாய செலவு ஒப்பவைத்து வெகுமானம் பெற்றுவருகிறகாலத்திலே இந்ததுர்க்காதிபதி துலுக்கவாணத்துக்குப்பின் ஸ்ரீரங்கநாராயண ஜீயர் பட்டத்துக்கு ஐந்தாமவரான உத்தமர்கோயில் ஸ்ரீரங்கராஜனுக்குப்பட்டம்கட்டி திருவனுக்கன் திருவாசலிலே புதியதாய் அ ர வெகுமதி பரியட்டம் சடகோபன் மர்யாதைநடந்தது. கந்தாடை ரங்கராஜராயன் வம்சஸ்தர் செஞ்சியிலே கோப்பண உடையாரிடத்தில் அறியப்படுத்தி அறுதியாய் உடையவர் காலத்திலும் சோழன் காலத்திலும் முதலாக முன் அக்ஷயவருஷம் வரையில் கோவணவர் வரிசை ஸேனைமுதலியார் ஸந்நிதி வாசல் அக்ர வெகுமதி எங்களுக்கு வெகுகாலமாய் நடக்கிறதை அதிக்ரமித்து ஜீயருக்கு நடப்பித்ததைச்சொல்லி திருபம்வாங்கி துர்க்காதிபதிக்குக்கொடுக்கையில் அந்ததுர்க்காதிபதியும்ஜீயருக்கு அபிமானியாகையாலே உபேக்ஷையாயிருந்தான். கந்தாடையாரும் உத்தமநம்பியை அழைத்துப் பார்த்தீரா அதிக்ரமத்தை, நான் கொஞ்சத்திலே விடுகிறதில்லையெ

ன்று ப்ரயத்னம் பண்ணுவோமென்று சொன்னார். தேவரீர் மஹாகுலப்ரஸூதராளாய் இப்போது ராயஸம்ஸ்தானம் வெகுதூரமாயிருக்கிறது. அடிக்கடி கணக்கென்றும் வழக்கென்றும் காலக்ஷேபத்துக்கு விரோதமாயிருக்குமென்றுசொல்லி தேவரீருக்கு அனுஞியாய் அச்ரவெருமதி நடந்தபடிக்கு நடக்கும்படியாயும் அவ்விடத்திலிருக்கு வந்த அதிகாரிகள் தேவரீருடைய அநுமதி பெற்றுக்கொண்டு கோயில் கார்யம் பார்க்கும்படியாயும் பண்ணி, ராயரண்டைக்குப்போய் உத்தரம்வாங்கிக் கொண்டு வருகிறேனென்று உத்தமநம்பி சொல்லுகையில் நல்லதென்று கந்தாடையார் சொன்னார்கள்.

இப்படியிருக்கையில் முன் அனந்த[illegible]க்குப்பரிஜனங்கள் அவரவர் கைங்கர்யங்களைத்தா[illegible]ராமல் பண்ணிக்கொண்டு விஜயநகரத்துக்குப்போ[illegible]ராயருக்கு திருவிளையாட்டத்தில்கணக்கும் ஆதாயத்துக்கு தனிநாயக சிறப்புக்கும் ஜாரியாககணக்கு உத்தரித்து[illegible]ருகிற காலத்திலே ஸ்தலத்தில் துர்பலங்கள் அதிக[illegible]ய விஜயநகரத்தில் அரண்மனைக்குப்போகிறதற்குபலமில்லா[illegible]ல் விசாரப்பட்டுக்கொண்டிருக்கையில் இந்தஸ்தலத்தில்காணியாட்சிக்காரர் பூர்விகர் சோழியர் காணியாளர் இரண்டுவகையாயிருக்கும். அதில்திருவரங்கநம்பி அணியரங்கநம்பி திருமணத்தூண்நம்பி செல்வநம்பி பெரியகோயில் நம்பி சோழியர் வகையில் உத்தமநம்பி திருப்பாற்கடல் நம்பி ஸ்ரீவில்லிபுத்தூர் நம்பி என்று இப்படி சிறிதுபேருண்டு. உத்தமநம்பியென்கிறவர் இந்தப் பரிஜனங்களண்டையில் வந்து நீங்கள் நன்றாய் விசாரப் படுகிறீர்கோள், பரிஜனங்கள் பத்துக்கொத்தும் விஜயநகரத்துக்குப்போனால் பல்லக்கு முதலான செலவுகள் ரொம்ப செல்லுமே. என்னை மாத்ரம் ப்ரமாணம் பண்ணி யனுப்பினால் நானே கணக்கு உத்தரித்து வெகுமானம் பெற்று வருகிறேனென்று சொன்னார். ஸ்தலத்தில் ஸ்தானாதிபத்யமாகக்கட்டளையிட்டு குறி ஓலையும் எழுதிக்கொடுத்து அவரை யனுப்பின விடத்தில் சகாப்தம் ஆயிரத்து இருநூற்றுத் தொண்ணூற்றுநாலுக்கு மேல் செல்லாநின்ற பிரமாதீச வருஷத்தில்,



அவரும் கணக்குத்தீர்த்து வெகுமானம்பெற்று இப்படி இரண்டொருவருஷம் நடந்துவருகையில் அந்தப்பெரியக்ருஷ்ணராயர் உத்தமநம்பி விஜயநகரத்துக்குப்போய் ராயரைக்கண்டு அந்தஹரிஹரராயர்குமாரன் உத்தரப்படிக்கு அணியரங்கன் முற்றத்தில் த்வஜஸ்தம்பத்துக்குக்கிழக்கே துலாபுருஷ மண்டபமும் கட்டிவைக்க அந்தராயர் குமாரர் வீரப்பன உடையார் வந்து துலாபுருஷமேறி அந்த வகைப்பொன்னும் ஹரிஹரராயர் துலாபுருஷம் கட்டி தாரைவார்ந்தபொன்னும் கையிலே செட்டிகொடுத்த பொன்னும் கூட்டி, கோயில்விமானமும் பொன்வேய்ந்து இந்தராயர்க[illegible]ணிக்கை இரண்டுபொற்குடமும் உள்பட ஒன்பது பொ[illegible]டமும் வைப்பித்து பெருமாள் வெகுநாளைக்காக எழு[illegible]ருளினபடியினாலே நானா தேசத்திலிருந்துவந்த பர[illegible]களுக்கு ஸேவை ஸாதிக்கும்படி விருப்பன உடை[illegible]ர்பேரில் சித்திரைத் திருநாள் நடத்துகையில் திரும[illegible]த்தூண்நம்பி பண்ணின உபகாரம் திருவுள்ளத்தி[illegible]டுகிறபடியினாலே அழகியமணவாளத்துக்கு குத்தகை[illegible]யமும் எழுதிவைத்து வரிசையுடன் ஸாதித்து திருநாளுங்கண்டருளினார்.

இந்தப்படி திருநாள் நடக்கையில் பூர்வப்ரகாரம் எட்டாந்திருநாள் விடிவோரே பெருமாள் எல்லைக்கரைக்கு எழுந்தருளுகிறபோது ஆனைக்காவல் வடக்குத்தெருவில்ராங்கவாசலாலே உள்ளேயெழுந்தருளி அகிலாண்டேச்வரிக்கு ஸேவைஸாதித்து இளநீர் அமுதுசெய்து ஜம்பு தீர்த்தத்தில் திருவடிவிளக்கி, கிழக்கே ஆழ்வார்திருமங்கை மன்னன்தோப்புக்கு எழுந்தருளுகிறது. மற்றைத் திருநாளிலே அந்தப்படி திருவடிவிளக்கி அந்த வடக்கு வாசலாலேதானே [illegible]ரும்பி உத்தமர்கோயில் ஆழ்வார் திருமாளிகையான [illegible]தம்ப தீர்த்தத்துக்கு எழுந்தருளுமிடத்தில்சைவர்பலாத்காரசங்கல்பம்பண்ணினபடியினாலே தள்ளும்படியுமாகவும் நோக்கிக்கொண்டு மூன்று வருஷகாலத்திலும் நடந்தது. அதன்பின்பு சகாப்தம் ஆயிரத்து இருநூற்றுத்தொண்ணூற்றேழுக்குமேல் செல்லாநின்ற நள ௵ பங்குனி ௴ திருநாளிலே எட்டாந்திருநாள் பூர்

வப்படிக்கு ஆனைக்காவலுக்கு ஸமீபத்திலே மேற்கேயெழுந்தருளச்செய்தே அனேக பாஷண்டிகள் வேல் முதலான ஆயுதபாணிகளாய் முன்னே வழக்கிட்டுக்கொண்டிருக்குமளவில் திருப்பணிசெய்வார் முன்போலே திருவீதி சோதனை பண்ணிக்கொண்டுபோக அத்தை அவர்கள் பொறுக்கமாட்டாமல் கொடவரான வேலேந்தின பெருமாள் தாஸரை மெய்யே அறப்பார்த்து க்ஷாத்ரக்ருத்யத்தையும் ப்ரயோகிக்குமளவில் பெருமாளுடன் அவரை ஆனைமேலே யெடுத்துப்போட்டுக்கொண்டு ஜீயர்களும் ஸ்ரீவைஷ்ணவர்களும் அனந்தங்கொத்துப் பரிஜனங்களும் வீரக்ஷத்தரும் ஏகாங்கிகளும் திருவோலக்காரரும் கூட உபகிஷத்தை தண்டாகாரமாகப் ப்ரயாணம்பண்ணிக்கொண்டு வீரவாத்யங்களுடன் எப்போதையும் போலே ஜம்புதீர்த்தத்திலே தீர்த்தம் ஸாதித்து அதிவேஜயப்ரதத்துக்கு ப்ரதமபலியாகத் துணிந்து படைபண்ணி அந்தப் பாஷண்டிகளை ஜயித்து எப்போதையும் போலே எழுந்தருளினார். அதுமுதலாக எல்லைக்கரைக்கு எழுந்தருளும்போது திருப்பணிசெய்வாருக்குபட்டும்பருத்தியும் முதலான வரிசைகளும் ஆனையேற்றமும் ஸாதித்து உபகீஷித்து மந்த்ரஜபத்துடனும் வீரவாத்யங்களுடனும் வட திருக்காவேரி பர்யந்தம் எழுந்தருளி வேலேந்திப்பெருமாள் தாஸருக்கு ஸ்ரீ சடகோபனும் ஸாதித்து திருவுள்ளக்காரருக்கும் வரிசை ஸாதித்து நடந்து வருகிறது.

அதுக்குப்பின்பு சைவரும் காயப்பட்டபேரை யெடுத்துக்கொண்டு விஜயநகரத்துக்குப்போகையில் இவர்களுக்கு க்ருஷ்ணராய உத்தமநம்பி முன்னே தானே ஸ்தலத்து ஸ்தானாதிபதியாய்ப் போயிருந்தபடியினாலே அவருக்கு எழுதி அனுப்பிவைக்க ராயரும் உபயவாதிஸம்வாதங்கேட்டு தனக்கு குருவான வ்யாஸஉடையார் கோபாலஉடையார் ரகுவுடையார் சந்த்ரவுடையாரையும் கூட்டி இரண்டு ஸ்தலத்தாரிடத்திலேயும் வகைமுறிவாங்கி உத்தமநம்பியையுங்கூட்டி இவ்விடத்துக்கு அனுப்பிவைக்க வழியிலே ஆனைக்காவல் ஸ்தலத்தார் உத்தமநம்பியைக்



கண்டு ரொம்பவும் நல்வார்த்தைசொல்லி நீரும் நாமும் பந்து, உம்மாலே எங்கள் ஸ்தலம் நிலைநிற்கவேணுமென்று அர்த்தாசைசொல்லி உள்ளுக்குள்ளாக ஸமாதானம் பண்ணிக்கொண்டார்கள். அந்தப்படிக்கு இந்தஸ்தலத்துக்கு வந்தும் மடாதிபதிகளும் உங்களுக்கு நிர்விவாதஸ்தலம் எது என்று கேட்க தென்திருக்காவேரிக்கரையில் இரட்டைத்திருவாழிக் கல்கால் நாலுகால் மண்டபமென்று சொல்ல அது முதல் உத்தம நம்பியை எல்லை போடச்சொல்ல அந்தப்படியே போடுமளவில் ஆனைக்காவல் அகிலாண்டேச்வரியை வாசலிலே வைத்துக்கொண்டு கார்ப்பண்யமாக யாசிக்குமளவில் தாக்ஷிண்யத்தாலே கிழக்கேமதிளோரமாக வடக்கே புறப்பட்டு ஜம்பு தீர்த்தத்தைவிட்டுவிட்டு வடக்கே ஓடினார். அப்போது அனைவரும் கிழையூர் மேல் மதிளையிடித்து நேர்கிழக்கேஓடி ஜம்புதீர்த்தத்தை சுற்றிக்கொண்டுவர வேண்டியிருக்க இப்படி ஒதுங்கலாமோவென்று மூர்க்கித்திருக்க நடஸ்தரானமடாதிபதிகள் ஸமாதானம்பண்ணி நல்ல வார்த்தைகளாலே பொறுப்பித்தார்கள். அதற்குப்பின்பு அவர்போனவழியிலே திருவாழிக்கல்லும் பொகட்டுவந்து ஆனைக்காவல் ஸ்தலத்தார் தங்களுக்கு மாடு போகிறதற்கு மாத்திரம் வழி கொடுக்க வேணுமென்று பரிவர்த்தனையாக நிலங்கொடுத்து அனுவர்த்தித்தபடியினாலே அவர்கள் மதிளுக்கு மேற்கே பத்துபாகம் அகலம் வழிவிட்டு திருவாழிக்கல்லையும் பொகட்டு அதுமுதலாக எட்டார் திருநாளுக்கு கிழக்கே எழுந்தருளாமல் எல்லைக்கரையிலே யெழுந்தருளுகிறது. இந்தப்படி ஸ்தலத்துக்குக்கலஹம் தீர்த்து விஜயநகரத்துக்கு நாலாறுதரம் போய்ஹரிஹரராயனை அனுவர்த்தித்து சகாப்தம்ஆயிரத்து முந்நூற்றுநாலுக்குமேல் செல்லாநின்ற ருத்ரோத்காரிஸம்வத்ஸரம்முதல் ஈச்வரஸம்வத்ஸரம்வரையில் வருஷம் பதினைந்துக்கும் ஹரிஹரராயர் மஹாராயர் கொப்பணஉடையார் விருப்பணஉடையார் முத்தயதென்னாயகர் தம்மண்ண உடையார் ப்ரதானி சோமப்பர் தென்னாயகர் கார்யத்துக்குக் கடவஅண்ணர் கொப்பண்ணர் உள்ளிட்

டார் கையில் உதக தாரா பூர்வகமாகப்பெரிய க்ருஷ்ண
ராயர் உத்தமநம்பிவாங்கின திருவிடையாட்டம் வருஷம்
பதினைந்துக்கு செந்நெற்குறையக௱. இதுவும் ஆனையே
ற்றமண்டபமும் கலஹத்திலே ஜீர்ணமாகையால் அத்தை
க்கட்டிவைத்ததும் பெரியக்ருஷ்ணராயர் உத்தமநம்பிகை
ங்கர்யம். அமுதுமண்டபம் நாலு தூணுக்கும் செம்பொ
ன் மேல் பொன்பூசிவைத்து நடுவிலே திருப்போனகம்ப
டைக்கிற பலகைக்கு வெள்ளித்தகடும் போட்டுவைத்தது
நாகமங்கலம் அண்ணப்ப உடையர் கைங்கர்யம். இத்தை
காலவிசேஷத்திலேபிரித்து வெள்ளிக்கொப்பரை பண்ணி
வைத்து திருவணுக்கன் திருவாசலுக்கு மகர தோரண
மும் செம்பொன் பூச்சம்பண்ணிவைத்து திருக்கதவுக்கும்
அப்படியே பூச்சுத்தகடும் போட்டுவைத்து திருவரங்கச்
செல்வர் எழுந்தருளியிருக்கிறபீடத்துக்கும் பூச்சுத்தகடு
போட்டுவைத்தது சாளுவ கோபாலராஜாவின் மனுஷ்
யன் திம்மாரகுத்தர் கைங்கர்யம். அழகிய மணவாளன்
திருமண்டபத்தில் தந்தத்திருப்பள்ளிக்கட்டில் மஞ்சம்
ஹரிஹரராயர் அவர் கைங்கர்யமாகப் பண்ணிவைத்தது.
பெரிய க்ருஷ்ணராயர் உத்தமநம்பி சகாப்தம் ஆயிரத்து
முந்நூற்றுப்பதினெட்டுக்குமேல் ஈச்வர வருஷம்முதல் வி
க்ரம வருஷம் நாலுவரைக்கும் வேதாசார்யபட்டர் ஸ்ரீ
கார்யம் நிர்வஹித்தார்.

ஸ்ரீகார்யம் நிர்வஹிக்கிற காலத்திலே தார்க்காதிப
திலைக் கட்டிக்கொண்டு ஜீயருக்குமுதலும் இரண்டாம்
வரிசைதாமுமாய் அனுபவித்து கந்தாடையார் அக்ர
வேதுமதிபைத் தள்ளி நடந்துவருகையில் பூர்வம் உடை
யவர் திருநாட்டுக்கு எழுந்தருளினபின்பு எதிராஜனை பெ
ருமாள் சியமனத்திலே ஸுந்தரபாண்டியன் துலாபுரு
ஷமண்டபத்திலே அர்ச்சாவதாரமாக வரியருளப் பண்
ணிவைத்து, அனைத்துநடுக்கும் நடத்திவைத்து கந்தாடை
யாண்டான் ஆயி உள்ளிட்டவர் பாக்கத்திருமண்டபங்க
ளும் கட்டிவைத்து உபலாளிக்குபடியாலே அந்தக்கோ
யில் கந்தாடையார் ஆதீனமாக நடந்துவர திருவரங்கன்
திருப்பதியிலே பெருமாளை ஸேவிக்கவந்த பரதேசிஜனங்



களுக்குப்பெரிய திருநாளிலே அந்த எம்பெருமானார் ஸந்
நிதியிலே ஸந்நிதிப்பேர் ஸமயமுத்ரையான திரு
விலச்சினையை ஸாதித்து வந்தார்கள். துலுக்கவாண
த்திலே கோயில் திருக்காப்பு சேர்த்திருந்த படியினா
லே ஐம்பதுவருஷம் வரையில் ஸமய முத்ரை ஸாதி
க்கிறதற்கில்லாமல் கலஹமாயிருந்தது. பின்பு பெருமா
ளும் திருக்காப்பை நீக்கி சகாப்தம் விருப்பன உடை
யார் திருத்தேர் திருநாளிலே பரதேசிகளும்வர தத்கா
லத்திலே அந்த ஸமயமுத்ரையை ஸ்ரீ பண்டாரமென்
னும் கந்தாடையாரிடத்தில வைத்ததினால் எம்பெரு
மானார் ஸந்நிதியிலே ஸாதிக்கவொட்டாமல் வேதாசார்
யபட்டர் அரண்மனை பலத்தாலே தன்மனுஷ்யரை முத்
ரை ஸாதிக்கச்சொல்லி எம்பெருமானார் ஸந்நிதிப்பே
ரைத் தள்ளிவிட்டு, பலவந்தமாக நடந்தபடியாலே அந்த
வேதாசார்ய பட்டர் ஒருக்காலிருக்கால் எம்பெருமானா
ரை ஸேவிக்கவந்தவிடத்தில் ஒரு பர்யாயமாக அவமா
னத்தை நடக்க, அதுமுதலாகப் பூர்வம் த்ரிவிக்ரம
சோழன் ப்ரதிஷ்டிப்பித்த சக்ரவர்த்தித் திருமகன்
கோயிலிலே தெற்கு அறையிலே எதிராஜனை ப்ரதிஷ்
டிப்பித்து அவ்விடத்திலேயும் பெரிய ஸந்நிதியிலே கிலஉ
பகரணங்களைத் தம்முடைய கைங்கர்யமாகப்பண்ணிவை
த்து, திருபுகைக்காலுக்குத் தம்முடையபேரைத் திருநா
மம்சாத்தி ஸந்நிதியிலே அந்தப்பேரை நடத்திவைத்தார்.

இந்தப்படி நாலுவருஷம் பட்டருக்குப்பின்பு அந்த
அதிகாரம் மாறநாடி மெய்கிலேயிட்ட உத்தமநம்பிபிள்ளை
விஜயநகரத்திலும் வந்து நீரிப்படியே ஸ்ரீ கார்யம் நிர்வ
ஹிக்கத்தொடங்கினவுடனே அந்தஉத்தமநம்பி தகப்பன்
அழகியமணவாளநம்பி எம்பெருமானார் காலத்திலும்கரு
டவாஹன பண்டிதருக்கு நியமித்த கைங்கர்யத்தைபரம்
பரையாய் திருமடைப்பள்ளியுள் அழகியமணவாளனுக்கு
த்திருமேனி திருப்பவளங்களுக்குப்பாங்காக அமுதுசெ
ய்கிறபதார்த்தங்களுக்கு பக்வங்கள் சொல்லிவைத்து நி
றைவு குறைவு விசாரிக்கிற கைங்கர்யமும் ராத்ரி திரு
ப்பதியார் கொத்தில்சேர்ந்து குடிநீர்பால் அமுதுசெய்ய

ப்பண்ணிவைக்கிறதும் எம்பெருமானார் காலந்தொடங்கிவ
ம்சபாரம்பர்யமாய் இந்தஅழகியமணவாளநம்பி துலுக்க
வாணத்துக்கு முன் கந்தாடை ஸ்ரீ ரங்கராஜநாயன் வா
தூலதேசிகர் திருவடிகளிலே ஆச்ரயித்தவரானபடியால்
அந்த அபிமானத்தால் அனந்தகோத்துப் பரிகரங்களும்
உடையவராஜ்ஞை அதிக்ரமிக்கலாகாதென்று யோசி
த்து பட்டரை திரஸ்கரித்து, கந்தாடையாராதீனத்தை
யும் அதுக்குள்ள வரிசைகளையும் அவர்கள் தேசாந்தர
ஸ்தரானபடியாலே ஸ்ரீ பண்டாரத்திலே சேர்க்க நாளை
யிலே அந்தபட்டரும் எல்லாரையும் அநுஸரித்து அர்த்
பலத்தாலேயும் ஸமயம் [illegible] தம்முடையவ
சம்பந்நுகையில் ஜீயர்மனுஷ்யர்திரு[illegible]கோப்பண்ண
திம்மராஜர் ஸ்தலத்தார் முன்னிலைக்கும் உத்தமநம்பி
பேருக்கும் கந்தாடையாரவாள் வருமளவைக்கும் நாங்
கள் அநுபவிக்கிறோமென்று உடன்படிக்கை யெழுதிக்
கொடுத்தது சகாப்தம் ஆயிரத்து முந்நூற்று நாற்பதுக்
குமேல் விகாரிவருஷத்திலே,

*

விகாரிணி ஸஹ்யமாஸே தஜநவமீநாஜே,
வெங்கோம [illegible]
வி தீயத்வ த்ரைஸமயம் [illegible] ||

பின்பு அந்த எல்லை நிலையிட்ட பெரிய க்ருஷ்ணராய
ர் உத்தமநம்பி ஸ்தலத்துக்கு அனேகஉபகாரங்களைப்ப
ண்ணி ராஜவல்லபராய் ராயமுத்ரையும் ஸ்தலத்திலே
சேர்த்துக்கொண்டு நூற்றெட்டுத் திருப்பதி திவ்யதேச
கைங்கர்யங்களும் ராயர் க்ருபத்தாலே ஆராய்ந்துகொ
ண்டு வெகுகாலமாயிருக்கிற காலத்திலே தாம் அசக்ராங்
கிதபாஹுவென்று கலுஷிதஹ்ருதயனாய் வார்த்திகமா
யிருந்தபடியினாலேயும் தனக்கு ஆசார்யரான கந்தாடை
யார் தேசாந்தரஸ்தர்களானபடியினாலேயும் பட்டர் கந்
தாடையாருக்கு விரோதியானபடியினாலே அங்கே ஆச்ர
யிக்க மனதில்லாமல் சிந்தித்துக்கொண்டிருக்க தேசாந்

* இவ்விடத்து ச்லோகம் பூர்ணமாய் அகப்படவில்லை.



தரத்திலேயிருந்து பெரியநம்பி வம்சஸ்தராய் ஜ்ஞானவ்ரு
த்தராய் வயோவ்ருத்தராய் ஸ்தலம் க்ஷேமமான ஸமா
சாரங்கேட்டு தம்முடைய ஆதீனத்துக்கு எழுந்த
ருள, அவர் திருவடிகளிலே ஆச்ரயித்தார். இந்த
வேதாசார்ய பட்டருக்கு உத்தண்ட பட்டரென்று
திருநாமஞ் சொல்லுகிறது. சகாப்தம் ஆயிரத்து
முந்நூற்று நாற்பத்து மூன்றுக்குமேல் ப்லவவரு
ஷத்தில் எல்லைக்கரை நிலையிட்ட உத்தமநம்பி விஜய
நகரத்திலேபோய் தேசவேட்டை ப்ரதாப மஹாராயரை
சதுரங்கபாடி ரஞ்சிப்பித்து ஜயித்து அவர்கையிலே அ
னேகம் வரிசைகளையும்பெற்று தம்முடைய தம்பிக்கு ரா
யர் முத்திரையும் சக்ரராயரென்கிற பேரும் ப்ரத்யேக
மாக ஆதீனமுண்டாக்கி ஸகலஸ்வதந்த்ரங்களையும் உண்
டாக்கிக்கொடுத்து தம்முடைய ஆதீனத்துக்கும் தம்பி
சக்ரராயராதீனத்துக்கும் ஸம்பந்தமில்லாதபடி தேசவே
ட்டைப்ரதாபதேவ மஹாராயரைக்கொண்டு பண்ணிவை
த்து ஸகல பிருதுகளும் வாங்கிக்கொண்டு திவ்யதேசங்க
ளெல்லாம் ஸேவித்து ஸ்ரீகார்யங்களெல்லாம் பரிசோதி
த்துக்கொண்டு ஸ்தலத்திலேவந்து திருவிடையாட்ட
க்ராமங்கள் பரிசோதனைபண்ணி திருவரங்கச்செல்வம்
சதசாகமாகவளர்த்திவைத்து ஜீயாள் ஸ்ரீவைஷ்ணவாள்
ஏகாங்கிகள் ஆசார்யபுருஷாள் எல்லாரையும் ஆதரித்து
க்கொண்டு பூர்வவ்யவஸ்தை தப்பாமல்நடப்பித்துக்கொ
ண்டு ராயர்பேரும் ராயர் பிருதும்பெற்று கோயிலுக்குவ
ந்து தாம் ஸ்ரீகார்யம் நிர்வஹித்துக்கொண்டு தாம் கோவ
ணவரான திருப்பதியார்கொத்திலேசேர்ந்து சில மர்யா
தையும் தம்முடைய தம்பிக்கு சேனாபதி மர்யாதை வரி
சையும் பற்றி அநுபவித்துக்கொண்டுவந்தார். இப்பேர்
தானே அவரவர்களுக்கு இரண்டாதீனமாக நடந்துவரு
கிறது,

இந்த சக்ரராயர் சக்ரவர்த்தித் திருமகன் ஸந்நிதி
யிலே வேதாசார்யப்பட்டர் ப்ரதிஷ்டை பண்ணின எம்
பெருமானார் ஸந்நிதியும் அவராதீனமாச்சுது. கோயி
லாழ்வாரையும் திருமஞ்சனம் பண்ணிவைத்து அமுது

மண்டபமும் அழகிய மணவாளன் திருமண்டபமும் சர்ந்து மாடிவைத்து ராயர் குருவிக்கின குறிநாயக்கர் கைங்கர்யமாகப் பண்ணிவைத்து வழிநிலையிட்ட பெருமாள் உத்தமநம்பியின்னே துலுக்கவாணத்துக்குப்பின் வெகுநாளைக்குப்பின் உத்தமநம்பி கோயில் ஸ்ரீரங்கராஜர் ஸ்ரீரங்கநாராயணஜீயர்பட்டத்தில் ஐந்தாமவரானவர் கூரநாராயணஜீயர் ப்ரதிஷ்டிப்பித்த வஸந்த கோபாலன் துலுக்கவாணத்தில் சேதமாகையில் அவரையும் ப்ரதிஷ்டிப்பித்து பெரிய மண்டபத்துக்கு தெற்கிலே பாண்டியன் திருப்ரதிஷ்டையான தாம்ர கருடனும் சேதமாகையில் அவரையும் பெரிய திருவோலக்கமாக எழுந்தருளப்பண்ணி புழுகுகாப்பு சாத்திவைத்து ப்ரதிஷ்டிப்பித்து அவருடைய உத்ஸவபேரம் கலஹத்துக்கு [illegible] க்குகிழக்கே தோப்பிலே நிக்ஷிப்தமாயிருந்தது. பின்பு ப்ரத்யக்ஷமாகையில் அவரையும் ப்ரதிஷ்டிப்பித்து வட திருக்காவேரித் தென்கரையிலே எல்லைக்கரை மண்டபம் கட்டிவைத்து முன்பட்டம் அழகிய மணவாளஜீயர் கணக்கனுக்கு அழகிய மணவாளப்ரியனென்று பேர் கொடுத்து நடந்த அனந்தரம் பட்டர் ஸ்ரீகார்யத்திலே அவனுக்கு ஸ்ரீவைஷ்ணவப்ரியனென்று பேர்கொடுக்க, அவர் காலம்போய் திரும்ப உத்தமநம்பி ஸ்ரீகார்யம் விசாரிக்கத்தொடங்கி அந்தக் கணக்கனுக்கு வெகுபலம் உண்டாக்கி ஸ்ரீரங்கநாராயணப்ரியனென்று பேருமுண்டாக்கினார். சகாப்தம் ஆயிரத்துமுந்நூற்று அறுபத்தாறுக்குமேல் ரக்தாக்ஷி வருஷத்திலே விருப்பன உடையார் ஸுதர்சனப்பெருமாள் கோவிலும் கட்டிவைத்து யந்த்ர நாஸிம்ஹனையும் ப்ரதிஷ்டிப்பித்தார்.

இந்த உத்தமநம்பி ஸ்ரீகார்யம் நிர்வஹிக்கையில் பெரியநம்பி ஜீயான் ஸ்ரீவைஷ்ணவராரான உடனே ராயமுத்திரையாலே பாரபத்தியக்காரர் வரிசை தான் பிடித்து வந்தார். இந்தப்படி நடந்துவருங்காலத்திலே சகாப்தம் ஆயிரத்துமுந்நூற்று எண்பத்தேழுக்குமேல் பார்த்திவ வருஷம் பெரியஜீயர் ஸந்யஸித்து எழுந்தருளி பெருமாள் க்ருபை லபித்து த்ரிவிக்ரமன் திருவீதியிலே பல்லவராயன் மடத்தைலபித்து காலக்ஷேபம் ஸேவாகாலமும் ப்ரதிதினம் தப்பாமல் நடந்துவர, பெரிய உத்தமநம்பி காலத்துக்குபின் அவர் புத்ரரான உத்தம நம்பியும் பெரிய ஜீயர் திருவடிகளிலே அபசாரப்பட, அழகிய மணவாளப்பெருமாள் ஸ்வப்னத்திலே திருவனந்தாழ்வானை உத்தமநம்பிக்கு பயங்காட்டியருளினார். அவரும் தமக்கு ஆப்தரான அண்ணன் ஸந்நிதியிலே ஸ்வப்ன வ்ருத்தாந்தத்தை விண்ணப்பஞ்செய்ய அண்ணனும் நீர் ஜீயர் திருவடிகளிலே அபசாரப்பட்டீரோவென்று கேட்க, அவரும் யதார்த்தத்தைச்சொல்ல உத்தமநம்பியை ஜீயர் ஸந்நிதிக்கு அண்ணன் அழைத்துக்கொண்டுபோய் ஜீயரை ஸேவிக்கப் பண்ணிவைக்க ஜீயரும் திருவனந்தாழ்வானை ஸேவை ஸாதிக்க [illegible]மான படியினாலே மற்றைநாள்விடிவோரே ஜீயர் ஸந்நிதியிலே அபசாரக்ஷாமணம் பண்ணிக்கொண்டு தமக்கு ஆச்ரயணம் ஸாதிக்க வேணுமென்று ப்ரார்த்திக்க, ஜீயரும் அவரைக் கடாக்ஷித்து ஆச்ரயணம் ஸாதித்து பூர்வம் ஆண்டவனுக்கு உடையவர் கட்டளையிட்ட மர்யாதையை அந்தவம்ச்யரான வாதூல தேசிகராதீனரான நரஸிம்ஹதேசிகர் அந்தத் திருமாளிகையிலிருந்துகொண்டு ஸந்நிதியில் வரிசையும்பெற்று வரகந்தாடையாண்டானுக்கு ஆசார்ய புருஷ வரிசையாகப் பெரிய நம்பிக்கானவுடனே தீர்த்தப்ரஸாதங்களும் கந்தாடையண்ணனென்று அருளப்பாடும் ஸாதிக்கும்படியும் அந்தப்படி அண்ணன் கோயிலுக்கெழுந்தருளும்படியும் ஜீயர் நியமனத்தினாலே இதுவரைக்கும் நடந்து வருகிறது. துலுக்காணத்துக்குமுன் உடையவர் பண்ணின கட்டளை நடந்து துலுக்காணத்துக்குப்பின்பு எம்பெருமானார் நியமனம்குலைந்து தாந்தோன்றியாய் காலவிசேஷத்திலே ப்ரதிவாதி பயங்கரம் அண்ணமுதலான சில ஆசார்யபுருஷர்களுக்கு ஆசார்ய புருஷவரிசையும் பௌர்வாபர்யக்ரமமாய் நடந்து வருகிறது. இந்தவழியடிமை நிலையிட்ட உத்தம நம்பி தம்பியான சக்ரராயநயினார் நம்மாழ்வார் ஸந்நிதிமுன் திருமண்டபமும் வடக்கு மதிமுகப்பு உள்பட்டதும் சந்த்ர புஷ்கரிணிக் கரைகல்ஹாரமும்

கோயில்களும் வாணத்திலே சேதமாகையில் இதுகளைசரிந்தவிடங்களைக்கட்டிவைத்து வைகுண்டநாதன் ஸந்நிதிக்குத்தெற்கு கல்லறைமண்டபமும் கட்டிவைத்து வைகுண்டநாதன் நாய்ச்சியார் ஆழ்வார்கள் ஆசார்யர்கள் உள்பட எல்லோருக்கும் புழுகுகாப்பு சாத்திவைத்து தெற்கு முகப்புமண்டபமும் கட்டிவைத்தார். அந்த மண்டப தேவாஸனத்திலே திருக்கண்ணபுரம் சௌரிராஜன் எழுந்தருளியிருந்த ஸ்தலத்தில் மர்யாதைகளில் வித்யாஸங்களாலே அவர்களுக்கும் இவர்களுக்கும் வேண்டாமல் சீழையூரிலே யெழுந்தருளினார். இதுவும் அகளங்கன் திருமதிள் சரிவும் கட்டிவைத்து வடக்குத் திருவாசல் தென்புறத்தில் முன்னில் முகப்புத் திருமண்டபமும் வாசல் கொறடும் கிளர்த்தியாகக் கட்டிவைத்ததும் சக்ராயர். சகாப்தம் ஆயிரத்துமுந்நூற்றுஐம்பத்து நாலுக்குமேல் செல்லாநின்ற பரீதாபி வருஷம் அனுமந்த தேவருக்கு கோவிலும்கட்டி ப்ரதிஷ்டிப்பித்து தக்ஷிண ஸமுத்ரதிப்தி தென்னயகர் கைங்கர்யமாக அந்த உத்தமநம்பி பண்ணிவைத்தார். அவருக்கு கிழ்பத்து புத்தூரை திருவிடையாட்டமாக தென்னயகர் ஸமர்ப்பித்தார்.

அந்தக்கோயிலை கந்தாடையாருக்கு ஸமர்ப்பிக்கையில் கோயிலுக்குமுன்னே திருமண்டபம் கட்டி திருப்பாணாழ்வாரையும் ப்ரதிஷ்டிப்பித்தது அவர் சிஷ்யன் சாத்தாதநரசிங்கதாஸன் கைங்கர்யம். அந்தவருஷம் ஆவணி மாஸத்திலே திருபவித்ரத் திருநாள் சாற்றுமுறையில் அழகிய மணவாளப்பெருமாள் பெரியஜீயரை அர்ச்சகமுகேன அழைத்து நாளைமுதலாகப்பெரிய திருமண்டபத்திலே ஈடு தொடங்கி காலக்ஷேபம் நடத்துமென்று நியமித்தருளி மற்றைநாள் பெரியவசரம் அமுது செய்தவுடனே நாய்ச்சிமாருடன் பெருமாள் புறப்பட்டருளி பெரிய திருமண்டபத்திலே யெழுந்தருளி ஜீயர் ஈடுதொடங்கி ஒருஸம்வத்ஸரம் காலக்ஷேபம்நடத்த பகவத்விஷயம் முற்றிலும் கேட்டருளி சாற்றுமுறையன்றைக்கு ஆழ்வார்களுடனே பெரிய திருவோலக்கமாக எழுந்தருளிஜீயர் ஈடுசாத்தின உடனே அர்ச்சகமுகமாக ஸ்ரீசைலேசதயாபாத்



என்கிற பத்யத்துடன் ஸகல வரிசைகளும் ஸாதித்து தாம்ஸாதித்த வரிசையுடன் நூற்றெட்டு திவ்யதேசங்களிலும் திருப்பதிகளிலும் இந்தபத்யம் நடக்கும்படியாய் திருமுகப்பட்டயம் ஸாதித்தருளினார். அதுமுதலாக நூற்றுக்கோயில்களிலும் திவ்யதேசங்களிலும் ப்ரபந்தாதியிலே அந்தத்தனியன் நடக்கிறது. அந்தவருஷத்திலே சீழையூரிலும் ஒருரிஷபம் வெளித்திருமுற்றத்திலே வந்து திருத்தோப்பை அழிக்க அத்தைப் பொறுக்கமாட்டாதே ஏகாங்கிகள் ஹிம்ஸிக்க அதுமுதலாக சீழையூருக்கும் இந்தலத்தாருக்கும் வெகுவிரோதம்வர உத்தமநம்பி ஸமாதானம் பண்ணி சகாப்தம் ஆயிரத்து முந்நூற்று ஐம்பத்தைந்து ப்ரமாதி வருஷம் எல்லைக்கரை மதிள் கட்டிவைத்தார்.

## அண்ணவாண்டப்பவுடையார் திருமாலை தந்தான் கைங்கர்யம்.

இந்த வருஷத்திலே புரட்டாசிமீ ஆதித்யதேவ உடையார் நக்ஷத்ரமான உத்திரட்டாதியிலே திருத்தேர் திருநாள்நடக்கும்படி அண்ணை ஆண்டப்பவுடையார் திருமாலைதந்தான் த்ரிவிக்ரமன் திருவீதியில் த்வஜாரோஹணத் திருநாள் நடத்திவைத்து கொடியாலத்தை *பொலிவேட்டு க்ராமமாக ஸமர்ப்பித்தான்.

## அண்ணப்பவுடையார் கைங்கர்யம்.

ருத்ரோத்காரி வருஷத்திலே அண்ணப்ப உடையார் கட்டளை-வஸந்தோத்ஸவம் கோடைத்திருநாள் நடப்பித்து அதுக்குப்பொலிவீடாக மல்லிதேவன் புத்தூரென்கிற க்ராமத்தை ஸமர்ப்பித்தான். அகளங்கன் திருவீதி மேல் பக்கத்திலே கோடைக்குழி மண்டபமும் அவன் திருப்பணியாகச் செய்து வைத்தது அந்த உத்தமநம்பி.

## திப்பராசர் கைங்கர்யம்.

பார்த்தஸாரதி கோயில் முகப்பு திப்பராசர் கைங்கர்யம்.

* பலிவேட்டு என்றும் பாடம் காண்கிறது.

## புத்தூர் அழகிய மணவாளப்பெருமாள் கைங்கர்யம்.

திருமடைப்பள்ளியுட்பட்டது புத்தூர் அழகியமணவாளப்பெருமாள் கைங்கர்யம்.

## உத்தமநம்பி சக்ரராயர் நிர்வஹித்தது

இந்தவழியடிமை நிலையிட்ட உத்தமநம்பி ஸர்வஜித் வருஷம் முதலாக ப்ரமோதூத வருஷம் வரைக்கும் பலர்கையிலும் வாங்கின திருவிடையாட்ட க்ராமங்கள் சேர்வை † பதினெட்டாயிரம். இவர் நம்பி சக்ரராயர் ராஜாங்க ஜநபத்ரவத்தால் திருக்கொட்டாரத்திலே நெல்லை யெடுத்துக்கொண்டுபோக வந்தவனுக்கு கொடாலை யளந்தார்.

## கருடவாஹந பண்டிதர் கைங்கர்யம்.

பூர்வம் ஆரோக்ய சாலையும் திருநடைமாளிகையும் ப்ரதாப சக்ரவர்த்தி காரியப்பேறில் கங்கை தேவரான சிங்களத்தண்டநாயகர் திருப்பணியாயிருந்ததும், உடையவர் கைங்கர்யமாயிருந்ததும், துலுக்கவாணத்திலே சேதமாகையால் இந்தக் கோயிலும், கோபுரமும் மதிளும் திருமண்டபமும் முன்னிலை முகப்புமண்டபமும் கருடவாஹந பண்டிதர்கைங்கர்யம். உடையவர் நாள்முதலாக ஆரோக்ய சாலாதிபதிகளுக்கு கருடவாஹநபண்டிதரென்று பட்டப்பேர் நடந்துவருகிறது.

## அண்ணப்பஉடையார் கைங்கர்யம்.

சகாப்தம் ஆயிரத்து முந்நூற்று எண்பத்தைந்துக்குமேல் ருதிரோத்காரி வருஷத்திலே அடையவளைந்தான் திருமதிளும் திருவாசல் திருக்கோபுரத்தடியும் அண்ணப்ப உடையார் திருப்பணி.

## நாகராஜவுடையார் கைங்கர்யம்.

நாகராஜ உடையார் கைங்கர்யம்:— நாச்சியார்கோயில் திருகடைமாளிகை.

† நூறு என்று பாடங் காண்கிறது.



## வழியடிமை நிலையிட்ட உத்தமநம்பி கைங்கர்யம்.

பெரிய திருமண்டபத்திலே உடையவர் மாக்கோப்பாகக்கட்டி நிறைவேற்றியருளினது கலஹத்திலே அக்னி தக்தமாகையாலே தேவராஜன் கொறடும்கட்டி திருமண்டபமும் இந்த திருமண்டபத்தில் கீழில் திருக்காவணப்பதியும் கட்டிவைத்தது வழியடிமை நிலையிட்ட உத்தம நம்பி.

## பெரிய சக்ரராயர் கைங்கர்யம்.

பெரிய சக்ரராயர் கைங்கர்யம்:— முன்சகாப்தம் ஆயிரத்து முந்நூற்று முப்பத்தேழுக்குமேல் மன்மத வருஷத்திலே முன் பெரிய திருமண்டபத்திலே சோழன் ப்ரதிஷ்டையான தாம்ர ப்ரதிமை கருடன் கலஹத்திலே பின்னமாகையாலே அதின்சகலங்களாலே அழகிய மணவாளப்பெருமாள் திருமண்டபத்திலே ஸந்நிதிகருடனை எழுந்தருளப்பண்ணி ப்ரதிஷ்டிப்பித்து $ [illegible] ॥

என்று தர்மவர்மாவின் திருமதிளிலே சிலாலிகிதம் பண்ணிவைத்து, பூர்வம் சோழன் ப்ரதிஷ்டையான சக்ரவர்த்தித் திருமகனையும் ஜீர்ணோத்தாரணம் பண்ணிவைத்து அந்த ஸந்நிதியிலே சூடிக்கொடுத்த நாய்ச்சியாரையும்ப்ரதிஷ்டிப்பித்து அந்த ஸந்நிதிக்கு திருமடைப்பள்ளியும் கட்டிவைத்தார். அந்த மன்மத வருஷம் தைமீ த்திலே புனர்வஸு நக்ஷத்ரத்திலே பூபதியுடையார் திருநாள்நடத்தி பெருமாளுக்கு திருத்தேர்த் திருநாளும் நடப்பித்து, அந்தத் திருநாளுக்கு பலிவெட்டாக தொடையூரும் நடப்பித்தார். அந்த சக்ரராயர், சேனைவென்றான் திருமண்டபத்துக்கு மேற்கு துலாபுருஷ மண்

$ [illegible] ॥

டபத்திலே, பூர்வம் கூரநாராயணஜீயர் ப்ரதிஷ்டிப்பித்த ஸ்ரீவாராஹ நயினார் துலுக்கர் கலஹத்திலே பின்னமாகையில், அவரையும் ப்ரதிஷ்டிப்பித்ததும்; அந்தத் திருச்சுற்றில் ஆக்நேயபாகத்திலே பெரிய திருமடைப்பள்ளிக்கு வடக்கே தாதிசம்பியின் திருப்பணியான சின்ன திருமடைப்பள்ளிக்குமுன்னில் முகப்புங்கட்டுவித்து, என்னைவாழ்விக்கும் நாய்ச்சியாரான அரவிந்தநாயகியாரையும் எழுந்தருளப்பண்ணுவித்து, அந்தாதிப்பெருமாள் கொறட்டிக்குமேல்புறமுங்கட்டுவித்து இந்தக்கொறட்டில் வடக்குத்தூணின்மேல் ஹநுமாரையும் எழுந்தருளப்பண்ணுவித்து, சேனை வென்றான் திருச்சுற்றுத் திருமடைமாளிகை மேல்புறம் சேதமாகையில், வடக்கடையத்தூணும் கிழக்கிப் பாவுகல்போட்டு கட்டிவைத்ததும்; ஆலிநாடன் திருக்கோபுரமான ஆரியபட்டாள் வாசலும் துலுக்கர் வனத்திலே அக்நிபட்டதனால் சேதமாகையாலே, சில்கல் முகணை அருகணை கீழ்ப்படி மேல்படி உட்படக்கட்டினதும், பெரிய சக்ராயர்.

## மூவெந்திரைராயர் தீராவினை தீர்த்தார், திருவேங்கட முடையான் கைங்கர்யம்.

பின்பு, இந்தத் திருக்கோபுரம் பழுதானமையாகையில், சரிவானது பெயர்த்துக்கட்டி, புதிதாகத் தளமும் போடுவித்து, கோபுரவாசலையும் புதிதாய்ப்பண்ணி, தேவர்களையும் எழுந்தருளப்பண்ணி, இவ்விடத்தில் திருக்கோபுரத்தில் சேதமான முகணை அருகணை பாவுகலும் நவமாகப் போடுவித்து, கோபுரவாசலையும் தேவர்களையும் உண்டாக்கிப் ப்ரதிஷ்டை பண்ணுவித்து; தம்மையாளன் திருவீதியில் திருமடைமாளிகையும், அழகியமணவாளன் திருமண்டபமும்; ராஜமகேந்திரன் திருவீதியில் திருமடைமாளிகை, பரகாலன், கூரநாராயணஜீயர்மண்டபம் முதலானதும், சேனைவென்றான் திருமண்டபமும், திருமடைப்பள்ளியும், முதலானதும்; ஆலிநாடன் திருச்சுற்றுக்கு உட்பட தெற்கேயும் அனைத்தையும் திருத்துப் பாங்கும் பண்ணுவித்து, பாதாள அருகணி



யெடுத்துக்கட்டுவித்ததும்; மூவெந்திரைராயர் தீராவினை தீர்த்தாரும், இவர் தம்பி திருவேங்கட முடையானும் பண்ணின கைங்கர்யம்.

## திருமலைநாதவுத்தமநம்பி கைங்கர்யம்.

சகாப்தம் ஆயிரத்து முந்நூற்றறுபத்தாறுக்குமேல் ரக்தாக்ஷிவருஷம்முதல், திருமலைநாதஉத்தமநம்பி, விஜயநகரத்துக்குப்போய், தண்டுபண்ணி, புறப்படதேவராயர் மல்லிகார்ஜுநராயர் முதலானபேர்கள் கையிலும் இருபத்திரண்டுக்ராமமும் வாங்கிக்கொண்டு, ப்ரஜோத்பத்தி வருஷத்திலே கோயிலுக்குவந்து, பெருமாள்தேவன் மண்டபத்துக் கொடுங்கையும் வைப்பித்து, திருக்கொட்டாரத்துக்குத் தென் வடக்கான கீழ்த்திருமதிள்பழுகி விழுகதுபோகையில் அஸ்திபாரத்தளவும் பறிப்பித்து, கல்படை செங்கல்படையுங் கட்டிவைத்து, முதல்கட்டுக்குத் தளவரிசையும்கட்டி, பெரிய திருமண்டபத்துக்குக் கிழக்கே நாற்றுக்கால்மண்டபமும் கட்டிவைத்து; அதிலே ஜ்யேஷ்டாபிஷேகத்தில் ஸஹஸ்ரகலசாபிஷேகமும் பண்ணுவித்து; திருச்சிராப்பள்ளி சாவடிக்கு ராயமுத்ரைமுத்ராக, குழிக்தண்டல கம்பராஜா வருகையில், "இந்த நிலமகளை விடவேணும்" என்று திருமலைராஜா சொல்லுகையில்; இவருக்கும் அவருக்கும் விரோதமாய்; சகாப்தம் ஆயிரத்து முந்நூற்றெண்பதில் ப்ரமாதிவருஷம் புரட்டாசிமாசத்திலே தென்கரை வடகரை சனைவயார் காட்டார் அனைவரும் குடிகளும் புறப்பட்டு, சீமையைப்பாழ்பண்ணி, பன்னிரண்டுவருஷம் ஆயிரக்கால் மண்டபத்திலும் தேசாந்தரத்திலும்குடியிருந்து; பின்பு, சகாப்தம் ஆயிரத்து முந்நூற்றுத் தொண்ணூற்றிரண்டில் கரவர்ஷத்திலே, திருச்சிராப்பள்ளிசீமைதண்டல்சீமையும் திருமலைராஜாவின் சீர்மையாகையில், தென்கரை வடகரையாரனைவரும் திருமலைராஜாவைக்கண்டு, தங்கள் தங்கள் க்ராமத்திலே போனபின்பு, இந்தமண்டபத்துக்கு மேல்புறத்து ஒழுங்குமண்டபக் கொறடு தூர்ந்துபோகையில், அந்த மண்ணுமெடுப்பித்து; கேபு

ரத்துக்கு வடபுறம் சாரமுற்றும் மண்ணுமெடுப்பித்துப் புறம்பே போடுவித்து, சாந்திஹோமம்பண்ணி, வைக்ரமத் திருநாளுக்கும் சித்திரைத் திருநாளிலே எட்டாந் திருநாள் எல்லைக்கு மேல்புறத்திலொழுங்கை மேற்படி வழியாக ஆனைபூண்ட புறம்பில் கொறட்டிலே மேற்குப் பார்க்கப் பெருமாளேறியருளி, இதுக்கு மேல்புறத்தில் சாமந்தனார் தோப்பிலே திருக்காவணமும் இடுவித்து, சிறப்புக்கட்டளையும் நடத்தினது, திருமலைநாத உத்தம நம்பி.

இதுவும், புந்நாகதீர்த்தக்கரை லக்ஷ்மீ நாராயணப் பெருமாள் கோயிலையும் ஜீர்ணோத்தாரணம்பண்ணி, பெருமாளுக்கு தந்தசப்பரமும் பண்ணுவித்து, ஒரு பங்குனித்திருநாளில் மூன்றாந்திருநாள் குதிரைநம்பிரான்மேலே யேறியருளி, ராத்ரி கோயிலுக்கெழுந்தருளும்போது ஆகஸ்மிகமாக மழை வருகையில் இந்த உத்தமநம்பி வாசலிலே எழுந்தருளியிருக்க, உத்தமநம்பியும் தம்முடைய ஜநங்களுடனே பெருமாளுக்கு ஸர்வஸ்வத்தையும் ஸமர்ப்பித்து, அதுமுதலாக மூன்றாந் திருநாளுக்குத் திருப்பல்லக்கிலேதானே எழுந்தருளும்படி திட்டம் பண்ணுகையில், இதுவரைக்கும் அந்தப்படியே நடந்து வருகிறது.

## க்ருஷ்ணராய வுத்தமநம்பி கைங்கர்யம்.

அவர் தம்பி க்ருஷ்ணராய உத்தமநம்பி, சகாப்தம் ஆயிரத்து நானூற்றெண்பதில் பிலவங்க வருஷத்திலே, எறமஞ்சி திம்மப்பநாயக்கர் முதலானவர் கையிலே இருபதுக்ராமம் திருவிடையாட்டமாக தாரைவாங்கி திருக்கொட்டாரமுகப்புத் திருமண்டபமும், நலந்திகழ் நாராயணஜீயர் ப்ரதிஷ்டையான செங்கமல நாயகியார் எழுந்தருளியிருக்கிற திருமதிளும் பழகிச் சரிவாகையில் அதுவும் கட்டிவைத்து இரண்டாம் நெல்லுக்கூடம் பெருச்சாளியறுத்துச் சரிந்துபோகையில், உள்ளுத் தளவரிசையும் கட்டி, கல்பாறும் நிறுத்தி, உறுதியாக மடுத்துக் கட்டிவைத்தார்.



## கூடல்சாரவாளநயினார் கைங்கர்யம்.

அவர் தம்பி கூடல்சாரவாளநயினார், சகாப்தம் ஆயிரத்து நானூற்றுப் பதின்மூன்றில் விரோதிக்ருதுவருஷம், ஸ்ரீபண்டாரத்துக்கு சில க்ராமங்கள் விலைகொண்டு; ராஜமஹேந்த்ரன் திருவாசல் நிலைகால் முகவணையுட்பட்டதும் துலுக்காவணத்திலே யிடிவிழுந்து சேதமாகையால், இந்தத்திருவாசல்டித்தட்டளவும் பிரிப்பித்து, நலமாக நிலைகால் முகவணை உட்பட்டதும் பிராட்டிமலையிலே வெட்டித்தீர்ந்து, கல் அடிப்பாரமுள்ளதும் உறுதியாகக் கட்டுவித்து, கொடுங்கையும் வைப்பித்தார்.

## கோவிந்தராஜா கைங்கர்யம்.

மேல் இந்தத் திருக்கோபுரமும்பண்ணி, செங்கல் பணிதி, சாந்துப்பணிதி, சித்திரப்பணிதி, வண்ணமும் எழுதுவித்து, அஞ்சு பொற்குடமும் வைப்பித்தது, கோவிந்தராஜாவின் கைங்கர்யம்.

## கம்பராஜாமல்லர் கைங்கர்யம்.

இதுகளுக்குமுன், சகாப்தம் ஆயிரத்துமுந்நூற்றெண்பத்துமூன்றில் சித்ரபாநுவருஷம், அணியரங்கன் திருமுற்றத்திலே முன்னிருந்த வெண்கலத் திருக்கொடிக்கம்பத்தை வாங்கி பெரிய திருமடைப்பள்ளியிலே வைத்து, செம்பினாலே திருக்கொடிக்கம்பத்தில் ஆனைத்தகடு நாச்சித்தகடு உட்பட பலதகடும் நாற்றுப்பன்னிரண்டு தகடும், கம்பத்தின்மேல் பெரிய திருவடி நயினாரும் உட்பட செப்பின்மேல் பூசின தங்கம் ஆயிரத்தறுநூறுபலம். இதுவும் பல திருவாபரணங்களும் கம்பராஜாமல்லர் சுனாராயர் கைங்கர்யம்.

## ஐந்நயநாயக்கர் கைங்கர்யம்.

ஆலிநாடன் திருக்கோபுரம் தென்புறத்தில் த்வாரபாலகர் துலுக்காவணத்திலே சேதமாகையில், திருவாழியாழ்வாரையும் பெரிய திருவடியையும் எழுந்தருளப்பண்ணிவைத்தது ஐந்நய நாயக்கர்.

## அப்புள்ளார் ப்ரதிஷ்டை.

பட்டர்பிரான்தாஸர், அப்புள்ளார் ப்ரதிஷ்டை

## கம்பயராஜா கைங்கர்யம்.

கோபுரங்கநாயக்கன் த்வாரபாலகாளகங்கையும் யமுனையும் ஆலுக்காவணத்திலே சேதமாகையில், அவர்களை எழுந்தருளப்பண்ணிவைத்தது, இதுக்குமுன் பஹுதாந்ய வருஷத்திலே திருச்சிராப்பள்ளி சாவடிக்குவந்த கம்பயராஜாவின் கைங்கர்யம்.

## ஆழ்வார்ஜீயர் கைங்கர்யம்.

நம்மாழ்வார்கோயில் மேல்புறமுள்ளதும் மாக்கோபாகக்கட்டினது ஆழ்வார்ஜீயர் திருப்பணி.

## அழகர் கைங்கர்யம்.

பாலாஸதேனர் ஸந்நிதிக்குமுன்னில் திருமண்டபம், ஆரியப்பட்டாள், அழகர் திருப்பணி.

## ஸாளுவ திருமலைராஜா கைங்கர்யம்.

ஆலிநாடன் திருவீதியில் வடக்குத்திருவாசல் சங்கவன் பண்ணின திருப்பணிஜீர்ணமாகையாலே, சகாப்தம் ஆயிரத்து முந்நூற்றுத் தொண்ணூற்றிரண்டின் கர வருஷத்திலே திருமலைராஜா அந்தத் திருக்கோபுரத்தை ஜீர்ணோத்தாரணம்பண்ணிவைத்து, வெளியழகியானிலே கிழக்கே ஆலிநாடன் திருமதிளிலே ஆயிரக்கால் மண்டபத்துக்கு நேர் செவ்வையாகப் போகும்படி திருக்கோபுரவாசலுமுண்டாக்கினபடியினாலே, அதுமுதலாக பெருமாள் திருவாய்மொழித் திருநாளுக்கு வெளியழகியானிலே யெழுந்தருளி, அந்த வாசலாலே ஆயிரக்கால் மண்டபத்துக்கு எழுந்தருளுகிறது. அதுக்குமுன், ஆழ்வார்கள் பன்னிருவரும் பரமபதவாசலிலே திருவோலக்கமிருக்க, திருக்காப்பு நீக்கினவுடனே பெருமாள் ஆழ்வார்களை ப்ரதமகடாக்ஷமாகக் கடாக்ஷித்துப் புறப்பட்டருளி, ஆழ்வார்களுக்கு அருளப்பாடு முதலான வரிசைகளை ஸாதித்து, அரையர் காப்புடனே முக்கண் வாசல்வழியாக அ



ளங்கன் திருவீதியாலே ஆயிரக்கால் மண்டபத்துக்குத் தெற்காலே எழுந்தருளி, படியேற்றங்கண்டருளி, திருக்காவணப் பத்தியிலும் உலாவியருளி, திருவந்திக்காப்புக் கண்டருளி, திருமண்டபத்திலே எழுந்தருளுவர். அதுமுதலாக, வெளியழகியானிலே ஆழ்வார்களுக்குக்காட்சியாய் புதிசான தவுட்டுவாசலாலே ஆயிரக்கால் மண்டபத்தில் திருக்காவணப்பத்தியிலே உலாவியருளி, திருவந்திக்காப்பானபின்பு திருமண்டபத்திலே எழுந்தருளுவர். அழகிய மணவாளன் திருமண்டபத்திலே சந்தனமரத்தாலே மண்டப மேடையும், அதிலே செம்புமேல் பொற்பூச்சான மூன்று குடமும் கட்டுவித்து, அதிலே தந்தசப்பரமும் மஞ்சமும் வைப்பித்தது, ஸாளுவ திருமலைராஜா.

## கந்தாடை ராமாநுஜதாஸர் கைங்கர்யம்.

சகாப்தம் ஆயிரத்து நானூற்றுப்பதின்மூன்றில், கந்தாடை ராமாநுஜன் வந்து பண்ணின கைங்கர்யத்துக்கு விவரம்:—ப்ரபண்டதேவ ராயனை வீரநரஸிங்கராயர் ஜயித்து, கநககிரி நகரத்திலேயிருந்து ராஜ்யபாரம் வஹிக்கச்செய்தே, அவருடைய தமயனை ராமராஜா ஸகல சாஸ்த்ரமும் படித்து விரக்தராய் தீர்த்தயாத்ரை பண்ணி, ஸ்ரீராமநுபாஸனைபண்ணி, திருவயோத்திக்குப்போய், வைராகிமாடைகளையும் ஸ்பர்சவேதியையும் லபித்து, வைராகிவேஷத்துடனே கநககிரிக்கு வந்து, தம்பியான வீரநரஸிங்கராயனைக்கண்டு, ஒரு ஸ்ரீராமமாடையும் கொடுத்து, தேசாந்திர முணக்கு நூற்றெட்டுத் திருப்பதிகளிலேயும் திருபழும் வாரத்தை நடக்கத்தக்கதாக ராயசாஸநமும் திருபழும் வாங்கிக்கொண்டு திருமலைப்பெருமாள் கோயிலிலேயும்ஸ்ரீராமமாடை ஸமர்ப்பித்து, அவ்விடத்தில் ஸ்தலங்களையெல்லாம் ராயசாஸநப்படிக்கு ஸ்வாதீநம் பண்ணிக்கொண்டு, சகாப்தம் ஆயிரத்து நானூற்றுப்பதினொன்றில் ஸௌம்ய வருஷத்திலே திருவரங்கத் திருப்பதியிலே வந்து, பெருமாளுக்கு ஒரு ஸ்ரீராமமாடையும் ஸமர்ப்பித்து, கந்தாடையண்ணன் திருவடிகளிலே ஆச்ரயித்து, விசேஷ நிஷ்டனாய், ஸகல சாஸ்த்ரங்களையும் படித்து, ஏகாங்கி வே

ஷம் தரித்து, அண்ணன் ஸந்நிதியிலே "கந்தாடை ரா
மாநுஜதாஸர்" என்று தாஸ்யநாமமும் பெற்று, ராயசா
ஸநப்படியே உடையவர் காலந்தொடங்கி துரைவழி முத
லான ஏகாங்கிகளுக்குத் தலைவராய், ஸ்தலத்திலே
யிருந்த இலச்சினைகளுக்கு மேலே தேசாந்தரி முத்ரை
ஆஞ்சநேய முத்ரையைப் பெருமாள் ஸந்நிதியிலும் ஸமி
த்து ஆராமங்களிலே ஆஞ்சநேய முத்ரையை தம்மநுஷ்
யர் முகாந்தரத்திலே ப்ரவர்த்திப்பித்து, இவ்விடத்திலே
தானே யிருந்துகொண்டு, நித்யமாக ஏகாங்கிகளுக்கு உ
டையவர் கல்பித்த கட்டளைப்படிக்கு திருவணுக்கன் திரு
வாசலிலேயும் பரிமளப் பெட்டிகளிலேயும் வ்யஞ்சன அ
றைக்கும் ஆரியபட்டாள் வாசலுக்கும் திருக்கொட்டார
வாசலுக்கும், இது முதலானதுகளுக்கு ஹநுமார் முத்
ரையிட்டு; கொறட்டுப்பார பத்யக்காரருக்கு, புறப்பாடு
முதலான விடங்களிலே ஸேவையானவுடனே உத்தமநம்
பிக்கு முன்னாக ஸேவைதீர்த்தப்ரஸாத விநியோகாதிக
ளும் உண்டுபண்ணிக் கொண்டிருக்கும் காலத்திலே; ஸர்
வஜித்துவருஷத்திலே; திருக்காவேரி உடைப்பு எடுத்து
டுத்தோப்புக்கும் ஜீயர் கொடுத்த நாச்சியார் கோவி
லுக்கும் நடுவே புறப்பாடு, கிழக்கே ஆனைக்காவல் ஸமீ
பத்தில் எல்லைதிருந்த மேற்காலே வடதிருக்காவேரி
யையடைந்து; முற்றிலும் பள்ளம் பறித்திருக்கையில்;
அந்தப்பள்ளங்களைத் திருவெள்ளறை மண்ணிலே தூ
ர்த்து அடையவளைந்தானுக்கு மேற்கே தெப்பக்குளத்
தையும் ஜீர்ணோத்தாரணம்பண்ணி, பெரியமண்டபமும்
கட்டி வைத்திருக்கும் காலத்திலே; முன் கரவருஷத்தி
லே திருச்சிராப்பள்ளி சீமை முதலானதுகள் திருமலை
ராஜாவுக்கு நடந்தபின்பு, இந்தராஜ்யத்துக்குக்கோனே
ரிராஜா கர்த்தாவாய், திருச்சிராப்பள்ளியிலே பாளையம்
பண்ணிக்கொண்டிருக்கையில்; ஆனைக்காவலாருக்கு
கோனேரிராஜா ஸஹாயம் பண்ணி, மஞ்சள்பொடி யிறை
த்து விளையாடும்படி பண்ணுவித்தும்; திருமலை சோலை
யெல்லையை யமைத்துக் கொள்ளும்படி பண்ணுவித்தும்,
கோட்டை சாமந்தனார் சென்னப்பநாயக்கர் உள்ளிட்ட



ருக்குக்குத் தகையாகத் திருவிடையாட்டச் சீர்மையை
அமைத்துக்கொண்டும், கோயிலிலேயும் "புரவரி, காணிக்
கை, பட்டு, பரிவட்டம்" என்று அநேகம்பொன்களையெடுத்
துக்கொண்டு, ஸ்தலத்தை நெருக்கி, பஹு ஈதிபாதை
பண்ணுகையில்; இரண்டு ஜீயாரும் ஏகாங்கிகளும் அக
ளங்கள் திருவீதி கீழ் கோபுரத்திலே யேறி சரீரத்தை
யுபேக்ஷித்தாலும் உபத்ரவம் மறுபடியும் பண்ணுகை
யில் கந்தாடை ராமாநுஜன், இந்தச் சேதிகளெல்லாம்
பலகாலும் நரஸா நாயக்கருக்கு அறிக்கை பண்ணின
படியினாலே; தெற்குத் திசையில் ராஜகார்யவ்யாஜமாக
அநேக தளத்துடனே நரஸநாயக்கர் வந்து கோனேரி
ராஜாவை ஸம்ஹரித்து, திருச்சிராப்பள்ளி உட்பட்ட
ராஜ்யமும்; அடுத்த நளவருஷம் ஐப்பசிமாசம் பதிநா
லாந்தேதி நாகமநாயக்கரும் குமாரர் நரஸா நாயக்கரும்
வந்து பெருமாளை ஸேவிக்க, கந்தாடை ராமாநுஜனும்
அவர்களை ஸேவிக்கப் பண்ணிவைத்து, திருவிடையாட்
டச் சீர்மையையும் பலரும் ஒத்திகையாக அநுபவித்த சீர்
மையையும் பெருமாள் ஸ்ரீபண்டாரத்திலே கண்டுகொள்
ளும்படி நரஸாநாயக்கர் ராயஸமுகமும் வாங்கி, திருவிடை
யாட்டங்களும் விடுவித்துக்கொண்டு; திருவிடையாட்டச்
சீர்மையிலே, வெட்டிவரியும் நாட்டுத்தலையாரிக்கு முட்
டப்புரவரியும் ஸர்வமான்யமாகக் கழிப்பித்துக்கொண்டு,
பெருமாளுக்கு முத்துக்கல் கண்டமாலை பதக்கம் முத
லான பலதிருவாபரணங்களும், அறுவாணம் திருவெண்சா
மரம் பட்டுவகை பலவும் ஸ்ரீபண்டாரத்திலே முதலிடுவித்
து, கருவுகலத்திலே ஸ்தாபிதமும் கட்டுவித்து, திருக்
கொட்டாரம் நெல்லும் அமுதுபடியும் குத்தக் கொழிக்க
ஆறுகோயிலடியார் விழுக்காடு நரஸா நாயக்கன் உபய
மாக என்றென்றைக்கும் நடக்கும்படி வாங்கிவிட்டு; பெரு
மாள் திருவாராதநக்கட்டளை சாத்துப்படி வர்க்கவகை
கள் நித்யக் கட்டளைகள் முதலானதுகளுக்கும் மாதவய்
யங்காரைக் கட்டளையிட்டு, ஒன்றுமொன்று குறையில்லா
மல் நடப்பித்தார். அதுமுதலாக, வீரஸந்தரப்ரம்ஹரா
யர் மதிளில் தெற்கு வடக்குக் கோபுரங்களும் புதிதாகக்

கட்டிவைத்து ஆயிரக்கால் மண்டபத்திலே தளத்தில் காரைச்சாந்து பழுதிப்போகையில் காரைபோட்டுச் சாந்து பண்ணியும் அகளங்கன் திருமதிள் கிழக்கோபுரத்திலே துலுக்காவணத்துக்கு முன்னே இடிவிழுந்து பழுதி சேதமாயிருக்கையில் பழைய அடிப்பாரத்துக்குள்ளே மட்டமாக அடிப்பாரமும் மேலுமெடுத்துக்கட்டி, கூடவரையும் கோபுரமும் கட்டி, அதுக்குப்படியும் கட்டுவித்து, நிலைகாலிலே கோனேரி ராஜாகாளையில் அந்த கோபுரத்தில் ஏறிவிழுந்த ஜீயர்களையும் ஏகாங்கிகளையும் உருக்களடிப்பித்து, எழுத்தும் வெட்டுவித்து, கோபுரங்கள் கலசங்கள் பழுதிச் சரிவாகையில் நன்றாகக்கட்டி, புதிசாகப் பொற்குடமும் கொடுங்கைகளும் வைப்பித்து, திருக்கொட்டாரத்திலே மூன்றுங்கூடி நாலாங்கூடு அஞ்சாங்கூடும் துலுக்காணத்திலே தலைகடையும் சரிந்து அடிப்பாரமும் பெருச்சாளி அறுத்து சேதமாகையால் இந்த மூன்று கூட்டிலுள்ள தளவரிசையுங்கட்டி, மேலேயும் பத்துடைத்திர முன்னா மரங்களை மழைப்பித்து உறுதியாகத் தளவடை ஸ்தாபியாவும் நலமாகக்கட்டுவித்து. அந்தகூட்டிலும் பூர்வம் முதலாக விருந்தமண்ணும் ஓடுகளும் குப்பைகளும் எடுப்பித்து, திருநடைமாளிகை சுரிமண்ணுமெடுத்துப் புறம்போடுவித்து, திருநடைமாளிகையும் கட்டுவித்து, ஆயிரக்கால் திருமண்டபத்திலே புங்கையில் மேடையும் திருமண்டபத்து முன்னில் மண்ணுமெடுப்பித்து, வெளிய பூமியாலில் மண்ணும் அகளங்கன் திருவீதித் திருமதிளுக்குட்பட்ட மண்ணுமெடுப்பித்துச் செப்பனிடுவித்தும், ஓட்டியன்கலவாத்துக்குப்பின்பு அகளங்கன் திருமதிள் சரிந்து போகையில் அதைச்சரிகட்டுவித்தும், அணியரங்கன் திருமுற்றத்தில் ஆக்கொயாகத்திலே திருவந்தல் மண்டபம் நேர்த்தியாகக்கட்டுவித்துத் திருநாள் கட்டுவித்தும், திவ்யவிமானமும் வாகனங்களும் ஸ்வர்ணமாகப் பூசுவித்தும், ஸந்நிதியிலே அநேக திருவாபரணங்களும், அநேக உபகரணங்களும் பண்ணுவித்தும், விட்டலதேவரான்கோயில் ஜீர்ணோத்தாரணம்பண்ணிப் பாக்கக்கட்டுவித்தும், இப்படி திருத்தொண்டுகளும் பலவகையில் கை



ங்கர்யங்களும் பண்ணுகையில்; பெருமாள் உகந்தருளி, "குலசேகரப்பெருமாள்" என்று திருவுள்ளம் பற்றியருளினார்.

அதுமுதலாக உடையவர்கல்பித்த தேசாந்திரி ஏகாங்கிகளிலே கந்தாடை ராமாநுஜன் அதிகமாகபட்டமும் ஸ்ரீரங்கநாராயண ஜீயரைப்போலே மடமும், ஸ்ரீரங்கராஜர் திருவாராதநமும், தேசாந்திரி வைராகிகளுக்கு முத்திரைபோடுகிறதும். கோயிலிலே ப்ரஸாத பணியாரதி மடவரிசையாகப்பெற்றும் நடந்துவருகிறது. இவர் ராமநுடைய தமயனாகையாலே, ஜல்லாவும், அதின்மேலே வைராக்யவேஷத்துக்குத் தகுதியாக சிரோவேஷ்டியும் கட்டிவருகையாலே, அந்த அதிகத்துக்குவந்தவர்கள் அப்படி கட்டுகிறதாக நடக்கிறது.

இவர், கோட்டை சாமந்தனார் சென்னப்பநாயக்கருள் விட்டார் குத்தகைகொண்டிருந்ததாய், கோனேரிராஜா அநுபவித்தது அநுபவித்ததும் பலநாள் ஒத்திப்பிடித்து மானைகளை ஸ்ரீபண்டாரத்திலே சேர்ந்த க்ராமங்கள் அறுபதின்றான்று.

## தேவதாயம் ப்ரமதாயமானது.

பூர்வம் சேரசோழபாண்டிய மண்டலங்களுக்கு ஒரு ப்ரபுவாயிருந்தநாளிலும், அதின்பின்பு மூன்றுமண்டலத்துக்கும் மூன்றுபேர் ராஜாக்கள் ஆளுங்காலத்திலும், ஒருபடியாகத்தானே, சகாப்தம் ஆயிரத்திருநூற்று நாற்பத்தொன்பதில் அக்ஷயவருஷம் வரைக்கும் ராஜாக்கள் தேவதாய ப்ரம்ஹதாயங்களை ஆளாமற்படிக்கு ப்ராம்ஹணநீதமாகத்தானே நடக்க; அதிலே நடக்கிற ந்யாயாந்யாயங்களைமாத்ரம் விசாரித்து சிக்ஷைகளைப்பண்ணிக் கொண்டிருந்தார்கள். அதின்பின்பு, துலுக்கர் வந்து தேவதாய ப்ரம்ஹதாயங்களை அழித்து, பெருமாளும் தம் குலேவட்டையாக ஆராமங்களிலே எழுந்தருளி, சகாப்தம் ஆயிரத்திருநூற்றுத் தொண்ணூற்றுமூன்றில் பரிதாபி

வருஷம் வைகாசிமீ பதினேழாந்தேதியிலே திரும்பவும் கோயிலுக் கெழுந்தருளினபின்பு, இம்மண்டபங்களெல்லாம் நரபதியான ராயாதீநமானபடியினாலே, தேவதாயமான திருவிடையாட்டங்களை, ராயரும் ராயர்மநுஷ்யரான பலதுர்க்காதிபதிகளும் உதகதாராபூர்வகமாக க்ராமங்களை தாநம்பண்ணி, கோயிலுக்குள் தங்கள் மநுஷ்யராக மணியமும் ஸம்ப்ரதியும் கட்டளையிட்டு, அரண்மனைச்சீர்மைபோலொத்ததாக ஆண்டுகொண்டிருந்தார்கள்.

## உடையவர் கல்பித்த கட்டுக்கொலைந்தது.

ஆனபடியினாலே, உடையவர்கல்பித்த கட்டுக்கொலைந்து, [ராயர் உடையவர்காலம் முதல் துலுக்கவாணம் வரைக்கும் முதலியாண்டான் வம்சஸ்தரான ரங்கராஜநாயன் வரைக்கும் கோவணவர்வரிசை ஒராண்வழியாய் ஒன்றிலொன்றுங்குறையாமல் நடந்துவந்தது. துலுக்கவாணத்துக்குப்பின்பு உத்தமர்கோயில் ஸ்ரீரங்கராயர் ஸ்ரீரங்கநாராயணஜீயர் பட்டத்துக்குவந்தபின்பு செங்கோலவரிசையைத்தள்ளி மேலைப்படியில் ஜீயருக்கு சிலநாள் முன் மரியாதையும், சிலநாள் வாதூலதேசிகருக்கு முதல் வரிசையும், ஜீயருக்கு சிலநாள் இரண்டாவது வரிசையும். சிலநாள் பட்டருக்கு இரண்டாவது வரிசையும். மூன்றுபவரிசை ஜீயருக்கும் சிலநாளைக்குப்பின்பு மூன்று பேருக்கும் ஸமதீர்த்தமாயும், வாதூலதேசிகர் அருளப்பாடிருத்தி அண்ணன் திருநாமத்தாலே சமவட்டியும் உபரிவட்டியும் இரண்டு வட்டியும் ஜீயர்பட்டருக்கு ஸமதீர்த்தமும், ஒத்தபடிவரிசையும் சிலநாளைக்குப்பின்பு ஜீயருக்கு சடகோபன் முன்னும் அண்ணனுக்குப் பின்னும் அப்புறம் பட்டருக்கும் அண்ணனுக்கும் சடகோபன் ஒன்றுவிட்டொருநாள்ஸாதிக்கிறதும் மூன்றுபேருக்கு ஸமதீர்த்தமும்ஜீயர்பட்டருக்கு ஒத்தபடி வரிசையும் இந்தப்படி கோவணவர் ஆதீனம் குலைந்து ராயர் நானைக்கு

[ ] இதுக்குள்பட்ட வாக்கியங்கள் சில கோசங்களில் காணப்படவில்லை.



ப்பின் ஸேனாபதி துரந்தரரான அனந்தகொத்துப் பரிஜனங்களும் எழுதுகிற ஓலைகளையும் தள்ளி, ஸ்தானம ஸமயம்*முதலான 'அனந்தக்கொத்துப் பரிகரம்' என்றும் 'ஸ்ரீரங்கநாராயணஜீயர் முதலான அனந்தகொத்துப்பரிஜனம்,' என்றும் ராயர்காள்முதல் துர்க்காதிபதிகளுடைய அவலம்பநதினாலேயும் இந்தஸ்தலத்தில்,] ராயர்முத்ரையாக, செங்கோலதிகாரி ஒருத்தரும் கொறட்டுப்பாரபத்யக்காரர் ஒருத்தரும், ஸ்தலத்தில் பெரியவராக ஸ்ரீரங்கநாராயணஜீயர் ஒருத்தரும்; காலவிசேஷத்திலே இராங்கேள்வி என்று உத்தமநம்பியும் ராயர் முத்திரை என்று சக்ராயர் ஒருத்தரும், தேசாந்திரி முத்திரை என்று கந்தாடைராமாநுஜனும், இப்படி ஒரு கோவணவர் வரிசை ஒருத்தராதீநமாயிருந்த அதிகாரிகளும் பலமுகங்களாய் ஸ்தலத்திலே உடையவர் கல்பித்த பத்துக்கொத்து ப்ராம்ஹண பரிகரங்களிலேயும் பஹுமுகங்களாய், ஒரொருகொத்தில் கைங்கர்யங்களையும் பலவிதமாகக் கொத்திலேசேராமல் ஸ்ரீபண்டாரத்திலேவிட்டு, சூத்திரகொத்தும் இப்படி பலவிதமாக, உடையவர் கல்பித்த கொத்து மரியாதையும் அழிந்து, அருபெருமாள் தாமே ஸ்ரீபாஞ்சராத்ர முகத்தாலே அருளிச்செய்த சாஸ்த்ர மர்யாதைப்படியே உடையவர் கல்பித்த வரிசை குலைந்து, ஸ்வதந்த்ரமாக சாஸ்த்ரவிருத்தமாய் ஆசார்யபுருஷான் பஹுமானங்களும், இவ்வனைத்துக் கொத்துப் பரிகரங்களும் ஸ்தாநஸமயவிபாகமும் இதுக்குண்டான பேர்களும், இதுமுதலானதுகளெல்லாம் நவீநமாக நடத்திக்கொண்டார்கள்.

## மணவாள மாமுனிகள் மங்களாசாஸநத்தாலே நம்பெருமாள்கோயிலிலே எழுந்தருளியிருந்தது.

* சகாப்தம்ஆயிரத்துமுந்நூற்று நாற்பத்தேழில் மணவாள மஹா முனியெழுந்தருளி நம்பெருமாளை மங்களாசாஸநம்பண்ணினதுமுதலாக, பெருமாள் பூபாலராயனை விட்டுச் சலியாமல் எழுந்தருளியிருந்தார்.

## விசுவநாதநாயக்கரைக்கொண்டு, நரஸிம்ஹா சார்யர் பண்ணின கைங்கர்யம்.

சகாப்தம் ஆயிரத்தினானூற்றிருபதுக்குமேல், மதுரை திருச்சிராப்பள்ளி விசுவநாதநாயக்கன் அதிகமாய், அவரைக்கொண்டு வாதூலதேசிகர்குமாரர் நரஸிம்ஹாசார்யர் பெருமாளுக்கு ஸமர்ப்பித்தது:— தங்கபஞ்சபாத்ரவட்டில், கலசப்பானை, திருப்படிக்கம் ஸஹஸ்ரதாரை தட்டு, சிலதிருவாபரணங்களும்செய்வித்து; பஞ்சீராயிரம் திருமுடிக்குறையிலே ஸ்ரீரங்கராஜநாதன் அநுபவித்து கோவனைவர்வரிசைகளையும் ஸ்ரீபண்டாரத்தேசேர்ந்திருக்கதை தாம் லபித்து; ஸ்வாமிக்கு அநேக கைங்கர்யங்களையும் நடப்பித்து மூன்றுலக்ஷம்பொன் கைங்கர்யம் செய்வித்தார்.

அக்காலத்திலே, பெருமாள் புறப்பாடருளி, சேனைமுதலியார் ஸந்நிதிவாசலிலே திரும்பி, சேனைமுதலியாருக்குத் திருமாலை சாதித்து, கோவனைவர்வரிசையான திருமாலையை முதலியாண்டான்வர்க்கமான குமாரநரஸிம்ஹாசார்யருக்கு சாதித்து, ஆசார்யபுருஷர்கள் திருவோலக்கத்துக்கு பெரியநம்பி நந்தாவைாண்ணான் க்ரமத்திலே நடக்க, ஸ்தாநவட்டிலே ஜீயர் பட்டர் வாதூலதேசிகர் முறையிலே தீர்த்தம்நடந்த ப்ராமாணிகர். வாதூலதேசிகருக்கு ஸ்ரீகார்யதீர்த்தம்நடந்தது ப்ராமாணிகம். பெரியநம்பி முதல் திருவோலக்கத்துக்கு ஸமயவட்டில்தீர்த்தம்நடந்தது ப்ராமாணிகம்.

## க்ருஷ்ணப்பநாயக்கர் கைங்கர்யம்.

சகாப்தம் ஆயிரத்துநானூற்றுஐம்பத்திரண்டுக்கு க்ருஷ்ணப்பநாயக்கர் துரைத்தனத்தில், ஸ்வாமிக்கு அநேக திருவாபரணங்களை ஸமர்ப்பித்து, தன்பேருக்கு தென்திருக்காவேரிக்கரையிலே படித்துறையும் மண்டபமும்கட்டி, குமாரநரஸிம்ஹவாதூலதேசிகரைக்கொண்டு ஸ்வாமிக்கு அநேகதிருக்கும்கண்டருளப்பண்ணுவித்தார்.



## குமாரக்ருஷ்ணநாயக்கர் கைங்கர்யம்.

பின்பு, குமாரக்ருஷ்ணப்பநாயக்கரும் ராஜ்யம்பண்ணுகையில், ஸ்வாமிக்கு ரத்நாங்கி ரத்நகிரீடம் முதலானது லக்ஷத்தைம்பதினாயிரம்பொன் கைங்கர்யம், அந்த நரஸிம்ஹதேசிகரைக்கொண்டு ஸமர்ப்பித்தார்.

## உத்தமநம்பிக்கும், பட்டர் திருமலாசார்யருக்கும் உண்டான கலஹம்.

சகாப்தம் ஆயிரத்தைந்நூற்றெண்பதுக்குமேல்முத்து வீரப்பநாயக்கர் துரைத்தனத்தில், முன்பட்டர் சிஷ்யன் அழைத்துவாழ்வித்தவன் என்கிற சோழியன்கோயிலிலே காணியாட்சி கருடமுத்ரையும் உடையனாய், அபுத்ரப்பத்தீ கணாய், காணிமுத்ரைகள்மேலே பட்டர்கையிலே கடன்பட்டு காலதர்மமடைந்தபின்பு; அவன்பெண், ஸ்ரீரங்கநாயச்சியார் அபுத்ராவிதந்துவாய், தன் காணிகளைத் திருமாளிகைக்குக் கொடுக்கவிருக்கிறவளை, உத்தமநம்பி அநுஸரித்து மித்ரபேதம்பண்ணி, தனக்கு ஒரு பெண்ணும் ஒருபிள்ளையும்இருக்கிறதைரஹஸ்யமாகஸ்வீகாரம்பண்ணுவிக்க; இதறிந்து பட்டர் மநுஷ்யர்கள் அவளை யழைக்கவருகையில் அவர்களைத்தள்ளிவிட்டு, அவள்காணிகளையும் லபித்து,பட்டர்கையிலேமுத்ரை அகப்பட்டுப்போனபடியினாலே வேறே கருடமுத்ரை பண்ணிக் கோயிலிலே போடுகையில்; பட்டர் திருமலாசார்யரும் அந்த முத்ரையைப்போடுவர்; ஒருத்தருக்கொருத்தர் கலஹமுண்டாய், உத்தமநம்பி முத்துவீரப்பநாயகரைக்கண்டு திருமலாசார்யரை அழைப்பித்து, வாசரிசொல்லி அவர்முத்ரையை நிறுத்திப்போட்டார்.

சிலகாலத்துக்குப்பின்பு, த்ரிசிரபுரத்தின்மேலே ராயர்படையெடுத்துவருகையில், துரை, திருமலாசார்யரை யழைத்து, ஸ்வாமி ஸொத்தெல்லாம் தன் அதீனத்துக்குக் கோட்டையிலே சேர்க்கச்சொல்ல; பட்டர் திருமலாசார்யரும், "நாம் ஸமயம்கூட்டிவந்தபேருக்கு ஸ்வாதீநமாகாமல் ஸ்தலத்தை நிர்வஹித்து, பின்பு உம்வசம்பண்

ணுகிறோம்" என்றுப்ரமாணம்பண்ணி, ஸ்தலத்தில்வந்து.
அநேகத்ரிதண்ட காஷாயங்கள் சேகரித்து ராமாநுஜக
த்தியுடன் அநேகம்பேருக்கு ஸந்யாஸி வேஷமாகவும் ஏ
காங்கிகளுமாகப்பண்ணி, கொம்மைக்கு ஒருத்தர் விழுக்
காடு வைத்து, "𑌶𑍍𑌰𑍀𑌮𑌦𑍍𑌰𑌙𑍍𑌗𑌂 𑌮𑌹𑌾𑌧𑌾𑌮• ஸ்ரீமத்ரங்கம் மஹத்
தாம" என்றுகூப்பிடச்சொல்ல; தோகூரிலே ராயர் படை
யிறங்கி, இது அறிந்து, ராயர் உத்தரவின்படி ரகுநாத
நாயக்கரும் ஒரு அடப்பக்காரனுமாய் உள்ளேவந்து ஸ்
வாமியைஸேவிக்க; திருமலாசார்யரும், "உமக்கு ஜயம்
வந்தாற்போலே ஸ்தலம் உம்வசம்பண்ணுகிறோம்" என்
று விநயவாக்கினாலே ரஞ்சிப்பிக்க; அவன் வந்துவிடைகொ
ண்டு போனான்.

அந்தஸமயத்திலே, உத்தமநம்பி, பட்டர் ராயருக்கு
எழுதினதாக ஒருதப்போலையை முத்துவீரப்பநாயக்கரு
க்குக் கொடுக்க; அவனும், "நமக்குஹிதராயிருக்கிறவர்
த்ரோஹம்பண்ணுவரோ?" என்றுஸம்சயப்பட; "அந்த
ரகுநாதநாயக்கரைப்போலே நீரும்வந்தால் நாம்பிடித்து
த்தருகிறோம்" என்றுசொல்ல; அந்தப்படி ஸ்வாமியைஸே
விக்க; உத்தமநம்பியும், அண்ணனண்டையிலேவந்து "ப
ட்டர்மேலே தோஷங்களை துரைக்குச்சொல்லவேணும்"
என்று கேட்கையில், அவரும் அஸம்மதராகையாலே
மிகவும் நிர்ப்பந்தித்து உத்தமநம்பி சொன்னது சரியென்
று சொல்லச்சொல்லி சம்மதிபண்ணுகையில் துரையை
யழைத்துவந்து அண்ணங்காரை துரை கேட்கை
யில் அப்படி சொன்னதினாலே துரைக்கு மநஸ்ஸிலே
பட்டு, வாசலிலே பட்டரை புரஸ்கரியாமல், வெளி
யிலேபோய் ராயரை ஸமாதாநம்பண்ணி அனுப்பி,
தண்டுபோகையில்; உத்தமநம்பி, "பட்டர்கையில் ல
க்ஷாந்தரம் அறுவிட்டுத் தருகிறோம், அவர் சிஷ்ய
ன் கத்திவால் நாயக்கனைக்கொண்டு ஆகவேணும்" என்
று உபாயம்சொல்ல; துரையும் அவனையழைத்து, "ஒரு
கார்யம் அநத்தியமாய்ப் பண்ணித்தரவேணும்" என்று
கேட்க; அவனும், "உங்களுக்குத்த்ரோஹம்பண்ணுகிறதி



ல்லை, தாய்தலையைக் கொண்டுவரச்சொன்னாலும் கொண்
டுவருகிறேன்" என்ன; திருமலாசார்யரைக் கொண்டுவர
ச்சொல்ல; ஆகட்டும், என்று, அநேகஜட்டிகளையும் ஆ
னைகளையும் கூட்டிக்கொண்டு வந்து, "சிஷ்யன் வருகிறா
ன்" என்று ஐயங்காருக்குச்சொல்லியனுப்பிவிக்க; அவ
ரும் உள்ளே அழைத்துவரச்சொல்லி, பரஸ்பரம் ப்ரீதர்க
ளாக விருக்கையில்; ஒருஸமயத்தை உத்தமநம்பிநாயக்க
ருக்குச்சொல்ல; அந்தவேளையில் நாயக்கரும் பெருமாளை
ஸேவித்து பட்டர்வாசலிலேவர, பட்டரைக்கண்டு ஸே
வித்து வாசலிலே தனித்துநிற்கிற பட்டரை, ஆனையை
ப்படுக்கவைத்து க்ருதக்நர்களான மல்லரைக்கொ
ண்டு பட்டரை ஆனைமேலே பிடித்துப்போட்டுக்கொண்டு
துரை உத்தரவின்மேலே அர்க்கத்திலே ஆறுமாசம்ப்ர
டு, உத்தமநம்பியைக்கொண்டு விடுகொள்ளையிட்டு, மநு
ஷ்யர்களையும் பிடித்துக்கொண்டு அவரதீனத்தை ஸ்ரீரங்
கம் தாதாசார்யருக்கு அதீனம் பண்ணிப்போட்டான்.
அவர் குஞ்சுகுழந்தைகளும் துறையூருக்குப் போனார்கள்.

அவ்விடத்து ரெட்டி இருபதினாயிரம்பொன் அரண்
மனைக்குக் கொடுத்து அவரைவிடுவித்து, துறையூர்சீ
மையிலே ஏழுவருஷம் வைத்துக்கொண்டிருக்கையில்;
அந்ததுரைக்குப்பின்பு திருமலைசௌரி ராஜ்யம்பண்ணு
கையில், அந்தபட்டர் அவரை அநுஸரித்து; "இந்த
அநர்த்த மெல்லாம் உம்முடைய பெரியவர்கள், உத்தமந
ம்பி அண்ணங்கார் இவர்கள் வார்த்தையைக்கேட்டு நம்
மையிப்படிப்பண்ணினார்கள்" என்று சொல்லுகையில்; து
ரையும், பட்டரை உபசாரோக்திகளினாலே சமிப்பித்து
பஹுமாநம்பண்ணி, அவரதீகமர்யாதைகளை யதாப்ரகா
ரம்கொடுத்தனுப்ப, உத்தமநம்பியும், பூர்வத்வேஷபீத
னாய், அவரை ஸ்நேஹித்திருக்கையில்; சிலநாளைக்குப்பின்
துரைதுர்ப்புத்தியாலே தம்முடைய ஆசார்யரான ப்ரண
தார்த்திஹர வாதூலதேசிகரை அதிக்ரமித்து, அவரை
தேசாந்தரம்போகும்படி பண்ணி, சவ்யதீக்ஷையில் பண்
டாரம் மநுஷ்யன் அய்யங்களையனிடத்தில் சிஷ்யனாய், மூன்

ஆசார்யஜ்ஞாதிகளென்கிற அபிமானமும் அண்ணங்காரிடத்தில் தப்பினதுக்கு ஸ்தலத்திலே செங்கோல் கொடாததினாலே த்வேஷம்பிறந்து; அர்த்தாசையினாலே பட்டரைக்கைப்பிடித்து ''உமக்குஸ்தலத்திலே விரோதியார்? அர்த்தவான்களார்?காரியக்காரர் ஆர்?'' என்று கேட்க; ''அண்ணங்காரும், உத்தமநம்பியும்'' என்று சொல்ல; ''அவர்களுக்கு புத்தி சொல்லுகிறோம்'' என்று ஒருக்கால் ஸ்ரீரங்கத்துக்கு வந்தான்.*

## கோயிலொழுகு முதல்பாகம்

ஸம்பூர்ணம்.

11821

